# விதியை மாற்றிய விதி



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
விதி எண்.110ன் கீழ்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரைகளின் தொகுப்பு–1

விதியை மாற்றிய விதி
தொகுப்பு-1




தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்

110 விதியின் கீழ்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

# செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

ஆற்றிய உரைகளின் தொகுப்பு

வெளியீடு :
இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை
சென்னை.

சிறப்பு வெளியீடு எண். 16

# தமிழரசு

இலவச வெளியீடு

டிசம்பர் 2012

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்
110, அண்ணா சாலை
சென்னை – 600 002.

# பதிப்புரை

பாரம்பரியச் சிறப்பும் பண்பாட்டுப் பெருமையும் கொண்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி அமைக்கப்பட்டு, இவ்வாண்டில் 60ஆவது ஆண்டினை நிறைவு செய்து வைரவிழா காண்பது தமிழக சட்டமன்ற வரலாற்றின் தனிப் பெருமை ஆகும்.

தமிழகத்தின் மேம்பாட்டிற்காக சட்டங்கள் இயற்றி, திட்டங்களை அரங்கேற்றும் அவையாகத் திகழ்ந்திடும் தமிழக சட்டமன்றப் பேரவையில், இன்னல்படும் ஏழை மக்களின் தலைவிதியை மாற்றும் வகையில், 110 விதியின் கீழ் எண்ணற்ற மக்கள்நலத் திட்டங்களை அடுக்கடுக்காக வழங்கிய ஒரே முதலமைச்சர், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தான்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கடந்த 2011 மே திங்களில் மூன்றாம் முறையாக தமிழக முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர், இதுவரை நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத் தொடர்களில் மொத்தம் 64 அறிக்கைகளை விதி எண் 110இன் கீழ் வழங்கியுள்ளார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த அறிக்கைகளின் வாயிலாக வெளியிட்டுள்ள நலத் திட்டங்கள் குறித்த விவரங்களை மக்கள் அறிந்து பயன்பெறும் வகையில் விதி எண் 110இன் கீழ் வெளியிடப்பட்ட அனைத்து அறிக்கைகளையும் தொகுத்து **“விதியை மாற்றிய விதி”** என்ற தலைப்பில் நூலாக செய்தி–மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் வெளியிடப்படுகிறது.

தமிழக சட்டமன்றப் பேரவையின் வைர விழாவின்போது “விதியை மாற்றிய விதி” நூலை வெளியிடுவதில் செய்தித்துறை மிக்க பெருமை கொள்கிறது.

இதை நூலாகத் தயாரித்து வழங்கிய செய்தி–மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. **ஜெ. குமரகுருபரன்,** இஆப அவர்களையும் இப்பணிக்கு உறுதுணைப் புரிந்த செய்தித்துறை அலுவலர்களையும் மனமாரப் பாராட்டுகிறேன். தமிழக மக்கள் அனைவரும் இந்நூலை படித்துப் பயன்பெறவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முனைவர் **மூ. இராசாராம்**, இஆப
அரசுச் செயலாளர்,
தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள்
மற்றும் செய்தித்துறை

# பொருளடக்கம்


| வ. எண் | நாள் | பொருள் | பக்கம் |
|---|---|---|---|
| 1. | 8.6.2011 | பேருந்து விபத்தில் இறந்தோர் குடும்பங்களுக்கு தலா ரூ.1 இலட்சம் நிவாரண நிதி! | 9 |
| 2. | 8.6.2011 | மீனவர்களின் நலனைக் காக்கும் அரசு! | 12 |
| 3. | 8.8.2011 | சிறப்புத் தூய்மைப்படுத்தும் திட்டம் | 15 |
| 4. | 8.8.2011 | காற்றாலை மூலம் உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் வழங்கும் திட்டம் | 17 |
| 5. | 11.8.2011 | பாசனத்திற்கான நீர்வள அமைப்புகளை மேம்படுத்தும் திட்டம் | 20 |
| 6. | 12.8.2011 | 100 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல் | 25 |
| 7. | 12.8.2011 | உகந்த பயிர் மேலாண்மை கடைபிடிக்கும் திட்டம் | 27 |
| 8. | 17.8.2011 | வன விலங்குகளால் ஏற்படும் உயிரிழப்புகளுக்கு இழப்பீட்டுத் தொகை உயர்த்துதல் | 29 |
| 9. | 19.8.2011 | ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் நவீன மருத்துவமனை உருவாக்குதல் | 32 |
| 10. | 25.8.2011 | கூட்டுறவுத் துறையில் உள்ள கிடங்கு வசதியினை விரிவுபடுத்துதல் | 35 |
| 11. | 26.8.2011 | உண்மையான, நிலையான சமச்சீர் கல்வி வழங்கிட முன்னுரிமை | 38 |
| 12. | 29.8.2011 | கைதிகள் மூவரின் தூக்குத் தண்டனை ரத்து தொடர்பான அரசின் நிலை | 44 |

| | | | |
|---|---|---|---|
| 13. | 30.8.2011 | குறைந்த செலவில் தமிழ்நாடு அரசின் கேபிள் டிவி சேவை | 51 |
| 14. | 6.9.2011 | சென்னையில் உலகத் தரம் வாய்ந்த முதன்மைநிலை விளையாட்டு மையம் | 54 |
| 15. | 7.9.2011 | இரயில்வே கடவுகளில் பாலங்கள் / சாலைகள் மேம்பாடு | 59 |
| 16. | 8.9.2011 | திருமழிசை துணைக்கோள் நகரம் அமைக்கும் திட்டம் | 62 |
| 17. | 10.9.2011 | மாண்புமிகு முதலமைச்சரின் ''உழவர் பாதுகாப்புத் திட்டம்'' | 65 |
| 18. | 10.9.2011 | மருத்துவர்கள், மருத்துவப் பணியாளர்களை தேர்வு செய்ய தனிவாரியம் | 71 |
| 19. | 12.9.2011 | சத்துணவு, அங்கன்வாடி மையங்களில் பணியிடங்களை நிரப்புதல் | 76 |
| 20. | 12.9.2011 | சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம் மணிமண்டபங்கள் மற்றும் மொழிப்போர்த் தியாகி சிதம்பரநாதன் சிலை அமைத்தல் | 80 |
| 21. | 13.9.2011 | நாகப்பட்டினம் பகுதியில் மீன்வளப் பல்கலைக்கழகம் | 83 |
| 22. | 29.3.2012 | மின்வெட்டைக் குறைத்திட புதிய மின்திட்டங்கள் | 86 |
| 23. | 3.4.2012 | தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ரூ.740 கோடி மானியம் | 93 |
| 24. | 4.4.2012 | சங்ககிரியில் மாவீரர் தீரன் சின்னமலைக்கு நினைவுச் சின்னம் | 101 |
| 25. | 9.4.2012 | அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு | 104 |
| 26. | 10.4.2012 | தமிழ்ப் புத்தாண்டில் உழவர் பெருவிழா | 106 |

| | | | |
|---|---|---|---|
| 27. | 12.4.2012 | புதுக்கோட்டை நகராட்சி அடிப்படை வசதிகளுக்கு ரூ.50 கோடி | 110 |
| 28. | 19.4.2012 | 11 இடங்களில் புதிதாக இருபாலர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் | 113 |
| 29. | 20.4.2012 | தமிழ்நாடு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம் | 123 |
| 30. | 26.4.2012 | கிராமங்களை சுகாதார மயமாக்க அரசின் நிதியுதவி | 125 |
| 31. | 2.5.2012 | அரசுக் கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.100 கோடி | 128 |
| 32. | 3.5.2012 | காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினருக்கு 36 ஆயிரம் குடியிருப்புகள் | 131 |
| 33. | 4.5.2012 | சுசீந்திரத்தில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு சிலை | 134 |
| 34. | 4.5.2012 | ரூ.15 கோடி மதிப்பீட்டில் சர்வதேசத் தரத்தில் ஓட்டுநர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் | 136 |
| 35. | 7.5.2012 | ரூ.35 கோடி மதிப்பீட்டில் பவானிசாகர் அரசுப் பயிற்சி நிலையம் புனரமைப்பு | 138 |
| 36. | 7.5.2012 | ரூ.1,560 கோடி மதிப்பீட்டில் காவேரி டெல்டா பகுதியின்வடிகால் வசதிகள் மேம்பாடு | 140 |
| 37. | 8.5.2012 | வருவாய்த் துறையின் சேவைகளை விரைந்து வழங்கிட 9 புதிய வட்டங்கள் | 143 |
| 38. | 8.5.2012 | கைத்தறி நெசவாளர்கள் மற்றும் பட்டு விவசாயிகளுக்குப் புதிய சலுகைகள்! | 147 |
| 39. | 9.5.2012 | ரூ.81 கோடி மதிப்பீட்டில் கொள்ளிட ஆற்றின் குறுக்கே திருச்சி–ஸ்ரீரங்கத்தை இணைக்கும் புதிய நான்கு வழிப் பாலம் | 150 |
| 40. | 9.5.2012 | சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு! | 153 |

| | | | |
|---|---|---|---|
| 41. | 9.5.2012 | அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரிப்பு! | 157 |
| 42. | 10.5.2012 | மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளுக்காக நாட்டிலேயே முதன்முறையாக மாநில ஆதார வள மையம்! | 160 |
| 43. | 10.5.2012 | விசைத்தறி நெசவாளர்களுக்கு மின் கட்டணத்தில் கூடுதல் சலுகை! | 164 |
| 44. | 10.5.2012 | மேட்டூர் அனல் மின் நிலையத்தைச் சீரமைக்க உடனடி நடவடிக்கை! | 168 |
| 45. | 10.5.2012 | ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் கிராம விளையாட்டுப் போட்டிகள்! | 170 |
| 46. | 11.5.2012 | ரூ.136 கோடி மதிப்பீட்டில் 20 சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் திட்டங்கள்! | 172 |
| 47. | 11.5.2012 | நீதிமன்றங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் | 175 |
| 48. | 11.5.2012 | தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திட புதிய தயாரிப்பு மண்டலங்கள்! | 177 |
| 49. | 14.5.2012 | மீனவர்களின் நலன்காக்க மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறோம்! | 182 |
| 50. | 14.5.2012 | தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் வசதியற்ற மாணாக்கர்களுக்கு அரசே கட்டணம் செலுத்தும்! | 184 |
| 51. | 14.5.2012 | தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்த 5 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் | 187 |
| 52. | 14.5.2012 | சத்துணவு உண்ணும் பள்ளிக் குழந்தைகளுக்கு இந்த ஆண்டு முதல் 4 இணை சீருடைகள்! | 191 |
| 53. | 15.5.2012 | மானசரோவர் – முக்திநாத் செல்லும் இந்துப் பயணிகளுக்கு அரசு மானியம்! | 194 |
| 54. | 15.5.2012 | அனைத்து அமைப்பு சாரா ஓட்டுநர்களையும் நலவாரியத்தில் சேர்க்க நடவடிக்கை | 196 |

| | | | |
|---|---|---|---|
| 55. | 15.5.2012 | அரசின் இணையதளத்தில் சேவை விளக்கக் கோப்பகம் | 199 |
| 56. | 15.5.2012 | 19,075 எக்டேர் பரப்பளவில் தேக்கு மரங்கள் நடவு செய்யப்படும்! | 201 |
| 57. | 15.5.2012 | தமிழ்நாட்டிற்கென தனியாக ஒரு முத்திரைச் சட்டம் இயற்றப்படும்! | 205 |
| 58. | 29.10.2012 | தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை உருவாக்கப்படும்! | 208 |
| 59. | 1.11.2012 | தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வைர விழா! | 212 |
| 60. | 1.11.2012 | தமிழ்நாட்டில் 12 நிறுவனங்கள் ரூ.20,925 கோடி முதலீடு! | 214 |
| 61. | 1.11.2012 | அரசு ஊழியர்களுக்கு பண்டிகை முன்பணம் ரூ.5,000 ஆக உயர்வு! | 220 |
| 62. | 2.11.2012 | மக்கள் நல்வாழ்வுக்கு மகத்தான பணிகள்! | 222 |
| 63. | 2.11.2012 | சத்துணவுத் திட்டத்தில் புதிய உணவு வகைகள் அறிமுகம்! | 227 |
| 64. | 2.11.2012 | பாரம்பரிய வேளாண் பொருட்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த ரூ.10 கோடி ஒதுக்கீடு! | 230 |


❖ ❖ ❖

# பேருந்து விபத்தில் இறந்தோர் குடும்பங்களுக்கு தலா ரூ.1 இலட்சம் நிவாரண நிதி - 8.6.2011

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

KPN டிராவல்ஸ்–ஐச் சேர்ந்த, படுக்கை வசதி கொண்ட குளிர்சாதனப் பேருந்து நேற்றிரவு சுமார் 9 மணிக்கு, சென்னை கோயம்பேட்டில் இருந்து பொள்ளாச்சி நோக்கிப் புறப்பட்டது. இந்தப் பேருந்தில் 5 பெண்கள், 2 குழந்தைகள் உட்பட 23 பயணிகள் பயணம் செய்தனர். இந்தப் பேருந்தை திரு. நாகராஜன் என்ற ஓட்டுநர் ஓட்டிச் சென்றுள்ளார். இந்தப் பேருந்து PY 01–BH–9919 என்ற எண்ணில், புதுச்சேரியில் பதியப் பெற்றுள்ளது. இந்தப் பேருந்து, சென்னை – பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில். சென்னையில் இருந்து சுமார் 100 கிலோ மீட்டர் தொலைவில், வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், அவலூர் என்னும் இடத்திற்கு அருகே சென்றபோது, அங்கு நின்றிருந்த லாரியைத் தவிர்க்கும் பொருட்டு, பேருந்தின் ஓட்டுநர் பேருந்தை திடீரென்றுத் திருப்பியபோது, கட்டுப்பாட்டை இழந்து, சிறு பாலத்தின் தடுப்புச் சுவற்றில் மோதி, 10 அடி ஆழ பள்ளத்தில் கவிழ்ந்தது. இதில் குளிர்சாதன இயந்திரம் வெடித்து, தீ பிடித்து, அதனால், இந்தப் பேருந்து முழுவதும் எரிந்து எலும்புக் கூடாகிவிட்டது. பேருந்து கவிழ்ந்து தீ பிடித்த இந்த விபத்தில், அப்பேருந்தில் பயணம் செய்த 22 பேர் சம்பவ இடத்திலேயே, தீயில் கருகி உயிரிழந்தனர்.

திரு. கார்த்திகை ராஜன் என்ற ஒரே ஒரு பயணி மற்றும் பேருந்தின் ஓட்டுநர் இந்த விபத்தில் உயிர் பிழைத்துள்ளனர். பேருந்தின் ஓட்டுநர் திரு. நாகராஜன் வேலூர் வடக்குக் காவல் நிலையத்தில் சரண் அடைந்தார். வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு, அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. பயணி, திரு. கார்த்திகை ராஜன், காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தகவல் அறிந்ததும், சம்பவ இடத்திற்கு ராணிப்பேட்டை மற்றும் அருகில் இருந்த தீயணைப்பு நிலையங்களில் இருந்து தீயணைப்பு வாகனங்கள் சென்று, தீயை அணைத்தன. வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர், சட்டம் – ஒழுங்குக் காவல்துறை கூடுதல் இயக்குநர், வடக்கு மண்டலக் காவல் துறைத் தலைவர், வேலூர் மாவட்டக் காவல்துறைத் துணைத் தலைவர் மற்றும் காஞ்சிபுரம், வேலூர் ஆகிய மாவட்டங்களின் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து, தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இந்தச் சம்பவம் பற்றி நேற்று இரவு, அதாவது, 7.6.2011 இரவு, எனக்குத் தகவல் கிடைத்தவுடன், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. வி. செந்தில் பாலாஜி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் வி.எஸ். விஜய், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. டி.கே.எம். சின்னையா ஆகியோரை உடனடியாக சம்பவ இடத்திற்கு அனுப்பி வைத்தேன்.

இந்தக் கோர விபத்தில் மரணம் அடைந்த 22 நபர்களின் உடல்கள் கருகிய நிலையில் உள்ளதால், அடையாளம் காண இயலவில்லை.

22 நபர்களின் சடலங்கள் வாலாஜா அரசு மருத்துவமனைக்குப் பிரேத பரிசோதனைக்காக அனுப்பப்பட்டுள்ளன.

இப்பேருந்தில் பயணம் செய்தவர்களின் விவரம் KPN டிராவல்ஸ் நிறுவனத்தின் Ticket List–இல் இருந்து பெறப்பட்டுள்ளது. அதை வைத்துப் பயணம் செய்தவர்களைக் கண்டு அறியும் பணி நடைபெற்று வருகிறது.

இந்த விபத்தில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், இந்தப் பேரவை உறுப்பினர்களின் ஆழ்ந்த இரங்கலையும், இந்தப் பேரவையின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தப் பேருந்து விபத்தில் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 1 இலட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50,000 ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

## மீனவர்களின்
## நலனைக் காக்கும் அரசு! - 8.6.2011

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடந்த **1.6.2011** அன்று இராமேஸ்வரம் தங்கு தளத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்ற **707** மீன்பிடி விசைப் படகுகளில், இராமேஸ்வரம் பகுதியினைச் சேர்ந்த TN 10/MFB/581 என்ற விசைப்படகு மற்றும் அதில் மீன்பிடிக்கச் சென்ற **5** மீனவர்கள் மற்றும் TN 12/ MFB/252 என்ற விசைப்படகு மற்றும் அதில் மீன்பிடிக்கச் சென்ற **4** மீனவர்களைத் தவிர இதர படகுகள் மற்றும் மீனவர்கள் கரை திரும்பிவிட்டனர். இந்த இரண்டு படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற **9** மீனவர்களும், மண்டபம் பகுதியில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற இன்னொரு மீன்பிடி விசைப் படகான TN 09/MFB/153 என்ற விசைப் படகும் அதில் மீன்பிடிக்கச் சென்ற **4** மீனவர்களும் கரை திரும்பவில்லை.

இராமேஸ்வரம் பகுதியினைச் சேர்ந்த **2** மீன்பிடி விசைப் படகுகள் மற்றும் அதில் மீன்பிடிக்கச் சென்ற **9** மீனவர்கள் மற்றும் மண்டபம் பகுதியினைச் சேர்ந்த ஒரு மீன்பிடி விசைப்படகு மற்றும் அதில் மீன் பிடிக்கச் சென்ற **4** மீனவர்கள், ஆக மொத்தம் **13** மீனவர்களையும், **3** விசைப்படகுகளையும் கடலோரக் காவல் படை மற்றும் இந்தியக் கப்பற்படை மூலம் கடல் மற்றும் ஆகாய மார்க்கமாகத் தேடி கண்டுபிடிக்க **2.6.2011** அன்று எனது அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கடலோரக் காவல் படையினரால் தேடுதல் பணிகள் நடைபெற்றுக் கொண்டு இருந்த தருணத்தில், காணாமல் போன மூன்று விசைப் படகுகளில் இராமேஸ்வரம் பகுதியினைச் சேர்ந்த TN 10/MFB/581 என்ற விசைப்படகும் அதில் மீன்பிடிப்பு மேற்கொள்ளச் சென்ற 5 மீனவர்களும் மற்றும் மண்டபம் பகுதியினைச் சேர்ந்த TN 09/MFB/153 என்ற மீன்பிடி விசைப்படகும் அதிலிருந்த 4 மீனவர்களும், ஆக மொத்தம் 9 மீனவர்களும் மீட்புப் படகுகள் உதவியுடன் 3.6.2011 அன்று காலை பத்திரமாகக் கரை திரும்பிவிட்டனர்.

இராமேஸ்வரம் பகுதியனைச் சேர்ந்த TN 12/MFB/252 என்ற பதிவு எண் கொண்ட ஒரு படகு மட்டும் மோசமான பருவநிலைக் காரணமாகக் காற்றின் வேகத்தால் இலங்கையிலுள்ள நெடுந்தீவு அருகிலுள்ள பகுதிக்கு இழுத்துச் செல்லப்பட்டு, அங்கு அப்படகு மூழ்கியதாகவும், அப்படகில் சென்ற இராமேஸ்வரத்தைச் சேர்ந்த திரு. மூக்குத் துரையின் மகன் திரு. ஜெயகுமார், வயது 45, திரு. தேவக்குமார் மகன் திரு. பிரபாத், வயது 28, திரு. திவ்யநாதன் மகன் திரு. சுந்தர், வயது 50, திரு. கருப்பையா மகன் திரு. மாரிமுத்து, வயது 45, ஆகிய நான்கு மீனவர்களும் 8 மணிநேரம் நடுக்கடலில் தத்தளித்து நீந்தி, இலங்கையிலுள்ள நைனாத் தீவில் பத்திரமாகக் கரை சேர்ந்ததாகவும் தகவல் பெறப்பட்டது.

இந்த நான்கு மீனவர்களும் இலங்கை ஊர்க்காவல் படையினரால் காவல் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல் பெறப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்திற்குத் தெரிவித்து, இச்செய்தியை உறுதி செய்திடுமாறும், மேற்குறித்த

மீனவர்களுக்கு உரிய அனைத்து உதவிகளையும் செய்திடுமாறும், அவர்களை விரைவில் விடுவித்துத் தமிழகத்திற்கு அனுப்பி வைத்திட உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அரசால் **3.6.2011** அன்று நிகரிச் செய்தி அனுப்பப்பட்டது. மேலும், தொலைபேசி மூலமும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இந்த 4 மீனவர்களும் காங்கேசன் துறை நீதிமன்றத்தால் **17.6.2011** வரை காவலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளதாக **6.62011** அன்று இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்திடமிருந்து தொலைபேசி மற்றும் நிகரி மூலம் தகவல் பெறப்பட்டதைத் தொடர்ந்து, நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு இது பற்றிக் கடிதம் அனுப்பியுள்ளேன். நான்கு அப்பாவி மீனவர்களையும் உடனடியாக விடுவிக்க இலங்கை அரசை வற்புறுத்துமாறு அதில் நான் பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளேன்.

மீனவர்களின் நலனைப் பேணிக்காக்கவும், அவர்களின் வாழ்வு மேம்படவும் எனது தலைமையிலான அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# சிறப்புத் தூய்மைப்படுத்தும் திட்டம் - 8.8.2011

**மாண்**புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழக மக்கள் அனைவரும் சுகாதாரமான சுற்றுச்சூழலில் வசிப்பதை உறுதி செய்வது எனது தலைமையிலான அரசின் முக்கிய நோக்கம் ஆகும். எனவேதான், மேதகு ஆளுநர் உரையில், சுற்றுச்சூழலைப் பாதுகாக்க அரசு சிறப்பு முயற்சிகளை மேற்கொள்ளும் என்றும், கிராமப்புரங்களையும், நகர்புரங்களையும் தூய்மைப்படுத்த ஒரு சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேலும், 4.8.2011 அன்று, இந்த மாமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட, 2011–2012 ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு–செலவு மதிப்பீட்டில், “சென்னையிலும், அதன் புறநகர்ப் பகுதிகளிலும், திடக் கழிவு மேலாண்மைக்காக ஒரு விரிவான திட்டம் தயாரித்து, கரிம சேமிப்புக்காகக் கிடைக்கப் பெறும் நிதியையும் பயன்படுத்தி, இத்திட்டத்தைச் செயல்படுத்த இவ்வரசு திட்டமிட்டுள்ளது” என்று குறிப்பிட்டிருந்தோம்.

தற்போது, சென்னை மாநகர் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் உள்ள சுற்றுச்சூழல் குறித்த ஒட்டுமொத்த நிலையை நேரடியாகத் தெரிந்து கொள்ளும் பொருட்டு, நான் 5.8.2011 அன்று ஹெலிகாப்டரில் சென்று வான் வழியாக ஆய்வு செய்தேன்.

அப்போது, பெருங்குடி மற்றும் கொடுங்கையூர் ஆகிய இடங்களில் உள்ள குப்பை கொட்டும் வளாகங்களையும் பார்வையிட்டேன். இந்த ஆய்வின் போது, சென்னை மாநகர் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் ஏராளமான குப்பைகள் கொட்டிக் கிடந்தது தெரிய வந்தது. மேலும், சென்னை மாநகரைச் சுற்றியுள்ள சில பகுதிகளில், குடியிருப்புகளைச் சுற்றி மழைநீர் மற்றும் கழிவுநீர் தேங்கியுள்ளதையும் கண்டறிந்தேன். மிகவும் அசுத்தமாக இருந்தது.

எனவே, சென்னை மாநகர் மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் உள்ள மக்கள் சுகாதாரமான சூழலை உடனடியாகப் பெறுவதற்கு ஏதுவாக, முதற்கட்டமாக, தேங்கியுள்ள குப்பைகளை உடனடியாக அகற்றவும்; குடியிருப்புப் பகுதிகளில் தேங்கியுள்ள அசுத்தமான நீரை அகற்றுவதற்குமான சிறப்பு தூய்மைப்படுத்தும் திட்டம், அதாவது – Mass Cleaning Programme ஒன்று செயல்படுத்தப்படும். இந்தத் தூய்மைப்படுத்தும் பணிகள், மூன்றுமாத காலத்திற்குள் செய்து முடிக்கப்படும். இதனைத் தொடர்ந்து, இந்தப் பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காணும் வகையில், **2011–12** ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு–செலவு மதிப்பீட்டில் குறிப்பிட்டவாறு, விரிவான திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# காற்றாலை மூலம் உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் வழங்கும் திட்டம் - 8.8.2011

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழகத்தின் மின் நிலைமை, நாளுக்கு நாள் மோசமடைந்து, அனைத்துத் தரப்பு மின் நுகர்வோர்களுக்கும் பல மணி நேர மின்தடை அமலில் இருந்தது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். வீட்டுப் பயனீட்டாளர்களுக்கு, சென்னை மாநகரத்தில் ஒரு மணி நேர மின் தடையும்; மாநிலத்தின் பிற பகுதிகளில் மூன்று மணி நேர மின் தடையும் நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது இருந்தது என்பதையும் இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள்.

எனது தலைமையிலான, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றவுடன், மின் நிருவாகத்தில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்ததன் காரணமாக, சென்னை நீங்கலாக மாநிலத்தின் பிற இடங்களில் இருந்த மூன்று மணி நேர மின்தடை, 1.7.2011 முதல் இரண்டு மணி நேரமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

உயர் அழுத்தத் தொழிற்சாலை மற்றும் வணிகப் பயனீட்டாளர்களுக்குத் தேவை மற்றும் பயனீட்டு அளவில் 20 விழுக்காடு மின் தடை அமலில் இருந்து வந்தது. உச்சக்கட்ட

நுகர்வு நேரமான மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரையான காலத்தில், அனைத்து உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கும் மின் வாரியக் கட்டமைப்பிலிருந்து 10 விழுக்காட்டிற்கு மிகாமல் விளக்கு மற்றும் பாதுகாப்புத் தேவைகளுக்காக மின்சாரம் கடந்த 20.8.2010 முதல் வழங்கப்படுகிறது. அதாவது, மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரையான உச்சக்கட்ட நுகர்வு நேரத்தில், உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு 90 விழுக்காடு மின் தடை அமல்படுத்தப்பட்டு வந்தது. தற்போதும், உயர் அழுத்தத் தொழிற்சாலைகள் மற்றும் வணிகப் பயனீட்டாளர்களுக்கு இந்த மின் கட்டுப்பாட்டு முறைகள் நடைமுறையில் உள்ளன.

காற்றாலை மூலம் பெறப்படும் மின்சாரத்தின் மொத்த உற்பத்தித் திறன் 6,007 மெகாவாட் ஆகும். ஆனால், காற்றாலை மூலம் பெறப்படும் மின்சாரம் எப்போதும் ஒரே அளவில் கிடைப்பதில்லை. காற்று அதிகமாக உள்ள ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில், அதிலும், காற்று அதிகமாக வீசக் கூடிய நேரங்களில், காற்றாலை மூலம் பெறப்படும் மின்சாரம் அதிக அளவில் இருக்கும். இவ்வாறு காற்றாலை மூலம் பெறப்படும் மின்சாரத்தின் அளவு, மின்சாரத் தேவை குறைவாக உள்ள இரவு நேரங்களில்தான் அதிகமாக கிடைக்கும். எனவே, பல நேரங்களில் இவ்வாறு கிடைக்கக்கூடிய மின்சாரத்தைப் பயன்படுத்த இயலாமல் போய் விடுவது உண்டு. இதன் காரணமாக, காற்றாலை மூலம் மின்சாரம் தயாரிப்போர், அந்த மின்சாரத்தை, விற்க இயலாத நிலை ஒரு பக்கமும்; மின்சாரத் தேவை உள்ளோர் அதனைப் பெற இயலாத சூழ்நிலை ஒரு பக்கமும், நிலவுவது உண்டு. உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை சேமித்து வைக்க இயலாது என்பதை அனைவரும் நன்கு அறிவார்கள்.

எனவே, மின்சாரத் தேவை குறைவாக உள்ள நேரங்களில் கிடைக்கப் பெறும் அதிக அளவு மின்சாரத்தை, தேவை உள்ளவர்களுக்கு வழங்குவதுதான் சிறந்த மின் நிருவாகம் ஆகும்.

ஆகஸ்டு மற்றும் செப்டம்பர் மாதங்களில் காற்றாலை மூலம் இரவு நேரங்களில் பெறப்படும் அதிக அளவு மின்சாரத்தை தற்போது பயன்படுத்த எனது தலைமையிலான அரசு ஒரு செயல் திட்டத்தை வகுத்துள்ளது. இதன்படி, காற்றாலை மூலம் இரவு நேரங்களில் பெறப்படும் சுமார் 100 மெகாவாட் மின்சாரம், உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு இரவு 10 மணி முதல் காலை 5 மணி வரை 20 விழுக்காடு மின் தடையை விலக்கிக் கொண்டு வழங்கப்படும். காற்றாலை மூலம் இவ்வாறு பெறப்படும் மின்சாரம் முழுவதும் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதால், தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் இந்த மின்சாரத்தை பயன்படுத்திக் கொள்ள இசைவு தெரிவிப்பவர்களுக்கு இது வழங்கப்படும். இந்தச் செயல் திட்டம் இன்று, அதாவது, 8.8.2011 முதல் நடைமுறைப்படுத்தப்படும். இதன் மூலம், உயர் அழுத்தத் தொழிற்சாலைகளுக்கு சுமார் 100 மெகாவாட் அளவுக்கு நிவாரணம் கிடைப்பதுடன், காற்றாலை மூலம் மின் உற்பத்தி செய்பவர்கள் அந்த மின்சாரத்தை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு விற்பதன் மூலம் பயன்பெறுவர். மேலும், தமிழ்நாடு மின்சார வாரியம் மின் தேவை மற்றும் மின் பயனீட்டு அளவுக் கட்டணமாக சுமார் 10 கோடி ரூபாய் வருவாய் ஈட்டும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# பாசனத்திற்கான நீர்வள அமைப்புகளை மேம்படுத்தும் திட்டம் - 11.8.2011

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் பெரும்பாலான மக்கள் வேளாண்மைத் தொழிலையே நம்பி இருப்பதால், வேளாண் பெருமக்கள் வாழ்வில் வளம் பெறவும், அவர்களின் வாழ்வாதாரம் செழிக்கவும், வேளாண் உற்பத்தித்திறனையும், வேளாண் பெருமக்களின் வருமானத்தையும் அதிகப்படுத்துவதற்கான பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது. நீடித்த வேளாண் வளர்ச்சியை அடைவதில் பாசனத்திற்கான நீர்வள அமைப்புகளை வலுப்படுத்துதல் இன்றியமையாதது ஆகிறது.

அந்த வகையில், மாநிலத்தில் பாசன நிலங்களுக்கு ஆதாரமாக உள்ள பாசன உள்கட்டமைப்புகளை நவீனப்படுத்தி பாசனக் கால்வாய் அமைப்புகளைப் புனரமைத்து அவைகளை பழைய நிலைக்குக் கொண்டு வரும் நோக்கத்துடன் உலக வங்கி உதவியுடன் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம் என்னுடைய முந்தைய ஆட்சிக் காலத்தில் செயல்படுத்தப்பட்டது.

இந்தத் திட்டத்தின் தொடர் திட்டமாக, தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம், உலக வங்கி நிதியுதவியுடன், 2,547 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 15 இலட்சத்து 24 ஆயிரத்து 607 ஏக்கர் பாசனப் பரப்பு பயனடையும் வகையில், நீர்வள ஆதாரத் துறை, வேளாண்மைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, மீன்வளத் துறை, தமிழ்நாடு

வேளாண் பல்கலைக்கழகம், தோட்டக்கலைத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை மற்றும் வேளாண்மை விற்பனைத் துறை ஆகிய துறைகளை ஒருங்கிணைத்து விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்படும் வகையில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டமாகும்.

தமிழகத்தில் உப வடிநில கட்டமைப்பு முறையில் ஒருங்கிணைந்த நீர்வள ஆதார மேலாண்மையின் மூலம் பாசன நீர் வழங்கும் சேவை மற்றும் பாசன நில வேளாண் உற்பத்தித் திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தெரிவு செய்யப்பட்ட 60 உப வடிநிலங்களின் 15 இலட்சத்து 24 ஆயிரத்து 607 ஏக்கர் பாசனப் பரப்பு அடங்கிய பாசன அமைப்புகளை நவீனப்படுத்துவதன் மூலம் பெருமளவு நீர் விநியோகத்தினை மேம்படுத்த இத்திட்டம் முனைகிறது. மேலும், 4,848 ஏரிகள், 668 அணைக்கட்டுகள் மற்றும் 7,893 கிலோ மீட்டர் நீர்வழங்கு கால்வாய்களை புனரமைத்து சீர்படுத்துவதன் மூலம் ஏரிப் பாசன முறையை நவீன மயமாக்குதல் மற்றும் கால்வாய்ப் பாசன அமைப்பை மேம்படுத்துதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தில், நீர் மேலாண்மை மூலம் அதிக மகசூல் பெறத்தக்க வகையில் தேவையான நீரை மட்டுமே பயன்படுத்தி மீதமாகும் நீரை அதிக பாசனப் பகுதிகளுக்கு அளித்து வேளாண் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்படுகிறது. மேலும், நீரைப் பயன்படுத்துவோர் மூலமாக நீர்ப்பாசனச் சங்கங்கள் அமைத்து அவர்களின் ஈடுபாட்டுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் ஒரு அங்கமாக, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள அடையாறு உப வடிநிலத்தின் கீழ் உள்ள முறைசார்ந்த மற்றும் முறைசாரா ஏரிகள், அதாவது – System and Non- System Tanks – மற்றும்

நீர்வழங்கு கால்வாய்களை 31 கோடியே 19 இலட்சத்து 31 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைத்து நவீனபடுத்திட நிருவாக ஒப்புதல் அளித்து நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடையாறு உப வடிநிலத்தின் கீழ் உள்ள ஆயக்கட்டு நிலங்களுக்கு நீர் வழங்கும் முறையை செம்மையாக்க, அதன் கட்டமைப்பை நவீனப்படுத்த பின்வரும் பணிகள் இத்திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படும்:–

- ஏரிகளின் கரைகளை இயந்திரங்களைக் கொண்டு பலப்படுத்துதல்
- பழுதுபட்ட மதகுகளை மறு கட்டமைப்பு செய்தல்
- பழுதுபட்ட சிற்றணைகளை மறு கட்டமைப்பு செய்தல்
- நீர்வழங்கு கால்வாய்களை இயந்திரங்கள் கொண்டு தூர்வாருதல்
- ஏரிகளின் எல்லைகளில் எல்லைக் கற்களை அமைத்தல்
- பாசனக் கால்வாய்களில் நீர் அளவீட்டு கட்டமைப்பு ஏற்படுத்துதல்
- இரண்டு ஏரிகளின் தெரிவு செய்யப்பட்ட வரத்துக் கால்வாய்களில் 600 மீட்டர் நீளத்திற்கு அக உறை அமைத்தல், அதாவது Lining அமைத்தல் மற்றும் மற்ற ஏரிகளின் கால்வாய்களில் 30 முதல் 50 மீட்டர் நீளத்திற்கு அக உறை அமைத்தல்

இதனால், காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள செங்கல்பட்டு, தாம்பரம் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் வட்டங்கள் மற்றும் திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள திருவள்ளூர் மற்றும் பூந்தமல்லி வட்டங்களிலுள்ள

முறைசார்ந்த மற்றும் முறைசாரா ஏரிகளின் கீழ் உள்ள 45,597.10 ஏக்கர் ஆயக்கட்டு நிலங்களின் பாசன வசதி மேம்பாடு அடையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டத்தின் மற்றொரு அங்கமாக, காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் உள்ள கிளியாறு உப வடிநிலம் மற்றும் செய்யாறு உப வடிநிலத்தின் ஒரு பகுதியின் கீழ் உள்ள ஏரிகள், அணைக்கட்டுகள் மற்றும் நீர்வழங்கு கால்வாய்களை 84 கோடியே 88 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைத்து நவீனபடுத்திட நிருவாக ஒப்புதல் அளித்து நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

செய்யாறு–கிளியாறு உப வடிநிலத்தின் கீழ் உள்ள ஆயக்கட்டு நிலங்களுக்கு நீர் வழங்கும் முறையை செம்மையாக்க, அதன் கட்டமைப்பை நவீனப்படுத்த, பின்வரும் பணிகள் இத்திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்படும்:–

- நீர்வழங்கு கால்வாய்களை இயந்திரங்கள் கொண்டு தூர்வாரி மேம்படுத்துதல் மற்றும் 200 மீட்டர் இடைவெளிகளில் மாதிரி கால்வாய் வடிவம், அதாவது Model Section அமைத்தல்
- பழுதுபட்ட சிற்றணைகளைப் புனரமைத்தல்
- பழுதுபட்ட மதகுகளை மறு கட்டமைப்பு செய்தல்
- பழுதுபட்ட மதகுகளைப் புனரமைத்தல்
- பாசன ஏரிகளின் மதகுகளுக்கு கீழ் உள்ள நீர்வழங்கு கால்வாய்களில் 35 மீட்டர் தூரத்திற்குத் தேவையான அக உறை அமைத்தல்
- எல்லா மதகுகளின் வெளிப்புறங்களிலும் நீர் அளவீட்டு அமைப்பு கட்டமைப்பை ஏற்படுத்துதல்

- தேவைப்படும் ஏரிகளின் மதகுகளின் இடது வலது புறங்களில் பாதுகாப்பு அமைப்புகளை ஏற்படுத்துதல் மற்றும் அதன் கரைகளில் 500 மீட்டர் இடைவெளிகளில் மாதிரி கால்வாய் வடிவம் அமைத்தல்
- மதகுகளுக்கு திருகு அமைப்பு கொண்ட கதவுகள் அமைத்தல்
- ஏரிகளின் நீர் பரப்புப் பகுதிகளில் எல்லைக் கற்களை நடுதல்

மேற்கண்ட இந்தப் பணிகளை மேற்கொள்வதன் மூலம், காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அச்சரப்பாக்கம், மதுராந்தகம், சித்தாமூர், உத்திரமேரூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய ஒன்றியங்கள் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள வெம்பாக்கம், செய்யாறு, அன்னக்காவூர், வந்தவாசி, பெரணமல்லூர், தெள்ளாறு மற்றும் மேற்கு ஆரணி ஆகிய ஒன்றியங்களில் உள்ள 453 ஏரிகள் மற்றும் இரண்டு அணைக்கட்டுகளின் கீழுள்ள 91,081.25 ஏக்கர் ஆயக்கட்டு நிலங்களின் பாசன வசதி மேம்பாடு அடையும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# 100 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்துதல் -12.8.2011

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைவது மனித வளம்தான். மனிதவள மேம்பாட்டில் முக்கியப் பங்காற்றுவது கல்வி. கல்வியில் மேம்பட்ட சமுதாயத்தால்தான் வளர்ச்சிக் குறியீடுகளை எளிதாக அடைய இயலும். அந்த வகையில்தான் எனது தலைமையிலான அரசு கல்வி வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது.

கல்வி வளர்ச்சியை மேம்படுத்தும் நடவடிக்கையின் ஓர் அங்கமாக, மாநிலத்தில் உள்ள 100 அரசு, மாநகராட்சி மற்றும் நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்த நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் பள்ளிகளில் அறிவியல் பிரிவு மட்டும்தான் இதுவரை துவக்கப்பட்டு வந்தது. மேலும், உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் போது உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்கள்; மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களாகத் தரம் உயர்த்தப்படுவதுடன், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் ஆகிய 5 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் ஒப்பளிக்கப்பட்டு வந்தன.

தற்போது நிலை உயர்த்தப்படும் 100 பள்ளிகளிலும் அறிவியல் பிரிவுடன் கலைப் பிரிவும் துவக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது

என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு நிலை உயர்த்தப்படும் 100 பள்ளிகளிலும் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்கள் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களாகத் தரம் உயர்த்தப்படும் என்பதையும்; ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வரலாறு, பொருளியல், வணிகவியல் மற்றும் தமிழ் ஆகிய பாடங்களுக்காக 9 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் மூலம் தற்போது நிலை உயர்த்தப்படும் 100 பள்ளிகளில், கூடுதலாக 900 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்தப்படும். மேலும், வரலாறு, பொருளியல், வணிகவியல் ஆகிய பாடங்களைப் படிக்கும் வாய்ப்பு மாணவர்களுக்குக் கிடைப்பதுடன், இந்தப் பிரிவுகளில் முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் வேலை வாய்ப்புப் பெறவும் இது வழி வகுக்கும். மேலும், கடந்த பல ஆண்டுகளாக உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் போது தமிழ் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஒப்பளிப்பு வழங்கப்படாத நிலை இருந்து வந்தது. இந்த நிலையும் தற்போது மாற்றப்பட்டு, தமிழ் மொழிப் பாட ஆசிரியர் பணியிடங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கப்படுவதால் தமிழ் மொழிப் பாடத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர்களுக்கு மேல்நிலைப் பள்ளிகளில் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் வேலைவாய்ப்புப் பெற இது ஒரு வாய்ப்பாக அமையும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படுவதால், ஆண்டு ஒன்றுக்கு தோராயமாக 44 கோடியே 91 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# உகந்த பயிர் மேலாண்மை கடைப்பிடிக்கும் திட்டம் - 12.8.2011

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்தச் சட்டமன்றப் பேரவையில் **4.8.2011** அன்று தாக்கல் செய்யப்பட்ட **2011–2012** ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத் திட்ட நிதிநிலை அறிக்கையில், ‘‘முன்னோடி தொழில்நுட்பங்களான திருந்திய நெல் சாகுபடித் திட்டம்; நவீன முறையில் கரும்பு உற்பத்தித் திறனை உயர்த்தும் திட்டம்; துல்லிய பண்ணையம்; பி.டி. பருத்தியைப் பரவலாக்குதல்; பயறு வகைகள்; எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றில் உகந்த பயிர் மேலாண்மையைக் கடைப்பிடித்தல்; பசுமைக் குடில்; துல்லிய பண்ணையம் முறைகளில் காய்கறிகளைப் பயிரிடுதல்; தோட்டக்கலைப் பயிர்களுக்கான அடர் நடவுமுறை போன்றவை தீவிரமாகப் பரவலாக்கப்படும்’’ என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்த மாமன்றத்தில் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர், பி.டி. ரகப் பருத்தி பயிரிடுவதில் பலப் பிரச்சினைகள் இருப்பதால் இதனை அரசு ஊக்குவிக்கக் கூடாது என்ற கருத்தினைத் தெரிவித்திருந்தனர். விவசாயிகளும், அரசு அளவில் பி.டி. ரகப் பருத்தி பயிரிடுவதை ஊக்குவிக்கக் கூடாது என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

**2002** ஆம் ஆண்டு மத்திய அரசு பி.டி. ரகப் பருத்தியினை விவசாயிகள் சாகுபடி செய்வதற்காக Genetic Engineering Approval Committee மூலம் அனுமதி அளித்து இன்று பல மாநிலங்களில் பரவலாகச் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. பி.டி. பருத்தியின் மூலம் அதிக லாபம் பெற முடியும் என்பதால், லாப நோக்கோடு தனியாரிடம் பி.டி. ரக விதைகளை வாங்கி தமிழக விவசாயிகளும் பயிரிட்டு வருகிறார்கள். எனவேதான், நிதிநிலை அறிக்கையில் பி.டி. ரகப் பருத்திச் சாகுபடி பரவலாக்கப்படும் என குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும், மரபணு மாற்றம் செய்யப்பட்ட பருத்தி என்பதாலும்; விவசாயிகளுக்கு நிச்சயமான பலன் அளிக்கும் என்ற உறுதி இல்லாததாலும்; இதனை அரசளவில் பரவலாக்கக் கூடாது என்ற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் விவசாயிகள் கருத்தினை ஏற்று, பி.டி. பருத்தி சாகுபடியைப் பரவலாக்கும் எந்த நடவடிக்கையையும் இந்த அரசு மேற்கொள்ளாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# வன விலங்குகளால் ஏற்படும் உயிரிழப்புகளுக்கு இழப்பீட்டுத் தொகை உயர்த்துதல் - 17.8.2011

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மக்கள்தொகைப் பெருக்கத்தாலும், தொழில் மயமாக்கலாலும் வன விலங்குகளின் இயற்கை வாழ்விடங்கள் பாதிக்கப்படுகின்றன. எனவே, வன விலங்குகள் அடிக்கடி காடுகளை விட்டு வெளியேறி மனிதர்கள் வாழும் பகுதிகளுக்குள் நுழைவதால், மனிதர்கள், பயிர்ச் சேதம், உடமைகள் சேதம், கால்நடைகள் இழப்பு போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர். சில நேரங்களில் வன விலங்குகளால் தாக்கப்படுவதால், மனித உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன. எனவே, வன விலங்குகளின் வாழ்விடங்களை மேம்படுத்துதல்; அவை விரும்பி உண்ணும் பயிர்களை வனப் பகுதிகளில் வளர்ப்பது; வனங்களின் எல்லைப் பகுதிகளில் தடைகளை உருவாக்குவது; மனித உயிர்களுக்கும், விவசாயப் பயிர்களுக்கும், உடமைகளுக்கும் வன விலங்குகளால் ஏற்படும் பாதிப்பிற்கு உடனடியாக இழப்பீடு வழங்குவது போன்ற பல்முனை அம்சங்களை உள்ளடக்கிய செயல் திட்டத்தின் மூலம் இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காணப்படும் என்று, **4.8.2011** அன்று இந்த மாமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட, **2011–2012** ஆம் ஆண்டுக்கான திருத்த வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டு

அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருந்தது. வன விலங்குகளால் மனித உயிரிழப்பு ஏற்படும் போது வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை 1.50 இலட்சம் ரூபாயில் இருந்து, 3 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, வன விலங்குகளால் மனிதர்களுக்கு உயிர் இழப்போ அல்லது நிரந்தர ஊனமோ ஏற்படும் போது வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை 1.50 இலட்சம் ரூபாயில் இருந்து, 3 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். மேலும், பயிர்ச் சேதம், உடமைகள் சேதம், கால்நடைகள் இழப்பு ஆகியவற்றிற்கான இழப்பீட்டுத் தொகையை உயர்த்தி வழங்கவும் எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது.

இதன் அடிப்படையில், வன விலங்குகளால் ஏற்படும் பயிர்ச் சேதத்திற்கான இழப்பீட்டுத் தொகை இதுவரை ஏக்கருக்கு 15,000 ரூபாய் என்ற அளவில் இருந்து, ஏக்கருக்கு 25,000 ரூபாய் என்ற அளவில் உயர்த்தி வழங்கப்படுவதுடன், சேதம் அடைந்த தென்னை மரங்களுக்கும், மரத்திற்கு 500 ரூபாய் என்ற அளவில் இழப்பீடு வழங்கப்படும்.

வன விலங்குகளால், ஓட்டு வீடுகள் / RCC வீடுகள் / கூரை வீடுகள், எந்த அளவுக்கு சேதம் அடைந்தாலும், இதுவரை 5,000 ரூபாய் மட்டும் இழப்பீடாக வழங்கப்பட்டு வந்தது. இந்தத் தொகை இனி, முழுவதும் சேதம் அடைந்த ஓட்டு வீடு / RCC வீடுகளுக்கு 35,000 ரூபாயாகவும், கூரை வீடுகளுக்கு 10,000 ரூபாயாகவும் இனி உயர்த்தி வழங்கப்படும். பெருமளவில் பாதிப்புக்கு உள்ளான ஓட்டு வீடு / RCC வீடுகளுக்கு 5,000 ரூபாயும், கூரை வீடுகளுக்கு 2,000

ரூபாயும், பகுதி சேதமடைந்த வீடுகளுக்கு 1,500 ரூபாயும் இனி வழங்கப்படும். மேலும், வன விலங்குகளால் ஆடு, செம்மறியாடு, பன்றி போன்ற கால்நடைகள் இழப்பு ஏற்பட்டால், இதுவரை அனைத்துக்கும் 1,000 ரூபாய் என்ற வீதத்தில் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டு வந்தது. இனி, அந்தத் தொகை, ஆட்டுக்கு 2,000 ரூபாய் என்ற அளவிலும், செம்மறி ஆட்டுக்கு 1,500 ரூபாய் என்ற அளவிலும், பன்றிக்கு 1,000 ரூபாய் என்ற அளவிலும் வழங்கப்படும். கோழி போன்ற வீட்டில் வளர்க்கப்படும் பறவை இனங்கள் இழப்பு ஏற்பட்டால், இதுவரை பறவைக்கு 30 ரூபாய் என்ற அளவில் இருந்த இழப்பீட்டுத் தொகை, இனி பறவைக்கு 100 ரூபாய் என்ற அளவில் உயர்த்தி வழங்கப்படும். வன விலங்குகளால் உடமைகளுக்கு இழப்பு ஏற்பட்டால், உண்மையான இழப்பின் அளவு அல்லது 100 ரூபாய், இவற்றில் எது அதிகமோ, அந்தத் தொகை இழப்பீட்டுத் தொகையாக இதுவரை வழங்கப்பட்டது. இனி, வன விலங்குகளால் உடமைகள் இழப்பு ஏற்பட்டால், 2,000 ரூபாய் வரை இழப்பீடு வழங்கப்படும் என்பதை மன நிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் நவீன மருத்துவமனை உருவாக்குதல் - 19.8.2011

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நோய் இன்னதெனக் கண்டறிந்து, பின் அது உண்டான காரணத்தை அறிந்து, அதன் பின் அந்நோயைத் தீர்ப்பதற்கான வழிமுறையைக் கையாண்டு, நோய் நீங்க மருத்துவம் செய்ய வேண்டும் என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப, அனைவருக்கும் சுகாதாரம் என்ற குறிக்கோளை எய்தும் நோக்குடன், "தேசிய ஊரக சுகாதார நலத் திட்டம்"– National Rural Health Mission; "தமிழ்நாடு சுகாதார நலத் திட்டம்" – Tamil Nadu Health System Project என்னும் இரண்டு மாபெரும் திட்டங்கள் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தகுதி வாய்ந்த மருத்துவர்கள், செவிலியர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள், நவீன உபகரணங்கள் ஆகியவற்றுடன் சுகாதாரமான சுற்றுச்சூழலைக் கொண்ட தரமான மருத்துவச் சேவையை தாராளமாக அனைத்து மக்களுக்கும் வழங்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் எனது தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது. இந்தக் குறிக்கோளை நிறைவேற்றும் விதமாக, ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்துதல்; உயிர் காக்கும் உபகரணங்களைத் தமிழ்நாடு சுகாதார நலத் திட்டத்தின் கீழ் 55 கோடி ரூபாய் செலவில் மாவட்ட மருத்துவமனைகளுக்கு வழங்குதல்; உணவுப் பாதுகாப்பு–மருந்துக் கட்டுப்பாடு நிருவாகத்திற்கென தனியாக ஒரு ஆணையரகத்தை உருவாக்குவது; திருச்சி அண்ணல் காந்தி அரசு மருத்துவமனையில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறப்பு சிகிச்சை மையம், அதாவது,

Super Speciality Centre அமைத்தல்; மக்கள் வீட்டிற்கே சென்று சுகாதார வசதிகள் அளிக்கக் கூடிய ‘‘நடமாடும் மருத்துவமனை’’ என்னும் புதிய திட்டம் உட்பட பல்வேறு சிறப்புத் திட்டங்கள் எனது தலைமையிலான அரசின், 2011–2012 ஆம் ஆண்டுக்கான திருத்திய நிதிநிலை அறிக்கையில் இடம் பெற்றுள்ளதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் அறிவீர்கள்.

இவை மட்டும் அல்லாமல், அனைவருக்கும் மருத்துவச் சேவையை நல்கும் வகையில், ‘‘முதலமைச்சரின் விரிவான பொது மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்’’ தொடங்கப்படும் என்றும், இந்தத் திட்டத்தின் கீழ் அரசு மருத்துவமனைகளில் உள்ள மருத்துவ வசதிகளைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ள வழிவகை செய்யப்படும் என்றும் நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. இதன் அடிப்படையில், அரசு மருத்துவமனைகளில் உள்ள மருத்துவ வசதிகளைச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது, இவற்றுக்கெல்லாம் முத்தாய்ப்பாக, தமிழ்நாட்டில் உள்ள அனைத்துத்தரப்பு மக்களும், குறிப்பாக, ஏழை, எளிய மக்கள், பல்வேறு நோய்களுக்கும், தரமான, உயரிய சிகிச்சையினை இலவசமாகப் பெறும் வகையில், பல துறை உயர் சிறப்பு மருத்துவமனை, அதாவது, Multi Super Speciality Hospital ஒன்றை அமைக்க எனது தலைமையிலான அரசு முடிவு எடுத்துள்ளது என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மருத்துவமனை, சென்னை மாநகரத்தின் மையப் பகுதியான அண்ணா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில், முந்தைய தி.மு.க அரசால், புதிய தலைமைச் செயலகம் அமைப்பதற்காகக் கட்டப்பட்ட, 97,829 சதுர மீட்டர் தளப் பரப்பு கொண்ட பிளாக் ‘A’ கட்டடத்தில் அமைக்கப்படும். இந்தக் கட்டடம், சட்டமன்றம் மற்றும் தலைமைச் செயலகத்தில் தற்போது உள்ள 36 துறைகளும் செயல்படுவதற்குப் போதுமானதல்ல என்பதாலும்;

பயன்படுத்தக் கூடிய இடம் வெகுக் குறைவாக இருப்பதால், அலுவலகப் பயன்பாட்டிற்கு ஏற்ற வகையில் இந்தக் கட்டடம் இல்லை என்பதாலும்; இரு வேறு கட்டடங்களில் இருந்து தலைமைச் செயலகம் செயல்பட முடியாது என்பதாலும்; சட்டமன்றமும், தலைமைச் செயலகமும் புனித ஜார்ஜ் கோட்டையில் இயங்கி வருவதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள்.

தற்போது, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில், பயன்படுத்தப்படாமல் உள்ள கட்டடம், ஏழை, எளிய மக்களுக்கு பயனளிக்கும் வகையில் பயன்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கத்தில், இந்தப் பலதுறை உயர் சிறப்பு மருத்துவமனையை அமைக்க எனது தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கட்டடத்தில் பல துறை உயர் சிறப்பு மருத்துவமனை அமையும் வகையில் தேவையான மாற்றங்கள் செய்யப்பட்டு, மருத்துவ வல்லுநர்கள், செவிலியர்கள், தொழில்நுட்பப் பணியாளர்கள் ஆகியோர் நியமிக்கப்பட்டு, உயர் தர மருத்துவ சிகிச்சைக்குத் தேவையான நவீன உபகரணங்கள் வாங்கப்பட்டு, இந்த மருத்துவமனை விரைவில் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மருத்துவமனை, புது டெல்லியிலுள்ள AIIMS (All India Institute of Medical Sciences) மருத்துவமனைக்கு இணையான வசதிகளுடன் விளங்கும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

மேலும், தற்போது கட்டப்பட்டு வரும் பிளாக் ‘B’ கட்டடங்களில் புதியதாக ஒரு அரசு மருத்துவக் கல்லூரியைத் தொடங்கவும் எனது தலைமையிலான அரசு முடிவு எடுத்துள்ளது என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# கூட்டுறவுத் துறையில் உள்ள கிடங்கு வசதியினை விரிவுபடுத்துதல் - 25.8.2011

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நமது நாட்டின் முதன்மைத் தொழிலான வேளாண்மையே பொருளாதாரத்தின் உயிர்நாடி ஆகும். தமிழகத்தில் பெரும்பாலான கிராமப்புற மக்களுக்கு வேளாண்மைத் தொழிலே வாழ்வாதாரமாக உள்ளது. எனவே, வேளாண்மைத் தொழிலுக்கு புத்துயிர் ஊட்டி, உற்பத்தித் திறனை மேம்படுத்துவதன் மூலம் வேளாண்மை உற்பத்தியை அதிகரித்து, இரண்டாம் பசுமைப் புரட்சிக்கு வித்திட எனது அரசு உறுதி பூண்டுள்ளது. இதன் அடிப்படையில், இந்த ஆண்டு உணவு தானிய உற்பத்தியில் 115 இலட்சம் மெட்ரிக் டன் என்ற உயர் இலக்கினை எனது அரசு நிர்ணயித்துள்ளது. வேளாண் உற்பத்தியை அதிகரிப்பது மட்டுமல்லாது, வேளாண் பெருமக்கள் விளைவித்த பொருட்களுக்கு நியாயமான விலை கிடைத்து, அவர்களின் தனி நபர் வருமானம் உயரும் வகையிலும் எனது அரசு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. விவசாயிகள், தாங்கள் விளைவிக்கும் பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கும் வரையில் சேமித்து வைக்க வேண்டியதன் அவசியத்தை எனது அரசு நன்கு உணர்ந்துள்ளது.

மாநிலத்தில் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்கள் ஆகியவற்றில் மொத்தமாக 8 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவில் சேமிப்புக் கிடங்கு வசதி உள்ளது.

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்கள், உறுப்பினர்களின் விவசாய விளை பொருட்களுக்கு ஈடாகத் தானிய ஈட்டுக் கடன்களை வழங்கி வருகின்றன. அறுவடைக் காலங்களில் வேளாண் விளை பொருட்களின் விலை வீழ்ச்சி அடையும் போது, விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை கிடங்கில் 1 முதல் 2 மாதங்கள் சேமித்து வைத்து, தானிய ஈட்டுக் கடன் பெற்றுக் கொள்வதுடன், விலை ஏற்றத்தின் போது விளை பொருட்களைக் கிடங்கில் இருந்து எடுத்து நல்ல விலைக்கு விற்பதால், விவசாயிகளுக்கு 10 முதல் 30 சதவீதம் அதிக விலை கிடைக்கிறது.

நடப்பு ஆண்டில், 185 கோடி ரூபாய் அளவிற்குத் தானிய ஈட்டுக் கடன் வழங்க திட்டமிடப்பட்டு உள்ளது. தமிழ்நாட்டில் தானிய ஈட்டுக் கடன் வழங்குவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளதாலும், கூட்டுறவுத் துறையில் தற்போது உள்ள கிடங்குகளின் பயன்பாடு அதிக அளவில் உள்ளதாலும், மாநிலத்தில் கிடங்கு வசதியினை விரிவுபடுத்துவது உடனடித் தேவையாக உள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு, NABARD வங்கியின் ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதித் திட்டத்தின் கீழ் கடன் உதவி பெற்று, மொத்தம் 105 கோடியே 47 இலட்சம் ரூபாய் செலவில்,

மாநிலம் முழுவதும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் 100 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 1,118 கிடங்குகளும், 21 வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளும்; 21 வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளும்; 6 வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 2,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகளும், ஆக மொத்தம் 1,166 கிடங்குகள் கட்ட எனது அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் மூலம், 1 இலட்சத்து 55 ஆயிரத்து 300 மெட்ரிக் டன் அளவுக்குக் கூடுதல் சேமிப்பு வசதி ஏற்படுத்தப்படும். இதன் மூலம் தானிய சேமிப்பு இழப்பு குறைக்கப்படுவதுடன், தானிய ஈட்டுக் கடன் வசதியும் அதிகரிக்கப்படுவதால், விவசாயிகளுக்கு ஆண்டுக்கு சுமார் 26 கோடியே 40 இலட்சம் ரூபாய் அளவுக்குக் கூடுதல் வருவாய் கிடைக்க வாய்ப்பு ஏற்படும் என்பதையும் மன நிறைவுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# உண்மையான, நிலையான சமச்சீர் கல்வி வழங்கிட முன்னுரிமை - 26.8.2011

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கல்வி என்னும் வற்றாத செல்வம், தனி மனிதன் வாழ்க்கையை வளம்பெறச் செய்யவும், அவன் சார்ந்த சமுதாயத்தின் மேம்பாட்டிற்கும்; நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமைகிறது. பொருளாதார வளர்ச்சி அடைவது மட்டும் அன்றி, வாழ்க்கையில் பல்வேறு நலன்களையும் முழுமையாகப் பெறுவதற்குக் கல்வி இன்றியமையாதது ஆகிறது. இத்தகைய பயன் மிக்க கல்வியை மாநிலம் முழுவதும் உள்ள குழந்தைகளுக்குத் தரமாக அளிப்பதற்கும்; அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பாதுகாப்பான சூழ்நிலையில் குழந்தைகள் கல்வி கற்கும் வசதியை அளிப்பதற்கும்; இவை மூலம் உண்மையான, நிலையான சமச்சீர் கல்வி வழங்கிடவும் எனது தலைமையிலான அரசு முன்னுரிமை அளித்து வருகிறது.

அந்த வகையில், மாநிலத்தில் உள்ள பள்ளி மாணவ, மாணவியர்கள் தரமான கல்வியைப் பெறும் வகையில், எனது தலைமையிலான அரசால் செயல்படுத்தப்பட உள்ள சில புதிய திட்டங்கள் குறித்து நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அனைவருக்கும் தரமான கல்வியை வழங்குவது என்ற இவ்வரசின் நோக்கத்தின் ஒரு அங்கமாக, மேலும் 65 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும்; 710 நடுநிலைப்

பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும்; ஆக மொத்தம் 775 பள்ளிகளை 419 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் நிலை உயர்த்த நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளிகளைத் தரம் உயர்த்துவதினால் மட்டும் தரமான கல்வியை மாணவர்களுக்கு அளிக்க முடியாது. தேவைக்கேற்ப ஆசிரியர்களும் இருக்க வேண்டும் என்பதை எனது அரசு உணர்ந்துள்ளது. எனவே, நிலை உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்கும், ஆசிரியர்–மாணவர் விகிதத்தின் அடிப்படையில் கூடுதல் ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்த எனது தலைமையிலான அரசு முடிவெடுத்து உள்ளது. அதன்படி, 9,735 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் 3,565 இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள், ஆக மொத்தம் 13,300 ஆசிரியர் பணியிடங்களை, 315 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் இந்த ஆண்டிலேயே ஏற்படுத்த ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

உண்மையான சீரான கல்வி என்பது பாடப் புத்தகத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்காமல் கல்வி இணைச் செயல்பாடுகளுக்கும் உரிய முக்கியத்துவம் அளிக்க வேண்டும். இதன் அடிப்படையில், உடற்கல்வி, ஓவியம், தொழிற்கல்வி ஆகியவற்றுக்காக ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 16,549 பகுதி நேர ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்தப்படும். இதனால் இப்பள்ளிகளில் 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியர் பயன் அடைவர். இதற்கு, அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 99 கோடியே 29 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

முனைவர் முத்துக்குமரன் குழு அளித்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு, சமச்சீர் கல்விக்கு மிகவும் இன்றியமையாதது அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் ஆகும். பொதுப் பாடத் திட்டம் மட்டும் சமச்சீர் கல்வி ஆகாது. இதனை நன்கு உணர்ந்த எனது அரசு, ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், இந்தக் கல்வி ஆண்டில், கூடுதல் வகுப்பறைகள், கழிப்பறைகள், சுகாதாரமான குடிநீர் வசதி, சுற்றுச்சுவர் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட உடனடி நடவடிக்கை எடுக்க உள்ளது என்பதை மிகவும் உவகையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் கல்வி ஆண்டில் 1,082 கோடியே 71 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இவை ஏற்படுத்தப்படும்.

மேற்கண்ட திட்டங்கள் அனைத்தும், மத்திய அரசும், மாநில அரசும் இணைந்துச் செயல்படுத்தும் 'அனைவருக்கும் கல்வித் திட்டம்' மற்றும் 'அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம்' ஆகிய திட்டங்களின் கீழ் செயல்படுத்தப்படும்.

மேலும், நிலை உயர்த்தப்பட்ட மேல்நிலைப் பள்ளிகளுக்கு, 3,187 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள், முழுவதும் மாநில அரசின் நிதியில் இருந்து, 90 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில், இந்தக் கல்வி ஆண்டு முதல் இரண்டு கட்டங்களில் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1985 ஆம் ஆண்டிலிருந்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளுக்கு இலவசமாக பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. மாணவர்களிடம் இருக்கும் ஏற்றத் தாழ்வுகளை நீக்கும் நல்லெண்ணத்துடன் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் அனைத்து

மாணவ, மாணவியர்களுக்கும் ஒரே மாதிரியான புத்தகப் பைகள்; கற்றலுக்குத் தேவையான கணித உபகரணப் பெட்டி, அதாவது Geometry Box; கிராமப்புற மாணவ, மாணவியர்களுக்கு இதுவரை கிடைக்கப் பெறாத வண்ணப் பென்சில்கள் மற்றும் புவியியல் வரைபடங்கள் போன்றவை வரும் கல்வியாண்டு முதல் வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக ஆண்டு ஒன்றுக்குத் தோராயமாக 119 கோடியே 48 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

சுத்தம் மற்றும் சுகாதாரமான சுற்றுச்சூழல் பள்ளிக் கூடங்களில் அமையப் பெற வேண்டும் என்பது எனது திடமான எண்ணம் ஆகும். எனவே, அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் துப்புரவாளர் மற்றும் இதர பணிகளுக்கான 5,000 ஆசிரியர் அல்லாத பணியிடங்கள் ஏற்படுத்தப்படும். இதன் காரணமாக, அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 60 கோடி ரூபாய் செலவு ஏற்படும்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில், குழந்தைகளின் புத்தகச் சுமை குறைக்கப்படும் என்ற வாக்குறுதி கொடுக்கப்பட்டுள்ளது. குழந்தைப் பருவத்தில் தேவைக்கு அதிகமாக புத்தகச் சுமையை தூக்குவதால் ஏற்படும் உடல்நலக் குறைபாடுகளைக் குறைக்கும் நோக்கத்துடன், வரும் கல்வியாண்டு முதல் இப்புத்தகச் சுமையை குறைக்கும் வகையில் தமிழ்நாட்டில் முப்பருவ முறை, அதாவது, Trimester pattern அறிமுகப்படுத்தப்படும். முழுக் கல்வியாண்டிற்குரிய பாடப் புத்தகங்கள் மூன்று பருவங்களுக்கு ஏற்றவாறு பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பருவ முடிவிலும் தொடர் மற்றும் கூட்டு மதிப்பீட்டுடன் கூடிய தேர்வுகள் நடத்தப்படும். இதன் மூலம் மாணவர்களின் கவலை, அச்சம், மன அழுத்தம் ஆகியவை பெரிதும் குறைக்கப்படுவதுடன், பள்ளி செல்லும் குழந்தைகளுக்குப்

புத்தகச் சுமையினால் ஏற்படும் இன்னல்கள் நீக்கப்படும் என்பதை மன நிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் மதிப்பெண் சான்றிதழ்கள் தவறாகக் கையாளக் கூடிய வாய்ப்பு உள்ளதைத் தவிர்க்கும் பொருட்டு, அவர்களது புகைப்படம் மற்றும் ரகசிய குறியீட்டுடன் கூடிய மதிப்பெண் சான்றிதழை வழங்க எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது. எனவே, 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியருக்கு அவர்களின் புகைப்படத்துடன் கூடிய மறைமுகக் குறியீட்டுடன் மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவ, மாணவியர்களின் திறமையையும், ஆற்றலையும் வளப்படுத்துவதற்கு அவர்களின் சிந்திக்கும் ஆற்றலை மேம்படுத்துவது மிகவும் அவசியம். இதனைக் கருத்தில் கொண்டு, குழந்தைகளின் சிந்திக்கும் ஆற்றலை மேம்படுத்தும் நோக்கத்துடன், 7 முதல் 17 வயதுள்ள பள்ளி செல்லும் மாணவ, மாணவியருக்குச் சதுரங்க விளையாட்டு வரும் கல்வியாண்டு முதல் அறிமுகப்படுத்தப்படும். இந்த விளையாட்டினால் மாணவ, மாணவியரின் அறிவுத் திறன் வளர்வதுடன், கூர்மையாக சிந்திக்கும் ஆற்றலும் விரிவடையும்.

கணினி மூலம் கற்பது பள்ளிகளில் தற்போது இன்றியமையாததாக உள்ளது. மாணவ, மாணவியர்கள் தமது பாடப் புத்தகங்களுக்கு அப்பாற்பட்டு, பற்பல குறிப்புகளையும் பாடத்திற்கு ஏற்ற மேற்கோள்களையும் மற்றும் தேவையான தகவல்களையும் அறிந்து கொள்வதற்கு கணினி முக்கியமான ஒன்று என்பதனை உணர்ந்து, அரசு மற்றும் அரசு உதவி பெறும்

பள்ளிகளில் +1 மற்றும் +2 பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு இலவச மடிக்கணினி வழங்கும் திட்டத்தினை அறிவித்துள்ளேன். அதனைத் தொடர்ந்து, எல்லா வகுப்புகளிலும் படிக்கும் மாணவ, மாணவியர்கள் பயன் பெறும் விதத்திலும், தமிழகத்தில் உள்ள அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர் / ஆசிரியைகளின் வகுப்பறைக் கற்றல், கற்பித்தல் முறைகளை மேம்படுத்தும் வகையிலும் ICT@ Schools (Information and Communication Technology@ Schools), Tamil Nadu என்ற புதிய திட்டம் உருவாக்கப்படும். இத்திட்டத்தில் எல்லா வகுப்புகளுக்குமான பாடப் புத்தகங்களின் உட்பொருளைக் கணினிமயமாக மாற்றி மையக் கணினி மூலமாக வகுப்பறைகளில் வழங்க வழிவகை செய்யப்படும். எல்லா மாணவ, மாணவியர்களும் பயன் அடையும் பொருட்டு சிறந்த ஆசிரியர்களின் விரிவுரைகளின் தொகுப்புகள் கல்வி செயற்கை கோள் வாயிலாக வகுப்பறைகளுக்குச் சென்றடைய இத்திட்டத்தின் வாயிலாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை இந்த அவைக்கு பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பள்ளிக் கல்வித் துறை மூலம் எனது அரசு செயல்படுத்த இருக்கும் இந்தத் திட்டங்களால், மாநிலத்தில் உள்ள பள்ளி மாணவ, மாணவியர்கள் உரிய உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய பள்ளிகளில், மிகவும் உகந்த சூழலில், தரமான கல்வி கற்கும் நிலை உருவாகி, உண்மையான சமச்சீர் கல்வி கிடைக்க வழி வகுக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# கைதிகள் மூவரின் தூக்குத் தண்டனை ரத்து தொடர்பான அரசின் நிலை - 29.8.2011

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1991 ஆம் ஆண்டு, மே மாதம் 21 ஆம் நாள், முன்னாள் பாரதப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் ஸ்ரீபெரும்புதூரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ள வந்த போது படுகொலை செய்யப்பட்டார் என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். இது தொடர்பான வழக்கு பூந்தமல்லி தடா நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, குற்றம் சாட்டப்பட்ட 26 பேருக்கும் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. அதனை எதிர்த்து குற்றம் சாட்டப்பட்டவர்கள் உச்ச நீதிமன்றம் வரை சென்று மேல் முறையீடு செய்ததில், உச்ச நீதிமன்றம் நளினி, ஸ்ரீஹரன் என்கிற முருகன், சுதேந்திரராஜா என்கிற சாந்தன், பேரறிவாளன் என்கிற அறிவு, ஆகிய நான்கு பேருக்கும் தூக்கு தண்டனையை உறுதி செய்தது. மேலும் 3 பேருக்கு தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தது. எஞ்சிய 19 பேரை விடுதலை செய்தது. உச்ச நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை எதிர்த்து, தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட 4 நபர்களும் மறு ஆய்வு மனு தாக்கல் செய்தனர். இதனை 8.10.1999 அன்று உச்ச நீதிமன்றம் நிராகரித்து உத்தரவிட்டது.

17.10.1999 அன்று மேற்கண்ட தூக்கு தண்டனைக் கைதிகள் மேதகு தமிழக ஆளுநர் அவர்களுக்குக் கருணை மனுக்களை

சமர்ப்பித்தார்கள். 27.10.1999 அன்று மேதகு தமிழக ஆளுநர் இவர்களின் கருணை மனுக்களை நிராகரித்து ஆணையிட்டார்.

தூக்கு தண்டனைக் கைதிகள் சென்னை உயர் நீதிமன்றத்தில் இது தொடர்பாக வழக்குகள் தொடுத்தனர். இந்த வழக்குகளை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம், 25.11.1999 அன்று வழங்கிய தீர்ப்பில், மனுதாரர்கள் தொடுத்த வழக்குகளை ஏற்று கருணை மனுக்களை நிராகரித்த மேதகு ஆளுநரின் ஆணையை தள்ளுபடி செய்து, அமைச்சரவையின் ஆலோசனையைப் பெற்று புதிய ஆணை வழங்குமாறு அறிவுறுத்தியது.

இந்தப் பொருள் குறித்து 19.4.2000 அன்று அன்றைய முதலமைச்சர் திரு. கருணாநிதி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவு எடுக்கப்பட்டது:–

“தூக்கு தண்டனை வழங்கப்பட்ட நான்கு கைதிகளில் ஒருவரான நளினியின் பெண் குழந்தை அனாதை ஆகிவிடும் என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்திற்கிணங்க, நளினி ஒருவருக்கு மட்டும் கருணை காட்டி மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்கலாம் என்றும், மற்றவர்களைப் பொறுத்த வரையில் அவர்களது கருணை மனுக்களை நிராகரிக்கலாம் என்றும் ஆளுநருக்கு ஆலோசனை வழங்க அமைச்சரவை முடிவெடுத்தது.”

திரு. கருணாநிதி தலைமையிலான அமைச்சரவையின் முடிவினை ஏற்று மேதகு ஆளுநர் அவர்கள் 21.4.2000 அன்று ஒப்புதல் அளித்தார். அதன்படி தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட 4 நபர்களில் சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோரது தூக்கு தண்டனை உறுதி செய்யப்பட்டது. இந்த மூன்று நபர்களும் மேதகு குடியரசுத் தலைவருக்கு அளித்த கருணை

மனுக்களை தமிழ்நாடு அரசு 28.4.2000 நாளிட்ட கடிதத்தின்படி மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தது. இதன் மீது மத்திய அரசின் உள்துறை, தனது 12.8.2011 நாளிட்ட கடிதத்தில் மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் இந்தக் கருணை மனுக்களை நிராகரித்து உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவித்து, இதனை மேற்கண்ட கைதிகளுக்குத் தெரியப்படுத்துமாறு தெரிவித்து உள்ளது. இந்தக் கடிதத்தின் விவரம் சம்பந்தப்பட்ட கைதிகளுக்குத் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இந்த நிலையில் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் தூக்கு தண்டனை விதிக்கப் பெற்ற மேற்படி பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரைத் தூக்கு தண்டனையில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்று எனக்குக் கோரிக்கைகள் விடுத்துள்ளதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வந்துள்ளன. மேலும் பேரறிவாளனின் தாய் திருமதி அற்புதம் அம்மாள், எனக்கு எழுதியுள்ள கடிதத்தில் தனது மகனை விடுவிக்குமாறு வேண்டி உள்ளார். தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கம் பேரறிவாளன் உள்ளிட்ட மூன்று நபர்களின் தூக்கு தண்டனையை ரத்து செய்ய என்னிடம் கோருவதாகத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றி உள்ளதாக தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கத்தின் தலைவர் திரு. பாரதிராஜா கடிதம் எழுதி உள்ளார். மேலும் சிலர் இது பற்றி கடிதங்கள் எழுதி உள்ளனர்.

இதில் எல்லோரும் கவனிக்க வேண்டிய உண்மை என்னவென்றால், பேரறிவாளன் உள்ளிட்ட மூவரை மரண தண்டனையிலிருந்து தமிழக முதலமைச்சராகிய நான் காப்பாற்ற வேண்டும் என்று முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். ஆனால் 2000ஆம் ஆண்டில் முதலமைச்சராக இருந்த இதே திரு. கருணாநிதிதான் தனது

தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பேரறிவாளன் உள்ளிட்ட மூவரின் கருணை மனுக்களையும் நிராகரிக்கலாம் என்றும், மூவருக்கும் விதிக்கப்பட்ட மரண தண்டனையை உறுதி செய்யலாம் என்றும் தீர்மானம் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பியுள்ளார். அன்றைய முதலமைச்சர் கருணாநிதியின் இந்தப் பரிந்துரையை அன்றைய ஆளுநரும் ஏற்றுக் கொண்டார்.

இவ்வாறு பேரறிவாளன் உள்ளிட்ட மூவருக்கும் அளிக்கப்பட்ட மரண தண்டனையை உறுதி செய்து விட்டு, செய்வதையெல்லாம் செய்து விட்டு, இன்று ஒன்றும் தெரியாதது போல், அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று திரு கருணாநிதி அறிக்கை வெளியிடுகிறார் என்றால், இது இரட்டை வேடம் அல்லாமல், பித்தலாட்டம் அல்லாமல், கபட நாடகம் அல்லாமல், வேறு என்ன என்பதை தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும்.

தமிழ்நாடு முதலமைச்சர் என்ற முறையில் பேரறிவாளன் உள்ளிட்ட மூவரின் தூக்கு தண்டனையை ரத்து செய்யும் அதிகாரம் எனக்கு இருப்பது போலவும், அந்த அதிகாரத்தை நான் பயன்படுத்தி அவர்களைக் காப்பாற்ற முடியும் என்பது போலவும் பேசப்படுவது சட்டத்தின்படி சரியானது அல்ல. பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் சட்டங்களைத் தெரிந்து கொண்டு வேண்டுமென்றே இவ்வாறு எனக்கு அதிகாரம் இருப்பது போல சொல்லி வருகிறார்களா ? அல்லது சட்டங்களைப் பற்றி எதுவுமே தெரியாமல் முதலமைச்சருக்கு இத்தகைய அதிகாரம் இருப்பதாகக் கூறுகிறார்களா ? என்பது தெரியவில்லை.

எனவே, சட்ட நிலைமை என்ன என்பதை இந்த மாமன்றத்தின் வாயிலாகப் பொதுமக்களுக்குத் தெரிவிப்பது எனது கடமை ஆகும் எனக் கருதுகிறேன்.

உச்ச நீதிமன்றத்தால் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு மேதகு ஆளுநரோ அல்லது மேதகு குடியரசுத் தலைவரோ தான் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் படி மன்னிப்பு அளிக்க முடியும். இவர்களுக்கு மேதகு ஆளுநர் அவர்கள் மன்னிப்பு அளிக்க வேண்டும் எனக் கருதப்பட்டிருந்தால் 2000 ஆம் ஆண்டு அன்றைய முதலமைச்சர் திரு. கருணாநிதி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில்தான் அதற்கான முடிவு எடுத்திருக்க முடியும்; எடுத்திருக்க வேண்டும். அமைச்சரவையின் அறிவுரைப்படி மேதகு ஆளுநர் அவர்களால் பேரறிவாளன் உள்ளிட்ட மூவரின் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டு, பின்னர் மேதகு குடியரசுத் தலைவர் அவர்களாலும் மூவரின் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டு உள்ள இந்த நிலையில், தூக்கு தண்டனையை ரத்து செய்வதற்கோ, நிறுத்தி வைப்பதற்கோ எந்த வித அதிகாரமும் தமிழக முதலமைச்சராகிய எனக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேதகு குடியரசுத் தலைவர் அவர்களால் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில், மீண்டும் அதே பொருள் தொடர்பான கருணை மனுவை மாநில ஆளுநர் பரிசீலிக்க வேண்டும் என மாநில அரசு கோர முடியாது என 1991 ஆம் ஆண்டே மத்திய அரசு தெளிவுரை வழங்கி உள்ளது. 5.3.1991 நாளிட்ட கடிதத்தில் மத்திய உள்துறை அமைச்சரகம் பின் வருமாறு தெரிவித்துள்ளது:—

"... ...

2. The Government of India, on an examination of the matter, and after taking all relevant constitutional aspects into view, direct in terms of article 257(1) of the Constitution of India that in cases of death sentences where a petition for grant of pardon, etc., has earlier been rejected by the

President of India in exercise of his powers under article 72 of the Constitution of India, it would not be open for the Government of a State to seek to exercise similar powers under article 161 in respect of the same case. However, if there is a change of circumstances or if any new material is available, the condemned person himself or any one on his behalf may make a fresh application to the President for reconsideration of the earlier order. Once the President has rejected a mercy petition, all future applications in this behalf should be addressed to and would be dealt with by the President of India."

அதாவது, இப்பொருள் தொடர்பாக அரசமைப்புச் சட்டத்தின் பொருத்தமான தன்மைகளைக் கருத்தில் கொண்டு பரிசீலித்த மத்திய அரசு, மரண தண்டனை குறித்த நிகழ்வுகளில் அதன் தொடர்பான கருணை மனு இந்திய அரசமைப்புச் சட்டம் **72**இன் கீழ் குடியரசுத் தலைவருக்கு உள்ள அதிகாரத்தின்படி குடியரசுத் தலைவரால் நிராகரிக்கப்பட்டிருந்தால், அது தொடர்பாக இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவுக்கூறு **161**இன்படி உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்த மாநில அரசிற்கு அதிகாரம் இல்லை என்று அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு கூறு **257 (1)**இன்படி கட்டளையிடுகிறது.

இருப்பினும் சூழ்நிலைகள் மாறுபட்டிருந்தாலோ அல்லது புதியதாக ஏதாவது ஆதாரம் இருந்தாலோ, மரண தண்டனை பெற்ற நபரோ அல்லது அவர் சார்பாக வேறு ஒருவரோ, குடியரசுத் தலைவரின் முந்தைய உத்தரவை மறுபரிசீலனை செய்யுமாறு புதியதாக ஒரு மனுவினை குடியரசுத் தலைவருக்குச் சமர்ப்பிக்கலாம். குடியரசுத் தலைவரால் கருணை மனு நிராகரிக்கப்பட்ட பின்னர்,

அது தொடர்பாக பின்னர் தாக்கல் செய்யப்படும் அனைத்து மனுக்களும் குடியரசுத் தலைவருக்குதான் சமர்ப்பிக்கப்பட வேண்டும்; இது குறித்து நடவடிக்கையை குடியரசுத் தலைவர்தான் எடுப்பார்.

எனவே, பேரறிவாளன் உள்ளிட்ட மூன்று நபர்களின் கருணை மனு மேதகு குடியரசுத் தலைவர் அவர்களால் நிராகரிக்கப்பட்ட நிலையில், இதனை மாற்றுவதற்கு எந்தவித அதிகாரமும் மாநில முதலமைச்சர் என்ற முறையில் எனக்கு இல்லை என்பதை வலியுறுத்தித் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த நிலையில் எனக்கு இதற்கான அதிகாரம் இருக்கிறது என்ற பிரச்சாரத்தை அரசியல் கட்சித் தலைவர்கள் எவரும் மேற்கொள்ள வேண்டாம் என்று இந்தப் பேரவையின் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

குடியரசுத்தலைவர் அவர்களால்கருணை மனுநிராகரிக்கப்பட்ட நிலையில், இந்த மூவரின் உயிரைக் காப்பாற்ற தற்கொலை செய்து கொள்வதாக ஒரு கடிதம் எழுதி வைத்து விட்டு, மக்கள் மன்றம் என்ற அமைப்பைச் சேர்ந்த செங்கொடி என்ற இளம்பெண் தற்கொலை செய்து கொண்டதாக வந்துள்ள செய்தி எனக்கு மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்தி உள்ளது. உணர்ச்சி வயப்பட்டு, இது போன்ற செயல்களில் யாரும் ஈடுபட வேண்டாம் என்றும் நான் கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# குறைந்த செலவில் தமிழ்நாடு அரசின் கேபிள் டிவி சேவை - 30.8.2011

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கேபிள் டி.வி. இணைப்பின் மூலம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை வழங்குவதில் ஏகபோக நிலை ஏற்படுத்தப்பட்டு, அதன் மூலம் பொதுமக்களிடமிருந்து அதிக அளவில் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்பதையும்; இதன் காரணமாக, இந்தத் தொழிலில் ஏகபோக நிலையை ஏற்படுத்தியவர்கள் அதிக லாபம் பெற்று வருகின்றனர் என்பதையும்; இந்த மாமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் நன்கு அறிவீர்கள்.

முந்தைய அரசால், 2007ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அரசு கேபிள் டி.வி. நிறுவனம் 2008ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் தனது ஒளிபரப்பை தொடங்கியது. இந்த நிறுவனம் 50 ஆயிரத்திற்கும் அதிகமான இணைப்புகளை வழங்கியது. பின்னர், முந்தைய ஆட்சியாளர்களின் சுயநலம் காரணமாக, அரசு கேபிள் டி.வி. நிறுவன இணைப்புகளின் எண்ணிக்கை படிப்படியாக குறைந்து, 31.3.2011 அன்றைய நிலவரப்படி, 432 இணைப்புகளாகச் சுருங்கிவிட்டது. அதாவது, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசால் தொடங்கப்பட்ட அரசு கேபிள் டி.வி. நிறுவனம் அந்த அரசாலேயே முடக்கப்பட்டுவிட்டது.

எனவேதான், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில், கேபிள் டி.வி. தொழிலில் உள்ள ஏகபோகத்தைத் தடுத்து அனைவருக்கும் தொழில் செய்ய வாய்ப்பு அளிக்கும் வகையிலும்; அனைத்து மக்களுக்கும்

குறைந்த கட்டணத்தில் அரசு கேபிள் டி.வி. இணைப்பு கொடுக்கும் வகையிலும்; நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தமிழக மக்களுக்கு வாக்குறுதி அளித்திருந்தோம்.

இந்தத் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் நடவடிக்கைகளைப் புனரமைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எனது அரசு தீவிரமாக மேற்கொண்டது. இந்நிறுவனத்திற்கு ஒரு முழு நேரத் தலைவர் மற்றும் இந்திய ஆட்சிப் பணியைச் சேர்ந்த ஒரு நிர்வாக இயக்குநர் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். ஏற்கெனவே தஞ்சாவூர், திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் வேலூர் ஆகிய நகரங்களில் அமைக்கப்பட்டிருந்த டிஜிட்டல் தலைமுனைகள் பராமரிப்பு செய்யப்பட்டன. மீதமுள்ள 27 மாவட்டங்களில் தனியார் வசம் உள்ள தலைமுனைகள் வாடகைக்கு பெறப்பட்டும்; புதிதாக அனலாக் தொழில்நுட்ப கேபிள் டி.வி. கட்டுப்பாட்டு அறைகள் நிறுவப்பட்டும்; அரசு கேபிள் டி.வி. புனரமைக்கப்பட்டது. மேலும், இந்த நிறுவனம் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

சென்னை நீங்கலாக, அனைத்து மாவட்டங்களிலும் கேபிள் டி.வி. சேவையைத் தொடங்கும் பொருட்டு, உள்ளூர் கேபிள் ஆப்பரேட்டர்கள் மற்றும் எம்.எஸ்.ஓ.க்களை தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தில் சேர அழைப்பு விடுக்கப்பட்டதன் அடிப்படையில், தமிழகத்தில் உள்ள 34,344 கேபிள் ஆப்பரேட்டர்கள் மற்றும் எம்.எஸ்.ஓ.க்கள் மிகுந்த ஆர்வத்துடன் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். இவர்களிடம் 1 கோடியே 45 இலட்சம் இணைப்புகள் உள்ளன. 31 மாவட்டங்களிலும் நிறுவப்பட்டுள்ள ஒளிபரப்பு மையங்களை 24 மணி நேரமும் பராமரிக்கவும்; ஒளிபரப்பு சேவையை தங்கு தடையின்றி மக்களுக்கு வழங்கவும்; நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு அரசு

கேபிள் டி.வி. ஒளிபரப்பின் மூலம் கட்டணச் சேனல்கள் உள்பட 90 சேனல்களை ஒளிபரப்பிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன. முதலில் இலவச சேனல்கள் ஒளிபரப்பு செய்யப்படும். கட்டணச் சேனல்களைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவில் கட்டணச் சேனல்களும் தமிழ் நாடு அரசு கேபிள் டி.வி. மூலம் வழங்கப்படும்.

2.9.2011 முதல் ஒளிபரப்புச் சேவைகள் தொடங்கப்பட்டு குறைந்த செலவில் நிறைவான சேவையைத் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம் தமிழக மக்களுக்கு வழங்கும் என்பதையும்; தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தில் சேர்ந்துள்ள கேபிள் ஆப்பரேட்டர்கள் மூலம் தொலைக்காட்சி சேவையை பெறும் சந்தாதாரர்களிடமிருந்து மாதச் சந்தாவாக 70 ரூபாய் மட்டுமே கேபிள் டி.வி. ஆப்பரேட்டர்களால் வசூலிக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஒளிபரப்பை வழங்கும் கேபிள் டி.வி.ஆப்பரேட்டர்களிடமிருந்து கட்டணமாக ஒரு இணைப்பிற்கு 20 ரூபாய் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தால் வசூலிக்கப்படும்.

எனது தலைமையிலான தமிழ்நாடு அரசின் இந்த நடவடிக்கைகளின் மூலம் மிகக் குறைந்த கட்டணத்தில் கேபிள் டி.வி. இணைப்பைத் தமிழக மக்கள் பெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் கேபிள் இணைப்பு பெற்றுள்ள ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு சுமார் 70 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை சேமிப்பு ஏற்படும் என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

## சென்னையில் உலகத் தரம் வாய்ந்த முதன்மை நிலை விளையாட்டு மையம் - 6.9.2011

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இளைஞர்கள் ஒரு நாட்டின் மதிப்பு மிக்க செல்வம். கல்வியில் மேன்மை; விளையாட்டு மற்றும் போட்டிகளில் திறமை; சேவை மனப்பான்மைக்கு வித்திடும் வகையில் சமுதாயத் தேவைகள் குறித்த விழிப்புணர்வு, ஆகியவை ஒரு மாணவனை சிறந்த மனிதனாக உருவாக்க உதவுகின்றன. விளையாட்டுப் போட்டிகள்; தேசிய மாணவர் படை; நாட்டுநலப் பணித் திட்டம் மற்றும் சாரண சாரணியர் இயக்கம் ஆகியவை நற்பண்புகளை இளைஞர்களுக்குப் புகட்டி; அவர்களை நாளைய பொறுப்புள்ள குடிமக்களாக மலரச் செய்கிறது. குறிப்பாக, விளையாட்டு என்பது, ஒருங்கிணைந்து செயல்படுவதன் முக்கியத்துவத்தையும்; நேர்மையாகச் செயல்படும் பக்குவத்தையும் கற்றுத் தருவதுடன்; வெற்றியையும், தோல்வியையும் சமமாக ஏற்றுக் கொள்ளக் கூடிய மனத் திண்மையையும் அளிக்கிறது.

இதனைக் கருத்தில் கொண்டு, விளையாட்டை மேம்படுத்தும் நோக்கத்துடனும்; இளைஞர்களிடையே விளையாட்டு ஆர்வத்தினை வளர்க்கும் நோக்கத்துடனும்; எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், அதாவது, 1992 ஆம் ஆண்டு, இளைஞர் மற்றும் விளையாட்டுப் பயிற்சித் துறை மற்றும் தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சி வாரியம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, இந்திய விளையாட்டு ஆணையத்திற்கு இணையான, "தமிழ்நாடு விளையாட்டு

மேம்பாட்டு ஆணையம்'', Sports Development Authority of Tamil Nadu என்ற ஒரு ஆணையம் உருவாக்கப்பட்டது.

உலகத் தரம் வாய்ந்த ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கம்; ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கம்; மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டு அரங்கம்; நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டு அரங்கம்; வேளச்சேரி நீச்சல் வளாகம் ஆகிய விளையாட்டு அரங்குகள் எனது முந்தைய ஆட்சிக் காலத்தில்தான் உருவாக்கப்பட்டன என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவீர்கள். மேலும், விளையாட்டு மேம்பாட்டிற்காக எனது ஆட்சிக் காலத்தில்தான் அதிக நிதி ஒதுக்கப்படுகிறது என்பதையும் இந்த மாமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் நன்கு அறிவீர்கள்.

அந்த வகையில், தற்போது, விளையாட்டு மேம்பாட்டிற்காக எனது தலைமையிலான அரசு செயல்படுத்த இருக்கும் புதிய திட்டங்கள் குறித்து நான் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்ள விழைகிறேன்.

10 வயது முதல் 14 வயதிற்குட்பட்ட, விளையாட்டில் ஆர்வமும், திறமையும் உள்ள 25 மாணவர்கள் மற்றும் 25 மாணவிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு; அவர்களுக்கு விளையாட்டில் உயர்தர நுணுக்கங்களுடன் கூடிய விஞ்ஞான ரீதியான பயிற்சி அளிப்பதற்கென சென்னையில் உலகத் தரம் வாய்ந்த முதன்மை நிலை விளையாட்டு மையம், அதாவது, Centre of Excellence in Sports ஒன்று அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தேர்ந்தெடுக்கப்படும் மாணவ, மாணவியர்கள் இந்த மையத்தில் தங்கி சிறப்புப் பயிற்சி பெறுவர். இந்த மையத்தில் தங்கும் மாணவ, மாணவியர்களுக்கு விளையாட்டுச் சீருடை; விளையாட்டு உபகரணங்கள்; நவீன உடற்பயிற்சிக் கூடம்;

விஞ்ஞான ரீதியிலான பயிற்சி; வெளிநாடுகளில் போட்டிகளில் கலந்து கொள்ள உதவி மற்றும் பயிற்சி ஆகிய வசதிகள் செய்து தரப்படும். சென்னையில் உள்ள சிறந்த பள்ளிகளில் கல்வி பயிலவும், இந்த மாணவ, மாணவியர்களுக்கு அரசால் உதவி செய்யப்படும். இந்த மையம் அமைப்பதற்காக, அரசுக்கு, 1 கோடி ரூபாய் தொடராச் செலவினமும்; ஆண்டு ஒன்றுக்கு, 70 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் தொடர் செலவினமும் ஏற்படும்.

ஒலிம்பிக் போட்டிகள் மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கம் பெற வாய்ப்புள்ள, திறன் வாய்ந்த சிறந்த விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகளைத் தயார் செய்வதற்கான ஒரு சிறப்புத் திட்டம் எனது அரசால் செயல்படுத்தப்படும். இதன்படி ஐந்து விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இவர்களை சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கம் பெற தயார் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகள் வெளிநாடுகளில் போட்டிகளில் பங்கேற்கவும்; விஞ்ஞான ரீதியில் சிறப்புப் பயிற்சி பெறவும்; உயர்தர விளையாட்டுக் கருவிகள் மற்றும் பயிற்சிக் கருவிகள் வாங்கிடவும்; சத்தான உணவு பெற்றிடவும்; விளையாட்டு வீரர்களின் பயிற்றுநர்களின் திறனை மேம்படுத்தவும் இந்தத் திட்டம் வகை செய்யும். ஆண்டு ஒன்றுக்கு 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வெல்லும் வீரர்கள் / வீராங்கனைகளை ஊக்கப்படுத்தும் பொருட்டு, அவர்களுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்கும் திட்டம் 2002 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அவ்வாறு வழங்கப்படும் ஊக்கத் தொகையை மேலும் உயர்த்தி வழங்க தற்போது எனது அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி, ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில்

தங்கப் பதக்கம் வெல்லும் தமிழக விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகளுக்கான ஊக்கத் தொகை 1 கோடி ரூபாயில் இருந்து 2 கோடி ரூபாய் ஆகவும்; வெள்ளிப் பதக்கம் வெல்பவர்களுக்கு 50 இலட்சம் ரூபாயில் இருந்து 1 கோடி ரூபாய் ஆகவும்; வெண்கலப் பதக்கம் வெல்பவர்களுக்கு 25 இலட்சம் ரூபாயில் இருந்து 50 இலட்சம் ரூபாய் ஆகவும் உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல், ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்பவர்களுக்கான ஊக்கத் தொகை 20 இலட்சம் ரூபாயில் இருந்து 50 இலட்சம் ரூபாய் ஆகவும்; வெள்ளிப் பதக்கம் வெல்பவர்களுக்கு 15 இலட்சம் ரூபாயில் இருந்து 30 இலட்சம் ரூபாய் ஆகவும்; வெண்கலப் பதக்கம் வெல்பவர்களுக்கு 10 இலட்சம் ரூபாயில் இருந்து 20 இலட்சம் ரூபாய் ஆகவும் உயர்த்தி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வெல்பவர்களுக்கான ஊக்கத் தொகை 1 இலட்சம் ரூபாயில் இருந்து 5 இலட்சம் ரூபாய் ஆகவும்; வெள்ளிப் பதக்கம் வெல்பவர்களுக்கு 50,000 ரூபாயில் இருந்து 3 இலட்சம் ரூபாய் ஆகவும்; வெண்கலப் பதக்கம் வெல்பவர்களுக்கு 10,000 ரூபாயில் இருந்து 2 இலட்சம் ரூபாய் ஆகவும் உயர்த்தி வழங்கப்படும்.

தமிழ்நாட்டில், 9 விளையாட்டு விடுதிகளும்; விடுதிகளுடன் கூடிய 3 விளையாட்டுப் பள்ளிகளும் செயல்பட்டு வருகின்றன. இவற்றில், 860 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் தங்கி பயிற்சி பெற்று வருகின்றனர். மேலும் அதிக எண்ணிக்கையிலான விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகளை உருவாக்கும் வகையில், இந்த விளையாட்டு விடுதி மற்றும் பள்ளிகளில் சேர்க்கப்படும் வீரர்கள் / வீராங்கனைகளின்

எண்ணிக்கை 860 லிருந்து 1,100 ஆக உயர்த்தப்படும். இதற்காக, அரசுக்கு, 1 கோடி ரூபாய் தொடராச் செலவினமும்; 1 கோடியே 16 இலட்சத்து 56 ஆயிரம் ரூபாய் தொடர் செலவினமும் ஏற்படும்.

தமிழ்நாட்டில் தற்போது 9 மாவட்டங்களில் விளையாட்டு விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த விளையாட்டு விடுதிகள் மூலம் தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள திறமை மிக்க விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்குத் தீவிர பயிற்சி அளிக்க இயலாத சூழ்நிலை உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு விளையாட்டு விடுதி வீதம், 23 மாவட்டங்களில் விளையாட்டு விடுதிகளை அமைக்க எனது அரசு முடிவு செய்துள்ளது. ஒவ்வொரு விளையாட்டு விடுதியிலும் 60 மாணவ, மாணவியருக்கு உயர்தர பயிற்சி அளிக்கப்படும். இவர்களுக்கு உணவு, உறைவிடம் மற்றும் இதர வசதிகள் அனைத்தும் வழங்கப்படும். முதற்கட்டமாக, 5 மாவட்டங்களில் விளையாட்டு விடுதிகள் அமைக்கப்படும். இதற்காக, அரசுக்கு, 3 கோடி ரூபாய் தொடராச் செலவினமும்; 1 கோடியே 15 இலட்சம் ரூபாய் தொடர் செலவினமும் ஏற்படும்.

தமிழ்நாட்டில், விளையாட்டு மேம்பாட்டிற்காக எனது தலைமையிலான அரசு எடுத்து வரும் சீரிய முயற்சிகளால், சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வெல்லும் வகையில், தமிழக விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகளின் திறன் மேம்படும் என்ற நம்பிக்கையை தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# இரயில்வே கடவுகளில் பாலங்கள், சாலைகள் மேம்பாடு - 7.9.2011

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவைப்படும் பல்வேறு உள்கட்டமைப்புகளில் சாலை உள்கட்டமைப்பு மிக முக்கிய பங்கு வகிக்கிறது. தொழில், சாலைப் போக்குவரத்து போன்ற முக்கியத் துறைகளின் வேகமான வளர்ச்சிக்கு சாலைக் கட்டமைப்பின் வளர்ச்சி அடிப்படையாக உள்ளது. ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதிலும் சாலை இணைப்பு வசதி முக்கியமான ஒன்றாக அமைகிறது. ஒரு மாநிலத்தில் உள்ள ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பினைக் கொண்டே அம்மாநிலத்தின் வளர்ச்சியைக் கணிக்க இயலும். மாநிலத்தின் தற்போதைய சாலை கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும், வலுப்படுத்துவதற்குமான அவசியம் மற்றும் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ள எனது தலைமையிலான அரசு சாலை கட்டமைப்பின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.

இதன் அடிப்படையில், சென்னை முதல் தூத்துக்குடி வரை உள்ள கிழக்கு கடற்கரை சாலை, பல்வேறு கட்டங்களில், ஆசிய வங்கி மற்றும் உலக வங்கி நிதியுதவியுடன் அகலப்படுத்தப்பட்டு மேம்பாடு செய்யப்பட்டது. தென் மாவட்டங்களில், குறிப்பாக தூத்துக்குடி, திருச்செந்தூர் மற்றும் கன்னியாகுமரியில் வசிக்கும் மக்கள் நீண்ட நாட்களாக இந்தச் சாலையை கன்னியாகுமரி வரை நீட்டிக்க வேண்டும் என்று கோரிக்கைகள் விடுத்து வருகின்றனர். இந்தச் சாலையினால் ஏற்படும் பயன்களைக் கருத்தில் கொண்டு,

தூத்துக்குடி முதல் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அஞ்சுகிராமம் வரையில் உள்ள 113 கிலோமீட்டர் சாலைப் பகுதி 257 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இருவழித் தடமாக அகலப்படுத்தப்பட்டு மேம்பாடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சாலைப் பணியின் கீழ், 9 புறவழிச் சாலைகள், 3 பெரிய பாலங்கள் மற்றும் 1 ரயில்வே மேம்பாலம் ஆகியவை அமைக்கப்படும்.

இதேபோன்று, சிவகங்கை மற்றும் எடப்பாடி நகரங்களில் போக்குவரத்து நெரிசலால் ஏற்படக் கூடிய பாதிப்பை பெருமளவில் குறைக்கும் வகையில், 10.60 கிலோ மீட்டர் நீளத்தில் சிவகங்கை புறவழிச் சாலையும்; 8.60 கிலோ மீட்டர் நீளத்தில் எடப்பாடி புறவழிச் சாலையும் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக, நடப்பாண்டில், சிவகங்கை நகரத்தில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும்; எடப்பாடி நகரத்தில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

ரயில்வே கடவுகளில் சாலை மேம்பாலங்கள் / கீழ் பாலங்கள் கட்டுவதால் தடையில்லாப் போக்குவரத்து உறுதி செய்யப்படுவதுடன், விபத்துகளும் தவிர்க்கப்படும். இதனால் பயண நேரமும் வெகுவாகக் குறையும். இதற்காக சாலைகளில் இருப்புப் பாதை குறுக்கிடும் சாலைகளில் ரயில்வே பணித் திட்டம் 2011–12 இன் கீழ், செலவு பகிர்வு அடிப்படையில், 740 கோடி ரூபாய் மதிப்பில், 23 புதிய ரயில்வே மேம்பாலங்கள் மற்றும் கீழ்ப்பாலங்கள் கட்டும் பணிகள் 9 மாவட்டங்களில் மேற்கொள்ளப்படும். காஞ்சிபுரம் மாவட்டத்தில் 4 பணிகளும்; திருவள்ளூர் மாவட்டத்தில் 2 பணிகளும்; வேலூர் மாவட்டத்தில் 4 பணிகளும்; விழுப்புரம் மாவட்டத்தில் 3 பணிகளும்; கோயம்புத்தூர் மாவட்டத்தில் 4 பணிகளும்; சேலம் மாவட்டத்தில் 3 பணிகளும்; ராமநாதபுரம், திண்டுக்கல், திருநெல்வேலி மாவட்டங்களில் தலா 1 பணியும் மேற்கொள்ளப்படும்.

பயண நேரத்தையும், தூரத்தையும் வெகுவாகக் குறைக்கும் நோக்குடன், இணைக்கப்படாத ஊர்களை இணைக்கும் வகையில், நபார்டு வங்கி நிதியுதவியுடன், 18 மாவட்டங்களில், 151 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 65 பாலங்கள், நடப்பாண்டில் கட்டப்படும். இந்தத் திட்டத்தின் கீழ், 8 புதிய பாலங்களும், 57 குறுகிய, பழுதடைந்த பாலங்களுக்குப் பதிலாக புதிய பாலங்களும் கட்டப்படும்.

7 நகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்படும் சாலைகள், பல்வேறு வகையான போக்குவரத்திற்கு உட்படுவதால், விபத்துகள் அதிகரிப்பதுடன், நெரிசலும் கூடுகிறது. ஆகவே, இந்தச் சாலைகளின் பராமரிப்பிற்குத் தனி கவனம் செலுத்த வேண்டி உள்ளது. இதன் முதற்கட்டமாக, சோதனை முறையில், சென்னையில் உள்ள அண்ணா சாலை, ஈ.வெ.ரா. பெரியார் சாலை மற்றும் உள்வட்டச் சாலைகளை முழுமையாக, ஒருங்கிணைந்த முறையில் சர்வதேசத் தரத்திற்கு மேம்படுத்த திட்டமிடும் பணி மேற்கொள்ளப்படும்.

பாதசாரிகள், இரு சக்கர வாகனங்கள், சிறு வாகனங்கள், பெரு வாகனங்கள் போன்ற அனைத்துவிதமான போக்குவரத்து, பல்வேறு போக்குவரத்துகளுக்கு இடையிலான மாறுதல்கள், வாகன நிறுத்த வசதிகள், பாதுகாப்பு அம்சங்கள், சாலைக் குறியீடு மற்றும் சமிக்ஞைகள்; பிற துறை சார்ந்த சேவைக் குழாய் வசதிகள்; மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகள்; சுற்றுப் புறத்தை பசுமையாக்குதலுக்கான வழிமுறைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இது திட்டமிடப்படும். இந்தத் திட்டம் விரைவில் தயாரிக்கப்பட்டு, இச்சாலைகள் மேம்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# திருமழிசை துணைக்கோள் நகரம் அமைக்கும் திட்டம் - 8.9.2011

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை மாநகரம் வெகு வேகமாக விரிவடைந்து வருகிறது. சென்னையில் வீட்டு மனை மற்றும் அடுக்குமாடிக் குடியிருப்புகளின் விலை பெருமளவில் உயர்ந்து உள்ளது. எனவே, ஏழை, எளிய, நடுத்தர மக்கள் தங்களுக்குச் சொந்தமாக வீடு ஒன்றை வாங்குவது என்பது கடினமானதாக உள்ளது. இந்த நிலையைக் கருத்தில் கொண்டு, எல்லா தரப்பு மக்களுக்கும் வீடுகள் கிடைக்கும் வகையில் பல்வேறு வீட்டு வசதித் திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்த உள்ளது.

அந்த வகையில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் செயல்படுத்தப்பட உள்ள புதிய வீட்டு வசதித் திட்டங்கள் குறித்து இந்த மாமன்றத்தில் எடுத்துரைக்க விரும்புகிறேன்.

சென்னை–பெங்களூரு நெடுஞ்சாலையில் உள்ள திருமழிசை அருகே, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் 311.05 ஏக்கர் நிலம் உள்ளது. அந்த நிலத்திற்கு முறையான அணுகு சாலை அமைப்பதற்குத் தேவைப்படும் 12.87 ஏக்கர் நிலம், நிலத்தின் உரிமையாளர்களிடம் உரிய கலந்தாலோசனை செய்து பெறப்பட உள்ளது. மேற்கண்ட நிலம் பெறப்பட்ட பின், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் சார்பில் 2,160 கோடி ரூபாய் செலவில், 311.05 ஏக்கர் பரப்பளவில், செம்பரம்பாக்கம், குத்தாம்பாக்கம், பர்வதராஜபுரம், நரசிங்கபுரம் மற்றும் வெள்ளவேடு கிராமங்களை உள்ளடக்கிய

“திருமழிசை துணைக்கோள் நகரம்”, அதாவது Thirumazhisai Satellite Township அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் துணைக்கோள் நகரம், குடிநீர் வசதி, கழிவுநீர் அகற்றும் வசதி, சாலைகள், மழைநீர் வடிகால், தெரு விளக்குகள், சமுதாயக் கூடம், பள்ளி, மருத்துவமனை, பேருந்து நிலையம், பூங்கா, விளையாட்டுத் திடல் போன்ற அனைத்து அடிப்படை வசதிகளும் கொண்டு அமைக்கப்படும்.

இந்த நகரத்தில் 12,000 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு, பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர், குறைந்த மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினர் ஆகியோர் எளிதில் வாங்கக் கூடிய விலையில் வழங்கப்படும்.

சென்னை அசோக் பில்லர் அருகில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான 3.73 ஏக்கர் நிலப்பரப்பில், வாரியத்திற்குத் தேவையான மர உற்பத்தித் தொழிற்சாலை அமைக்கப் பெற்று, பின்னாளில் அந்தத் தொழிற்சாலை பயன்பாடு இன்றி போனதால், இந்த இடம் கடந்த சுமார் 15 ஆண்டுகளாக எவ்வித பயன்பாட்டிற்கும் உட்படாமல் இருந்து வந்தது.

சென்னை மாநகரத்தில் வீட்டுத் தேவையைக் கருத்தில் கொண்டு, காலியாக உள்ள இந்த 3.73 ஏக்கர் நிலப் பரப்பில், 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 554 குடியிருப்புகள் கொண்ட பன்னடுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை கோயம்பேடு தெற்காசிய விளையாட்டுக் கூட்டமைப்பு கிராமத்தில் 5.6 ஏக்கர் காலி நிலம் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் வசம் உள்ளது. இந்த நிலம், சென்னைப் புறநகர் பேருந்து நிலையத்தை ஒட்டியும்; உள்வட்டச் சாலை முகப்பிலும் உள்ளது. தற்போது, இந்தக் காலி இடத்தில், தமிழ்நாடு

வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் 116 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 4.66 இலட்சம் சதுர அடி பரப்பளவில், பன்னடுக்கு வணிக வளாகம் ஒன்று கட்டப்படும். மேலும், 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 1.44 இலட்சம் சதுர அடி பரப்பளவில் 120 குடியிருப்புகள் கட்டப்படும்.

2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் பொன்விழா ஆண்டு ஆகும். பொன்விழா ஆண்டை முன்னிட்டு, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் திட்டங்களின், மனை / வீடு / அடுக்குமாடிக் குடியிருப்பு ஒதுக்கீட்டில், மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் 1 விழுக்காடு இட ஒதுக்கீட்டை 3 விழுக்காடாக உயர்த்தி வழங்க எனது தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் வசம் சென்னை, நந்தனத்தில் 15.78 மனை நிலம் உள்ளது. நந்தனத்தில் அலுவலகக் கட்டடங்களுக்கான தேவை உள்ளது. எனவே, தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் வசம் தற்போது காலியாக உள்ள இடத்தில், சுமார் 100 கோடி ரூபாய் செலவில், பசுமைத் திட்ட அம்சங்களுடன், 2 இலட்சம் சதுர அடி பரப்பளவில், 17 மாடிகள் கொண்ட அலுவலக வளாகம் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கட்டடத்தை அலுவலகப் பயன்பாட்டிற்காக வாடகைக்கு விடுவதன் மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட குடியிருப்புகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மன நிறைவுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# மாண்புமிகு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம் - 10.9.2011

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உண்டி கொடுத்து, உயிர் கொடுக்கும் உழவுத் தொழிலே உலகத்தின் உன்னதத் தொழில் என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

கடவுள் என்னும் முதலாளி
கண்டெடுத்த தொழிலாளி விவசாயி !
முன்னேற்றப் பாதையிலே மனதை வைத்து
முழு மூச்சாய் அதற்காகத் தினம் உழைத்து
மண்ணிலே முத்தெடுத்துப் பிறர் வாழ
வழங்கும் குணமுடையோன் விவசாயி

என்று இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம் ஜி ஆர் அவர்கள் பாடியபடி, நீரிலே முத்தெடுக்காமல் நிலத்திலே முத்தெடுத்து ஊருக்கு உணவூட்டும் உன்னதத் தொழிலாளிதான் விவசாயி.

பயிர் வளர்த்து, உயிர் வளர்க்கும் விவசாயப் பெருமக்களின் வாழ்வு வளம் பெற எனது தலைமையிலான அரசு பல முன்னோடித் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், தமிழகத்தில் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கும், சிறு / குறு விவசாயிகளுக்கும், வாழ்க்கை முழுவதும் பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு, கருவறை முதல் கல்லறை வரை பயன் அளிக்கக் கூடிய "தமிழக முதலமைச்சரின்

உழவர் பாதுகாப்புத் திட்டம்'' என்ற சமூகப் பாதுகாப்புத் திட்டம், எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், 15.8.2005 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால், அதன் பின்னர், 2006 ஆம் ஆண்டு, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு, இந்தத் திட்டத்திற்கு மாற்றாக, தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டம் என்ற ஒரு சட்டத்தை இயற்றியது.

இந்த நிலையில், இந்தத் திட்டத்தின் கீழ், ஏதாவது ஒரு இனத்தின் கீழ் உதவித்தொகையின் அளவு மாற்றம் செய்யப்பட வேண்டும் என்றால் கூட, சட்டமன்றத்தைக் கூட்டி, இந்தச் சட்டத்திற்கு திருத்தம் கொண்டு வந்தாக வேண்டும். இவ்வாறு, 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) சட்டம் நடைமுறைச் சிக்கல்கள் நிறைந்ததாக இருந்ததால், அந்தச் சட்டத்தை ரத்து செய்வதற்காக, 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் (சமூகப் பாதுகாப்பு மற்றும் நலம்) நீக்கச் சட்டம் இந்த மாமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. ஆளுநரின் ஒப்புதல் பெறப்பட்டு, இதற்கான அரசு அறிவிக்கை 27.8.2011 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.

தமிழ்நாட்டில், விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு வாழ்நாள் முழுவதும் உறுதுணையாக இருக்கும் வகையில், புதிய, விரிவுபடுத்தப்பட்ட, சமூகப் பாதுகாப்புத் திட்டம் ஒன்றை எனது தலைமையிலான அரசு செயல்படுத்த முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் புதிய திட்டம் ''முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்'' என்று அழைக்கப்படும். இந்தத் திட்டத்தின் கீழ்,

(அ) 2.5 ஏக்கருக்கு மேற்படாத நன்செய் நிலம் அல்லது 5 ஏக்கருக்கு மேற்படாத புன்செய் நிலம் முதலியவற்றை உடமையாகக் கொண்டு, அந்த நிலத்தில் நேரடியாகப் பயிர் செய்யும், 18 வயது முதல் 65 வயதிற்கு உட்பட்ட குறு மற்றும் சிறு விவசாயிகள்; மற்றும்

(ஆ) விவசாயம் சார்ந்த தொழிலில் ஊதியத்திற்காகவோ அல்லது குத்தகை அடிப்படையிலோ ஈடுபட்டுள்ள 18 முதல் 65 வயது வரை உள்ள அனைத்து விவசாய குத்தகைதாரர்கள் / தொழிலாளர்கள்; மற்றும்

(இ) இவர்களைச் சார்ந்து வாழும் குடும்ப உறுப்பினர்கள் ஆகியோர் பயன் அடைவர்.

**திட்ட வழிமுறைகள்**

இத்திட்டத்தின் கீழ், ஒரு குடும்பத்தில், விவசாயத் தொழிலில் ஈடுபடும் கணவன் மற்றும் மனைவி இருவருக்கும் பண்பேறிய சிவப்பு வண்ணத்திலும், அதாவது Maroon வண்ணத்திலும், அவர்களைச் சார்ந்து வாழும் பிற குடும்ப உறுப்பினர்களுக்கு சாம்பல் நிறத்திலும் அடையாள அட்டைகள் வழங்கப்படும். இவ்வாறு அடையாள அட்டை பெறுபவர்கள் அனைவரும் அரசின் திட்ட உதவிகளைப் பெறத் தகுதி உடையவர்கள் ஆவர். இதுவரை குடும்பத் தலைவருக்கு மட்டுமே அடையாள அட்டை வழங்கப்பட்டு வந்த நிலை மாறி இந்தப் புதிய உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் குடும்ப உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் அடையாள அட்டை வழங்கப்படுவதால், எவ்வித விடுபடுதலும் இன்றி, குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் திட்ட உதவிகளைப் பெற வழிவகை ஏற்படும்.

**கல்வி உதவி**

விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் குடும்ப உறுப்பினர்கள் கல்லூரிக் கல்வி உள்ளிட்ட உயர்கல்வி கற்பதை

ஊக்குவிக்கும் வகையில், இவர்கள் வேறு எந்தக் கல்வி உதவித் திட்டத்தின் கீழ் உதவி பெற்றாலும், இந்தத் திட்டத்தின் கீழும் கல்வி உதவித்தொகை பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. பல்வேறு உயர்கல்வி படிப்புகளுக்கு கீழ்க்கண்டவாறு உதவித் தொகைகள் வழங்கப்படும்:–

- தொழிற்பயிற்சி நிறுவனம் (ITI), பல்தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம் (Polytechnic) மற்றும் இதர பட்டயப் படிப்புகளுக்கு 1,250 ரூபாய் முதல் 1,950 ரூபாய் வரை ஆண்டு ஒன்றுக்குக் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும்.

- இளங்கலை பட்டப் படிப்புகளுக்கு 1,750 ரூபாய் முதல் 2,500 ரூபாய் வரை ஆண்டு ஒன்றுக்குக் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும்.

- முதுகலை பட்டப் படிப்புகளுக்கு 2,250 ரூபாய் முதல் 3,750 ரூபாய் வரை ஆண்டு ஒன்றுக்குக் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும்.

- சட்டம், பொறியியல், மருத்துவம், வேளாண்மை, கால்நடை அறிவியல் போன்ற தொழிற்கல்வி படிப்புகளுக்கு இளங்கலையில் 2,250 ரூபாய் முதல் 4,750 ரூபாய் வரையிலும், முதுகலையில் 4,250 ரூபாய் முதல் 6,750 ரூபாய் வரையிலும் ஆண்டு ஒன்றுக்குக் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படும்.

2006 ஆம் ஆண்டு, முந்தைய தி.மு.க. அரசால் கொண்டு வரப்பட்ட சட்டத்தில், வேறு ஏதேனும் மத்திய அல்லது மாநில அரசு திட்டங்களின் கீழ் கல்வி உதவித் தொகை பெறப்பட்டால், இந்தத் திட்டத்தின் கீழ் கல்வி உதவித் தொகை பெற முடியாது என்ற நிலைமை தற்போது மாற்றப்பட்டு, வேறு திட்டங்களின் கீழ் கல்வி உதவித் தொகை பெற்றாலும், இந்தத் திட்டத்திலும்

கல்வி உதவித்தொகை பெற இயலும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

### திருமண உதவி

சமூகநலத் துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திருமண உதவித் திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெறத் தகுதி உள்ளவர்கள் அத்திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெறுவர். அவ்வாறு திருமண உதவித் திட்டங்களின் கீழ் உதவித் தொகை பெற இயலாதவர்களுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் உதவித்தொகை வழங்கப்படும். இந்தத் திட்டத்தின் கீழ் திருமண உதவித்தொகையாக, ஆணுக்கு 8,000 ரூபாயும், பெண்ணுக்கு 10,000 ரூபாயும் வழங்கப்படும்.

### மகப்பேறு உதவித்தொகை

இத்திட்டத்தில் பதிவு பெற்ற உறுப்பினருக்குச் சுகாதாரம் மற்றும் குடும்பநலத் துறையால் மகப்பேறு உதவிக்கென செயல்படுத்தப்படும் திட்டத்தின் மூலம் இந்த உதவித்தொகை வழங்கப்படும். மகப்பேறு உதவித்தொகையினை எளிதாகப் பெறும் வகையில் தனி வட்டாட்சியர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) மூலம் தேவையான சான்றிதழ்களை ஒருமுகப்படுத்தி வழங்க இத்திட்டத்தின் கீழ் வசதிகள் செய்து தரப்படும்.

### முதியோர் ஓய்வூதியம்

60 வயதுக்கு மேற்பட்ட ஆதரவற்ற விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் மாதம் ஒன்றுக்கு 1,000 ரூபாய் ஓய்வூதியமாகப் பெறுவர்.

### இயற்கை மரணம் மற்றும் விபத்து

முந்தைய தி.மு.க. அரசால் இயற்றப்பட்ட சட்டத்தின் கீழ், இயற்கை மரணம் மற்றும் விபத்து போன்ற நிகழ்வுகளில்

குடும்பத் தலைவருக்குப் பாதிப்பு ஏற்பட்டால் மட்டுமே நிவாரணம் வழங்கப்பட்டது. அது தற்போது மாற்றப்பட்டு, ஒரு குடும்பத்தில் கணவன் மற்றும் மனைவி இருவரும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள நிலையில், இவர்கள் இருவருக்கும் தனித் தனியே அடையாள அட்டைகள் வழங்கப்படுவதால், இந்த இருவரில் யாருக்கு பாதிப்பு ஏற்பட்டாலும் நிவாரணம் வழங்கப்படும்.

இந்தத் திட்டத்தின் உறுப்பினரோ அல்லது அவரைச் சார்ந்தவரோ இறக்க நேரிட்டால், அந்தக் குடும்பத்திற்கு ஈமச் சடங்கிற்கான உதவித்தொகை உடனடியாக வழங்கப்படும். ஈமச் சடங்கு நிவாரணம் பெற இறப்புச் சான்றிதழ் பெற வேண்டும் என்ற நிபந்தனை நீக்கப்படுவதுடன், குடும்பத் தலைவர் இறந்தால் மட்டுமே ஈமச் சடங்கு நிவாரணம் வழங்கப்படும் என்ற நிபந்தனையும் தற்போது மாற்றப்பட்டுள்ளது என்பதை மன நிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திட்டச் செயலாக்கம்**

தற்போது அறிவிக்கப்பட்டுள்ள ‘‘முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்’’ மாவட்ட அளவில் ஆட்சித் தலைவர்கள் மற்றும் வருவாய்த் துறை அதிகாரிகள் மூலமாகச் செயல்படுத்தப்படும். திட்டச் செயல்பாட்டினை மேற்பார்வை இடுவதற்கு அரசு அளவில் ஒரு உயர்நிலைக் குழு அமைக்கப்படும்.

‘‘முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்’’ என்ற இந்த விரிவுபடுத்தப்பட்ட புதிய திட்டம், தமிழக விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு மிகுந்த பயன் அளிக்கக்கூடிய திட்டமாக இருக்கும் என்பதை மன நிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# மருத்துவர்கள்,
# மருத்துவப் பணியாளர்களை
# தேர்வு செய்ய தனி வாரியம் -10.9.2011

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்” என்ற பழமொழியைக் கருத்தில் கொண்டு, இயன்ற வரை நோய் இல்லா வாழ்வை மக்கள் பெறுவதை உறுதி செய்யும் வகையில் பல்வேறு முன்னோடித் திட்டங்களை எனது அரசு செயல்படுத்தி வருகிறது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். நோயை முற்றிலுமாகத் தவிர்ப்பது என்பது இயலாத ஒன்று ஆகும். எனவேதான், நோய் ஏற்படும்போது, அந்த நோயை நீக்குவதற்கான மருத்துவ வசதிகளை மக்களுக்கு அளித்து, அனைவருக்கும் நோயற்ற நல்வாழ்வு என்ற உயரிய இலக்குடன், சுகாதார சேவைகளை அளிக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், மக்கள் நல்வாழ்வுத் துறையால் செயல்படுத்தப்பட இருக்கும் சில புதிய திட்டங்கள் குறித்து இந்த மாமன்றத்தில் நான் தற்போது எடுத்துரைக்க விழைகிறேன்.

தற்போது மாநிலத்தில் உள்ள **1,589** ஆரம்ப சுகாதார நிலையங்களில், **1,539** ஆரம்ப சுகாதார நிலையங்கள் **24** மணி நேரமும் சுகாதார சேவை அளிக்கக் கூடிய வகையில்

செயல்பட்டு வருகின்றன. எஞ்சியுள்ள 50 ஆரம்ப சுகாதார நிலையங்களும் 24 மணி நேரமும் செயல்படும் வகையில், விரைவில் மாற்றி அமைக்கப்படும். தரம் உயர்த்தப்பட்ட 283 ஆரம்ப சுகாதார நிலையங்களில், முன்பே நிர்ணயம் செய்யப்பட்ட சிசேரியன் அறுவை சிகிச்சை, அதாவது, Elective Cesarean செய்வதற்கான வசதிகள் உள்ளன. திடீரென்று, அவசரமாக சிசேரியன் அறுவை சிகிச்சை செய்யும் வசதி கிராமப்புரங்களில் இல்லை. இதனை நீக்கும் வகையில், முதற்கட்டமாக 42 தாய்–சேய் நல மையங்கள் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அவசரகால சிசேரியன் அறுவை சிகிச்சை மற்றும் ரத்தம் செலுத்தும் வசதியுடன் 24 மணி நேரமும் இந்தத் தாய்–சேய் நல மையங்கள் செயல்படும். சுகாதார மாவட்டம் ஒவ்வொன்றுக்கும் ஒரு மையம் வீதம் இந்த 42 மையங்கள் அமைக்கப்படும்.

மேலும், தொலை தூரத்தில், எளிதில் சென்றடைய முடியாத நிலையில் உள்ள 31 துணை சுகாதார மையங்கள், முதல்நிலை தாய்–சேய் நல மையங்களாகத் தரம் உயர்த்தப்படும். முழு நேர சேவை அளிக்கும் வகையில், இந்த மையங்கள் ஒவ்வொன்றிலும், 3 செவிலியர்கள் பணி அமர்த்தப்படுவர். இவ்வாறு, 42 தாய்–சேய் நல மையங்களை அமைப்பதற்கும், 31 துணை சுகாதார மையங்களை தரம் உயர்த்துவதற்கும், 19 கோடி ரூபாய் செலவு ஏற்படும்.

கிராமப்புரப் பெண்கள் ஆரோக்கியத்தில் மிகுந்த அக்கறை கொண்ட எனது அரசு, கிராமப்புரப் பெண்களின் நலனுக்காக புதிய திட்டம் ஒன்றைச் செயல்படுத்த முடிவெடுத்துள்ளது. கிராமப்புரப் பெண்கள் இடையே ஆரோக்கியமான நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தவும், புற்று நோயை

ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் வகையில் பரிசோதனை மேற்கொள்ளவும், இந்தத் திட்டம் வழி வகுக்கும். 2 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

மலைப் பகுதிகளில் 20,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் எனவும், சமவெளிப் பகுதிகளில் 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் எனவும் மத்திய அரசால் வரன்முறை செய்யப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில், இந்த ஆண்டு, 12 கோடியே 80 இலட்சம் ரூபாய் செலவில் 20 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்படும். மேலும், மருத்துவ வசதி குறைவாக உள்ள 38 வட்டாரங்களில் உள்ள 38 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 30 படுக்கை வசதி, ஸ்கேன் வசதி மற்றும் அறுவை அரங்குகள் ஆகிய வசதிகளுடன், 39 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

இன்றைய நவீன யுகத்தில் அனைத்துத் துறைகளிலும் கணினியின் பயன்பாடு நீக்கமற நிறைந்துள்ளது. மருத்துவத் துறையிலும் கணினி பயன்பாடு மிகவும் இன்றியமையாதது ஆகும். நோயாளிகள் பல்வேறு துறைகளைச் சார்ந்த மருத்துவ வல்லுநர்களுடன் கணினி மூலம் நேரடியாகத் தொடர்பு கொண்டு, நோய்கள் குறித்த சந்தேகங்களைத் தீர்த்துக் கொண்டு சிகிச்சை பெறும் வகையில், கணினி வழி உரையாடும் வசதியை நான் எனது முந்தைய ஆட்சி காலத்திலேயே ஏற்படுத்தினேன். தொலைதூர கிராமங்களில் வசிக்கும் ஏழை, எளிய மக்களுக்கு உயர் மருத்துவ ஆலோசனை கிடைக்கும் வகையில், 5 கோடி ரூபாய் செலவில், ஆரம்ப சுகாதார நிலையங்களில் Tele Medicine வசதிகள் ஏற்படுத்தப்படும்.

தமிழக மக்கள் அனைவரும் நோயற்ற நல்வாழ்வு வாழ நல்ல பல திட்டங்களை நிறைவேற்றி வரும் அதே நேரத்தில், இந்தத் திட்டங்களின் பயன்கள் மக்களை முழுமையாகச் சென்றடைய வேண்டும் எனில், துணை சுகாதார மையங்கள் முதல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் வரை தேவையான மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் இருக்க வேண்டியது அவசியம் ஆகும்.

மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சார்ந்த பணியாளர்கள் ஓய்வு பெறுவதாலோ அல்லது பணியை விட்டு நீங்குவதாலோ ஏற்படும் காலி இடங்கள் மற்றும் புதியதாக தோற்றுவிக்கப்படும் பணி இடங்கள் ஆகியவை உடனுக்குடன் நிரப்பப்பட வேண்டியது மிகவும் அவசியம் ஆகும். மக்கள் நல்வாழ்வுத் துறையில், மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவம் சார்ந்த பணியாளர்கள், மருத்துவமனை அடிப்படைப் பணியாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்கள் போன்ற பல்வேறு நிலைகளில் சுமார் **91,600** பணியிடங்கள் உள்ளன. இவற்றில், தற்போது **15,600**–க்கும் மேற்பட்ட பணியிடங்கள் காலியாக உள்ளன. இத்தகைய காலிப் பணியிடங்களுக்கு பல்வேறு காரணங்கள் இருந்தாலும், ஏற்படப் போகும் காலிப் பணியிடங்களை முன் கூட்டியே கணக்கிட்டு, பணியாளர்களை விரைந்து தேர்ந்தெடுப்பதற்கான வழிமுறை இல்லாததுதான் அதற்கு முக்கியமான காரணம் ஆகும்.

இந்தக் குறைபாட்டை நீக்கும் வகையில், இந்தியாவிலேயே முதல் முறையாக, மருத்துவத் துறை பணியாளர்களைத் தேர்வு செய்வதற்கு என்று, ‘‘மருத்துவத் துறை பணியாளர் தேர்வு வாரியம்’’, அதாவது, Medical Services Recruitment Board என்ற ஒரு அமைப்பு ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையில் இந்திய ஆட்சிப் பணியில் உள்ள கூடுதல் செயலாளர் இந்தத் தேர்வு வாரியத்தின் தலைவராக இருப்பார். மருத்துவத் துறை இணை இயக்குநர் நிலையில் உள்ள ஒரு அலுவலர் உறுப்பினராகவும்; மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் உள்ள ஒரு அலுவலர் உறுப்பினர்—செயலாளராகவும் இருப்பர். வாரியத்திற்குத் தேவையான இதரப் பணியாளர்களும் நியமிக்கப்படுவர். தேவைப்படும் பணியாளர்களைத் தற்போது நடைமுறையில் உள்ள விதிமுறைகளின்படி இந்த மருத்துவத் துறை பணியாளர் வாரியம் தேர்வு செய்யும். தற்காலிகமாகத் தேர்ந்தெடுக்கப்படும் மருத்துவர்களையும் இந்த வாரியம் தேர்வு செய்யும். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய விதிமுறைகளில் தக்க திருத்தம் மேற்கொண்ட பின், மருத்துவர்களுக்கான நிரந்தரப் பணியிடங்களும், இந்தத் தேர்வு வாரியத்தின் மூலமே நிரப்பப்படும்.

மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களைத் தேர்வு செய்ய இது போன்ற தனி வாரியம் அமைக்கப்படுவதால், துணைச் சுகாதார மையங்கள் முதல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் வரை உள்ள மருத்துவமனைகளில் ஏற்படும் காலியிடங்கள் உடனுக்குடன் நிரப்பப்படும் என்பதை மன நிறைவுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# சத்துணவு, அங்கன்வாடி மையங்களில் பணியிடங்களை நிரப்புதல் - 12.9.2011

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நம் நாடு எனும் தோட்டத்திலே
நாளை மலரும் முல்லைகளே

- என்று குழந்தைகளைப் பற்றி பாடினார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். இன்றைய குழந்தைகளே நாளைய சமுதாயத்தின் நம்பிக்கை நட்சத்திரங்கள் ஆவர். சுகாதாரம், பாதுகாப்பு, கல்வி ஆகியவற்றை எவ்வித இடர்ப்பாடும் இன்றி பெற்று மகிழ்ச்சி நிறைந்த சூழ்நிலையில் வளரும் குழந்தைகளே வளமான மற்றும் வலிமையான தலைமுறையினராக உருவாகின்றனர்.

தமிழகத்தில் உள்ள, 6 மாதம் முதல் 6 வயது வரையிலான குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், மற்றும் வளர் இளம் பெண்கள் ஆகியோர் இடையே காணப்படும் ஊட்டச்சத்துக் குறைபாட்டைக் கண்டறிந்து, அதனை அகற்றி, ஊட்டச்சத்து குறைபாடு அற்ற மாநிலமாக தமிழ்நாட்டை மாற்றும் வகையில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் உள்ள அங்கன்வாடி மையங்கள் மூலம் பல்வேறு பணிகளை மேற்கொள்ள 2002 ஆம் ஆண்டு எனது அரசால் செயல் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 2003 ஆம் ஆண்டு, ஊட்டச்சத்து குறைபாடு அற்ற தமிழகத்தை உருவாக்கும் வகையில், ஒரு புதிய கொள்கை வெளியிடப்பட்டது.

இதன் அடிப்படையில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் பல உதவிகள் வழங்கப்படுகின்றன.

- 6 மாதம் முதல் 36 மாதம் முடிய உள்ள குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளர் இளம் பெண்களுக்கு இணை உணவு வழங்குதல்
- 2 வயது முதல் 6 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு சத்துணவு அளித்தல்
- முதியோர் உதவித் தொகை பெறுபவர்களுக்கு மதிய உணவு அளித்தல்
- சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளுதல்
- உயர் மருத்துவ சிகிச்சைக்காக பரிந்துரைத்தல்
- பள்ளிசாரா முன்பருவக் கல்வி அளித்தல்
- ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி அளித்தல்
- வளரிளம் பெண்களுக்கு ஊட்டச்சத்து மற்றும் வாழ்க்கைக் கல்வி வழங்குதல்

ஆகியவை இந்தத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படுகின்றன.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ், 6 மாதம் முதல் 6 வயது வரையிலான குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு வருடத்தில் 300 நாட்களுக்கு செரிமானத் தன்மை - Amylase நிறைந்த இணை உணவு வழங்கப்படுகிறது. நடப்பாண்டில், பல்வேறு நிலையில் உள்ள பயனாளிகளுக்கு இணை உணவு வழங்க 190 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், 2 முதல் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கும், முதியோர் ஒய்வூதியம் பெறுபவர்களுக்கும், புரதச் சத்து மிக்க, சத்தான, சூடான, மதிய உணவு அனைத்து மையங்களிலும் வருடத்தில் 365 நாட்களுக்கும் வழங்கப்படுகிறது. இந்தியாவிலேயே, தமிழகத்தில் மட்டும் தான், ஒய்வூதியம் பெறும் முதியோர்களுக்கு சமைக்கப்பட்ட சூடான, மதிய உணவு குழந்தைகள் மையத்தில் வழங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

பிறந்தது முதல் 6 வயது வரையுள்ள குழந்தைகள், வளர் இளம் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் ஒய்வூதியம் பெறும் முதியோர் உள்ளிட்ட 28 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயன்பெறும் குழந்தைகள் மையங்களின் பாதுகாப்பினை உறுதி செய்யவும்; மையங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும்; பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும்; எனது அரசு முடிவு செய்துள்ளது. அந்த வகையில், சொந்தக் கட்டடங்களில் செயல்படும் சிறிய பழுதுகளுடன் உள்ள 10,372 மையங்கள் மற்றும் பெரிய பழுதுகளுடன் உள்ள 7,449 மையங்கள், ஆக, பழுதுபட்டுள்ள மொத்தம் 17,821 மையங்களும் இந்த ஆண்டே 47 கோடியே, 61 இலட்சம் ரூபாய் செலவில் பழுது நீக்கி சீரமைக்கப்படும்.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் இயங்கும் குழந்தைகள் மையங்களுக்கு, ஆர்வமுடன் குழந்தைகள் வருவதற்கும்; விளையாட்டு சாதனங்கள் வாயிலாக முன்பருவக் கல்வி பயில்வதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன. இம்மையங்களில் கோடைக் காலத்தில் வெப்பத்தினாலும்; மழை மற்றும் குளிர் காலங்களில் போதிய வெளிச்சம் இன்மையாலும் குழந்தைகள் அவதியுறாமல் இருக்கும் வகையில், மின்விசிறி மற்றும் மின் விளக்கு வசதி ஏற்படுத்தித் தர எனது அரசு முடிவு

செய்துள்ளது. இதன்படி, மின்வசதி இல்லாத 45,345 குழந்தைகள் மையங்களில், 27 கோடியே, 21 இலட்சம் ரூபாய் செலவில், உட்புற மின் கட்டமைப்பு வசதி ஏற்படுத்தப்படுவதுடன் மின் விசிறி மற்றும் மின் விளக்கு ஆகியவை பொருத்தப்படும்.

சுற்றுச்சூழல் மாசு காரணமாக குழந்தைகளுக்கு நோய் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில், சுற்றுப்புற சுகாதாரத்தைப் பேணவும்; குழந்தைகளிடம் இளம் வயதிலேயே கழிப்பறையைப் பயன்படுத்தும் பழக்கத்தை ஊக்குவிக்கவும்; குழந்தைகள் மையங்களில் குழந்தை நேயக் கழிப்பிடங்கள் அமைக்கப்படும். இக்கழிப்பிடங்கள், குழந்தைகள் பயன்படுத்துவதற்கு ஏதுவான வகையில் வடிவமைக்கப்படும். இதற்காக, இந்த ஆண்டு 23 கோடியே 78 இலட்சம் ரூபாய் செலவில் 29,727 குழந்தைகள் மையங்களில் குழந்தைகள் நேயக் கழிப்பிடங்கள் அமைக்கப்படும்.

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் கீழ் இயங்கும் சத்துணவு மையங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் 28,596 பணியிடங்கள் காலியாக உள்ளன. இந்தக் காலிப் பணியிடங்கள் அனைத்தும் விரைவில் நிரப்பப்படும்.

இவ்வாறு, எனது அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளாலும்; செயல்படுத்தி வரும் திட்டங்களாலும்; தாய், சேய் நலம் காப்பதில் தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

# சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர், சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்னம் மணிமண்டபங்கள் மற்றும் மொழிப்போர்த் தியாகி சிதம்பரநாதன் சிலை அமைத்தல் - 12.9.2011

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடிய தியாகிகளையும்; சமுதாய மேம்பாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களையும் போற்றிப் பெருமைப்படுத்த வேண்டியதும்; அவர்களது பெருமைகளை எதிர்கால தலைமுறையினர் அறிந்து பின்பற்றும் வகையில் நினைவுச் சின்னங்களை எழுப்பி மரியாதை செய்ய வேண்டியதும் ஒரு நல்லரசின் கடமையாகும்.

தமிழ்ச் சமுதாயத்திற்கு வாழ்வளிக்க தங்கள் வாழ்க்கையை தியாகம் செய்த பெருமக்களுக்குப் பெருமை சேர்ப்பதில் எனது அரசு மிகுந்த முன்னுரிமை கொடுத்து செயல்படுகிறது.

சிந்தனைச் சிற்பி என்று மக்களால் போற்றப்படும் திரு. சிங்காரவேலர் அவர்கள், மயிலாப்பூர் மீனவர் கிராமத்தில் 18.2.1860இல் பிறந்து, கல்வி பல கற்று சிறந்த வழக்குரைஞராகத் திகழ்ந்தவர். அந்நியருக்கு எதிராக அண்ணல் காந்தியடிகள் ஒத்துழையாமை போராட்டத்தைத் தொடங்கியபோது தனது வழக்குரைஞர் அங்கியைத் தீயிட்டுக் கொளுத்தி விட்டுத் தீவிரமான விடுதலைப் போராட்டவீரராக மாறியவர். கான்பூரில் நடைபெற்ற பொதுவுடைமைக் கட்சியின் முதல் மாநாட்டிற்கு தலைமையேற்று, தன்னைப் பெற்றெடுத்த தமிழகத்திற்கும், தான் பிறந்த மீனவ இனத்திற்கும் தனிப் பெருமை சேர்த்தவர். சிந்தனையாலும் செயலாலும் அல்லும் பகலும் ஏழைத் தொழிலாளர்

வர்க்கத்திற்குப் பாடுபட்ட உழைப்பாளர் சிந்தனைச் சிற்பி திரு. சிங்காரவேலர் அவர்கள்.

சுயமரியாதைச் சுடரொளி திரு. ஜீவரத்தினம் அவர்கள் **11.11.1911**இல் ஏழை மீனவர் குடும்பத்தில் பிறந்து, தமிழையும் ஆங்கிலத்தையும் சிறப்பாகக் கற்று சொற்பொழிவு ஆற்றுவதில் வல்லவராகத் திகழ்ந்தவர். திராவிட இயக்கத்தின் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்த திரு. ஜீவரத்தினம், தமிழர் நலனிலும், மீனவர் நலனிலும் மிகுந்த அக்கறை கொண்டு சமுதாய மாற்றத்தைக் காண கடுமையாக உழைத்தவர். பேரறிஞர் அண்ணாவின் அன்பையும், புரட்சித் தலைவர் எம் ஜி ஆர் அவர்களின் நம்பிக்கையையும் பெற்றுத் திகழ்ந்தவர். பழமையை விடுத்துப் புதுமையை ஏற்று சமுதாய மாற்றத்தைக் காண உழைத்தவர்.

ஏழைத் தொழிலாளர்களுக்காகப் பாடுபட்ட ஓய்வறியாத் தொண்டரும், சிந்தனைச் சிற்பியுமான திரு. சிங்காரவேலர் அவர்களுக்கும்; திராவிட இயக்கத்தின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட ஆற்றல்மிகு பேச்சாளராகவும், மீனவ இனத்தின் தலைவராகவும் விளங்கிய சுயமரியாதைச் சுடரொளி திரு. ஜீவரத்தினம் அவர்களுக்கும்; அவர்தம் நினைவைப் போற்றி மணிமண்டபங்கள் அமைக்க வேண்டுமென பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

இந்தக் கோரிக்கைகளை மிகுந்த உவகையுடன் ஏற்று, தமிழகத்திற்குப் பெருமை சேர்க்கும் தலைவர்களான சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் அவர்களுக்கும்; சுயமரியாதைச் சுடரொளி ஜீவரத்தினம் அவர்களுக்கும்; சென்னை, பட்டினப்பாக்கத்தில் மணி மண்டபங்கள் கட்ட எனது அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் மொழியின் மீது தணியாத பற்று கொண்டு, பல தலைவர்கள் தமிழ்நாட்டிற்காகத் தியாகங்கள் பல செய்துள்ளனர். அதில் குமரி மாவட்டத்தை தமிழ்நாட்டோடு இணைத்திட போராட்டம் நடத்திய மொழிப்போர் தியாகி திரு. சிதம்பரநாதன் அவர்கள் முக்கியமானவர் ஆவார்.

தியாகி திரு. சிதம்பரநாதன் அவர்கள், 5.1.1948இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் திருவிதாங்கூர்–கொச்சி சட்டமன்ற உறுப்பினர் ஆனார். திருவிதாங்கூர்–கொச்சி அரசில் வனம் மற்றும் வருவாய்த் துறை அமைச்சராக பொறுப்பு வகித்த திரு. சிதம்பரநாதன், திருவிதாங்கூர்–கொச்சி அரசில் அமைச்சர் பொறுப்பு வகித்த ஒரே தமிழர் ஆவார். அக்காலத்தில் திருவிதாங்கூர் தமிழ் மக்கள் மேல் விதிக்கப்பட்டிருந்த மானிய வரியை இவர் நீக்கினார்.

தாய்த் தமிழகத்துடன் தமிழ்ப் பகுதிகளை இணைப்பது ஒன்றே திருவிதாங்கூர் தமிழர்களின் சிக்கல்களுக்கு ஒரே தீர்வு என்ற நிலையில், தன் அமைச்சர் பதவியைத் துச்சமெனத் துறந்தார்.

தாய்த் தமிழகத்துடன் தமிழ்ப் பகுதிகளை இணைக்கக் கோரி 4.7.1954இல் கண்டன நாளாக அறிவிக்கப்பட்டு, பொதுமக்களைச் சந்திக்க மூணாறு சென்றபோது, திரு. சிதம்பரநாதன் அவர்கள் கைது செய்யப்பட்டு 6.7.1954இல் திருவனந்தபுரம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டு பல இன்னல்களுக்கு ஆளானார். திரு. சிதம்பரநாதன் அவர்கள், 1956 முதல் 1969 வரை தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்தார்.

பல தியாகங்களைச் செய்த மொழிப்போர் தியாகி திரு. சிதம்பரநாதன் அவர்களுக்குக் கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளையில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என கன்னியாகுமரி மாவட்ட மக்களிடம் தேர்தல் வாக்குறுதி அளித்திருந்தேன்.

அந்த வாக்குறுதியினை நிறைவேற்றும் வகையில், மொழிப்போர் தியாகி திரு. சிதம்பரநாதன் அவர்களின் திருவுருவச் சிலையை, கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளையில் அமைக்க எனது அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

* * *

# நாகப்பட்டினம் பகுதியில் மீன்வளப் பல்கலைக்கழகம் - 13.9.2011

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு 1,076 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையினைக் கொண்டுள்ளது. 591 கடல் மீனவ கிராமங்களில், சுமார் 9 இலட்சம் மீனவ மக்கள் உள்ளனர். 6,200 மீன்பிடி விசைப் படகுகளும், 50,000 பாரம்பரியக் கலன்களும் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளன. தமிழ்நாட்டில் கடல் மீன் உற்பத்தி 4 இலட்சம் டன் ஆகும். தமிழ்நாட்டிலிருந்து 2,000 கோடி ரூபாய் மதிப்புள்ள கடல் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

மீன்வளத் துறையினை நவீனப்படுத்துவதற்கும்; கடல்பொருள் ஏற்றுமதியில் தமிழ்நாட்டினை முதன்மை மாநிலமாக ஆக்கிடவும்; எனது தலைமையிலான அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. மீன்பதன அலகுகள் அமைத்தல்; மீன்பிடி விசைப் படகுகள் வாங்குதல்; ஆழ்கடல் மீன்பிடிப்பினை மேற்கொள்ள ஊக்குவிப்பு உதவிகள் அளித்தல்; உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்; மீனவர்களுக்குத் தேவையான உதவிகள் அளித்தல் போன்ற பல முன்னோடி நடவடிக்கைகள் எனது அரசால் எடுக்கப்பட்டு வருகின்றன. குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல்; சிப்பம் கட்டுதல்; விற்பனை மற்றும் போக்குவரத்து வசதிகளை அதிகரித்தல் ஆகியவற்றிற்கான கொள்கைகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளும் துவங்கப்பட்டுள்ளன.

மீனவ நண்பன், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம் ஜி ஆர் அவர்கள், 1977 ஆம் ஆண்டு, இந்தியாவின் இரண்டாவது மீன்வளக் கல்லூரியைத் தூத்துக்குடியில் நிறுவினார்.

தமிழகத்தில் மீன்வளத்தை மேம்படுத்தவும்; மீன்வளத்தைப் பெருக்குவதில் நவீனத் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி அதன் மூலம் மீனவர்களின் வருவாய் மேம்பாடு அடையச் செய்வதற்கும்; மீன்வளக் கல்வியை மேலும் ஊக்குவிப்பது அவசியம் ஆகிறது. மீன்வள மேம்பாட்டில் முன்னோடியாக உள்ள நாடுகளில், மீன்வளக் கல்விக்கென பல்கலைக்கழகம் நிறுவப்பட்டுள்ளது. இந்தியாவிலும், நமது அண்டை மாநிலமான கேரள மாநிலத்தில், கடந்த ஏப்ரல் மாதத்தில் மீன்வளம் மற்றும் பெருங்கடல் அறிவியல் பல்கலைக்கழகம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மீன்வளத்தைப் பெருக்குவதில் பல்வேறு முன்னோடி நடவடிக்கைகளை எடுத்து வரும் அதே வேளையில், அதற்குத் தேவையான கல்வி அறிவைப் பெருக்குவதற்கும் உரிய முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என எனது தலைமையிலான அரசு முடிவு எடுத்துள்ளது.

இந்த அடிப்படையில், மீன்வளத்திற்கென, ‘‘மீன்வளப் பல்கலைக்கழகம்’’ ஒன்றை நிறுவ எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாகப்பட்டினம் மாவட்டம் 188 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையைக் கொண்டுள்ளது. மீன்பிடித்தல், உலர் மீன் உற்பத்தி மற்றும் இறால் வளர்ப்பு ஆகியவை இம்மாவட்டத்தின் முக்கியமான பொருளாதார நடவடிக்கைகள் ஆகும். இம்மாவட்டத்தில் 9,000 மீன்பிடிக் கலன்கள் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளன. நாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகம் நவீனப்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, மீன்வளப் பல்கலைக் கழகம் அமைப்பதற்கு நாகப்பட்டினம் மிகவும் உகந்த இடமாக உள்ளதால், இந்த மீன்வளப் பல்கலைக்கழகம் நாகப்பட்டினத்தில் நிறுவப்படும்.

நாகப்பட்டினம் தாலுகாவில் பனங்குடி மற்றும் நாகூர் கிராமங்களில் 85 ஏக்கர் நிலப்பரப்பில், சுமார் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில், இந்த மீன்வளப் பல்கலைக்கழகம் அமைக்கப்படும்.

முதற்கட்டமாக,

1. தூத்துக்குடியில் உள்ள மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்
2. மீன்வளத் துறையின் ஆராய்ச்சிப் பிரிவு
3. சென்னையில் உள்ள மீன்வளத் தொழில்நுட்பப் பயிற்சி நிலையம்
4. சென்னையில் உள்ள மீன்வளப் பணியாளர் பயிற்சி நிலையம்
5. தமிழ்நாடு கடல்சார் கழகம்

ஆகியவை இந்தப் புதிய பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படும்.

புதிதாக அமைக்கப்படவுள்ள இந்தப் பல்கலைக் கழகத்தில்,

1) இறால் வளர்ப்பு
2) கெண்டை மீன் வளர்ப்பு
3) வண்ண மீன் வளர்ப்பு
4) மீன் பதப்படுத்துதல் மற்றும் மீன் மதிப்பு கூட்டியப் பொருட்கள் உற்பத்தி
5) மீன்பிடி படகு மற்றும் இயந்திரப் பராமரிப்பு
6) கடலாள் பயிற்சி மற்றும் நீர்வழிப் பயிற்சி

ஆகிய பாடப்பிரிவுகளில் பட்டங்கள் மற்றும் பட்டயங்கள் வழங்கப்படும்.

தொழில்நுட்பப் பரிமாற்றம், விரிவாக்கக் கல்வி, மனித வளப் பயிற்சி மற்றும் மீன்வளப் பயன்பாடு ஆகியவற்றினை மேம்படுத்துவதில் இந்தப் பல்கலைக்கழகம் பெரும் பங்கு வகிக்கும். மேலும், இந்தப் பல்கலைக்கழகத்தில் பல்வேறு பிரிவுகளில் பயிற்சி பெறும் நபர்கள், உள்நாடு மற்றும் உலக அளவில் வேலை வாய்ப்புப் பெறவும் இது வழி வகுக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# மின்வெட்டைக் குறைத்திட புதிய மின் திட்டங்கள் - 29.3.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2012–2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய உறுப்பினர்கள் மின் பற்றாக்குறையை நீக்குவதற்காக புதிய மின் திட்டங்கள் எதுவும் இந்த நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்படவில்லை என்றும், ஏற்கெனவே சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்ட திட்டங்களின் நிலை பற்றியும் தங்கள் கருத்துகளை இந்த மாமன்றத்திலே எடுத்துரைத்தார்கள். புதிய மின் திட்டங்களை அறிவிப்பது மட்டுமின்றி, அவற்றை காலத்தே செயல்படுத்தி அவற்றின் பயன் பொதுமக்களுக்குக் கிடைக்கச் செய்யும் வகையில் நடவடிக்கைகளை முன்னின்று எனது அரசு எப்போதும் எடுத்து வருகிறது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

2001 லிருந்து 2006 ஆம் ஆண்டு வரை எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் மின் வெட்டு நிலையே இல்லாமல் தமிழ்நாடு மின் மிகை மாநிலமாக இருந்தது என்பதைத் தமிழக மக்கள் நன்கு அறிவார்கள். 2001 லிருந்து 2006 ஆம் ஆண்டு வரையில் 2,518 மெகாவாட் அளவுக்குக் கூடுதல் மின் நிறுவு திறன் ஏற்படுத்தப்பட்டது. எனவேதான், அப்போது மின் பிரச்சினை ஏதும் இருந்ததில்லை. ஆனால், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் ஐந்தாண்டுக் காலத்தில் கூடுதலாக நிறுவப்பட்ட

மின்நிறுவு திறன் வெறும் 206 மெகாவாட் மட்டுமே. அதன் காரணமாகத்தான் தமிழகம் இன்றைக்கும் மின் பற்றாக்குறையைச் சந்தித்து வருகிறது.

2011–2012ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 800 மெகாவாட் உடன்குடி விரிவுத் திட்டம், 1,600 மெகாவாட் உப்பூர் அனல்மின் திட்டம், தற்போதுள்ள எண்ணூர் அனல்மின் நிலையத்திற்குப் பதிலாக 600 மெகாவாட் திறன் கொண்ட புதிய திட்டம், 800 மெகாவாட் தூத்துக்குடி நான்காம் நிலைத் திட்டம் என 3,800 மெகாவாட் அளவுக்குப் புதிய மின் திட்டங்களை அறிவித்திருந்தோம்.

660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் அனல்மின் விரிவாக்கத் திட்டம் என்னும் ஒரு புதிய திட்டத்தை செயல்படுத்த எனது தலைமையிலான அரசு தற்போது முடிவு செய்துள்ளது என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்த அனல்மின் திட்டம் Super Critical என்னும் தொழில்நுட்பத்துடன் கூடியதாக இருக்கும். இந்தத் திட்டத்தின் மூலம், குறைந்த அளவு நிலக்கரியில் அதிக அளவு மின் உற்பத்தியைப் பெற இயலும். குறைந்த நிலக்கரியைப் பயன்படுத்துவதன் காரணமாக சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும். சுமார் 3,960 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துவக்கப்படும் இந்த அனல் மின் திட்டம், 2015 ஆம் ஆண்டு இறுதிக்குள் தனது உற்பத்தியைத் தொடங்கும்.

இதுவரை தமிழ்நாட்டில், புனல், அனல், அணு, எரிவாயு சுழலி ஆகியவை மூலம் மின்சாரம் தயாரிக்கப்படும் மின் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புனல் மின்நிலையம் மூலம் இதற்கு மேல் புதிய மின் உற்பத்தி நிலையங்கள் அமைப்பது கடினம். அதைப் போன்று, அனல் மின் நிலையத்திற்கு மத்திய அரசால் போதுமான

அளவு நிலக்கரி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். தற்போது நடைமுறையில் உள்ள அனல் மின் நிலையங்களுக்கே நிலக்கரி ஒதுக்கீட்டை மத்திய அரசு சரிவர செய்யவில்லை. எனவே, மாற்று எரிபொருள் மூலம் மின் உற்பத்தி செய்யப்பட வேண்டியது, தற்போது காலத்தின் கட்டாயம் ஆகும். மின் உற்பத்திக்கு Liquefied Natural Gas, அதாவது திரவ இயற்கை எரிவாயு ஒரு மாற்று எரிபொருளாக அமையும். மேலும், LNGI எரிபொருளாகக் கொண்ட மின்நிலையம் மிகக் குறைந்த கால அளவில் உருவாக்க இயலும். ஆனால், அதற்கு LNG Terminal, அதாவது எல்.என்.ஜி. முனையம் தேவை. எல்.என்.ஜி. முனையம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இந்தியன் ஆயில் நிறுவனத்துடன் எனது முன்னிலையில் 22.3.2012 அன்று ஏற்படுத்தப்பட்டது. எனவே, அந்த முனையம் அமைக்கப் பட்டவுடன் கிடைக்கப் பெறும் திரவ இயற்கை எரிவாயுவை பயன்படுத்தி, 500 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையத்தை அமைக்க எனது தலைமையிலான அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதேபோன்று, கோயம்புத்தூர், சேலம், தருமபுரி வழியாக கொச்சி முதல் பெங்களூருக்கு திரவ இயற்கை எரிவாயு எடுத்துச் செல்லும் குழாய் அமைக்கும் பணிகளை GAIL நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. இதனைப் பயன்படுத்தி, 500 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையங்களை அமைக்க எனது தலைமையிலான அரசு ஆராயும்.

2011–2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட மின் திட்டங்களின் நிலைமை பற்றியும் இந்த மாமன்றத்திலே விவாதிக்கப்பட்டது. எனவே, அது பற்றியும் இங்கே எடுத்துக் கூறுவது எனது கடமை என கருதுகிறேன்.

800 மெகாவாட் திறன் கொண்ட உடன்குடி விரிவாக்க அனல்மின் திட்டம் துவங்கப்படுவதற்கான முதல் நடவடிக்கையாக,

சாத்தியக்கூறு திட்ட அறிக்கை தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் 2015–2016 நிதியாண்டில் செயல்பாட்டிற்கு வரும்.

1,600 மெகாவாட் திறன் கொண்ட உப்பூர் அனல்மின் திட்டத்திற்கான முன்சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் திட்ட வரைபடம் ஆகியவை இறுதி செய்யப்பட்டுவிட்டன. கடலோர பகுதி ஒழுங்குமுறை, அதாவது, Coastal Regulation Zone விதிகளின் அடிப்படையில் திட்ட எல்லைகளை வரையறுக்க 28.1.2012 அன்று அண்ணா பல்கலைக்கழகத்திடம் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டிற்கான அறிக்கை தயாரிப்பதற்கான ஒப்பந்தப் புள்ளி திறக்கப்பட்டு பரிசீலனையில் உள்ளது. இதற்கான பணி ஆணைகள் விரைவில் வழங்கப்படும். மேலும் விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான ஆலோசகர் நியமிப்பதற்கான ஒப்பந்தப் புள்ளி திறக்கப்பட்டு, மதிப்பாய்வில் உள்ளது. மத்திய சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டின் ஆய்வுக்கான குறிப்பு விதிமுறைகள், அதாவது Terms of Reference ஒப்புதலுக்காக மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தில் நிலுவையில் உள்ளது. இந்தத் திட்டம் 2015 ஆம் ஆண்டு இறுதிக்குள் செயல்பாட்டிற்கு வரும்.

40 ஆண்டு பழமை வாய்ந்த எண்ணூர் அனல்மின் நிலையத்திற்குப் பதிலாக 600 மெகாவாட் திறன் கொண்ட புதிய அனல் மின் நிலையத்தை நிறுவ உத்தேசிக்கப் பட்டிருந்தது. எனினும், Super Critical தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தினால் குறைந்த அளவு நிலக்கரியில் அதிக அளவு மின் உற்பத்தியைப் பெற முடியும் என்றும், இதன் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. எனவே, 600 மெகாவாட் திறன் கொண்ட இந்த அனல்மின் நிலையத்தை, Super Critical தொழில்நுட்பத்தை பயன்படுத்தி 660 மெகாவாட் திறன் கொண்ட

அனல்மின் நிலையமாக மாற்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்திற்கான முன்சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த அனல்மின் திட்டமும் 2015ஆம் ஆண்டு இறுதிக்குள் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

800 மெகாவாட் தூத்துக்குடி நான்காம் நிலை அனல் மின் திட்டத்தைப் பொறுத்த வரை, கடலோரப் பகுதி ஒழுங்குமுறை ஆணைய விதிகளின்படி அனல்மின் திட்ட எல்லைகளை வரையறுப்பதற்கான பணி அண்ணா பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு, அதற்கான அறிக்கையும் பெறப்பட்டுவிட்டது. மேலும், சாத்தியக்கூறு அறிக்கை மற்றும் திட்ட விவர அறிக்கையினைத் தயாரிப்பதற்கான ஆலோசகர் நியமிக்கப்பட்டுவிட்டார். இந்த அனல் மின் திட்டம் 2015ஆம் ஆண்டு இறுதிக்குள் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

வட சென்னை அருகில் வல்லூரில் 1,000 மெகாவாட் திறன் கொண்ட அனல்மின் நிலையத்தை தேசிய மின் கழகத்துடன் இணைந்து நிறுவ 12.7.2002 அன்று எனது முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. அதற்கான ஆரம்பக் கட்ட பணிகளும் எனது அரசால் துவங்கப்பட்டன. பின்னர் வந்த மைனாரிட்டி தி.மு.க. அரசு இதனை விரைந்து செயல்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்காத காரணத்தால், இன்னமும் வல்லூர் அனல் மின் திட்டம் செயல்பாட்டிற்கு வரவில்லை. எனது அரசு பொறுப்பேற்றபோது மந்த கதியில் நடைபெற்று வந்த பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக, இந்த ஆண்டு ஜூன் மாதம், முதல் அலகு உற்பத்தியைத் துவங்கும். இரண்டாம் அலகு இந்த ஆண்டு நவம்பர் மாதமும், மூன்றாம் அலகு அடுத்த ஆண்டு ஜூன் மாதமும் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

அதேபோன்று, தூத்துக்குடியில் 1,000 மெகாவாட் திறன் கொண்ட அனல்மின் நிலையத்தை நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தோடு கூட்டு முயற்சியில் நிறுவ 19.6.2003 அன்று எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்தத் திட்டத்திற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளும் முந்தைய எனது அரசாலேயே மேற்கொள்ளப்பட்டுவிட்டன. இந்த அனல்மின் திட்டத்தின் பணிகளை முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு சரியாக கண்காணிக்கத் தவறியதால், இத்திட்டம் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படுவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. இத்திட்டத்தின் முதல் அலகு 2013ஆம் ஆண்டு ஜூன் மாதமும், இரண்டாம் அலகு 2013ஆம் ஆண்டு செப்டம்பர் மாதமும் செயல்பாட்டிற்கு வரும். எனது அரசால் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தப்படி தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய மின்சாரத்தின் அளவு 750 மெகாவாட் ஆகும். ஆனால், இத்திட்டம் பற்றி முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு, மத்திய அரசிடம் சரியாக எடுத்துக்கூறாத காரணத்தால், இது ஒரு மத்திய அரசின் திட்டம் என கருதப்பட்டு, காட்கில் ஃபார்முலா அடிப்படையில் 387 மெகாவாட் என குறைக்கப்பட்டுவிட்டது.

இவையன்றி, ஒவ்வொன்றும் 600 மெகாவாட் திறன் கொண்ட வடசென்னை நிலை – 2 மின் நிலையம், இந்த ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஒரு யூனிட்டும், டிசம்பர் மாதத்தில் மற்றொரு யூனிட்டும் மின் உற்பத்தியை தொடங்கும். 600 மெகாவாட் திறன் கொண்ட மேட்டூர் மூன்றாம் நிலை அனல் மின் நிலையம் இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டு, அதன் முழுத் திறனும் செப்டம்பர் மாதத்திற்குள் கிடைக்கப்பெறும்.

கூடங்குளம் அணுமின் நிலையம் தனது உற்பத்தியை இன்னும் இரண்டு மாதங்களில் துவக்கிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நான் தற்போது விவரித்துள்ளவாறு எனது தலைமையிலான அரசு பல்வேறு புதிய மின் திட்டங்களை தொடங்கியுள்ளதுடன், தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மின் திட்டப் பணிகளையும் முடுக்கி விட்டுள்ளது. எனவே, வரும் ஜூன் மாதம் முதல் மின்வெட்டு படிப்படியாக குறைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அ.இ.அ.தி.மு.க. அரசு, 2011ஆம் ஆண்டு மே மாதம் தான் பொறுப்பேற்றது. அதன் பின்னர், இந்த அரசின் கொள்கைகள், திட்டங்கள் மற்றும் அறிவிப்புகள் ஆகியவை ஆளுநர் உரையிலும், நிதி நிலை அறிக்கையிலும், கொள்கை விளக்கக் குறிப்பிலும் தெரிவிக்கப்பட்டிருந்தன. கடந்த ஆண்டு பட்ஜெட் கூட்டத் தொடர் செப்டம்பர் மாதம் 14ஆம் தேதி தான் நிறைவடைந்தது என்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவர். எனவே, கடந்த பட்ஜெட் கூட்டத் தொடர் முடிவடைந்ததற்கும், நடப்பு ஆண்டு நிதி நிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டதற்கும் உள்ள இடைவெளி ஆறு மாத காலம்தான். சாதாரணமாக, ஒவ்வொரு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படுவதற்கும் இடையே ஓராண்டு இடைவெளி இருக்கும். எனவே, கடந்த நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட திட்டங்கள் அனைத்தும் முழுமையாக நிறைவேற்றப்பட்டு விட்டதா என்று எழுப்பப்படும் கேள்விகள் நியாயமானவை அல்ல என்பதை நியாய உணர்வு உள்ளவர்கள் அறிவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

✵ ✵ ✵

## தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ரூ.740 கோடி மானியம் - 3.4.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

நாட்டின் பொருளாதாரம் சரியான பாதையில் பயணிக்கும் வகையில், பொது நலன் பாதுகாக்கப்படுவதையும்; சமூக நலன் உச்ச நிலைக்குக் கொண்டு செல்லப்படுவதையும்; லாபத்தை குறிக்கோளாகக் கொள்ளாமல், மக்களுக்கான சேவை நியாயமான விலையில் கிடைக்கச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டு செயலாற்றுபவைதான் பொதுத்துறை நிறுவனங்கள். இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, தமிழ்நாட்டு மக்களுக்குத் தேவையான மின்சாரத்தைத்தங்கு தடையின்றி அளிப்பதற்காக உருவாக்கப்பட்ட நிறுவனம்தான் தமிழ்நாடு மின்சார வாரியம்.

எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், அதாவது 2001 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரையிலான ஆட்சிக் காலத்தில், மின் தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடமளிக்காத வகையில்; இன்னும் சொல்லப் போனால், உபரி மின்சாரத்தை வெளி மாநிலங்களுக்கு அளிக்கும் வகையில், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் செயல்பாடு நன்றாக இருந்தது. தமிழ்நாட்டில் உள்ள அனல்மின் நிலையங்களான தூத்துக்குடி, மேட்டூர் மற்றும் வட சென்னை அனல்மின் நிலையங்கள் அவற்றின் செம்மையான செயல்பாடுகளுக்காக 2001–2002 முதல் 2005–2006 வரை பல்வேறு விருதுகளைத் தொடர்ச்சியாகப் பெற்றுவந்தன. காற்றாலை மின் உற்பத்தியிலும் தமிழ்நாடு முன்னிலை வகித்து

வந்தது. இது மட்டுமல்லாமல், 2,518 மெகாவாட் அளவுக்கு மின் நிறுவு திறன் அதிகரிக்கப்பட்டது. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதி நிருவாகமும் சீராக இருந்தது.

ஆனால், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், ஆண்டொன்றுக்கு சராசரியாக 8,000 கோடி ரூபாய்க்கு மேல், வருவாய்க்கும் செலவினங்களுக்கும் இடையே நிகர இடைவெளி ஏற்பட்டது. இதன் விளைவாக, 31.3.2012 நிலவரப்படி, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தொடர் இழப்பு 50,000 கோடி ரூபாயையும்; வங்கி மற்றும் இதர நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன் 45,000 கோடி ரூபாயையும் தாண்டியுள்ளது. இது தவிர, தனியார் மின் உற்பத்தியாளர் மற்றும் இதர ஒப்பந்ததாரர்களுக்கான நிலுவைத் தொகை 11,000 கோடி ரூபாய் அளவிற்கு உள்ளது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், தமிழ்நாடு மின்சார வாரியம் அளவுக்கு மீறிய கடன்சுமைக்கு ஆளாகி; வாங்கிய கடனையும் வட்டியையும் திரும்பச் செலுத்துவதற்கே கடன் வாங்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில், அதாவது debt-trap நிலையில் உள்ளது. இந்தச் சூழ்நிலையில், மதிப்பீட்டு நிறுவனங்கள் மின்சார வாரியத்தின் மதிப்பை குறைத்துவிட்டதால், வெளிச்சந்தையில் இருந்தும் கடன் பெற வழியில்லை. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குக் கடன் அளிக்கக் கூடாது என பாரத ரிசர்வ் வங்கி, வங்கிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சூழ்நிலையில் கடந்த 2011 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்ட எனது தலைமையிலான அரசு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, பல ஆண்டு இடைவெளிக்குப்பின் அனல்மின் நிலையங்கள் புதிய சாதனைகளை ஏற்படுத்தும் விதமாக மிகச் செம்மையாக செயல்பட்டு வருகின்றன. இதேபோன்று தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான

கழகத்தின் மின் இழப்பு அதாவது Transmission and Distribution loss விகிதமும், குறைக்கப்பட்டுள்ளது. அகில இந்திய, சராசரி மின் இழப்பான, 27 விழுக்காட்டினை ஒப்பிடுகையில், தமிழ்நாட்டின் மின் இழப்பு, 18 விழுக்காடு, என்ற அளவிலேயே உள்ளது.

நிதி உதவியைப் பொறுத்த வரையில், 2011–2012ஆம் ஆண்டுக்கான மானியத் தொகையாக 2,058.19 கோடி ரூபாயைத் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கியதுடன்; பங்கு மூலதனமாக 4,100 கோடி ரூபாயையும்; ways and means advance ஆக 1,455.16 கோடி ரூபாயையும்; ஆக மொத்தம் ஒரே ஆண்டில் இதுவரை வழங்கப்படாத அளவுக்கு 7,913.45 கோடி ரூபாயை எனது தலைமையிலான அரசு வழங்கியுள்ளது. 2012–2013ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மானியமாக 3,068.78 கோடி ரூபாயும்; புதிய மின் திட்டங்களுக்கான பங்கு மூலதன உதவியாக 1,500 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது தவிர, மின்சார சேமிப்பை ஊக்குவிக்கவும்; மின்சாரத்தைக் கொண்டு செல்வதிலும், விநியோகிப்பதிலும் ஏற்படும் இழப்புகளை மேலும் குறைக்கவும்; மின் பகிர்மான கட்டமைப்பை வலுப்படுத்தவும்; மின் திருட்டைக் கட்டுப்படுத்தவும்; சூரிய ஒளி மின்சக்தி திட்டங்கள்; காற்றாலை திட்டங்கள்; பயோமாஸ் மின் திட்டங்கள் ஆகியவற்றை ஊக்குவிக்கவும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாநில அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களை விரைந்து செயல்பாட்டிற்கு கொண்டு வரவும்; புதிய திட்டங்களை மாநில அரசு மூலமாகவோ அல்லது கூட்டு முயற்சிகள் மூலமாகவோ தொடங்க துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பாரத மிகுமின் நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்துவதாக இருந்த 1,600 மெகாவாட்

உடன்குடி உயர் அழுத்த நிலை அனல்மின் திட்டம் நான்கு ஆண்டுகளாகத் தொடங்கப்படாத நிலையில் இருந்ததால், அத்திட்டத்தை 8,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாநில அரசின் திட்டமாகவே செயல்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கிடையில், உற்பத்திச் செலவு மற்றும் விநியோக வருவாய்க்கு இடையே உள்ள இடைவெளியை ஈடு செய்யும் வகையில், 9,741 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் ஏற்படும் வகையில், தற்போதுள்ள மின்சாரக் கட்டணத்தை மாற்றக் கோரி தமிழ்நாடு மின்சார வாரியம் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் விண்ணப்பித்திருந்தது. இந்த விண்ணப்பத்தின் மீது நுகர்வோரின் கருத்துகளைக் கோரி சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் 'கருத்துக் கேட்பு' கூட்டங்களையும்; மாநில ஆலோசனைக் குழு, அதாவது, 'State Advisory Committee' கூட்டத்தையும் நடத்தி, பல்வேறு தரப்பினரின் கருத்துகளையும், ஆலோசனைகளையும், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் பெற்றது.

இதனையடுத்து, மின் கட்டண, விகித மாற்றம் குறித்த, தனது ஆணையை, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 30.3.2012 அன்று வெளியிட்டது. இதன்படி, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு, 7,874 கோடி ரூபாய், கூடுதல் வருவாய் கிடைக்கும்.

இருப்பினும், இந்தக் கட்டண உயர்வில், 1,118.44 கோடி ரூபாயை, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மானியமாக வழங்க எனது தலைமையிலான அரசு ஏற்கெனவே ஒப்புதல் அளித்துள்ளது. இதன்

அடிப்படையில், தமிழக அரசு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்க வேண்டிய மொத்த மானியத் தொகை ஆண்டொன்றிற்கு 3,554.16 கோடி ரூபாய் ஆகும்.

தமிழக அரசின் இது போன்ற மக்கள் நலம் காக்கும் நடவடிக்கையின் மூலம், ஏழை, எளிய மக்கள் அடையும் பயன்களை நான் இங்கே எடுத்துக் கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

1. குடிசைகளுக்கான மின் கட்டணம் யூனிட் ஒன்றிற்கு 2 ரூபாய் 50 பைசா என்று கணக்கிடப்பட்டு, மாதம் ஒன்றுக்கு கட்டணம் 60 ரூபாய் என்றும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்துள்ளது. இதனை தமிழக அரசே முழுமையாக ஏற்றுக் கொள்கிறது. இதன் மூலம், 14 இலட்சம் நுகர்வோர் பயன் பெறுவர்.

2. விவசாயத்திற்கான மின் கட்டணத்தை குதிரைத் திறன் ஒன்றிற்கு ஆண்டொன்றுக்கு 250/– ரூபாயிலிருந்து 1,750/– ரூபாயாக மாற்றித் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இந்தக் கட்டணம் முழுவதையும் அரசே ஏற்றுக்கொள்ளும். இதன் மூலம் விவசாயிகள் மின் கட்டணம் ஏதும் செலுத்தாமலேயே மின்சாரத்தைத் தொடர்ந்து பெற்று வருவார்கள்.

3. இருமாதங்களில் 100 யூனிட்டுகள் வரை உபயோகப்படுத்தும் வீட்டு மின் நுகர்வோர்களுக்குத் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்த விலையான யூனிட் ஒன்றிற்கு 2 ரூபாய் 60 பைசாவில், 1 ரூபாய் 50 பைசாவைத் தமிழக அரசு மானியமாக அளிக்கும் என ஏற்கெனவே ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே, பயனீட்டாளர்கள் செலுத்த வேண்டிய தொகை யூனிட் ஒன்றுக்கு 1 ரூபாய் 10 பைசா மட்டுமே.

4. இதே போன்று, இரு மாதங்களில் 200 யூனிட்டுகள் வரை பயன்படுத்தும் வீட்டு மின் நுகர்வோர்களுக்குத் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்த விலையான யூனிட் ஒன்றிற்கு 2 ரூபாய் 80 பைசாவில், 1 ரூபாயைத் தமிழக அரசு மானியமாக வழங்க ஒப்புக் கொண்டுள்ளதால்; பயனீட்டாளர்கள் செலுத்த வேண்டிய தொகை யூனிட் ஒன்றுக்கு 1 ரூபாய் 80 பைசா மட்டுமே.

5. இரு மாதங்களில் 500 யூனிட்டுகள் வரை பயன்படுத்தும் வீட்டு மின் பயனீட்டாளர்களுக்கு, 201 முதல் 500 யூனிட்டுகளுக்கான மின் கட்டணத்தில், யூனிட் ஒன்றுக்கு 50 காசு மானியத்தைத் தமிழக அரசு வழங்க ஒப்புக் கொண்டுள்ளது.

6. வழிபாட்டுத் தலங்கள், விசைத் தறிகள் ஆகியவற்றிற்கான மானியங்களும் தொடர்ந்து அளிக்கப்படும்.

7. இவையன்றி, 500 யூனிட்டுகளுக்கு மேல் பயன்படுத்தும் வீட்டு மின் நுகர்வோர்களுக்கு அரசு தனியே மானியம் வழங்கவில்லை என்றாலும், மின் உற்பத்திச் செலவை விடக் குறைவான கட்டணமே அவர்களுக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் அறிவிக்கப்பட்ட இந்தக் கட்டண உயர்விற்கு பின்னரும், வெளி மாநிலங்களை ஒப்பிடுகையில், தமிழ்நாட்டில் மின் கட்டணம் குறைவாகவே உள்ளது.

உதாரணமாக கர்நாடகாவில் இரண்டு மாதங்களில் 100 யூனிட் வரை உபயோகிப்பவர்கள் யூனிட் ஒன்றிற்கு சராசரியாக 2 ரூபாய் 59 காசும்; ஆந்திராவில் 2 ரூபாய் 3 காசும்; கேரளாவில் 1 ரூபாய் 30 காசும்; மேற்கு வங்காளத்தில் 3 ரூபாய் 55 காசும்; மகாராஷ்டிராவில் 2 ரூபாய் 47 காசும்; குஜராத்தில் 2 ரூபாய்

55 காசும்; உத்திரபிரதேசத்தில் 3 ரூபாய் 45 காசும் செலுத்தி வருகிறார்கள். ஆனால், இந்தக் கட்டண மாற்றத்திற்குப் பிறகும் தமிழ்நாட்டில் 100 யூனிட்டுகள் வரை பயன்படுத்துவோர் செலுத்த வேண்டிய கட்டணம் யூனிட் ஒன்றிற்கு 1 ரூபாய் 10 காசு மட்டுமே.

இதே போன்று, இரண்டு மாதங்களில் 200 யூனிட்கள் வரை உபயோகிப்பவர்களை ஒப்பிடும் போது; ஆந்திராவில் யூனிட் ஒன்றிற்கு சராசரியாக 2 ரூபாய் 81 காசும்; கர்நாடகாவில் 2 ரூபாய் 92 காசும்; மேற்கு வங்காளத்தில் 4 ரூபாய் 4 காசும்; மகாராஷ்டிராவில் 2 ரூபாய் 47 காசும்; குஜராத்தில் 2 ரூபாய் 85 காசும்; உத்திரபிரதேசத்தில் 3 ரூபாய் 45 காசும் செலுத்தி வருகிறார்கள். ஆனால் தமிழகத்தில் புதிய கட்டண விகிதப்படி, 200 யூனிட்டுகள் வரை பயன்படுத்துவோர் செலுத்த வேண்டிய கட்டணம் யூனிட் ஒன்றிற்கு 1 ரூபாய் 80 காசு மட்டுமே.

எனினும், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள மின் கட்டணங்கள் ஏழை, எளிய, நடுத்தர மக்களுக்குக் கூடுதல் சுமையை ஏற்படுத்துகிறது என்றும்; எனவே கட்டணங்களைக் குறைக்க வேண்டும் என்றும், பொது மக்களிடமிருந்து கோரிக்கைகள் வரப் பெற்றுள்ளன.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்துள்ள கட்டணங்களைக் குறைக்க தமிழக அரசுக்கு எந்தவித அதிகாரமும் இல்லை என்றாலும், ஏழை, எளிய மக்களின் சுமையை மேலும் குறைக்கும் வண்ணம், வீட்டு மின் பயனீட்டாளர்கள் செலுத்த வேண்டிய கட்டணங்களைக் குறைக்கவும்; அதற்காகத் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குக் கூடுதல் மானியம் வழங்கி, அந்தச் சுமையை தமிழக அரசே ஏற்றுக் கொள்வது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி,

1. இருமாதங்களில் 100 யூனிட்டுகள் வரை உபயோகப்படுத்தும் வீட்டு மின் பயனீட்டாளர்கள் செலுத்த வேண்டிய மின் கட்டணம் யூனிட் ஒன்றிற்கு 1 ரூபாய் 10 பைசாவில் இருந்து 1 ரூபாயாகக் குறைக்கப்படும்.

2. இருமாதங்களில் 200 யூனிட்டுகள் வரை உபயோகப்படுத்தும் வீட்டு மின் பயனீட்டாளர்கள் செலுத்த வேண்டிய மின் கட்டணம் யூனிட் ஒன்றிற்கு 1 ரூபாய் 80 பைசாவில் இருந்து 1 ரூபாய் 50 பைசாவாகக் குறைக்கப்படும்.

3. இரு மாதங்களில் 500 யூனிட் வரை உபயோகப்படுத்தும் வீட்டு மின் பயனீட்டாளர்கள் செலுத்த வேண்டிய மின் கட்டணம், முதல் 200 யூனிட்டுகளுக்கு 3 ரூபாயிலிருந்து 2 ரூபாய் என்றும்; 201 யூனிட் முதல் 500 யூனிட் வரையிலான கட்டணம் 3 ரூபாய் 50 பைசாவிலிருந்து 3 ரூபாய் என்றும் குறைக்கப்படும்.

எனது தலைமையிலான அரசின் இந்த மக்கள் நலன் காக்கும் நடவடிக்கை மூலம், 740 கோடி ரூபாய் மானியத்தைத் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு எனது தலைமையிலான அரசு கூடுதலாக வழங்கும். இதனையடுத்து, இந்த ஆண்டு வழங்கப்பட வேண்டிய மானியத் தொகை மிக உயர் அளவான 4,294.16 கோடி ரூபாயாக இருக்கும் என்பதையும், இதன் மூலம் 1 கோடியே 50 இலட்சம் குடும்பங்கள் பயனடையும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# சங்ககிரியில்
# மாவீரர் தீரன் சின்னமலைக்கு
# நினைவுச் சின்னம் - 4.4.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விடுதலைப் போராட்ட வீரர்களையும்; தன்னலமற்ற மக்கள் சேவை புரிந்தவர்களையும்; சமுதாயத்தில் மறுமலர்ச்சியை உருவாக்க பாடுபட்டவர்களையும்; மக்களின் உரிமைகளை மீட்க போராட்டங்களை நடத்தியவர்களையும் கௌரவிக்கும் விதத்தில் அவர்களுக்கு மணிமண்டபங்கள் அமைப்பதிலும்; திருவுருவச் சிலைகள் அமைப்பதிலும்; அரசு கட்டடங்களுக்கு அவர்களது பெயர்களை வைப்பதிலும்; முன்னோடியாக விளங்குவது எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்று சொன்னால் அது மிகையாகாது.

பரம்பரை பரம்பரையாய் அடிமைத் தளையில் சிக்குண்ட நம் இந்திய நாடு, தற்போது, உரிமை பெற்ற நாடாக விளங்குகிறது. இச்சுதந்திரத்தைப் பெற இந்திய விடுதலைப் போரில் எண்ணற்ற தியாகச் சீலர்கள், கிளர்ந்து எழுந்து; தங்கள் வாழ்வைத் துச்சமென மதித்து; அன்னை பாரதத்தின் அடிமைத் தளையைத் தகர்த்தெறிய பாடுபட்டனர். இத்தகைய விடுதலைப் போரில், தமிழகத்திலும் பல தலைவர்கள் தோன்றி தங்கள் இன்னுயிரை ஈந்தனர். இந்த விடுதலைப் போராட்டத்தில், பிரிட்டிஷாரின் பிரித்தாளும் சூழ்ச்சியைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், ஆர்ப்பரித்து, ஆங்கிலேய ஆதிக்கத்தைத் தடுக்கும் பெருமலையாக விளங்கியவர் மாவீரர் தீரன் சின்னமலை அவர்கள்.

சென்னிமலைக்கும், சிவன்மலைக்கும் நடுவே வாழ்ந்து, தனக்கென ஒரு பாதை அமைத்து, ஆங்கிலேயருக்குச் சிம்ம சொப்பனமாக விளங்கிய மாவீரர் தீரன் சின்னமலை அவர்களின் தியாகத்தைப் போற்றும் வகையில், தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது.

எனது ஆட்சிக் காலத்தில், சென்னை, அண்ணா சாலையில், தீரன் சின்னமலை அவர்களின் முழு உருவ வெண்கலச் சிலை அமைக்க அனுமதி அளிக்கப்பட்டதோடு; இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பணிக்கு 1 இலட்சம் ரூபாய் நன்கொடையையும் நான் அளித்தேன். 1995 ஆம் ஆண்டு தீரன் சின்னமலை அவர்களுக்கு, தமிழக அரசின் சார்பில், காங்கேயத்தில், நினைவு விழா நடத்தப்பட்டு; அவ்விழாவில் அவரது வாரிசுகள், கௌரவிக்கப்பட்டனர். எனது ஆட்சிக் காலத்தில்தான், கொங்கு நாட்டின் ஒரு பகுதியான கரூரைத் தலைநகராகக் கொண்டு தீரன் சின்னமலை மாவட்டம் உருவாக்கப்பட்டது. தீரன் சின்னமலை அவர்கள் பிறந்த இடமான ஈரோடு மாவட்டம், ஓடாநிலையில், அவரது நினைவு நாளான, ஆடி மாதம் 18ஆம் நாளினை அரசு விழாவாக அனுசரிக்க 2003 ஆம் ஆண்டு நான் உத்தரவிட்டேன். தியாகி தீரன் சின்னமலை அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், 30 இலட்சம் ரூபாய் செலவில், ஈரோடு மாவட்டம், அரச்சலூர் கிராமம், ஓடாநிலையில் மணிமண்டபம் என்னால் 2006 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது.

தியாகி தீரன் சின்னமலையை போரின் மூலம் வெல்ல முடியாது என்ற நிலைக்கு வந்த ஆங்கிலேயர், சூழ்ச்சி மூலம் அவரைக் கைது செய்து; சங்ககிரி கோட்டைக்கு அழைத்துச் சென்று தூக்கிலிட்டனர். மாவீரர் தீரன் சின்னமலையை தூக்கிலிட்ட

இடமான, சங்ககிரியில், அவருக்கு நினைவுச் சின்னம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று, சங்ககிரி சட்டமன்ற உறுப்பினர், திருமதி விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள் 30 மார்ச், 2012, அன்று இந்த மாமன்றத்திலே கோரிக்கை வைத்தார்.

இந்திய நாட்டின் சுதந்திரத்திற்காக, விடுதலைக்காக, நன்மைக்காகப் பாடுபட்ட நல்லோர் அனைவருக்கும் தனது நன்றியறிதலைக் காட்டி வரும் அரசு எங்கள் அரசு. இந்த உணர்வின் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் திருமதி விஜயலட்சுமி பழனிசாமி அவர்களின் கோரிக்கையை ஏற்று, மாவீரர் தீரன் சின்னமலை அவர்களுக்கு அவர் தூக்கிலிடப்பட்ட இடமான, சங்ககிரியில், நினைவுச் சின்னம் விரைவில் அமைக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

எனது தலைமையிலான அரசின் இந்த முடிவை, இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மனதார வரவேற்பார்கள் என்ற நம்பிக்கையினைத் தெரிவித்து, இந்த நினைவுச் சின்னம் அமைப்பதற்கான பணிகள் விரைந்து மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

## அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி உயர்வு - 9.4.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

அரசால் தீட்டப்படும் திட்டங்களைச் செயல்படுத்து வதிலும்; நலத்திட்ட உதவிகளை மக்களிடம் எடுத்துச் செல்வதிலும்; அரசின் வளர்ச்சி நோக்கங்களை எய்துவதில் முக்கியப் பங்கு வகிக்கும் பொதுச் சேவையை நடைமுறைப் படுத்துவதிலும் அடித்தளமாக விளங்குபவர்கள் அரசு ஊழியர்கள்.

இதேபோன்று, எதிர்காலத் தூண்களாக விளங்கும் மாணவ மாணவியரை நல்லவர்களாகவும்; வல்லவர்களாகவும்; சிந்தனையாளர்களாகவும்; செயல் வீரர்களாகவும்; புகழ் மிக்கவர்களாகவும் ஆக்கும் சிறந்த செல்வமாம் கல்விச் செல்வத்தை போதிக்கும் உன்னதமான, தன்னலமற்ற பணியை மேற்கொள்பவர்கள் ஆசிரியர்கள்.

இப்படிப்பட்ட இன்றியமையாப் பணியை ஆற்றும் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் முக்கியப் பங்கை எனது தலைமையிலான அரசு நன்கு உணர்ந்துள்ளது. அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்கான பல்வேறு நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

அந்த வகையில், 1.1.2012 முதல் மத்திய அரசு அலுவலர்களுக்கான அகவிலைப் படியை, அவர்களது அடிப்படை ஊதியம் மற்றும் தர ஊதியத்தில் 7 சதவீதம் மத்திய அரசு உயர்த்தியது போல், தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோர்களுக்கும் 1.1.2012 முதல் அகவிலைப்படியை 7 சதவீதம் உயர்த்தி வழங்க நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த உயர்த்தப்பட்ட அகவிலைப்படி 1.1.2012 முதல் கணக்கிடப்பட்டு ரொக்கமாக வழங்கப்படும்.

இந்த அகவிலைப்படி உயர்வு, உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்கள்; ஆசிரியர்கள்; வருவாய்த் துறையில் பணிபுரியும் கிராம உதவியாளர்கள்; அங்கன்வாடி மற்றும் சத்துணவு ஊழியர்கள்; ஊராட்சி உதவியாளர்; எழுத்தர்; மற்றும் வழக்கமாக அகவிலைப்படி அளிக்கப்படும் அனைவருக்கும் பொருந்தும். இதனால் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுவோர் என சுமார் 18 இலட்சம் பேர் பயனடைவார்கள்.

இந்த அகவிலைப்படி உயர்வு மூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 1,383.49 கோடி ரூபாய் செலவு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# தமிழ்ப் புத்தாண்டில் உழவர் பெருவிழா - 10.4.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'வயிற்றுக்குச் சோறிட வேண்டும், இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்' என்ற மகாகவி பாரதியின் குறிக்கோள் நிறைவேற, பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதும், உணவுப் பாதுகாப்பில் நிலையான தன்மை அடைவதும் மிக மிக அவசியமாகும்.

இந்தக் குறிக்கோளை எய்தும் வகையில், தமிழகத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்துவதற்கான பல்நோக்குத் திட்டங்களை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகின்றது.

தமிழகத்தின் தொழில் வளர்ச்சி பெரிய நகரங்கள் மட்டுமின்றி சிறிய நகரங்களிலும் வளர்ந்து வருவதால், பெரும்பாலான விவசாயத் தொழிலாளர்கள் வேறு வேலை தேடி நகரங்களுக்குக் குடிபெயர்ந்து செல்கின்றனர். இதன் விளைவாக ஏற்படும் தொழிலாளர்கள் தட்டுப்பாட்டை நீக்கும் வகையில், வேளாண் இயந்திரமயமாக்கலை எனது தலைமையிலான அரசு நிறைவேற்றி வருகிறது. இதன்படி, வேளாண் இயந்திரங்களை கொள்முதல் செய்வதற்காக ஒவ்வொரு தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்திற்கும் மானியமாக 20 இலட்சம் ரூபாய் வீதம் 400 தொடக்கக் கூட்டுறவு சங்கங்களுக்கு 80 கோடி ரூபாய் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் கொள்முதல்

செய்யப்படும் வேளாண் இயந்திரங்கள் குறைந்த வாடகையில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இதன்மூலம், விவசாயிகள், குறைந்த வேலையாட்களைக் கொண்டு, இயந்திரங்கள் மூலம் அதிக சிரமமின்றி விவசாயப் பணிகளை விரைவாக செய்ய இயலும். மேலும் நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவதனால் குறைந்த நிலப்பரப்பில் அதிக அளவு உணவு உற்பத்தி கிடைக்க வழிவகுக்கும்.

தமிழ்நாட்டில் நுண்ணீர் பாசனம் அமைத்துப் பயிரிடும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 விழுக்காடு மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 விழுக்காடு மானியமும் எனது தலைமையிலான அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் உணவு பொருட்களை, விலை வீழ்ச்சியடையும் காலங்களில் சேமித்து வைத்து, நல்ல விலை கிடைக்கும் காலங்களில் விற்பனை செய்ய ஏதுவாக விவசாயக் கிடங்குகள் கட்ட உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் அதிக அளவு உணவு உற்பத்தி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் பொருட்டு, அவர்களுக்கு விருது வழங்குவதற்கும் நான் ஆணையிட்டுள்ளேன்.

இரண்டாம் பசுமை புரட்சிக்கு மேலும் வலு சேர்க்கும் விதமாக, வேளாண் விஞ்ஞானிகள் உருவாக்கும் புதுப்புது ரகங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் விவசாயிகளை சென்று அடைவதில் ஏற்படும் காலதாமதத்தை களையும் வண்ணம், பல்வேறு விவசாய உத்திகளை விவசாயிகளுக்கு வழங்குவதற்காக, தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பண்ணை சார் பயிர் மேலாண்மை மென்பொருளை வேளாண்மைத் துறை வடிவமைத்துள்ளது.

விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில் நுட்பங்களை விவசாய பெருமக்களிடம் எடுத்துச் செல்லும் வகையில், உழவர் பெருவிழா எனும் விழிப்புணர்வு முகாம்களை கிராம அளவில் நடத்த எனது அரசு முடிவு செய்துள்ளது. இந்த விழிப்புணர்வு முகாம்கள், வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் விற்பனை, வேளாண் பொறியியல், விதைச்சான்று, கால்நடைப் பராமரிப்புத் துறை, மீன்வளம் மற்றும் பால்வளம் போன்ற துறை அலுவலர்கள்; தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் வேளாண் அறிவியல் நிலையங்களைச் சார்ந்த விஞ்ஞானிகள்; தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் அந்தந்தப் பகுதிகளைச் சார்ந்த சேவை வங்கியின் பிரதிநிதிகள் மூலம் ''நடமாடும் விரிவாக்க மையம்'' என்ற அணுகுமுறை மூலம் நடத்தப்படும்.

குறிப்பிட்ட கிராமச் சூழ்நிலைக்கு மிகவும் பொருந்தும் வகையில் தெரிவு செய்யப்பட்ட இலாபகரமான பயிர் ரகம், தொழில்நுட்பங்கள், கால்நடை வளர்ப்பு, பட்டுப்புழு வளர்ப்பு, வேளாண் காடுகள் வளர்ப்பு, மீன்வளம் முதலான இனங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த பண்ணை முறையினைப் பின்பற்றி, பண்ணை உற்பத்தித் திறனை உயர்த்தும் வகையில் தகவல்கள் மற்றும் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடம் எடுத்துரைப்பதற்காக இவ்வலுவலர்கள் இதர இடுபொருட்கள் விநியோகிப்பாளர்களுடன் இணைந்து ஒவ்வொரு வருவாய் கிராமத்திற்கும் சென்று, ஒரு நாள் முழுவதும் விவசாயிகளுடன் கலந்துரையாடுவார்கள். அந்தந்தக் கிராமங்களில் ஏற்படும் பண்ணை அளவிலான களப் பிரச்சனைகளுக்கு இந்த முகாம்களில் தீர்வு காணப்படும்.

தெருக்கூத்துகள், நாடகங்கள், கிராமிய பாடல்கள் மற்றும் நடனம் மூலமாக விவசாயிகள் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில், தகவல்கள் இந்த முகாம்களில் அளிக்கப்படும். மேலும், பல்வேறு செயல் விளக்கங்கள், சிறு கண்காட்சிகள், வல்லுநர்கள் மற்றும் இடுபொருட்கள் விநியோகிப்பாளர்களுடனான கலந்துரையாடல்கள் ஆகியவையும் இந்த முகாம்களில் இடம் பெறும். இம்முகாம்களில், விவசாயிகள் ஒருங்கிணைந்த கையேடு, விவசாயிகள் தொழில்நுட்ப வழிகாட்டி, வேளாண் இடுபொருட்கள் ஆகியவை விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும்.

அனைத்துத் துறைகளின் பணிகள், திட்டப் பலன்கள் மற்றும் அலுவலர்களின் முயற்சிகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, விவசாயிகளுக்குத் தேவையான தொழில் நுட்பச் செய்திகள் மற்றும் திட்டப் பலன்கள் விவசாயிகளின் சொந்த கிராமத்திலேயே கிடைக்கச் செய்யும் வகையில் நடத்தப்படும் இந்த உழவர் பெருவிழா, எதிர் வரும் தமிழ்ப் புத்தாண்டு தினமான ஏப்ரல் 13, 2012 அன்று தொடங்கி, தமிழகத்தில் உள்ள 16,564 வருவாய் கிராமங்களிலும் நடத்தப்படும். இந்த முகாம்களில் கலந்து கொள்ளும் விவசாய பெருங்குடி மக்கள் அனைவருக்கும் அறுசுவை விருந்து அளிக்கப்படும். நவீன வேளாண்மையில் உள்ள சவால்களை விவசாயிகள் எதிர்கொண்டு, அவர்களை வேளாண் வல்லுநர்களாக்கி, தமிழகத்தில் இரண்டாம் பசுமைப் புரட்சியை விரைவில் ஏற்படுத்த இந்த உழவர் பெருவிழா வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# புதுக்கோட்டை நகராட்சி அடிப்படை வசதிகளுக்கு ரூ.50 கோடி - 12.4.2012

இந்தியாவிலேயே விரைந்து நகர்மயம் ஆகி வளர்ந்து வரும் மாநிலங்களில் ஒன்றாகத் தமிழகம் திகழ்ந்து வருகிறது. நகரங்கள் நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் வலு சேர்க்கும் இயந்திரங்கள் ஆகும். அதே நேரத்தில், நகர்ப்புரங்களில் மக்கள் தொகை பெருகிவருவதன் காரணமாக, அடிப்படை வசதிகளின் தேவைகள் அதிகரித்து வருகின்றன. இதனை நிறைவு செய்யும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

இந்த அடிப்படையில், சென்னை மற்றும் அதனைச் சார்ந்த புறநகர்ப் பகுதிகளுக்காகச் “சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டம்” மற்றும் இதர மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளுக்குக் கூடுதல் நிதி வழங்கும் “ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்” என்ற இரண்டு மாபெரும் புதிய திட்டங்களை எனது அரசு செயல்படுத்தி வருகின்றது.

இதன்படி **2011–2012**ஆம் ஆண்டில் சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்திற்கு **500** கோடி ரூபாயும், ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்திற்கு **750** கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவ்விரு திட்டங்களின் கீழ் சாலைகள், தெரு விளக்குகள், குடிநீர் வழங்கல், பாதாள சாக்கடை, மழைநீர் வடிகால், மற்றும் சுகாதாரப் பணிகள், திடக்கழிவு மேலாண்மை, பேருந்து நிலையங்களின் மேம்பாடு, வாகனங்கள் நிறுத்துமிடம் ஆகிய அடிப்படை கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட பணிகள்

நடைமுறையில் உள்ள திட்டங்களுடன் ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படுகின்றன. இதேபோல, 2012–2013ஆம் ஆண்டிற்கும், சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்திற்கு 500 கோடி ரூபாயும், ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டத்திற்கு 750 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை நகரம் தமிழ்நாட்டின் பழம்பெரும் நகரங்களில் ஒன்றாகும். இது வரலாற்று பராம்பரியமும், சிறப்பும் கொண்ட ஒரு நகரம் ஆகும். புதுக்கோட்டை மாவட்டம் 1974ஆம் ஆண்டு புதிய மாவட்டமாக மலர்ந்தது. ஆனால், அதற்கு 62 ஆண்டுகளுக்கு முன்னரே புதுக்கோட்டை நகராட்சி உருவாக்கப்பட்டது. 1912ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட புதுக்கோட்டை நகராட்சி 100 ஆண்டுகளை இந்த ஆண்டு நிறைவு செய்திருக்கிறது.

10.82 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் தோற்றுவிக்கப் பட்ட இந்நகராட்சி தற்போது புதுக்கோட்டை ஊராட்சிப் பகுதி முழுவதுமாக இணைத்து எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டு 21.95 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாக உயர்ந்துள்ளது. எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதன் காரணமாக, 42 வார்டுகளாக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள புதுக்கோட்டை நகராட்சியில் தற்போது 180 கி.மீ. நீளமுள்ள சாலைகள், 6,355 தெரு விளக்குகள், 2 பூங்காக்கள், ஒரு பேருந்து நிலையம், 43 பள்ளிக் கட்டடங்கள் மற்றும் பிற அலுவலகக் கட்டடங்கள், 10 நீர்த் தேக்கத் தொட்டிகள் ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளன.

இந்நகரத்திற்கான பாதாள சாக்கடைத் திட்டம் அமைத்திட எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் அதாவது 7.2.2006இல் ஆணையிடப்பட்டது. தமிழ்நாடு நகர்ப்புர வளர்ச்சித் திட்டம்–3இன்கீழ் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பணிகள் அனைத்தும் 30.6.2012இல் நிறைவு பெற்று பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

புதுக்கோட்டை நகராட்சிப் பகுதிகளில் சாலை அமைத்தல், மழைநீர் வடிகால்கள் அமைத்தல், திடக்கழிவு மேலாண்மை மற்றும் குடிநீர்ப் பணிகள் முதலான பல்வேறு பணிகளை மேற்கொள்ள 2011–2012ஆம் ஆண்டில், ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்டம் மற்றும் இதர திட்டங்களின் கீழ் கட்டமைப்பு வசதிகளுக்காக 16 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை நகராட்சி 100 ஆண்டுகள் நிறைவு செய்யும் இந்த ஆண்டில், நூற்றாண்டு விழா சிறப்பாக கொண்டாடப்பட வேண்டும் என புதுக்கோட்டை நகர்மன்றம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. மேலும், நூற்றாண்டு விழா காணும் இத்தருணத்தில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்பாடு செய்திட அரசிடம் நிதி உதவி கோரி, புதுக்கோட்டை நகர்மன்றத் தலைவர் கடிதம் அனுப்பியுள்ளார்.

புதுக்கோட்டை நகராட்சி நூறாண்டுகள் நிறைவு செய்துள்ளது என்பது பெருமைக்குரிய வரலாற்று சிறப்புமிக்க நிகழ்ச்சியாகும். இதனை நினைவுகூரும் வகையில், புதுக்கோட்டை நகராட்சியின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக சிறப்பு உதவித்தொகையாக 50 கோடி ரூபாய் வழங்க எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்கு மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும், நூறாண்டுகள் நிறைவு செய்துள்ளதையொட்டி, நூற்றாண்டு விழா நினைவுத் தூண் மற்றும் நூற்றாண்டு விழா வளைவுகள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# 11 இடங்களில் புதிதாக இருபாலர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் - 19.4.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகம் வீறு பெற்று, உலக அரங்கில் தனிச் சிறப்புடன் விளங்க வேண்டும் என்றால், உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி வளர்ச்சி பெறுதல் வேண்டும். ஒரு நாடு உயர் நிலையடைய, உயர் கல்வி, தொழிற் கல்வி இரண்டும் இன்றியமையாதவை.

மாநிலத்தில் உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி வளர்ச்சி அடைந்தால் மட்டுமே, புதிய புதிய கண்டுபிடிப்புகள், ஆராய்ச்சிகள் போன்றவை வளர்ச்சி பெறும். உயர்நிலைக் கல்வியால்தான் நாட்டின் வளர்ச்சியை உருவாக்க முடியும். அனைத்துத் துறைகளின் வளர்ச்சிக்கு ஆதாரமாக அமைவது உயர்கல்வியே. இத்தகைய உயர்கல்வியின் வளர்ச்சிக்கும், தொழிற்கல்வியின் வளர்ச்சிக்கும் எனது அரசு பல முன்னோடியான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

பள்ளி படிப்பிற்குப் பிறகு, குறிப்பாக, கிராமப்புற மாணவ, மாணவியர்கள், தங்கள் கல்வியினை நிறுத்திவிடாமல் தொடர்ந்து உயர்கல்வி கற்பதை ஊக்குவிக்கும் வகையில், எனது அரசு பொறியியல், மருத்துவம், கலை மற்றும் அறிவியல் கல்விகளுக்கான

கல்லூரிகளைத் தமிழகத்தின் பல மாவட்டங்களில் துவக்கி வருகிறது. அந்த வகையில், 2011–2012 ஆம் ஆண்டில், 11 பல்கலைக்கழக உறுப்பு, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவக்கப்பட்டுள்ளன. இதுவன்றி, தேனி மாவட்டம், போடிநாயக்கனூரில் ஒரு அரசு பொறியியல் கல்லூரி துவங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, இந்த ஆண்டிலும் தமிழகத்தில் புதிதாக அரசு பொறியியல் கல்லூரிகள், அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக உறுப்பு, கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் ஆகியவற்றைத் துவக்க எனது அரசு முடிவெடுத்துள்ளது.

இதன்படி, இந்த ஆண்டு, தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், செங்கிப்பட்டியில் ஒரு அரசு பொறியியல் கல்லூரி; மற்றும் தர்மபுரி மாவட்டம், தர்மபுரி வட்டம், செட்டிக்கரை ஊராட்சியில் ஒரு அரசு பொறியியல் கல்லூரி என இரண்டு அரசு பொறியியல் கல்லூரிகள் துவக்கப்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஸ்ரீரங்கம்; புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வக்கோட்டை; விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம்; ஈரோடு மாவட்டம் பெருந்துறை; அரியலூர் மாவட்டம் அரியலூர்; கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை மற்றும் வேலூர் மாவட்டம் ஜோலார்பேட்டை ஆகிய 7 இடங்களில் புதிய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், அதாவது Polytechnic Colleges துவக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமல்லாமல், சேலம் மாவட்டம் எடப்பாடி; கன்னியாகுமரி மாவட்டம் கன்னியாகுமரி; திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர்; ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி; மதுரை மாவட்டம் திருமங்கலம்; திருவள்ளூர் மாவட்டம் திருவொற்றியூர்; ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி; திருநெல்வேலி மாவட்டம் கடையநல்லூர்; விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை; நாகப்பட்டினம் மாவட்டம் நாகப்பட்டினம் மற்றும் வேலூர் மாவட்டம் அரக்கோணம் ஆகிய 11 இடங்களில் புதிதாகப் பல்கலைக்கழக உறுப்பு, இருபாலர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் இந்த ஆண்டு துவக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறிய நகரங்களில், அரசு கல்லூரிகள் துவக்கப்படுவதால் மாவட்டங்கள் மற்றும் கிராமப் பகுதிகளில் உள்ள மாணவ மாணவியரின் உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி கனவுகள் நிச்சயமாக நிறைவு பெறுவதோடு மட்டுமல்லாமல், இதன் மூலம் கிடைக்கும் உயர் வேலை வாய்ப்புகளினால் அவர்களது வாழ்க்கைத் தரமும், பொருளாதார நிலையும் உயரும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# சித்திரை முதல் நாளையே தமிழ்ப் புத்தாண்டாக மக்கள் கொண்டாடி வருகின்றனர் - 19.4.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**13.4.2012** அன்று நடைபெற்ற சித்திரை தமிழ்ப் புத்தாண்டு விழாவில் கலந்து கொண்டு, சித்திரை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டு என்பதற்கான காரணங்கள் எவை என நான் எடுத்துக் கூறியது மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளதைக் கண்டு, பொறுத்துக் கொள்ள முடியாத திரு. கருணாநிதி, வீண் விதண்டா வாதங்களை தனது கட்டுரையில் எடுத்து வைத்துள்ளார்.

சித்திரை முதல் நாளே தமிழ்ப் புத்தாண்டுக்கு உரிய பொருத்தமான நாள் ஆகும் என மதுரை ஆதீனம் அவர்கள் குறிப்பிட்டுள்ளதை நான் சுட்டிக் காட்டியதற்கு, “இது என்ன ஆதாரமா ?” என்று வினவியிருக்கிறார் திரு. கருணாநிதி. நான் மதுரை ஆதினம் என்பவரின் பெயரைக் குறிப்பிட்டுச் சொன்னது ஆதாரம் இல்லையென்றால், பெயர் குறிப்பிடப்படாமல், “ஒட்டுமொத்தமாக எல்லாத் தமிழ் அறிஞர்களும், ஒப்புக்கொண்டுள்ள உண்மை” என்று கூறி, ஒரு சட்டத்தை திரு. கருணாநிதி இயற்றியது ஆதாரத்தின் அடிப்படையிலா ?

தி.மு.க. ஆட்சியில் சென்னையிலும், கோவையிலும் நடந்த உலகத் தமிழ் மாநாடு, தமிழ் மொழியை உலகம் முழுவதும் பரப்புவதற்காக அல்லவா ? என்று கேள்வி எழுப்பியிருக்கிறார் திரு. கருணாநிதி. 1968 ஆம் ஆண்டு, பேரறிஞர் அண்ணா அவர்கள்

முதலமைச்சராக இருந்தபோது, உலகத்தமிழ் மாநாடு சென்னையில் நடைபெற்றது. இது தமிழ்மொழியைப் பரப்புவதற்கு என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், 2010 ஆம் ஆண்டு, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற மாநாடு உலகத் தமிழ் மாநாடுகளின் வரிசையில் இடம்பெறாத, கருணாநிதியின் சுய விளம்பரத்திற்காக நடத்தப்பட்ட, தன்னல, தம்பட்ட மாநாடு. திரு. கருணாநிதி குடும்பத்தினர் மற்றும் தி.மு.க.வைச் சேர்ந்த "தலைசிறந்த" தமிழ் அறிஞர்கள் முன்வரிசையில் அமர்ந்து அனைவரது கவனத்தையும் ஈர்த்தனர். உண்மையான தமிழ் அறிஞர்கள் பின் வரிசைக்குத் தள்ளப்பட்டனர்.

திரு. கருணாநிதி தன்னுடைய கட்டுரையிலே, சித்திரையில் தொடங்கி, பங்குனி வரையிலான தமிழ் மாதத்தில், அம்மாதத்தின் பௌர்ணமியன்று வரும், நட்சத்திரத்தின் பெயரே அம்மாதத்தின் பெயராகும் என்று நான் கூறியதைச் சுட்டிக்காட்டி, சித்திரை, கார்த்திகை தவிர மற்ற பெயர்களில் மாதப் பெயர்கள் இல்லையே என்று கேட்டிருக்கிறார்.

சித்திரை மாதம் பௌர்ணமியன்று சித்திரை நட்சத்திரம் வருகிறது என்றும்; கார்த்திகை மாதம் பௌர்ணமியன்று கார்த்திகை நட்சத்திரம் வருகிறது என்பதை திரு. கருணாநிதியே ஒப்புக் கொண்டுவிட்டதால், பிற மாதங்களை இங்கே விளக்கிக் கூற விரும்புகிறேன். வைகாசி மாதம் பௌர்ணமியன்று விசாகம் நட்சத்திரம் வருகிறது. அதாவது, வைசாகம் நட்சத்திரம் திரிந்து, விசாகம் என்று அழைக்கப்படுகிறது. ஆனி மாதம் பௌர்ணமியன்று, அனுஷம் நட்சத்திரம் வருகிறது. அதாவது, அனுஷம் நட்சத்திரம் மருவி, ஆனி என்றழைக்கப்படுகிறது. ஆடி மாதம் பௌர்ணமியன்று பூராடம் நட்சத்திரம் வருகிறது. பூராடம் – பூராடி என திரிந்து, ஆடி

மாதம் என்றழைக்கப்படுகிறது. ஆவணி மாதம் பௌர்ணமியன்று திருவோணம் நட்சத்திரம் வருகிறது. அதாவது திருவோணம் அல்லது சிரவணம் நட்சத்திரம், சிராவணியாக திரிந்து, ஆவணி மாதம் என அழைக்கப்படுகிறது. புரட்டாசி மாதம் பௌர்ணமி தினத்தன்று பூரட்டாதி நட்சத்திரம் வருகிறது. பூரட்டாதி நட்சத்திரம் திரிந்து, புரட்டாசி என்றழைக்கப்படுகிறது. ஐப்பசி மாதம், அஸ்வினி நட்சத்திரம் வருகிறது. அஸ்வினி நட்சத்திரம், ஆஸ்விஜம் என்றழைக்கப்படுகிறது. அது திரிந்து ஐப்பசி என்றழைக்கப்படுகிறது. மார்கழி மாதத்தில், மிருகசீர்ஷம் நட்சத்திரம் வருகிறது. மிருகசீர்ஷம் நட்சத்திரம், மார்கசீர்ஷம் என்றும் அழைக்கப்படுகிறது. இது திரிந்து மார்கழி என்றழைக்கப்படுகிறது. தை மாதம் பௌர்ணமி அன்று, பூசம் நட்சத்திரம் வருகிறது. இதற்கு தைஷ்யம் என்று மற்றொரு பெயரும் உண்டு. இதுவே தை ஆனது. மாசி மாதம் பௌர்ணமியன்று மகம் நட்சத்திரம் வருகிறது. மகம் நட்சத்திரத்தை மாக, அதாவது மாசி, என்றும் அழைப்பார்கள். இதுவே மாசி என்றழைக்கப்படுகிறது. பங்குனி மாதம் பௌர்ணமியன்று உத்திரம் நட்சத்திரம் வருகிறது. இதை உத்திரப் பல்குனி என்றும் அழைப்பார்கள். இதுவே பங்குனி மாதம் என்று அழைக்கப்படுகிறது. எப்படி சென்னப்பட்டினம் என்பது காலப்போக்கில் சென்னை என்று மருவியதோ, சைலம் என்பது சேலம் என்று எவ்வாறு மருவியதோ; அதுபோல்தான் இவையும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

தை முதல்நாளைத் தமிழ்ப் புத்தாண்டாக அறிவிக்க வேண்டும் என்று மறைமலை அடிகள் கூறவில்லை என்பதை எடுத்துக்காட்ட திரு. கருணாநிதியின் கருத்தை ஒட்டிய, சிறுவை நச்சினார்க்கினியன் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டினையொட்டி வெளியிடப்பட்ட மலரில், ‘‘திருவள்ளுவனார் காலம் இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதென்பது எளிதிற் பெறப்படும். கிறித்துப்

பிறப்பதற்கு **30** ஆண்டுகட்கு முன் திருவள்ளுவர் பிறந்தார் என்பது நான் ஆராய்ந்து கண்ட முடிவாகும்'' என்று **1935** ஆம் ஆண்டு, சென்னை பச்சையப்பன் மண்டபத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் தினத்தில் மறைமலையடிகளார் பேசியதாகக் கூறியிருப்பதை மேற்கோள் காட்டினேனே தவிர, அந்தப் பக்கத்திற்கு முன் பக்கத்தில் சிறுவை நச்சினார்க்கினியன் தெரிவித்துள்ள கருத்தைப் பற்றி நான் எதுவும் சொல்லவில்லை. தை முதல்நாள்தான் தமிழ்ப் புத்தாண்டு என்று மறைமலை அடிகளார் சொல்லவில்லை என்பதற்காகத்தான் மேற்படி கட்டுரையை நான் மேற்கோள் காட்டினேன்.

''வாழ்வியற் களஞ்சியம்'', என்ற நூலைக் குறிப்பிட்டு, ஆகம விதியின்படி தை முதல்நாள்தான் புத்தாண்டு என்று கூறியிருக்கிறார் திரு. கருணாநிதி. ''தை பிறந்தால் வழி பிறக்கும்'', என்று தான் குறிப்பிடப்பட்டு இருக்கிறதே தவிர, ''தை பிறந்தால் புத்தாண்டு பிறக்கும்'' என்று குறிப்பிடப்படவில்லை.

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலி என்ற நூலினை மேற்கோள் காட்டி, அந்த நூலில் தமிழாண்டின் தொடக்க மாதம் தை என்று குறிப்பிட்டிருப்பதாக கூறியிருக்கிறார் திரு. கருணாநிதி. அந்த நூலில் **113**ஆவது பக்கத்தில் ''இச்செய்தி, தமிழ் ஆண்டு எனும் நூலிலிருந்து தொகுக்கப்பட்டது'' என்று இருப்பதை தனக்கு வசதியாகத் திரு.கருணாநிதி மறைத்துவிட்டார். அந்தச் செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலியில் தைமாதம்தான் தமிழ் ஆண்டின் தொடக்க மாதம் என்று ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தால் இதனை அடுத்து, தை – ஒரு திங்கள்; The tamil month, January – February என்று ஏன் குறிப்பிடப்பட்டுள்ளது ?

தமிழ்ப் புத்தாண்டு தொடக்கம் என்று அறிவித்து, நடைமுறைப்படுத்திடக் கழக அரசு முடிவு செய்துள்ளது என்று **23.1.2008** அன்று ஆளுநர் உரையில் அறிவிக்கப்பட்டதாகத்

திரு. கருணாநிதி கூறியிருக்கிறார். ஆளுநர் உரையில் அறிவிக்கப்படுவதற்கு முன்பாகவே, திரு. கருணாநிதியின் மகள் கனிமொழியால் நடத்தப்பட்ட சென்னை சங்கமம் விழாவில் திரு. கருணாநிதி, ‘‘சங்கமம் போற்றுதும் என்று போற்றிப் பாடி, இது ஆண்டுதோறும் நடக்க வேண்டும்; பொங்கல் திருநாளை நினைவூட்டும் வகையில் தொடர்ந்து நடக்க வேண்டும். தமிழரின் புத்தாண்டு தை முதல்நாள் என்று 500 புலவர்கள் கூடிக் கண்டுபிடித்து அறிவித்து இருக்கிறார்கள். அதை அதிகாரப் பூர்வமாக அறிவிக்கும் நாள் விரைவில் வரும்’’ என்று கூறியுள்ளார். எனவே, சென்னை சங்கமம் விழாவில் தான், இது முதன் முதலாக அறிவிக்கப்பட்டது. ஒரு வேளை, தை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டால் தான் ஆண்டுதோறும் சென்னை சங்கமம் விழா நடத்தப்பட்டு, அதற்கு ஓர் அங்கீகாரம் கிடைக்கும் என்று திரு. கருணாநிதி எண்ணினார் போலும்!

‘‘தமிழர் திருநாள்’’ என்னும் தலைப்பில் திரு. மு.வ. அவர்களால் 1960 ஆம் ஆண்டு கலைமகள் பொங்கல் மலரில் எழுதப்பட்ட கட்டுரையில், தைத் திருநாளை இயற்கைக்கு நன்றி செலுத்தும் திருவிழா என்றுதான் குறிப்பிட்டு இருக்கிறாரே தவிர, அதைத் தமிழ்ப் புத்தாண்டு என்று குறிப்பிடவில்லை என்பதை இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

2008 ஆம் ஆண்டு, ஆளுநர் உரையில், ‘‘திருவள்ளுவர் ஆண்டு பிறக்கும் தைத் திங்கள் முதல் நாள் தான் தமிழ்ப் புத்தாண்டுத் தொடக்கம் என்பது ஒட்டுமொத்தமாக எல்லாத் தமிழ் அறிஞர்களும் ஒப்புக் கொண்டுள்ள உண்மை என்பதால் தைத் திங்கள் முதல் நாளையே, தமிழ்ப் புத்தாண்டு தொடக்கம் என அறிவித்து, நடைமுறைப்படுத்திட இந்த அரசு முடிவு செய்துள்ளது’’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதே திரு. கருணாநிதி, திருவள்ளுவர் நாளை பொது விடுமுறை நாளாக அறிவிக்க வேண்டும் என்று 1963ஆம் ஆண்டு தி.மு.க. சார்பில் கொண்டு வரப்பட்ட தனி நபர் தீர்மானத்தின் மீது இந்தச் சட்டப் பேரவையில் உரையாற்றிய போது, "... மாதந்தோறும் இரண்டாவது சனிக்கிழமை விடுமுறை தினமாக விட்டு வருகிறோம். ஒரு திங்களில் ஒரு இரண்டாம் சனிக்கிழமையைக் கூட, திருவள்ளுவருடைய நினைவு நாளாகக் கொண்டாட, விடுமுறை தினம் என்று அறிவிக்கலாம். இரண்டாம் சனிக்கிழமையன்று என அமையாது திங்கள் கிழமை அல்லது செவ்வாய்கிழமை என்று வருமானால், அந்தத் திங்களில் இரண்டாம் சனிக்கிழமையை வேலை நாளாகக் கொண்டுவிட்டு, திருவள்ளுவருடைய நினைவு நாள் என்று குறிக்கப்பட்ட தினம் என்று வருகிறதோ அன்றைக்கு விடுமுறை அளிக்க அரசாங்கம் முன் வரலாம். திருவள்ளுவருடைய தினத்தை நவம்பர் மாதம் கொண்டாடுவது என்றால் நவம்பர் மாதத்தில் இரண்டாவது சனிக்கிழமை விடுமுறை விடுவதற்குப் பதிலாக, அந்தத் திங்களில் திருவள்ளுவருடைய நினைவு நாளாகக் குறித்த தினத்திற்கு விடுமுறை அளிக்கும்படியாக இந்தத் தீர்மானத்தின் மூலம் அமைத்துக் கொள்ளலாம்" என்று பேசியிருக்கிறார். ஏன் அப்போது இப்படிப் பேசினார் திரு. கருணாநிதி ? அப்பொழுதே திருவள்ளுவர் தை மாதத்தில் தான் பிறந்தார் என்று கூறி, அந்த நாளை விடுமுறை நாளாக அறிவிக்குமாறு கேட்டுக் கொண்டிருக்கலாமே!

2008 ஆம் ஆண்டு, சென்னை சங்கமம் விழாவில் உரையாற்றும் போது, தைத்திங்கள் முதல்நாள் தமிழ்ப் புத்தாண்டு என விரைவில் அறிவிக்கப்படும் என திரு. கருணாநிதி அறிவித்ததைத் தொடர்ந்து, 17.1.2008 அன்று, அன்றைய தமிழ் வளர்ச்சி இயக்குநர், தமிழக அரசுக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவ்வாறு அறிவிக்கப்பட வேண்டும்

என்று தெரிவித்துள்ள கருத்துருவில், 2004 ஆம் ஆண்டு அரசுக்கு எழுதப்பட்ட கடிதத்தில், சித்திரை முதல் நாளுக்குப் பதிலாக, தைத் திங்கள் முதல் நாளைத் தமிழ்ப் புத்தாண்டு என்று அறிவிக்கக் கருதினால், இப்பொருண்மையைத் தமிழ் வளர்ச்சி மன்றத்தில் வைத்து, ஆய்வு செய்து முடிவு செய்வது ஏற்புடையதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருந்ததையும் சுட்டிக் காட்டியிருந்தார். இவ்வாறான கடிதம், இது ஆய்வு செய்து முடிவு செய்யப்பட வேண்டிய பொருள் என்று அமைந்துவிடும் என்பதால், அரசின் அறிவுரை காரணமாகவோ என்னவோ இந்த வாசகங்கள் அடிக்கப்பட்டு, திருத்திய கடிதம்தான் அரசுக்கு அனுப்பப்பட்டது. முறையாக ஆய்வு எதையும் செய்யாமல் தன்னிச்சையாக, தான்தோன்றித்தனமாக, அந்தச் சட்டத்தை இயற்றினார் திரு. கருணாநிதி. ஆனால், அந்தச் சட்டத்தினை மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. மக்கள் தொடர்ந்து சித்திரை முதல் நாளையே தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடி வருகின்றனர் என்பது தான் உண்மை.

தை முதல்நாளை, தமிழ்ப் புத்தாண்டு என திரு. கருணாநிதி அறிவித்து சட்டம் இயற்றியது முறையற்ற, மரபு மீறிய, மக்கள் மனதைப் புண்படுத்துகின்ற செயல் என்பதையும் திரு. கருணாநிதியால் மக்கள் மீது திணிக்கப்பட்ட இந்தச் சட்டத்தை நான் ரத்து செய்தேனே தவிர எதையும் மக்கள் மீது திணிக்கவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# தமிழ்நாடு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடம் - 20.4.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“நோயற்ற வாழ்வாகிய குறைவற்ற செல்வத்தை பெற்றால் தான் எச்செல்வத்தையும் பெற முடியும்” என்பதன் அடிப்படையில், மாநிலத்தின் ஒட்டுமொத்த மக்களின் ஆரோக்கியம் மற்றும் சுகாதார முன்னேற்றத்தை மேம்படுத்துவதில் எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

நகர்புற மக்களுக்கு இணையாக கிராமப்புற மக்களுக்கும் மருத்துவ வசதி கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன், கிராமப்புறங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு, அவசர மகப்பேறு, அறுவை சிகிச்சை போன்றவற்றிற்குத் தேவையான அனைத்து உபகரணங்களும் அளிக்கப்பட்டுள்ளன. இது மட்டுமல்லாமல், தமிழகத்தில் உள்ள பல்வேறு மருத்துவ நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்டுதல், பழுது பார்த்தல், புதிய மருத்துவ நிலையங்களை ஆரம்பித்தல் போன்ற நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

இது தவிர, அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட மருத்துவமனைகள், 150 வட்ட மருத்துவமனைகள் மற்றும் 15 வட்டம் சாரா மருத்துவமனைகளில் பல் மருத்துவப் பிரிவு நிறுவப்பட்டு பல் மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், பல் பராமரிப்பின் அவசியத்தை கிராம மக்களுக்கு உணர்த்தும் வகையில், 22 வட்டம் சாரா மருத்துவமனைகள் மற்றும் 208 ஆரம்ப சுகாதார நிலையங்களில் வாரத்திற்கு மூன்று நாட்கள் பல் மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இது மட்டுமல்லாமல், 2,000க்கும் மேற்பட்ட புறநோயாளிகள் சிகிச்சை பெறும் மருத்துவமனையான சென்னையில் உள்ள அரசு பல் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையை விரிவாக்கம் செய்யும் பொருட்டு, எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, சுமார் 14 கோடி ரூபாய் மதிப்பில் பல் மருத்துவக் கல்லூரிக்கான ஒரு புதிய அடுக்குமாடி கட்டடம் என்னால் கடந்த மாதம் 3ஆம் தேதி திறந்து வைக்கப்பட்டது.

இந்த பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு தமிழ்நாடு மட்டுமல்லாமல் அண்டை மாநில மக்களும் சிகிச்சை பெற வருகின்றனர்.

இந்த மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளின் நலனை கருத்தில் கொண்டும், பல் மருத்துவக் கல்லூரியின் தரத்தை மேம்படுத்தும் நோக்கத்திலும், தமிழ்நாடு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கூடுதல் கட்டடம் கட்டுவதற்கும், புதிய பணியிடங்களை தோற்றுவிப்பதற்கும், இதனை ஒப்புயர்வு மையமாக, அதாவது Centre of Excellence in Dentistry ஆக தரம் உயர்த்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், அதற்காக 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# கிராமங்களை சுகாதார மயமாக்க அரசின் நிதியுதவி - 26.4.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

தூய்மை என்பது உண்ணும் உணவு, உடுக்கும் உடை, இருக்கும் இடம் ஆகியவற்றில் மட்டுமல்லாமல் மாசுமறுவற்ற காற்றும், தூய்மையான குடிநீரும் கிடைக்கும் வண்ணம் சுற்றுப்புறமும் தூய்மையாக இருத்தல் வேண்டும். இந்த நிலையை அடைவதற்கான அடிப்படை தேவை நாட்டில் நல்ல சுகாதாரமான சூழ்நிலையை உருவாக்குவதே ஆகும்.

இந்த சூழ்நிலையை உருவாக்கும் பொருட்டு, தமிழ்நாட்டில் சுகாதார புரட்சியின் மூலம் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில், சுற்றுச்சூழல் சுகாதார மேம்பாட்டை உள்ளடக்கிய தூய்மையான கிராம இயக்கம் என்ற ஒரு திட்டம் எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், அதாவது 2003ஆம் ஆண்டு துவக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின்படி, திறந்த வெளியில் மலம் கழித்தலை தடுத்தல், மழைநீர் சேகரிப்பு, திடக்கழிவு மேலாண்மை, மனிதக் கழிவுடன் இணைந்த எரிவாயு கலன் அமைத்தல், தனி நபர் இல்லங்கள் மற்றும் பள்ளிகளில் சுகாதார வசதி ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. திறந்த வெளி மலம் கழித்தலை அகற்றுதல், திடக்கழிவு மேலாண்மை ஆகியவற்றின் மூலம் நூறு விழுக்காடு சுகாதாரத்தை எய்துகின்ற ஊராட்சிகளுக்கு அரசின் சார்பில் ரொக்கப் பரிசுகளும் வழங்கப்பட்டு வந்தன. இந்தத்

திட்டத்தின் மூலம் முழுமையான சுகாதார அமைப்புகள் பெற்ற கிராமங்கள் உருவாயின. ஆனால், பின்னர் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் காரணமாக, இந்தத் திட்டம் 2006–2007ஆம் ஆண்டு முதல் தி.மு.க. அரசால் செயல்படுத்தப்படவில்லை.

நான் மீண்டும் தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன், சுகாதார கிராமங்களை உருவாக்குகின்ற திட்டத்தை மீண்டும் செயல்படுத்துமாறு நான் உத்தரவிட்டேன்.

மேலும், எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட மகளிர் பொது சுகாதார வளாகங்கள், 2006ஆம் ஆண்டுக்கு பின்னர் சரிவர பராமரிக்கப்படாததால் அவை பயன்படுத்தப்படாமல் இருந்ததை கருத்தில் கொண்டு, நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, 170 கோடி ரூபாய் செலவில், 12,793 மகளிர் சுகாதார வளாகங்கள் சீரமைக்கப்பட்டன.

தற்போது இந்த மகளிர் வளாகங்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

சுகாதார கிராமங்களை உருவாக்கும் வண்ணம், "முழு சுகாதாரத் திட்டத்தின்" கீழ் தனி நபர் இல்லக் கழிப்பறைகள் கட்டப்படுகின்றன. தற்போது ஒரு இல்லத்திற்கான தனி நபர் கழிவறை கட்டும் பொருட்டு, மத்திய அரசின் சார்பில் 2,200 ரூபாயும், மாநில அரசின் சார்பில் 1,000 ரூபாயும் வழங்கப்படுகிறது. இதில் பயனாளியின் பங்குத் தொகை 300 ரூபாய் ஆகும். ஆக மொத்தம் 3,500 ரூபாய் செலவில் தனி நபர் இல்லக் கழிவறை கட்டப்படுகிறது.

தற்போது, தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்கு வரையறுக்கப்பட்டுள்ள 3,500 ரூபாய் என்பது போதுமானதாக

இல்லையென்றும், இந்தத் தொகையை வைத்து, தனி நபர் இல்லக் கழிப்பறையை முழுமையாக அமைத்திட இயலாது என்றும், இந்தத் தொகையினை உயர்த்தி வழங்க வேண்டும் என்றும் அரசுக்கு கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன.

இந்தக் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையிலும், சுகாதார கிராமங்களை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தினை பூர்த்தி செய்யும் வகையிலும், ஒவ்வொரு தனி நபர் இல்லக் கழிப்பறை அமைப்பதற்காக, மாநில அரசின் சார்பில் வழங்கப்படும் அலகுத் தொகையினை 1,000 ரூபாயிலிருந்து 2,500 ரூபாயாக உயர்த்தி வழங்கிட நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்படி, மாநில அரசின் பங்கு 2,500 ரூபாய் எனவும், மத்திய அரசின் பங்கு 2,200 ரூபாய் எனவும், பயனாளியின் பங்கு 300 ரூபாய் எனவும் இருக்கும். இதன்படி, தனி நபர் இல்லக் கழிப்பறை கட்டுவதற்காக வரையறுக்கப்பட்டுள்ள தொகை 5,000 ரூபாய் என உயர்த்தப்படுகிறது. எனது அரசின் இந்த நடவடிக்கையின் மூலம், தமிழ்நாடு முழுவதும் சுகாதார கிராமங்கள் உருவாகும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# அரசுக் கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.100 கோடி - 2.5.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு கல்வியில் முதன்மை மாநிலமாக விளங்க வேண்டும் என்ற நோக்கத்தில் கல்வித் துறையில் பல்வேறு முன்னோடி நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

அனைத்து மாணவ, மாணவியரும் இடை நிற்றல் இன்றி உயர் கல்வி கற்று, அதன் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்ற குறிக்கோளின் அடிப்படையில், இந்த ஆண்டு, தமிழ்நாட்டில் இரண்டு புதிய அரசுப் பொறியியல் கல்லூரிகள்; ஏழு புதிய அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள், Polytechnics; மற்றும் பதினொன்று புதிய பல்கலைக்கழக உறுப்பு இரு பாலர் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும் என்று 19.4.2012 அன்று இந்த சட்டமன்றப் பேரவையில் நான் அறிவித்தேன்.

புதிய கல்லூரிகள் ஏற்படுத்துவதுடன், தற்போதுள்ள கல்லூரிகளில் மாணவ – மாணவியர் உற்சாகத்துடன் கல்வி பயிலும் வகையில் நல்லதொரு சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதே எனது விருப்பம் ஆகும்.

இதன் அடிப்படையில், தற்போது தமிழகத்தில் செயல்பட்டு வரும் 62 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், 7 அரசு

கல்வியியல் கல்லூரிகள் மற்றும் 24 பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் என 93 அரசு மற்றும் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில், இக் கல்லூரிகளுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் உடனடியாகச் செய்து தர எனது தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது. இதன்படி, ஏற்கெனவே குறிப்பிட்ட அரசுக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிகள் 100 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டிலிருந்து, மாணவ – மாணவியர் மற்றும் ஆசிரியர்களுக்குத் தேவைப்படும் புதிய மேசைகள் மற்றும் நாற்காலிகள் வழங்குதல்; வகுப்பறைகளில் நவீன கரும்பலகைகள் மற்றும் அறிவிப்புப் பலகைகள் அமைத்தல்; மொழி ஆய்வகங்களுக்கு கணினி மேசைகள் மற்றும் கணினி நாற்காலிகள் வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

மேலும், கல்லூரிகளில் உள்ள துறை சம்பந்தப்பட்ட நூலகங்களுக்குத் தேவையான மேசைகள் மற்றும் நாற்காலிகள் வழங்குதல்; புத்தகங்கள் வைப்பதற்கான அலமாரிகள் அமைத்துத் தருதல்; நூலகங்களுக்குத் தேவையான புத்தகங்கள் வழங்குதல்; மற்றும் நூலகங்கள் கணினிமயம் ஆக்கப்படுதல் போன்ற பணிகளும் இந்த நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

மேலும், கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர்கள், தங்கள் பாடங்கள் சம்பந்தமாக மேற்கொள்ளவிருக்கும் பரிசோதனைகளுக்காகக் கல்லூரிகளில் தரம் வாய்ந்த ஆய்வுக் கூடங்கள் ஏற்படுத்துதல்; அதற்குத் தேவையான உபகரணங்களை

வழங்குதல்; மேசைகள், பணி மேசைகள் வழங்குதல், தண்ணீர்க் குழாய்கள் மற்றும் வாயுக் குழாய்கள் அமைத்துத் தருதல், அறிவியல் சம்பந்தப்பட்ட துறைகளுக்கு PROJECTOR வழங்குதல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்படும்.

இவையன்றி, கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு சுகாதாரமான குடிநீர் வழங்க வசதிகள் ஏற்படுத்தித் தருதல்; மாணவ, மாணவியர் விடுதிகளில் சமையலறை மற்றும் உணவறைக் கூடங்களை மேம்படுத்துதல்; கழிப்பறை வசதிகள் செய்து கொடுத்தல்; குப்பை அகற்றும் கூடைகள் வைத்தல்; மற்றும் வகுப்பறைகள், நூலகம், ஆசிரியர்களின் ஓய்வறைகள், உணவறைக் கூடங்கள் ஆகியவற்றில் மின் விளக்கு மற்றும் மின் விசிறி ஏற்படுத்தித் தருதல் மற்றும் மின் உபகரணங்களை வழங்குதல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்படும்.

அரசுக் கல்லூரிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த இதுவரை இல்லாத அளவு உயர் ஒதுக்கீடாக 100 கோடி ரூபாய் வழங்கப்படுகிறது. இதன் மூலம், அரசுக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகள் அனைத்து வசதிகளையும் பெற வழிவகை ஏற்படுவதோடு மட்டுமல்லாமல், இந்தக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் அறிவுத் திறன் மேம்பட்டு, அவர்கள் அகில இந்திய அளவில் முன்னிலை இடத்தைப் பெறும் வாய்ப்புகள் ஏற்படும் என்பதைப் பெருமிதத்துடன் கூறி அமைகிறேன்.

✵ ✵ ✵

# காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினருக்கு 36 ஆயிரம் குடியிருப்புகள் - 3.5.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“மெய் வருத்தம் பாராது, பசி நோக்காது, கண் துஞ்சாது”, அல்லும் பகலும் அயராது மக்களின் உயிரையும், உடைமையையும் பாதுகாக்கும் உன்னதப் பணியை மேற்கொள்ளும் காவல் துறையினருக்கு தங்கள் சொந்த நலன்களைப் பற்றி சிந்திக்க நேரம் இருப்பதில்லை.

மக்கள் நலன் காக்கும் மகத்தான பணியில் ஈடுபட்டிருக்கும் காவலர்களின் நலன் காக்கும் வண்ணம், அவர்களுக்கென ஒரு சொந்த இல்லம் கட்டித் தரும் பொருட்டு, தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம் 1981ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த நிறுவனம் தொடங்கப்பட்டு 30 ஆண்டுகளுக்கு மேலாகியும், “உங்கள் சொந்த இல்லம்” திட்டத்தின் கீழ் இதுவரை 12 இடங்களில் 1,985 வீடுகள் மட்டுமே கட்டிக் கொடுக்கப்பட்டு உள்ளன.

“உங்கள் சொந்த இல்லம்” திட்டத்தின் கீழ் காவலர்களுக்குப் போதுமான அளவு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவில்லை என்பதை அறிந்த நான், கடந்த 24.4.2012 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீதான

விவாதத்தின் போது, ‘‘காவலர்கள் ஓய்வு பெற்ற பின் அவர்களுக்கு சொந்த வீடு கிடைக்க ஆவன செய்ய இந்த அரசு ஒரு திட்டம் தீட்டி செயல்படுத்தும்’’ என அறிவித்து இருந்தேன்.

இதன்படி, ‘‘உங்கள் சொந்த இல்லம்’’ திட்டத்தின் கீழ், காவல் துறையில் காவலர்கள் முதல் துணைக் கண்காணிப்பாளர்கள் வரையிலான பதவிகளில் உள்ளவர்களுக்கும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் தீயணைப்போர் முதல் கோட்ட அலுவலர்கள் வரையிலான பதவிகளில் உள்ளவர்களுக்கும் சொந்த வீடு கட்டித் தர தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் நடவடிக்கை எடுக்கும். ஒவ்வொரு மாவட்ட தலைநகரிலும் 10 ஏக்கர் நிலமும், காஞ்சிபுரம் மாவட்டம், மேலக்கோட்டையூர் கிராமத்தில் 100 ஏக்கர் நிலமும் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்திற்கென ஒதுக்கீடு செய்து தரப்படும். கட்டுமானப் பணிகளை காவலர் வீட்டு வசதிக் கழகம் மேற்கொண்டு வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவலர்கள், தலைமைக் காவலர்கள், தீயணைப்போர், முன்னிலை தீயணைப்போர், மற்றும் உதவி நிலைய அலுவலர்கள் ஆகியோருக்கு 650 சதுர அடி கொண்ட வீடுகளும்; உதவி ஆய்வாளர்கள், ஆய்வாளர்கள், நிலைய அலுவலர்கள் மற்றும் உதவிக் கோட்ட அலுவலர்கள் ஆகியோருக்கு 850 சதுர அடி கொண்ட வீடுகளும்; காவல் துணைக் கண்காணிப்பாளர்கள் மற்றும் கோட்ட அலுவலர்களுக்கு 1,100 சதுர அடி கொண்ட வீடுகளும் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் லாப நோக்கமின்றிக் கட்டித் தரப்படும். இந்த வீடுகள் அடுக்குமாடிக்

குடியிருப்புகளாகக் கட்டப்படும். இந்தத் திட்டத்தின் கீழ் சுமார் **36,000** குடியிருப்புகள் கட்டப்படும். காவல் துறை மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை பணியாளர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களது இட விருப்பம் ஆகியவற்றின் அடிப்படையில் இத்திட்டம் இந்த ஆண்டு முதல் துவங்கப்பட்டு படிப்படியாகச் செயல்படுத்தப்படும். இந்த வீடுகளுக்கான விலையை காவல் துறையினர் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையினர் அவரவர் விருப்பத்திற்கேற்ப முழுவதும் ரொக்கமாகவோ அல்லது மாதத் தவணையிலோ செலுத்த வழிவகை செய்யப்படும்.

இதன் மூலம் காவல் துறையினர் தமக்கென சொந்த வீடு கட்ட இயலவில்லை என்ற குறை நிவர்த்தி செய்யப்படுவதோடு, மக்கள் சேவையில் காவல் துறையினர் முழு அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# சுசீந்திரத்தில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு சிலை - 4.5.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இருபதாம் நூற்றாண்டில் புகழ் பெற்று விளங்கிய கவிஞர்களில் ஒருவராக விளங்கியவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள். கவிமணியின் பாடல்களில் உண்மையும், அழகும் கைகோர்த்துச் செல்வதை உணர முடியும். கவிமணி அவர்களை "இனிமைக் கவிஞர்", "இளமைக் கவிஞர்", "உண்மைக் கவிஞர்", "உணர்ச்சிக் கவிஞர்" எனக் கூறுவது சாலப் பொருத்தமாக அமையும்.

"தேசிக விநாயகத்தின் கவிப் பெருமை தினமும் கேட்பது எனது செவிப் பெருமை" எனக் கூறியவர் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்கள்.

இவரது உண்மையுள்ளம், உண்மைப் பாடல்களின் மூலமாய் உண்மை வித்துக்களைக் கற்பவர் மனதில் விதைத்து, உண்மைப் பயிரை செழித்தோங்கச் செய்கிறது; இவர் பாடல்களில் காணும் தெளிவும், இனிமையும், இவரது உள்ளத்திலேயுள்ள தெளிவு, இனிமை முதலிய சிறந்த இயல்புகளின் நிழற்படமேயாகும் என்று புகழாரம் சூட்டியவர் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்கள்.

கவிமணி அவர்கள் வாழ்ந்த நாஞ்சில்நாடு மலையாள நாட்டின் ஒரு பகுதியாக இருந்தாலும், தமிழ் இலக்கிய இலக்கணங்களை நன்கு கற்று கவிபுனையும் ஆற்றலைப் பெற்றிருந்தார். பழந்தமிழ்ப் பண்பும், தமிழ் மணமும், புதுமைக் கருத்துகளும் நிறைந்த பல

பாடல்களைக் கவிமணி அவர்கள் எழுதியுள்ளார். இப்பாடல்களின் தொகுப்பான ‘‘மலரும் மாலையும்’’ நூலில் இருந்து, இவருடைய நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இறைவழிபாடு, சாதிபேதம் கடிதல் மற்றும் குழந்தைகளிடம் கொண்ட பற்று ஆகியவற்றை அறியலாம்.

‘‘பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காப்பது நமது கடமை என்றும், உரிமை வாழ்வின் பயனை நினையாது வாதினை விளைவித்துச் சண்டை செய்வது தேவையற்றது’’ என்று வலியுறுத்தியவர் கவிமணி அவர்கள்.

குழந்தைகளுக்காகத் தாய்மார்கள் பாடும் தாலாட்டுப் பாடல்களையும், குழந்தைகள் தாமே பாடி மகிழத்தக்க எளிய அழகிய பாடல்களையும் பாடியுள்ளார். பறவைகளைப் பற்றி குழந்தைகள் விளித்துப் பாடும் இவரது பாடல்கள் சுவை மிக்கவை.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் தித்திக்கும் பாடல்கள் நமது செவிகளுக்கு என்றும் திகட்டாத இன்பம் தரக்கூடியவை.

இப்படிப்பட்ட தலை சிறந்த தமிழ்க் கவிஞரை, தமிழ்ப் பற்றாளரை போற்றும் வகையில், கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரத்தில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு தமிழக அரசின் சார்பில் சிலை வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

## ரூ.15 கோடி மதிப்பீட்டில் சர்வதேசத் தரத்தில் ஓட்டுநர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் - 4.5.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாகன எண்ணிக்கை உயர்வினால் அதிகரித்து வரும் சாலை விபத்துகளைத் தவிர்க்கும் வகையில், "வேகம் விவேகமன்று" என்பதை உணர்ந்து, சாலை விதிகளை சரியாகக் கடைபிடித்து, வாகனங்களை இயக்கக்கூடிய திறமையான ஓட்டுநர்களை உருவாக்கக்கூடிய சர்வதேசத் தரம் வாய்ந்த ஓட்டுநர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் அமைப்பது மிகவும் அவசியமாகிறது.

தரமான ஓட்டுநர்களை உருவாக்கும் பொருட்டு, சாலைப் போக்குவரத்து நிறுவனத்தால் கும்மிடிப்பூண்டியில் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சிப் பிரிவு ஒன்று 1979ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 55 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்தப் பயிற்சிப் பிரிவு வளாகத்தில் அலுவலகம், வகுப்பறைகள், ஓட்டுநர் பயிற்சி ஆய்வுக் கூடம், பணிமனை, மாணவர் விடுதி மற்றும் பணியாளர்கள் குடியிருப்புகள் போன்ற வசதிகளுடன், ஓட்டுநர் பயிற்சித் திறன்களை மேம்படுத்தும் வகையில் ஓட்டுநர் பயிற்சி மைதானமும் 15 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது.

நவீன தொழில்நுட்பப் பயிற்சியின் மூலம் தரமான ஓட்டுநர்களை உருவாக்கும் வகையிலும், அறிவியல் ரீதியில் ஓட்டுநர் பயிற்சி அளிக்கும் வண்ணமும், அவர்களது பண்பாட்டினை உயர்த்தும் வகையிலும், விபத்துகளை தவிர்க்கும் வகையிலும், இந்த ஓட்டுநர் பயிற்சி மையம், பல்வேறு நவீன தொழில்நுட்ப வசதிகளுடன்

கூடிய சர்வதேசத் தரத்திற்கு இணையாக உறைவிடத்துடன் கூடிய ஓட்டுநர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையமாக 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன்மூலம், ஓட்டுநரின் திறமையை விஞ்ஞான முறையில் காணொலியுடன் பதிவு செய்யப்பட்ட வசதிகளுடன் ஆராய்ந்து, திறனில்லாத ஓட்டுநர்களை எளிதில் கண்டறியவும், அவர்களுக்குத் தரமான பயிற்சி அளிக்கவும் வழிவகை ஏற்படும். இவ்வாறு பயிற்சி பெற்றவர்களுக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் உள்ளூர் மற்றும் சர்வதேச ஓட்டுநர் உரிமங்களை வழங்கும்.

மேலும், இங்குள்ள கட்டமைப்பு வசதிகளைப் பயன்படுத்தி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள், காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பணிபுரியும் ஓட்டுநர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்களின் திறன்கள் மேம்படுத்தப்படும்.

சர்வதேசத் தரத்திலான பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையமாக கும்மிடிபூண்டியிலுள்ள ஓட்டுநர் பயிற்சிப் பிரிவு தரம் உயர்த்தப்படுவதன் மூலம் தமிழகத்திலுள்ள போக்குவரத்து விதிகளை நன்கு அறிந்து, சாலைகளின் தன்மைக்கேற்ப வாகனங்களை இயக்கி, விபத்துகளைப் பெருமளவில் தவிர்க்கும் திறன் கொண்ட ஓட்டுநர்களை உருவாக்குவதில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# ரூ.35 கோடி மதிப்பீட்டில் பவானிசாகர் அரசுப் பயிற்சி நிலையம் புனரமைப்பு - 7.5.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

அரசு நிருவாகம் திறம்படச் செயல்படும் வகையில், அரசு ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் தங்கள் செயல் திறனை மேம்படுத்திக் கொள்வதிலும்; அறிவுத் திறனை உயர்த்திக் கொள்வதிலும் இன்றியமையாப் பங்கினை வகிப்பவை பயிற்சி நிலையங்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

இந்த அடிப்படையில், அரசு ஊழியர்களின் பணித் திறனை உயர்த்தும் வகையிலும், அலுவலக நடைமுறைகளை அவர்கள் தெரிந்து கொள்ளும் வண்ணமும்; அவர்களிடையே புத்துணர்ச்சியையும், நட்புறவையும், சகோதரத்துவத்தையும், தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தும் வகையிலும்; அரசு ஊழியர்களுக்கான அடிப்படைப் பயிற்சி ஈரோடு மாவட்டத்தில் உள்ள பவானிசாகர் குடியுரிமை பயிற்சி நிலையத்தில், அதாவது Civil Service Training Instituteஇல் அளிக்கப்படுகிறது. இந்த நிலையத்தில் இளநிலை உதவியாளர்கள், உதவியாளர்கள் போன்ற அமைச்சுப் பணியாளர்களுக்குப் பல்வேறு வகையான நிருவாக செயல்முறைகளில் அடிப்படைப் பயிற்சியும்; துணை வட்டாட்சியர்களுக்குப் பணியிடைப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன.

இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பயிற்சி நிலையத்தில் உள்ள அரங்கம், வகுப்பறைகள், விடுதிக் கட்டடங்கள், உணவு அரங்கங்கள், பணியாளர் குடியிருப்புகள், பயிற்சியாளர் விடுதிகள், நூலகக் கட்டடம், துணை வட்டாட்சியர் தங்கும் விடுதிகள், அலுவலகக் கட்டடங்கள் ஆகிய அனைத்துமே பழுதடைந்து பயிற்சி அளிப்பதற்கு ஏதுவாக இல்லாத சூழ்நிலை உள்ளது.

அரசு ஊழியர்களுக்கான அடிப்படைப் பயிற்சியின் அவசியத்தைக் கருத்தில் கொண்டும்; பவானிசாகரில் உள்ள குடியுரிமைப் பயிற்சி நிலையத்தை சிறந்த பயிற்சி நிலையமாக உருவாக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்தைக் கருத்தில் கொண்டும்; 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வகுப்பறைகள், நூலகம், உள் விளையாட்டு அரங்குகள், பதிவறைகள், ஆசிரியர்களுக்கான தனியறைகள், நிருவாக அலுவலகத்திற்கான கட்டடம், காணொலிக் கண்காட்சி அரங்கம், தங்கும் விடுதிகள், பணிபுரிபவர்களுக்கான குடியிருப்புகள், நவீன உணவுக் கூடம், மருத்துவ மையம், விளையாட்டு அரங்கம் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் கொண்ட பயிற்சி நிலையமாக பவானிசாகர் அரசுப் பயிற்சி நிலையம் மாற்றி அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# ரூ.1,560 கோடி மதிப்பீட்டில் காவேரி டெல்டா பகுதியின் வடிகால் வசதிகள் மேம்பாடு - 7.5.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

இவ்வுலகம் இனிதே இயங்க மழை நீர் இன்றியமையாததாக விளங்குகிறது. எனவே தான் "மாமழை போற்றுதும், மாமழை போற்றுதும்" என இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் கூறியுள்ளார். நீரின் அவசியத்தைக் கருதி, எனது தலைமையிலான அரசு, மழை நீர் சேகரிப்புத் திட்டத்தினைத் திறம்படச் செயல்படுத்தி வருகிறது.

தற்போது, பருவ நிலை மாறுதல்களினால் கடல் நீர் மட்டம் உயரும் எனவும்; அதன் விளைவாகப் பாதிப்புகள் ஏற்படும் என அண்மைக் காலமாக உலகளவில் பல வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். இந்தப் பருவ நிலை மாறுதல்களின் விளைவாக, இன்னும் 40 ஆண்டுகளில் காவேரி டெல்டா கடலோர மாவட்டங்களில் கடல் நீர் மட்டம் உயரும் போது, அப்பகுதிகளில் உப்புநீர் உட்புகுந்து செழிப்பான விளை நிலங்கள் பாதிப்படையும்; அல்லது ஒரு சில பகுதிகளில் பாசனம் அறவே பாதிப்புக்கு உள்ளாகக் கூடும் என்றும்; நிலத்தடி நீரின் தன்மையும் மாறுபட்டு நீரின் உவர்ப்புத் தன்மை அதிகரித்து எதற்கும் பயன்படுத்தப்பட முடியாத நிலை ஏற்படக் கூடிய வாய்ப்புகள் உள்ளன என்றும்; மேலும், கடைமடைப் பகுதிகளில் உள்ள வடிகால்களின் வழியாகவும் கடல் நீர் உட்புகுந்து பருவமழைக் காலங்களில் வெள்ளநீர் வடிவதைத் தடுப்பதோடு மட்டுமின்றி விளை நிலங்களில் தேங்கி விவசாய

உற்பத்தி பாதிக்கப்பட்டு விவசாயிகளின் பொருளாதார நிலை பெருமளவில் பாதிப்படையும் என்றும் கூறப்படுகிறது. எனவே, இதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பது அவசியம் ஆகும்.

காவேரி டெல்டா மாவட்டப் பகுதிகளில் கடலில் இருந்து உட்பகுதியில் சுமார் 25 கிலோ மீட்டர் தொலை தூரம் வரையிலுள்ள பகுதிகள் ஏறக்குறைய சம மட்டப் பகுதிகளாக அமைந்துள்ளதால், வட கிழக்குப் பருவமழைக் காலங்களில் சில நாட்களில் பெய்யும் அதிகப்படியான மழைநீரால் வடிகால்கள் பாதிப்புக்கு உள்ளாகின்றன. மழைக் கால நீரைத் தேக்கி வைப்பதற்கான போதிய வசதியின்மை காரணமாக, வெள்ள நீர் கடலுக்குள் வீணாகச் சென்று கலக்கும் நிலையும் ஏற்படுகிறது. மழைக் காலத்தில் அதிகப்படியாகக் கிடைக்கும் வெள்ள நீரை, மழை இல்லாத காலங்களில் குறிப்பாகக் கோடை காலங்களில் பெருமளவில் பயன்படுத்த இயலாத நிலையும் உள்ளது.

எனவே, காவேரி டெல்டா மாவட்டங்களில் கிடைக்கக் கூடிய வெள்ள நீரைத் தேக்கி வைத்துத் தேவைப்படும் காலங்களில் பாசனத்திற்காகப் பயன்படுத்துவதும்; உப்பு நீர் உட்புகுதலைத் தடுப்பதும் மிகவும் அத்தியாவசியமாகிறது.

இந்தச் சூழ்நிலையில், மேற்கண்ட பாதிப்புகளிலிருந்து விடுபட வழிவகை செய்யும் பொருட்டும்; பருவ நிலை மாற்றத்தினால் ஏற்படக்கூடிய தாக்கங்களைப் பெருமளவு எதிர் கொள்ளும் வகையிலும்;

- காவேரி டெல்டா பகுதிகளில் ஏற்கெனவே உள்ள பழமையான கடைமடை மதகுகள் மற்றும் அதன் தொடர்புடைய கட்டமைப்புகளை மறுகட்டுமானம் செய்தல்;

- காவேரி கடைமடைப் பகுதிகளில் மேலும் மதகுகள் அமைத்து வெள்ள நீரைத் தேக்கி வைத்துப் பாசனத்திற்காகப் பயன்படுத்துதல்;
- இதன் மூலம் செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டப்பட்டு கிணறுகளின் நீர் மட்டத்தை உயர்த்த வழிவகை செய்தல்;
- கடல் நீர் உட்புகுதலைத் தவிர்த்தல்.

போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்திட்டம் 1,560 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஐந்தாண்டுகளில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்த ஆசிய வளர்ச்சி வங்கி 1,092 கோடி ரூபாய் கடனுதவி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. திட்ட மதிப்பீட்டில் மீதமுள்ள தொகையான 468 கோடி ரூபாயைத் தமிழக அரசு வழங்கும்.

இத்திட்டத்தின் மூலம் திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்கள் மற்றும் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள காவேரி, வெண்ணாறு, கல்லணை கால்வாய்ப் பாசன அமைப்புகளில் ஒரு பகுதியைச் சார்ந்த சுமார் 4.50 இலட்சம் ஏக்கர் பாசன நிலங்கள் பயன்பெறும்.

மேற்கண்ட பணிகளால் மாநிலத்தின் நெற்களஞ்சியமான காவேரி டெல்டா பகுதியின் வடிகால் வசதிகள் மேம்படுத்தப்படுவதோடு கடல் நீர் உட்புகுதல் தடுக்கப்படும். இத்திட்டம் முன்னுரிமை அடிப்படையில் விரைவில் செயல்பாட்டுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# வருவாய்த் துறையின் சேவைகளை விரைந்து வழங்கிட 9 புதிய வட்டங்கள் - 8.5.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசின் நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும், கட்டுக்கோப்பான சமுதாய முன்னேற்றம் மற்றும் அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பதிலும், இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும் போது, மக்களை நாடிச் சென்று உதவிக் கரம் நீட்டுவதிலும், பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு நிலைகளில் மக்களுடன் இணைந்து செயல்படுவதிலும் வருவாய்த் துறை முக்கியப் பங்காற்றுவதுடன், நிருவாகத்தின் முதுகெலும்பாகத் தொடர்ந்து விளங்கி வருகிறது.

இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த வருவாய்த் துறையின் சேவை மக்களை விரைந்து அடைய வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், புதிய மாவட்டங்களை உருவாக்குதல், புதிய வட்டாட்சியர் அலுவலகங்களை உருவாக்குதல், ஒவ்வொரு கிராமத்திற்கும் தனியாக கிராம நிருவாக அலுவலர்களை நியமித்தல் போன்ற எண்ணற்ற மக்கள் நலம் பயக்கும் நடவடிக்கைகள் எனது ஆட்சிக் காலத்தில் எடுக்கப்படுகின்றன.

மக்களுக்குத் தேவையான இன்றியமையாப் பணியை மேற்கொள்ளும் வருவாய்த் துறையை மேலும் மேம்படுத்தும் வகையில், தற்போதைய மக்கள் தொகையின் எண்ணிக்கை,

மக்களின் தேவைகள் மற்றும் வசதிகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, புதிய வருவாய் வட்டங்களை உருவாக்க நிர்ணயிக்கப்பட்டுள்ள வரையறைகளுக்கு உட்பட்டு, வருவாய் வட்டங்களைச் சீரமைக்க எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது.

இதன்படி, சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டத்தினைப் பிரித்து திருப்புவனத்தில் ஒரு புதிய வட்டமும்; திருவண்ணாமலை மாவட்டம் போளூர் வட்டத்தினைப் பிரித்து கலசப்பாக்கத்தில் ஒரு புதிய வட்டமும்; பெரம்பலூர் மாவட்டம் குன்னம் வட்டத்தினைப் பிரித்து ஆலத்தூரில் ஒரு புதிய வட்டமும்; கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி வட்டத்தினைப் பிரித்து கிணத்துக்கடவில் ஒரு புதிய வட்டமும்; காஞ்சிபுரம் மாவட்டம் செங்கல்பட்டு வட்டத்தினைப் பிரித்து திருப்போரூரில் ஒரு புதிய வட்டமும்; கோயம்புத்தூர் மாவட்டம் கோயம்புத்தூர் வடக்கு வட்டத்தினைப் பிரித்து அன்னூரில் ஒரு புதிய வட்டமும்; விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி வட்டம் மற்றும் சங்கராபுரம் வட்டங்களைச் சீரமைத்து புதியதாக சின்னசேலத்தில் ஒரு வட்டமும்; ஈரோடு மாவட்டம் பவானி மற்றும் கோபிச்செட்டிபாளையம் வட்டங்களைச் சீரமைத்து அந்தியூரில் ஒரு புதிய வட்டமும்; நாமக்கல் மாவட்டம் நாமக்கல் மற்றும் ராசிபுரம் வட்டங்களைச் சீரமைத்து கொல்லிமலையில் ஒரு புதிய வட்டமும்; ஆக மொத்தம் 9 வட்டங்கள் புதியதாகத் தோற்றுவிக்கப்படும்.

இது தவிர, 2011ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 62 வருவாய் வட்டங்களில் மக்கள் தொகை அதிகமாக இருப்பது தெரிய வந்துள்ளதை அடுத்து, காலவிரயம்

இன்றி மக்கள் எளிதாக வட்டாட்சியர் அலுவலகங்களை அணுகி தங்களுக்குத் தேவையானவற்றை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்பதையும், வட்டாட்சியர் அலுவலகம் திறம்படச் செயல்பட வேண்டும் என்பதையும் கருத்தில் கொண்டு, நான்கு லட்சத்திற்கு மேல் மக்கள் தொகையினைக் கொண்ட வருவாய் வட்டங்களைப் பிரிக்க நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனை நிறைவேற்றும் பொருட்டு, தமிழகத்திலுள்ள வருவாய் வட்டங்களின் மக்கள் தொகை, பரப்பளவு, வருவாய் கிராமங்கள் ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு அரசுக்கு பரிந்துரை அளிக்க வருவாய் நிருவாக ஆணையர், நில நிருவாக ஆணையர் மற்றும் நிலச் சீர்திருத்தத் துறை ஆணையர் ஆகியோரைக் கொண்ட ஒரு அலுவலர் குழு அமைக்கப்படும். இக்குழு இரண்டு மாத காலத்திற்குள் அரசுக்குத் தனது பரிந்துரைகளை அளிக்கும். இக்குழுவின் பரிந்துரைகளைப் பரிசீலித்து அரசு தக்க முடிவினை அறிவிக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமல்லாமல், பள்ளி மாணவர்கள் பல்வேறு உதவித் தொகைகளைப் பெறுவதற்கும், அரசு விடுதிகளில் சேர்ந்து படிப்பதற்கும், உயர் கல்வி நிலையங்களில் சேர்க்கை பெறுவதற்கும் தேவைப்படும் சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ் மற்றும் இருப்பிடச் சான்றிதழ் ஆகியவற்றைப் பெறுவதில் ஏற்படுகின்ற நடைமுறை கால தாமதத்தைக் கருத்தில் கொண்டு, வரும் கல்வி ஆண்டு முதல் தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் படிக்கும் மாணவ – மாணவியர்களுக்கு ஆறாம் வகுப்பிலேயே

அவர்களுக்குத் தேவையான சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ் ஆகியவை அளிக்கப்படும் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஆறாம் வகுப்பில் படிக்கும் சுமார் 12 இலட்சம் மாணவ, மாணவியர் பயன் பெறுவர்.

மேலும், இயற்கைச் சீற்றங்கள் ஏற்படும் போது உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவும், அதன் பின்னர் உரிய நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ளவும், வருவாய்த் துறை, வேளாண்மைத் துறை, நெடுஞ்சாலைத் துறை, ஊரக வளர்ச்சித் துறை போன்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவலர்களுக்குத் தகுந்த பயிற்சி அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு உரிய பயிற்சி அளிக்கும் பொருட்டு, 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் மாநில பேரிடர் மேலாண்மைப் பயிற்சி நிலையம் அமைக்கப்படும் என்பதையும், இந்த நிலையம் வருவாய்த் துறை அலுவலர்களுக்கான மாநில அளவிலான பயிற்சி நிலையமாகவும் செயல்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

# கைத்தறி நெசவாளர்கள் மற்றும் பட்டு விவசாயிகளுக்குப் புதிய சலுகைகள் - 8.5.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தொழில் வளர்ச்சிக்கு முன்னோடியாக இருப்பதோடு, விவசாயத்திற்கு அடுத்தபடியாக கிராமப்புர மக்களுக்குப் பெருமளவு வேலை வாய்ப்பினை வழங்கி வரும் தொழிலாக நெசவுத் தொழில் விளங்கி வருகிறது.

நெசவுத் தொழிலாளர்களின் சமூக பொருளாதார நிலையை மேம்படுத்தும் நோக்கத்துடன் நெசவாளர்களின் குடும்பத்திற்கு ஓய்வூதியம், காப்பீட்டுத் திட்டம், நெசவாளர்களின் குழந்தைகளுக்குக் கல்வி உதவித் தொகை போன்ற அரிய பல திட்டங்களை எனது தலைமையிலான அரசு நிறைவேற்றி வருகிறது.

நெசவாளர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் வகையில், கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் உறுப்பினர்களாக உள்ள நெசவாளர்களிடமிருந்து, அவர்கள் ஈட்டும் ஊதியத்தில் ரூபாய்க்கு 8 பைசா சந்தாவாக வசூலிக்கப்படுகிறது. மாநில அரசு தனது பங்காக 4 பைசாவைச் செலுத்தி வருகிறது. மத்திய அரசு தனது பங்காக 4 பைசாவை 2007 ஆம் ஆண்டு வரை செலுத்தி வந்தது. ஆக மொத்தம்,

நெசவாளர்கள் பெறும் ஊதியத்தில் ஒரு ரூபாய்க்கு 16 பைசா சிக்கன நிதியாக அவர்களது சேமிப்புக் கணக்கில் செலுத்தப்பட்டு, அத்தொகைக்கு மாநில அரசு வட்டியும் வழங்கி வருகின்றது.

1.4.2007 முதல் மத்திய அரசு தனது பங்களிப்பினை நிறுத்தி விட்டதால், நெசவாளர்களுக்கு மத்திய அரசின் மூலம் கிடைத்து வந்த சிக்கன நிதி மற்றும் அதற்குக் கிடைக்கும் வட்டித் தொகையும் குறைந்து விட்டது. பாதிக்கப்பட்ட நெசவாளர்கள், 2007ஆம் ஆண்டு முதல் இக்கோரிக்கையினைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். நெசவாளர்களின் ஐந்தாண்டு கால கோரிக்கையினை நிறைவேற்றும் விதமாக, கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் செயலாக்கத்திற்கு நெசவாளர்கள் ஈட்டும் கூலியில் வழங்கப்பட்டு வரும் மாநில அரசின் பங்களிப்பான 1 ரூபாய்க்கு 4 பைசாவுடன், மைய அரசால் நிறுத்தப்பட்ட பங்களிப்பான 1 ரூபாய்க்கு 4 பைசாவையும் சேர்த்து, 8 பைசாவாக இனி உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால், தமிழக அரசுக்கு ஆண்டொன்றுக்கு 5 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும். இதன் மூலம் நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் சேர்ந்துள்ள 76,051 கைத்தறி நெசவாளர்கள் நேரடியாகப் பயனடைவர் என்பதை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இதே போன்று, கிராமப்புர மக்களுக்கு தொடர் வருவாய் மற்றும் வேலை வாய்ப்பினை வழங்கி, தேசிய அளவில் வெண்பட்டு உற்பத்தியிலும், பட்டுக் கூடு உற்பத்தித் திறனிலும், இளம் புழுக்களை வளர்த்து விநியோகிப்பதிலும், தொகுப்பு அபிவிருத்தித் திட்டத்திலும் தேசிய அளவில் முதல் நிலை எய்தி உள்ள

பட்டு வளர்ச்சித் துறையின் சாதனைகள் மேலும் தொடரும் வகையிலும், இந்த சாதனைகளுக்குக் காரணமான தமிழகப் பட்டு விவசாயிகளை ஊக்குவிக்கும் வண்ணமும், இதுவரை, மல்பரி நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 4,125 ரூபாய் என வழங்கப்பட்டு வந்த மானியத் தொகை 6,750 ரூபாய் ஆக உயர்த்தி வழங்கப்படும் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் மூலம் ஒவ்வொரு விவசாயிக்கும் அதிகபட்சமாக ஒரு ஹெக்டேருக்கு 16,875 ரூபாய் வரை மானியம் கிடைக்கும். நடப்பாண்டில் 5,000 ஏக்கர் பரப்பில் மல்பரி நடவு செய்யும் விவசாயிகளுக்கு மானியமாக மொத்தம் 3 கோடியே 37 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

மேலும், பட்டு வளர்ப்பில் ஈடுபடும் விவசாயிகள் நவீன புழு வளர்ப்புத் தளவாடங்கள் மற்றும் பண்ணை உபகரணங்களைப் பயன்படுத்தி அதிகளவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக, ஒவ்வொரு விவசாயிக்கும் தற்போது வழங்கப்பட்டு வரும் மானியத் தொகையான 30,000 ரூபாய் நடப்பு ஆண்டு முதல் 37,500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நடப்பாண்டில் 1,200 பட்டு விவசாயிகளுக்கு மொத்த மானியமாக 4.5 கோடி ரூபாய் வழங்கப்படும்.

இதன் மூலம் பட்டு விவசாயிகள், ஒரு ஹெக்டேருக்கு ஆண்டு ஒன்றுக்கு குறைந்த பட்ச நிகர வருமானமாக 1 இலட்சம் ரூபாய் வரை பெற இயலும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

## ரூ.81 கோடி மதிப்பீட்டில் கொள்ளிட ஆற்றின் குறுக்கே திருச்சி ஸ்ரீரங்கத்தை இணைக்கும் புதிய நான்கு வழிப்பாலம் - 9.5.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேளாண்மைத் துறையின் வேகமான வளர்ச்சியிலும், தொழில் துறையின் துரிதமான முன்னேற்றத்திலும், ஊரக மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதிலும் சாலைக் கட்டமைப்பு வசதி இன்றியமையாததாக விளங்குவதால்தான், ஒரு மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளில் சாலைக் கட்டமைப்பு வசதி முக்கியப் பங்கினை வகிக்கிறது.

சாலைக் கட்டமைப்பு வசதியின் முக்கியத்துவத்தை உணர்ந்த எனது தலைமையிலான அரசு, கிராமப்புரங்களுக்கு சிறந்த சாலை இணைப்பு வசதிகளை அளிப்பதிலும், மாநிலம் முழுவதும் உள்ள சாலைகள் மற்றும் பாலங்களைப் பராமரிப்பதிலும், ரயில்வே மேம்பாலங்கள் அமைப்பதிலும், புதிய சாலைகளை அமைப்பதிலும், ஏற்கெனவே உள்ள சாலைகளை அகலப்படுத்துவதிலும் முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

அந்த வகையில், போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் விதமாகவும், பயண நேரம் மற்றும் வாகன இயக்கச் செலவினைக் குறைக்கும் வண்ணமும், புதிய பாலங்கள் அமைத்தல், வட்டச்

சாலைகள் அமைத்தல், புறவழிச் சாலைகள் அமைத்தல் உட்பட பல்வேறு சாலைப் பணிகள் நடப்பு ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

இதன்படி, கொள்ளிட ஆற்றின் குறுக்கே திருச்சி மாநகரத்தையும்,ஸ்ரீரங்கத்தையும்இணைக்கும் வகையில்கட்டப்பட்ட பழமை வாய்ந்த பாலம் தற்போது மிகவும் பழுதடைந்துள்ளதால், அங்கு புதிய நான்கு வழிப் பாலம் அமைக்கும் பணியும், அணுகு சாலையில் அய்யன் வாய்க்கால் குறுக்கே ஒரு சிறு பாலம் அமைக்கும் பணியும், மற்றும் சாலை சந்திப்பு மேம்பாடு போன்ற பணிகளும் 81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

இதே போன்று, கரூர் மாவட்டத்தில் பசுபதி பாளையம் அருகில் கரூர்–வாங்கல் சாலையையும், நாகப்பட்டினம்–கூடலூர்–மைசூர் சாலையையும் இணைக்கும் தரைவழிப்பாலம் பழுதடைந்துள்ளதால், அங்கு 12 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய உயர் மட்ட பாலம் ஒன்று அமைக்கப்படும்.

மாமல்லபுரத்தையும்,எண்ணூர் துறைமுகத்தையும் இணைக்கும் வகையில், 1,420 கோடி ரூபாய் மதிப்பீட்டில், சுமார் 162 கிலோ மீட்டர் நீளமுடைய புதிய வழித்தடம் சிங்கப்பெருமாள் கோவில், ஸ்ரீபெரும்புதூர், திருவள்ளூர், தாமரைப்பாக்கம், பெரிய பாளையம், புதுவாயல் ஆகிய ஊர்களின் வழியாக காட்டுப்பள்ளி வரை சென்னை எல்லை சாலை, அதாவது Chennai Peripheral Road பணிக்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும். இத் திட்டத்தின்படி 83.20 கிலோ மீட்டர் புதிய சாலைகள் அமைக்கப்படுவதுடன், ஏற்கெனவே உள்ள 78.60 கிலோ மீட்டர் சாலைகள் மேம்படுத்தப்படும்.

மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம், திருப்பூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, ஈரோடு மற்றும் வேலூர்

ஆகிய நகரங்களுக்கு முதற்கட்டமாக வட்ட மற்றும் ஆரச்சாலைகள் அமைப்பதற்காக விரிவான திட்டம் தயாரிக்கும் பணி விரைவில் மேற்கொள்ளப்படும்.

நகரங்களில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் விதமாக, நகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள மாநில நெடுஞ்சாலைகளுக்குப் புறவழிச்சாலைகள் அமைப்பதற்கு விரிவான திட்டம் தயாரிக்கப்படும்.

மேலும், புதிதாக சாலைகள் அமைகிறபோது அல்லது மேம்படுத்தத் திட்டமிடும் போது, அந்தச் சாலையைச் சுற்றி அமைந்துள்ள பகுதிகள் வளர்ச்சியடையும் வகையில் சாலைக் கட்டமைப்பு வளையம், அதாவது Road Grid அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்தத் திட்டம் சென்னை வெளிவட்டச் சாலை அமையும் பகுதியில் முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தப்படும்.

நெடுஞ்சாலைத் துறையில் என்னால் அறிவிக்கப்பட்ட இந்தத் திட்டங்களின் மூலம், தமிழகத்திலுள்ள சாலைப் போக்குவரத்து மேன்மை அடைவதுடன், நகர்ப்பகுதிகளில் ஏற்படும் வாகன நெரிசல்கள் தவிர்க்கப்பட்டு, பயணிகள் எந்தவித சிரமமுமின்றி தாங்கள் விரும்பிய இடத்திற்குக் குறைந்த நேரத்தில் சென்றடைய வழிவகை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

## சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு! - 9.5.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேளாண் சார்ந்த தொழில்களில் முக்கியத் தொழிலாகத் திகழும் சர்க்கரைத் தொழில் கிராமப் பொருளாதாரத்தில் பெருமளவில் தாக்கத்தை ஏற்படுத்தி, லட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் பெரிய அளவில் நேர்முகமாகவும், மறைமுகமாகவும் வேலை வாய்ப்பினை வழங்கி வருகிறது.

இப்படிப்பட்ட பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த சர்க்கரை உற்பத்தியில், தமிழ்நாட்டில் 16 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும், 2 பொதுத் துறை சர்க்கரை ஆலைகளும் ஈடுபட்டு வருகின்றன. இந்த சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் வாழ்க்கையில் நலமும், வளமும் பெற வேண்டும் என்பதே எனது அரசின் நோக்கமாகும்.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கூட்டுறவு, பொதுத்துறை மற்றும் தனியார் சர்க்கரை ஆலைப் பணியாளர்கள் தென்னிந்திய சர்க்கரை ஆலைகள் சங்கத்தின், அதாவது South Indian Sugar Mills Association – SISMA ஒப்பந்தத்தின் படி ஊதியம் பெற்று வருகின்றனர். இதற்கு முன் இருந்த ஒப்பந்தக் காலம் 31.3.2008 உடன் முடிவடைந்தது.

1999–ஆம் ஆண்டு தொழிற் சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது பற்றி சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப் பேராணை மனுக்களை தொழிற்சங்கங்கள் தாக்கல் செய்தன. இந்த மனுக்களின் மீது சென்னை உயர் நீதிமன்றம் 4.8.2009 அன்று உத்தரவு பிறப்பித்தது. அந்த ஆணையில், தொழிற்சங்கங்களின் பிரதிநிதித்துவத்தைக் கண்டறியவும், அதன் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்சங்கப் பிரதிநிதிகளை வருங்காலங்களில் ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் சார்பாக ஊதிய உயர்வு உள்ளிட்ட பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ள ஏதுவாகத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தினக்கூலிப் பணியாளர்களுக்கும், தேர்தலில் பங்கெடுக்கும் உரிமை உண்டு என அரசு விளக்கம் அளித்தது.

இதனை எதிர்த்து, கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் செயல்பட்டு வரும் இரண்டு தொழிற்சங்கங்கள் நீதிப் பேராணை மனுக்களை சென்னை உயர்நீதிமன்றத்திலும் மற்றும் சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளையிலும் தாக்கல் செய்து, தொழிற்சங்கத் தேர்தல் நடத்தப்படுவதற்கு இடைக்காலத் தடை பெற்றன. மேற்படி இரண்டு வழக்குகளிலும் விதிக்கப்பட்ட இடைக்காலத் தடையை விலக்கக் கோரி சர்க்கரைத் துறை ஆணையரால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் இன்னமும் நிலுவையில் உள்ளன.

இவ்வழக்குகளில் உள்ள இடைக்காலத் தடை விலக்கப்பட்ட பின்னர் தான் சர்க்கரை ஆலைகளில் தொழிற்சங்கத் தேர்தல் நடத்தப்பட்டு, ஆலைப் பணியாளர்களுக்கான புதிய ஊதிய ஒப்பந்தம் ஏற்படுத்த இயலும்.

எனவே, முந்தைய அரசு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு குந்தகம் இல்லாத வகையில் தொழிலாளர்களுக்கு ad hoc ஊதியம் வழங்க 2010 ஆம் ஆண்டு நடவடிக்கை எடுத்தது. அதன்படி, 2008 ஆம் ஆண்டு, சிஸ்மா ஒப்பந்தத்தில் வழங்கப்பட்ட ஊதிய உயர்வில் 90 விழுக்காடு adhoc ஆக கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரைத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது.

கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு கேட்டு 4.4.2012 முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இது குறித்து சர்க்கரை ஆணையர் மற்றும் தொழிலாளர் துறை இணை ஆணையர் ஆகியோர் முன்பு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டும் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இந்தச் சூழ்நிலையில் தொழிலாளர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில், கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளின் நிதி நிலை நலிவுற்று இருப்பினும், தொழிலாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க எனது தலைமையிலான அரசு முடிவு எடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன்படி, நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு எவ்வித குந்தகமுமின்றி, 1.4.2008 முதல் சிஸ்மா ஒப்பந்தப்படி இறுதி செய்யப்பட்ட சம்பள விகிதத்தில் வழங்கப்படாமல் நிலுவையிலுள்ள 10 விழுக்காடு தொகை உடனடியாக வழங்கப்படும்.

மேலும், சர்க்கரை ஆலை ஊழியர்களுக்கு தற்போது வழங்கப்பட உள்ள 10 விழுக்காடு ஊதியத்தையும் கணக்கில் கொண்டு, அந்த அடிப்படை ஊதியத்தில் Basic Payஇல் 25 விழுக்காடு சிறப்பு

ஊதியம் என 1.4.2012 முதல் வழங்கப்படும். அதாவது, இனி வருங்காலங்களில் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் சிஸ்மா ஒப்பந்தத்தில் நிர்ணயிக்கப்படும் ஊதிய விகிதத்தின் அடிப்படை ஊதியத்தில் 25 விழுக்காட்டை சிறப்பு ஊதியமாகப் பெறுவார்கள்.

இந்தச் சலுகைகள் மூலம் தொழிலாளர்களுக்கு மாதந்தோறும் 1,595 ரூபாய் முதல் 1,907 ரூபாய் வரை கூடுதல் ஊதியம் கிடைக்கும். 2008–ஆம் ஆண்டு முதல் நிலுவைத் தொகை ரொக்கமாக வழங்கப்படுவதால், கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்கு 2 கோடியே 80 இலட்சம் ரூபாயும், 1.4.2012 முதல் 25 விழுக்காடு சிறப்பு ஊதியம் வழங்கப்படுவதால், ஆண்டு ஒன்றுக்கு 12 கோடியே 46 இலட்சம் ரூபாயும் கூடுதல் செலவு ஏற்படும்.

நீதிமன்றத்தில் வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில் முறையான ஊதிய உயர்வு ஒப்பந்தம் செய்ய இயலாது என்பதால், தொழிலாளர்களின் நீண்ட நாள் கோரிக்கையினைக் கனிவுடன் பரிசீலித்து தொழிலாளர்கள் மற்றும் விவசாயப் பெருமக்கள் பயன்பெறும் பொருட்டு எனது அரசு இந்த முடிவை எடுத்துள்ளது. நீதிமன்ற வழக்குகள் நிறைவு பெற்ற பின் முறையான ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும்.

இந்த ஊதிய உயர்வினை ஏற்று, தொழிலாளர்கள் போராட்டத்தைக் கைவிட்டு உடன் பணிக்குத் திரும்புவார்கள் என்ற எனது நம்பிக்கையினைத் தெரிவித்து அமைகிறேன்.

✵ ✵ ✵

# அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரிப்பு! - 9.5.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மக்களை இணைப்பதிலும்; நாட்டை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்வதிலும்; நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதிலும் சாலைப் போக்குவரத்து முக்கியப் பங்கு வகிக்கிறது. இப்படி இன்றியமையாததாக விளங்கும் சாலைப் போக்குவரத்து சேவையைப் பொதுமக்களுக்கு, குறிப்பாக ஏழை, எளிய மக்களுக்கு அளித்து வரும் அரசுப் போக்குவரத்துக் கழகங்களை மேம்படுத்துவதும்; அதன் தொழிலாளர்கள் மற்றும் பயணிகளின் வசதிகளை அதிகரிப்பதும் அவசியமாகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு, அரசுப் பேருந்துகளை இயக்குகின்ற 45 வயதிற்கு மேற்பட்ட ஓட்டுநர்கள் உடல் தகுதியினை அறிந்து, உடல் நலக் குறைவு ஏதேனும் இருப்பின் அதற்கான மருத்துவ வசதி பெற்றுக் கொள்ளும் வகையில், சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின் கீழ் இயங்கும் பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், ஆண்டுக்கு ஒரு முறை "முழு உடல் பரிசோதனை" செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் தற்போது கருணை அடிப்படையில் பணிபுரிந்து வரும் 338 வாரிசுதாரர்களின் பணி வரன்முறை செய்யப்பட்டு அவர்களது பணி நிரந்தரம் செய்யப்படும் என்பதையும்; பணியில் இருக்கும் போது இறந்து போன பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குப் பதிவு மூப்பின் அடிப்படையில், முதற்கட்டமாக ஒரு போக்குவரத்துக் கழகத்திற்கு

50 பணியிடங்கள் என்ற அடிப்படையில், 400 தொழில்நுட்ப காலிப் பணியிடங்கள் தொழில்நுட்ப பணி அல்லாத பழகுநர்களுக்கு மூன்று ஆண்டு பயிற்சி அளித்து நிரப்பப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஓய்வு பெற்றும், ஓய்வூதியப் பயன்களைப் பெறாத தொழிலாளர்களின் நிலையினைக் கருத்தில் கொண்டு, 2010 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை ஓய்வு பெற்ற 2,316 தொழிலாளர்களுக்கு ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகையான 47 கோடியே 71 இலட்சம் ரூபாய் இந்த மாதத்திலேயே வழங்கப்படும்.

இதே போன்று, 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2012 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரை ஓய்வு பெற்ற மற்றும் ஓய்வு பெற உள்ள 4,688 தொழிலாளர்களுக்கு ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகையான 96 கோடியே 57 இலட்சம் ரூபாய் நடப்பு நிதியாண்டில் வழங்கப்படும்.

அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் வழித்தடப் பேருந்துகளின் எண்ணிக்கை அதிகரித்து இருப்பதைக் கருத்தில் கொண்டு, 31.3.2013 வரை ஓய்வு பெறவுள்ள பணியாளர்களின் பணியிடங்களையும் உள்ளடக்கி, 6,910 ஓட்டுநர்கள், 7,402 நடத்துநர்கள் மற்றும் 2,349 தொழில்நுட்பப் பணியாளர்கள் என மொத்தம் 16,661 பணியிடங்கள் நிரப்பப்படும்.

இந்தப் பணியிடங்களில், 4,511 பதிலி ஓட்டுநர்கள், 4,558 பதிலி நடத்துநர்கள் மற்றும் 88 பதிலி தொழில்நுட்பப் பணியாளர்கள் என மொத்தம் 9,157 பதிலிப் பணியாளர்கள் நிரந்தரமாகப் பணியமர்த்தப்படுவார்கள்.

அரசுத் துறையின் அனைத்து வாகனங்களையும் பராமரித்து வரும் அரசு மத்திய தானியங்கிப் பணிமனை தனது பராமரிப்புப் பணிகளைத் தொய்வின்றி மேற்கொள்ளும் வகையில், மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையில் காலியாக உள்ள 398 தொழில்நுட்பப்

பணியிடங்கள் மற்றும் 171 பிற பணியிடங்கள் என மொத்தம் 569 காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும்.

பயணிகள் எளிதாகப் பயணச் சீட்டினைப் பெறும் வகையில், புவி இருப்பிட முறைமை வசதி கொண்ட கையடக்க இயந்திரங்களைப் பயன்படுத்தி மின்னணுப் பயணச் சீட்டு வழங்கும் முறை அனைத்துப் பேருந்துகளிலும் அறிமுகப்படுத்தப்படும்.

அரசு போக்குவரத்துக் கழகங்களால் 300 கிலோ மீட்டருக்கு மேல் இயக்கப்படும் தொலைதூர வழித்தட இயக்கத்தினை சீரமைக்கும் சீரிய நோக்கத்தின் அடிப்படையில், தொலைதூர வழித் தடப் பேருந்துகள் இனி அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும். இதன் காரணமாக, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத் தடப் பேருந்துகளின் எண்ணிக்கை 905லிருந்து 1,761ஆக அதிகரிக்கப்படுவதை அடுத்து, ஸ்ரீரங்கம், திண்டுக்கல், தேனி, காரைக்குடி, கரூர், ஈரோடு மற்றும் ஓசூர் ஆகிய ஏழு இடங்களில் புதிய பணிமனைகள் அமைக்கப்படும் என்பதையும்; கூடுதல் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு திருச்சி மாவட்டம் ஸ்ரீரங்கத்தில் பொது மேலாளர் அலுவலகம் ஒன்று தோற்றுவிக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமல்லாமல், கூடுதல் பேருந்துகள் இயக்கப்படுகின்ற அளவிற்குப் பணிமனைகள் இல்லாததைக் கருத்தில் கொண்டு, சென்னை, விழுப்புரம், சேலம், கோயம்புத்தூர், கும்பகோணம், மதுரை மற்றும் திருநெல்வேலி அரசுப் போக்குவரத்துக் கழகங்களால் தமிழ்நாடு முழுவதும் 25 புதிய பணிமனைகள் அமைக்கப்படும்.

எனது அரசின் இந்த நடவடிக்கைகள் காரணமாக, போக்குவரத்துக் கழகங்களின் சேவை மேலும் செம்மையுறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளுக்காக நாட்டிலேயே முதன்முறையாக மாநில ஆதார வள மையம்! - 10.5.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சமுதாயத்தின் ஓர் அங்கமாக மாற்றுத் திறனாளிகள் விளங்கும் வகையிலும், நாட்டின் சமூக – பொருளாதார வளர்ச்சியில் மாற்றுத் திறனாளிகளும் பங்கேற்கும் வகையில் சம வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும் வகையிலும், மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையிலும், அவர்களிடையே தன்னம்பிக்கையை வளரச் செய்யும் வகையிலும், அவர்களுக்கென பல கொள்கைகளை வகுத்தும், திட்டங்களைத் தீட்டியும் எனது அரசு செயல்படுத்தி வருகிறது.

மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகள், அதாவது கண் பார்வையற்றவர்கள், காது கேளாதவர்கள், வாய் பேசமுடியாதவர்கள், உடல் ஊனமுற்றவர்கள், மனவளர்ச்சிக் குன்றியவர்கள், கற்றலில் குறைபாடு, அதாவது Dyslexia, தசை சிதைவு Musculo distrophy, மூளை முடக்குவாதம் Cerebral Palsy, டௌன் குறைபாடுகள் Down Syndrome மற்றும் தற்புணை ஆழ்வு, அதாவது Autism உள்ள குழந்தைகளுக்கும், அவர்களின் இயலாத் தன்மையின் வகை, மற்றும் பாதிப்பின் அளவு ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களை உள்ளடக்கிய கல்வி, அதாவது, Inclusive Education ஐ எனது அரசு வழங்கி வருகிறது.

மாற்றுத் திறனாளிகளின் வாழ்வில் விடியல் பிறந்திட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், இதற்காக, சுமார் 41 கோடி ரூபாய் செலவில் 4,010 சிறப்பு ஆசிரியர்கள், 17 வாழ்வியல் திறன் பயிற்சி நிபுணர்கள் மற்றும் 719 தன்னார்வலர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதே போன்று, பாதிக்கப்பட்ட குழந்தைகளைக் கண்டறிய மாநிலம் முழுவதும் 601 மருத்துவ முகாம்கள் வட்டார அளவில் நடத்தப்பட்டதன் பேரில், 15,888 குழந்தைகள் கண்டறியப்பட்டு அக்குழந்தைகளுக்கு தேவையான உதவி உபகரணங்களும், 27 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை மூலம் உதவிகளும், 3 கோடியே 49 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்பட்டுள்ளன. இது மட்டுமல்லாமல், இக் குழந்தைகளுக்காக இந்த ஆண்டு விளையாட்டுப் போட்டிகள் மற்றும் கலை விழா நடத்தப்பட்டன. மேலும், இக் குழந்தைகளின் வசதியை மனதிற் கொண்டு சாய்தள நடைபாதை வசதியும், மாற்றியமைக்கப்பட்ட கழிவறை வசதியும் 714 பள்ளிகளில் அமைத்துக் கொடுக்கப்பட்டன. இது போன்ற எண்ணற்ற திட்டங்கள் மாற்றுத் திறனாளிகளுக்காக எனது அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக, மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்காக மட்டுமல்லாமல், இக்குழந்தைகளின் தேவைகளைப் பெற்றோர்கள் அறிந்து கொள்ளும் வகையில், நாட்டிலேயே முதன் முறையாக மாநில ஆதார வள மையம், State Resource Centre ஒன்று சென்னையில் அமைக்கப்படும் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மையத்தின் மூலம், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மற்றும் சுகாதாரத் துறையின் ஒருங்கிணைப்புடன் செயல்படும் சிறப்பு மருத்துவர்கள், வாழ்வியல் திறன் பயிற்சி வல்லுனர்கள், பேச்சுப் பயிற்சி வல்லுனர்கள் மற்றும் வெவ்வேறு குறைபாடுகளுக்கான ஆலோசகர்களின் தொழில் நுட்ப உதவிகளை மாற்றுத் திறன் கொண்டவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்கள் பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்படும்.

மேலும், அவர்களது குறைபாட்டின் தன்மையை முன்னதாகக் கண்டறிந்து சிகிச்சை அளிக்கவும், அதற்குத் தேவையான உபகரணங்களை மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கவும் இம்மையம் முன்னோடியாக விளங்கும். இது மட்டுமல்லாமல், அரசால் மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கப்படும் சான்றிதழ்கள், உதவித் தொகைகள் மற்றும் தேவையான உதவிகளைப் பெறுவதற்கு இம்மையம் வழிவகை செய்யும்.

பல்வேறு குறைகளை அறியவும், அவற்றிற்கான சிகிச்சை மற்றும் ஆலோசனை பெறுவதற்குரிய மையங்களைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்வதற்காகவும், இம் மாநில ஆதார வள மையத்தில் ஒரு தனிப்பிரிவு ஏற்படுத்தப்படும். மேலும், இது குறித்து இந்தியாவில் இருக்கும் அனைத்து மையங்களின் விவரங்களைத் தொகுத்து ஒரு கையேடு வெளியிடப்படும். இச்சேவை பெற்றோர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும்.

எல்லாக் குழந்தைகளையும் போல இக்குழந்தைகளும் புத்தகங்களைப் படித்துத் தங்களது திறனை வளர்த்து கொள்ள

வேண்டும் என்ற எனது நோக்கத்தின் அடிப்படையில், இம்மையத்தில் குழந்தைகளுக்கென பயன்படும் வகையில் தனியாக ஒரு நூலகப் பிரிவு துவங்கப்படும்.

மேலும் மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளிடையே படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, முதற்கட்டமாக கோயம்புத்தூர் மாவட்ட மைய நூலகத்தில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தனிப்பிரிவு தொடங்கப்படும். இது, பிற மாவட்ட நூலகங்களுக்குப் படிப்படியாக விரிவுபடுத்தப்படும்.

இந்தியாவிலேயே முன்னோடியாகத் தமிழகத்தில் தொடங்கப்பட இருக்கும் இம் மாநில ஆதார வள மையம் மற்றும் அரசால் வழங்கப்படும் மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்கான உள்ளடக்கிய கல்வி, ஆகியவைகள் இக்குழந்தைகளின் வாழ்வில் ஒளியேற்றி அவர்களுடைய வாழ்க்கையை சிறப்புற அமைத்துக் கொள்ள வழிவகை செய்து கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

## விசைத்தறி நெசவாளர்களுக்கு மின் கட்டணத்தில் கூடுதல் சலுகை! - 10.5.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேளாண்மைக்கு அடுத்தபடியாக ஊரகப் பகுதி மக்களின் வாழ்வாதாரமாக விளங்குவதிலும், நாட்டின் ஏற்றுமதி வருவாயை பெருக்குவதிலும் முக்கியப் பங்கு வகிப்பது நெசவுத் தொழில். இப்படிப்பட்ட இன்றியமையாத் தொழிலான நெசவுத் தொழிலின் வளர்ச்சிக்கு எனது அரசு முன்னுரிமை அளித்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 30.3.2012 அன்று மின் கட்டண விகித மாற்றம் குறித்த தனது ஆணையை வெளியிட்ட போது, அதில் விவசாயிகள், விசைத்தறி நெசவாளர்கள், வீட்டு மின் பயனீட்டாளர்கள் உள்ளிட்டவர்களுக்கு 3,554 கோடியே 16 இலட்சம் ரூபாய் அளவுக்கு கட்டணச் சலுகையை எனது தலைமையிலான அரசு வழங்கியிருந்தது. மேலும், 740 கோடி ரூபாய்க்கான மானியத்தையும் இந்த மாமன்றத்திலே நான் அறிவித்தேன்.

இந்தக் கட்டணச் சலுகையின்படி, விசைத்தறி நெசவாளர்கள் தற்போது இரு மாதங்களுக்கு பயன்படுத்தும் முதல் 500 யூனிட்டுகளுக்கு கட்டணம் ஏதும் செலுத்த வேண்டியதில்லை. 500 யூனிட்களுக்கு மேல் மின்சாரம் பயன்படுத்தும் விசைத்தறி

நெசவாளர்கள் 501 யூனிட்டுகளிலிருந்து, ஒரு யூனிட்டுக்கு 4 ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும். அதாவது, முதல் 500 யூனிட் வரை விசைத்தறி நெசவாளர்களுக்கு ஒரு யூனிட்டிற்கு 4 ரூபாய் 50 காசு என்று தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் கட்டணம் நிர்ணயித்திருந்த போதிலும், அந்த கட்டணத்தை அரசே ஏற்று, அவர்களுக்கு கட்டணமில்லாச் சலுகை வழங்கப்பட்டது. 500 யூனிட்டுகளுக்கு மேல் மின்சாரத்தை பயன்படுத்தும் விசைத்தறி நெசவாளர்களுக்கு, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் ஒரு யூனிட்டிற்கு 5 ரூபாய் என்று கட்டணம் விதித்திருந்த போதிலும், ஒரு யூனிட்டிற்கு ஒரு ரூபாய் மானியத்தை அரசு வழங்கி வருகிறது. அதாவது, அவர்களிடமிருந்து 1 யூனிட்டிற்கு 4 ரூபாய் மட்டுமே கட்டணமாக வசூலிக்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக, இந்த ஆண்டு விசைத்தறி நெசவாளர்களுக்கு மானியம் வழங்கும் வகையில் 153 கோடியே 15 இலட்சம் ரூபாயை எனது அரசு ஒதுக்கீடு செய்தது.

எனினும், தற்போது செலுத்தப்பட வேண்டிய மின் கட்டணம் உயர் அளவாக உள்ளது என்றும், அது குறைக்கப்பட வேண்டும் என்றும் விசைத்தறி நெசவாளர்கள் கோரிக்கைகள் விடுத்துள்ளனர். இதனை வலியுறுத்தி கடந்த சில நாட்களாக வேலை நிறுத்தம் மேற்கொண்டுள்ளனர். விசைத்தறி நெசவாளர்களின் இந்த கோரிக்கைகளை கனிவுடன் பரிசீலித்த எனது அரசு, அவர்களுக்கு கூடுதல் சலுகைகளை வழங்க தற்போது முடிவு எடுத்துள்ளது.

1. இதன்படி, இரு மாதங்களுக்கு 500 யூனிட்டுகள் வரை பயன்படுத்தும் விசைத்தறி நெசவாளர்களுக்கான கட்டணமில்லாச் சலுகை தொடரும். இதனால் 69,476 விசைத்தறி மின் நுகர்வோர் பயனடைவர்.

2. இரு மாதங்களுக்கு 501 முதல் 1,000 யூனிட்டுகள் வரை பயன்படுத்தும் உபயோகிப்பாளர்கள் தற்போதுள்ள கட்டணமான 4 ரூபாய்க்கு பதிலாக யூனிட் ஒன்றிற்கு 2 ரூபாய் மட்டும் செலுத்தினால் போதும். அதாவது, அவர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் ஒரு ரூபாயுடன், கூடுதலாக யூனிட் ஒன்றிற்கு 2 ரூபாய் மானியம் வழங்கப்படும். இதன் மூலம் 24,171 விசைத்தறி மின்நுகர்வோர் பயனடைவார்கள்.

3. இரு மாதங்களுக்கு 1,001 முதல் 1,500 யூனிட்டுகள் வரை பயன்படுத்தும் உபயோகிப்பாளர்கள் தற்போதுள்ள கட்டணமான 4 ரூபாய்க்கு பதிலாக யூனிட் ஒன்றிற்கு 3 ரூபாய் மட்டுமே செலுத்தினால் போதும். அதாவது, அவர்களுக்கு ஏற்கெனவே யூனிட் ஒன்றிற்கு வழங்கப்பட்டு வரும் ஒரு ரூபாய் மானியத்துடன், கூடுதலாக ஒரு ரூபாய் மானியத்தை அரசு வழங்கும். இதன் மூலம் 9,297 விசைத்தறி மின்நுகர்வோர் பயனடைவார்கள்.

4. இரு மாதங்களில் 1,500 யூனிட்டுகளுக்கும் அதிகமாக மின்சாரத்தை பயன்படுத்தும் 28,056 நெசவாளர்கள், தற்போது அனுபவித்து வரும் ஒரு ரூபாய் மானியத்தை தொடர்ந்து பெறுவார்கள். மேலும், முதல் 500 யூனிட்டுகள் கட்டணம் ஏதுமின்றியும், 501 முதல் 1,500 யூனிட்டுகள் வரை உள்ள பயன்பாட்டிற்கான சலுகைகளையும் பெறுவார்கள்.

5. இந்த சலுகைகளின் காரணமாக, 47 கோடியே 5 இலட்சம் ரூபாயை கூடுதல் மானியமாக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு தமிழக அரசு வழங்கும்.

**6.** இதுமட்டுமன்றி நிலையான கட்டணமாக மாதம் ஒன்றிக்கு கிலோ வாட் ஒன்றுக்கு தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம் நிர்ணயித்த கட்டணமான 50 ரூபாய் என்பது 30 ரூபாயாக குறைக்கப்படும். இதற்காக அரசு 12 கோடியே 64 இலட்சம் ரூபாயை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மானியமாக வழங்கும்.

என்னால் தற்போது அறிவிக்கப்பட்ட இந்த சலுகைகளின் காரணமாக, விசைத்தறி பயனீட்டாளர்களுக்கான மானியத் தொகை ஆண்டொன்றுக்கு 153 கோடியே 15 இலட்சம் ரூபாயிலிருந்து 212 கோடியே 84 இலட்சம் ரூபாயாக அதிகரிக்கும். இந்த அதிகரிக்கப்பட்ட மானியத் தொகையான 59 கோடியே 69 இலட்சம் ரூபாயை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு எனது அரசு வழங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சலுகைகள் மூலம் இந்தத் தொழிலை நம்பியுள்ள நெசவாளர்கள் நலம் பெற்று வளமான வாழ்வு பெறுவார்கள் என்ற எனது நம்பிக்கையினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

❋ ❋ ❋

# மேட்டூர் அனல் மின் நிலையத்தைச் சீரமைக்க உடனடி நடவடிக்கை!
## - 10.5.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இன்று, அதாவது 10.5.2012 அதிகாலை 00.30 மணியளவில் மேட்டூர் அனல் மின் நிலையத்தின் நிலக்கரி கையாளும் பகுதியில் தீ விபத்து ஏற்பட்டது. இதனையடுத்து, 9 தீயணைப்பு வண்டிகள் உடனடியாக தீயணைப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டதன் காரணமாக, சுமார் 4 மணி நேரத்திற்குள் தீ முழுவதும் அணைக்கப்பட்டுவிட்டது. இதன் மூலம் அனல் மின்நிலையத்திற்கு ஏற்படவிருந்த பெரும் பாதிப்பு தவிர்க்கப்பட்டது.

இந்தத் தீ விபத்தின் காரணமாக, இரண்டு சந்திப்பு கோபுரங்களுக்கு இடையே உள்ள நிலக்கரி கையாளும் பகுதி மற்றும் Conveyor System முற்றிலுமாக சேதம் அடைந்துள்ளதால், மேட்டூர் அனல் மின்நிலையத்தின் நான்கு யூனிட்டுகளுக்கும் நிலக்கரி எடுத்துச் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது Bunker–ல் உள்ள நிலக்கரி மூலம் இன்று மாலை வரை மட்டுமே மேட்டூர் அனல் மின் நிலையத்தை இயக்க இயலும்.

இந்தத் தீவிபத்தின் விளைவாக, மேட்டூர் அனல் மின் நிலையத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் 840 மெகாவாட் மின் உற்பத்திக்கு தடை ஏற்பட்டுள்ளது. இந்தத் தீ விபத்தினால் ஏற்பட்ட பாதிப்புகளை சீர்செய்து, மீண்டும் மின் உற்பத்தி பணிகளை துவக்க சுமார் ஒரு மாத காலம் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும், பொதுமக்களுக்கு பாதிப்பினை இயன்ற அளவு குறைக்கும் வகையில், தற்போது இயங்காமல் உள்ள தூத்துக்குடி

அனல் மின்நிலையத்தின் ஒரு யூனிட்டையும், வடசென்னை அனல் மின் நிலையத்தில் இயங்காமல் உள்ள ஒரு யூனிட்டையும் இன்று முதல் இயக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 420 மெகாவாட் மின் உற்பத்தி கிடைக்க வழிவகை ஏற்படும்.

மேலும், பிள்ளைபெருமாள்நல்லூரில் உள்ள தனியார் மின் உற்பத்தி நிலையத்திலிருந்து 330 மெகாவாட் மின்சாரம் பெறப்படும். இவற்றின்மூலம், இழப்பு ஏற்பட்டுள்ள 840 மெகாவாட் மின்சாரத்தில் 750 மெகாவாட் மின்சாரம் கிடைத்துவிடும்.

தீ விபத்தால் பாதிக்கப்பட்டுள்ள மேட்டூர் அனல் மின் நிலையத்தில் சீரமைக்கும் பணிகளை உடனடியாக மேற்கொண்டு, அந்தப் பணிகள் விரைந்து முடிக்கப்பட வேண்டும் என்று நான் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

இந்தத் தீ விபத்தில் உயிரிழந்த உதவியாளர் திரு. நல்லதம்பி அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தீ விபத்தில் படுகாயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள உதவியாளர் திரு. கோபால் அவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மாவட்ட நிருவாகத்திற்கு நான் உத்தரவிட்டுள்ளேன். மேலும், அவர் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தத் தீவிபத்தில் உயிரிழந்த நல்லதம்பி அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 2 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதையும், காயமடைந்த திரு. கோபால் அவர்களுக்கு 25,000 ரூபாய் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

## ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் கிராம விளையாட்டுப் போட்டிகள்!

- 10.5.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இளைய சமுதாயத்தினரின் அறிவு வளர்ச்சிக்கு கல்வி துணை நிற்பது போல், உடல் வளர்ச்சிக்கும், ஆரோக்கியத்திற்கும் இன்றியமையாததாக விளங்குவது விளையாட்டு என்று சொன்னால் அது மிகையாகாது.

இதனை உணர்ந்த எனது தலைமையிலான அரசு, கல்விக்கு அளிக்கும் அதே முக்கியத்துவத்தை விளையாட்டிற்கும் அளித்து வருகிறது. சர்வதேச அளவிலான போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் பங்கு கொண்டு வெற்றி பெறும் வகையில், தினப் பயிற்சி திட்டத்தின் மூலம் முழுமையான பயிற்சி அளித்தல்; பன்னாட்டு தரத்தில் விளையாட்டு மைதானங்கள் அமைத்தல்; உள் விளையாட்டு அரங்கங்களை அமைத்தல்; ஊக்கத் தொகை அளித்தல்; போன்ற பல்வேறு முனைப்பான திட்டங்கள் விளையாட்டுத் துறையின் மேம்பாட்டிற்காக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாட்டில் உள்ள 12,524 கிராம ஊராட்சிகளிலும் விளையாட்டினை மேம்படுத்தும் பொருட்டு, மத்திய – மாநில அரசுகளின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் கிராம இளைஞர் மேம்பாட்டு விளையாட்டுத் திட்டத்தின் கீழ் விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த

விளையாட்டு கட்டமைப்பு வசதிகளை சிறந்த முறையில் பராமரித்து பயன்படுத்திடும் வகையிலும், கிராம மக்களிடையே விளையாட்டு ஆர்வத்தை மேம்படுத்திடும் வண்ணமும், ஆண்டு ஒன்றுக்கு 25 கோடியே 5 இலட்சம் ரூபாய் செலவில் ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் கிராம விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆசிய தடகளப் போட்டிகளை இந்தியாவில் நடத்திட ஆசிய தடகள கழகம் அனுமதிக்கப்பட்டுள்ளதை அடுத்து, இந்திய தடகள சம்மேளனம், ஆசிய தடகளப் போட்டிகளை 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சென்னையில், தமிழ்நாடு அரசின் ஒத்துழைப்புடன் நடத்திட உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் போட்டிகளில் 44 நாடுகளைச் சார்ந்த தடகள விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்கேற்பார்கள் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இந்தப் போட்டிகளை சிறப்புற நடத்திட சென்னை நேரு விளையாட்டரங்கில் உள்ள செயற்கை இழை தடகள ஓடுபாதை மாற்றியமைக்கப்படுவதோடு, புதிய பயிற்சி செயற்கை இழை தடகள ஓடுபாதை ஒன்றும், அதாவது Warm up Track அமைக்கப்படும்; தற்போதுள்ள வசதிகள் அனைத்தும் உலக தரத்திற்கு உயர்த்தப்படும்; சர்வதேச தரத்திலான உபகரணங்கள் வாங்கப்படும். மேலும் இப்போட்டிகளில் பங்கு பெறும் அனைத்து பன்னாட்டு வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் உரிய வசதிகள் செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, இதற்காக 40 கோடி ரூபாய் செலவிடப்படும் என்பதையும் மன நிறைவுடன் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❋ ❋ ❋

## ரூ.136 கோடி மதிப்பீட்டில் 20 சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் திட்டங்கள்! - 11.5.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலைவாய்ப்பு மற்றும் உற்பத்தியைப் பெருக்குவதுடன், நமது நாட்டின் பொருளாதார அமைப்பின் துடிப்பான அங்கமாக, உயிர்நாடியாக குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன.

இந்த நிறுவனங்களின் உற்பத்தியை அதிகப்படுத்துதல், போட்டித் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் திறன் வளர்த்தல் ஆகியவற்றைக் குழும மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் செயல்படுத்த தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தை தமிழக அரசு முகவராக நியமித்துள்ளது. தமிழ்நாட்டில் குழுமத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக 50 திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதில், 7 திட்டங்கள் முழுமையடைந்துள்ளதோடு மட்டுமல்லாமல், 8 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. நடப்பாண்டில், 136 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 20 திட்டங்கள் நிறைவேற்றப்படும். இந்தத் திட்டங்களை விரைந்து நிறைவேற்றும் பொருட்டு, 10 உதவி வளர்ச்சி அலுவலர் பணியிடங்கள் புதிதாகத் தோற்றுவிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்குத் தேவையான தொழில்நுட்பப் பணியாளர்கள் கிடைக்க ஏதுவாக, விருத்தாசலத்தில் அமைந்துள்ள பீங்கான் தொழில்நுட்பப் பயிற்சி மையத்தின் மூலம் மூன்றரை ஆண்டு கால "பீங்கான் தொழில் நுட்பம்" பட்டயப் படிப்பும், திண்டுக்கல்லில் உள்ள கருவிப் பொறியியல் பயிலகத்தின் மூலம் மூன்று ஆண்டு கால அச்சு மற்றும் பொறியியல் படிப்பும், சென்னையிலுள்ள அரசினர் தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தின் மூலம் மூன்று ஆண்டு கால இயந்திரவியல் பட்டயப் படிப்புகளில் சிறப்புப் பிரிவுகளான அச்சு மற்றும் கருவிப் பொறியியல் மற்றும் குளிர் பதனம் மற்றும் காற்றுப் பதனவியல்" படிப்புகளும் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. இப்பயிலகங்களில் பயிற்சி பெற்ற அனைத்து மாணவர்களும் முன்னணி நிறுவனங்களில் நல்ல வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளனர்.

இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த இந்தப் பயிலகங்கள் மிகவும் பழுதடைந்துள்ளதைக் கருத்தில் கொண்டும், மாணவர்களின் தேவைகளுக்கேற்ப மாறிவரும் தொழிற்பயிற்சித் திட்டங்களை அளிக்கும் நோக்கத்துடனும், இப்பயிற்சி நிலையங்களின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் **3** கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்பாண்டில் மேம்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமல்லாமல், மத்திய அரசின் தாராளமயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் கொள்கையினைத் தொடர்ந்து, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் புதுப்புது சவால்களை ஒவ்வொரு ஆண்டும் சந்தித்து வருகின்றன. இவை உலகளாவிய போட்டியினைச் சமாளிக்கும் திறனுடன் செயல்பட வேண்டி

உள்ளது. எனவே, மாவட்டத் தொழில் மையங்களின் பணிகள் நவீனமயமாக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

மாவட்டத் தொழில் மையங்களின் பணிகளை நவீன முறையில் சீரமைக்கும் பொருட்டு, ஏற்கெனவே சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் மாவட்டத் தொழில் மைய அலுவலக கட்டடங்கள் தேவைக்கேற்ப நவீன வசதிகளுடன் சீரமைக்கப்படும். தேவை உள்ள இடங்களில் புதிய கட்டடம் கட்டித் தரப்படும். வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் மாவட்டத் தொழில் மைய அலுவலகங்களுக்கு நவீன வசதிகளுடன் கூடிய புதிய கட்டடங்கள் கட்டித் தரப்படும். மேலும், இம் மையங்களுக்குத் தேவையான நவீன கணினி மற்றும் தொலைத் தொடர்பு சாதனங்கள் நிறுவப்படுவதுடன், இம் மையங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சியும் அளிக்கப்படும். இப் பணிகள் **50** கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# நீதிமன்றங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் - 11.5.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஜனநாயகத்தின் மூன்றாவது தூணாக விளங்கும் நீதித் துறை சிறப்பாகச் செயல்பட வேண்டும் எனில், நீதிமன்றங்களுக்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது அவசியம் ஆகும்.

இந்த வகையில், பாரம்பரியமிக்க பழைய நீதிமன்றக் கட்டடங்கள் தொன்மை மாறாமல் புதுப்பொலிவுடன் விளங்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், சென்னை நகரில் இயங்கி வரும் பழமை வாய்ந்த ஜார்ஜ் டவுன் நீதிமன்றம், சைதாப்பேட்டை நீதிமன்றம், எழும்பூர் நீதிமன்றங்கள் மற்றும் சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் உள்ள சிறுவழக்குகள் நீதிமன்றம் ஆகிய கட்டடங்களுக்கு 22 கோடி ரூபாய் செலவில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தமிழகத்தில் வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் நீதிமன்றங்களுக்கென படிப்படியாகச் சொந்தக் கட்டடம் கட்டும் வகையில், முதற் கட்டமாக, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசால் அறிவிக்கப்பட்டுத் தொடங்கப்படாமல் இருந்த ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்

மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் திண்டிவனம் மெயின்ரோடு, ஜக்கம்பேட்டை கிராமத்தில் 8.15 ஏக்கர் நிலப்பரப்பில், 17 கோடியே 31 இலட்சத்து 69 ஆயிரம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

இதன் மூலம், விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில், பல்வேறு அரசுக் கட்டடங்கள் மற்றும் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் 8 நீதிமன்றங்களும் இந்த ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் செயல்பட வழிவகை ஏற்படுவதோடு, அனைத்து நீதிபதிகளுக்கும் குடியிருப்புகள் கிடைக்க வழிவகை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திட புதிய தயாரிப்பு மண்டலங்கள் - 11.5.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"அரும்பும் வியர்வை உதிர்த்துப் புவிமேல் ஆயிரம் தொழில் செய்திடுவீரே" என்ற மகாகவி பாரதியின் வரிகளுக்கு இணங்க, நமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாததாக விளங்கும் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், சாதகமான தொழில் கொள்கைகளை வகுத்து, தொழில் முனைவோர்களை தமிழ்நாட்டின் பக்கம் ஈர்க்கும் நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

புதிய முதலீடுகளை ஈர்த்து, புதிய தொழிற்சாலைகளைத் தோற்றுவித்து, வேலைவாய்ப்புகளை உருவாக்கி, அதன்மூலம் தமிழக மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட வேண்டும் என்பதே எனது அரசின் இலக்காகும். இந்த இலக்கை அடைய வேண்டுமெனில், எரிசக்தியில் தன்னிறைவு அடையப்பட வேண்டும். பிற மாநிலங்களில், எரிசக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் இயற்கை எரிவாயுவின் பங்களிப்பு இருந்தாலும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், எரிசக்தி தேவைகள் நிலக்கரி மற்றும் பெட்ரோலியப் பொருட்களையே சார்ந்துள்ளன.

கிருஷ்ணா, கோதாவரி படுகையிலிருந்து கிடைக்கப் பெறும் எரிவாயு, குழாய் கட்டமைப்பு உள்ள மாநிலங்களுக்கு மட்டும் மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தென் மாநிலங்களைப் பொறுத்தவரை ஆந்திர மாநிலத்திற்கு மட்டும் தான் எரிவாயு ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

தமிழ்நாட்டின் எரிசக்தித் தேவையைப் பூர்த்தி செய்ய எரிவாயுவின் பங்களிப்பு அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, அதன் அடிப்படையில், எனது அரசால் வெளியிடப்பட்ட "தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023ல்" திரவ நிலை எரிவாயு முனையங்கள் அமைப்பது மற்றும் எரிவாயு விநியோகக் குழாய் இணைத் தொகுதிகள் அமைப்பது ஆகியவை எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் எரிசக்தித் தேவையைப் பூர்த்தி செய்ய வருடத்திற்கு 5 மில்லியன் டன் கையாளும் திறன் கொண்ட இரண்டு திரவ நிலை எரிவாயு இறக்குமதி முனையங்கள் தேவை எனக் கண்டறியப்பட்டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம் காட்டுப்பள்ளி கிராமத்தில் எண்ணூர் துறைமுகத்தின் அருகில், திரவநிலை எரிவாயு இறக்குமதி முனையம் ஒன்றினை அமைக்கும் வகையில், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும், அதாவது டிட்கோ நிறுவனமும், மத்திய அரசு நிறுவனமான இந்தியன் ஆயில் நிறுவனமும் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை 22.3.2012 அன்று எனது முன்னிலையில் செய்து கொண்டன.

2016ஆம் ஆண்டில் இம்முனையம் செயல்படும்போது ஆண்டொன்றுக்கு 5 மில்லியன் டன் திரவநிலை எரிவாயுவை இறக்குமதி செய்து அதன் மூலம் நாளொன்றுக்கு சுமார் 18 மில்லியன் கனமீட்டர் எரிவாயுவை தமிழ்நாட்டின் மின் உற்பத்திக்கும், தொழிற்சாலைகளுக்கும், வாகனங்களுக்கும், வீட்டு உபயோகத்திற்கும் விநியோகம் செய்ய இயலும்.

இதனை விநியோகிக்கத் தேவையான குழாய் தொடரமைப்புத் திட்டங்கள் அவசியம் என்பதன் அடிப்படையில், கெயில் நிறுவனமும், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும், அதாவது டிட்கோ நிறுவனமும் எரிவாயு ஒத்துழைப்புச் செயல் திட்ட ஒப்பந்தம் ஒன்றில் 10.5.2012 அன்று எனது முன்னிலையில் கையெழுத்திட்டன.

1. கெயில் நிறுவனம் கொச்சியில் நிறுவப்பட்டு வரும் திரவ எரிவாயு முனையத்திலிருந்து எரிவாயுவைக் கொண்டு செல்லும் கொச்சி–பெங்களூரு குழாய் தொடரமைப்புத் திட்டத்தின் கட்டுமானப் பணிகளைத் தொடங்கியுள்ளது. இக்குழாய் தொடரமைப்பில், 310 கிலோ மீட்டர் நீளமுள்ள பகுதி தமிழ்நாட்டின் கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர், நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் வழியாகச் செல்லும். கெயில் நிறுவனம் தமிழ்நாடு வழியே செல்லும் இக்குழாய் தொடரமைப்பின் பாதையில் உள்ள தொழில் மையங்கள், போக்குவரத்து வாகனங்கள், நகர்ப்புரத்தில் உள்ள வீடுகள் ஆகியவற்றிற்கு தேவையான எரிவாயுவை விநியோகம் செய்வதற்கான இணை குழாய் தொடரமைப்புத் திட்டத்தினை மேற்கொள்ளும். இத்திட்டம் 1,000 கோடி ரூபாய் முதலீட்டில் செயல்படுத்தப்படும்.

2. இந்த குழாய் தொடரமைப்பின் சேலம் முனையத்திலிருந்து கடலூர் பகுதி வரையில் நாளொன்றுக்கு 6 மில்லியன் கன மீட்டர் எரிவாயு கொண்டு செல்லும் குழாய்களை அமைக்கும் திட்டம் 500 கோடி ரூபாய் முதலீட்டில் செயல்படுத்தப்படும்.

3. தென் மாவட்ட கடலோர பகுதியில் மிதக்கும் திரவ நிலை எரிவாயு முனையம், அதாவது, Floating Storage Degasification Unit ஒன்றினை உருவாக்கும் திட்டம் சுமார் 2,500 கோடி ரூபாய் முதலீட்டில் செயல்படுத்தப்படும்.

இந்தத் திட்டங்கள் கெயில் நிறுவனத்தால் செயல்படுத்தப்படும். டிட்கோ நிறுவனம் இதற்குத் தேவையான ஒத்துழைப்பை நல்கும்.

மேலும் கொச்சி–பெங்களூரு எரிவாயு குழாய் தொடரமைப்பில் கிடைக்கும் எரிவாயு மூலம் முதற் கட்டமாக 500 மெகா வாட் திறனுள்ள மின் உற்பத்தி திட்டம் 2,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். இதனை நிறைவேற்ற டிட்கோவும், கெயில் நிறுவனமும் இணைந்து ஒரு கூட்டுத் துறை நிறுவனத்தை

ஏற்படுத்தும். இந்தத் திட்டம் வரும் ஐந்தாண்டுகளில் மேலும் விரிவுபடுத்தப்பட்டு 10,000 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் வகையில், உயர்தர உட்கட்டமைப்பு, பொது உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் போட்டியிட்டு வணிகம் செய்வதற்கு ஏற்ற சூழ்நிலைகளைக் கொண்ட புதிய தயாரிப்பு மண்டலங்கள் உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதற்கட்டமாக, தூத்துக்குடி மாவட்டம்–ஒட்டப்பிடாரத்தில் 1,500 ஏக்கர்; வேலூர் மாவட்டம்–காட்ராம்பாக்கத்தில் 2,000 ஏக்கர்; கிருஷ்ணகிரி மாவட்டம்–ஓசூரில் 4,000 ஏக்கர் பரப்பளவில் புதிய தயாரிப்பு மண்டலங்கள் நிறுவப்படும். இந்த புதிய மண்டலங்களை நிறுவி மேலாண்மை செய்வதற்காக ஒவ்வொரு மண்டலத்திற்கும் ஒரு சிறப்பு நோக்க நிறுவனம் (Special Purpose Vehicle) அமைக்கப்படும்.

எண்ணூர் துறைமுகம் பகுதியின் முக்கியத்துவத்தைக் கருதி அங்குள்ள சாலைகளின் தரம் மேம்படுத்தப்படும் என்றும், ஓரகடம் பகுதியில் உள்ள தொழில் நிறுவனங்கள் தங்கள் ஏற்றுமதிப் பொருட்களை எளிதில் அனுப்ப வசதியாக வடக்குத் துறைமுக இணைப்புச் சாலை அமைக்கப்படும் என்றும் நான் ஏற்கெனவே அறிவித்திருந்தேன். புதிதாக உருவாகும் இந்த சாலைகளுக்கு அருகில் சுமார் 1,000 ஏக்கர் பரப்பளவில் கனரக பொறியியல் தொழிற்சாலைகளுக்கான ஒரு பெரு மையம், அதாவது Hub ஒன்று உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியைப் பரவலாக்கும் நோக்கத்துடனும், புதிய தொழில் முனைவோருக்குத் தேவையான நிலங்களை உட்கட்டமைப்பு வசதிகளோடு வழங்கும் நோக்கத்துடனும், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், அதாவது சிப்காட் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் தற்போது தமிழ்நாட்டில் முதலீடு செய்ய முன்வரும் பெரும் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான நிலங்களை விரைந்து அளிக்க வசதியாக சுமார் 20,000 ஏக்கர் நிலங்களைக் கையகப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தினால் பராமரிக்கப்பட்டு வரும் தொழிற் பூங்காக்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த, 100 கோடி ரூபாய் நிதியுடன் ''தொழில் கட்டமைப்பு தொகுப்பு நிதி'' ஒன்று உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தொகுப்பு நிதியை உருவாக்குவதற்கு, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் 80 கோடி ரூபாயும், அரசு 20 கோடி ரூபாயும் நிதி உதவி அளிக்கும். இந்த நிதியின் மூலம், சிப்காட் தொழிற்பூங்கா அமைந்துள்ள பகுதிகளில், தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலையுடன் இணைப்பதற்கான சாலைகள் அமைத்தல், சிறு பாலங்கள் கட்டுதல், ஏற்கெனவே உள்ள இணைப்புச் சாலைகளை மேம்படுத்தி அகலப்படுத்துதல், மாசுக் கட்டுப்பாட்டிற்குத் தேவையான பொது உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல், குடிநீர் அல்லது தொழிற்சாலைகளுக்குத் தேவையான புதிய நீர் ஆதாரங்களை உருவாக்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

## மீனவர்களின் நலன்காக்க மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறோம்!

- 14.5.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மிகவும் பழமை வாய்ந்த தொழில்களில் ஒன்றான மீன்பிடித் தொழில் மூலம் உயர்தர புரதச் சத்துடன் கூடிய தரமான உணவுத் தேவையினைப் பூர்த்தி செய்வதிலும், வேலை வாய்ப்புகளை உருவாக்குவதிலும், அந்நியச் செலாவணியை ஈட்டுவதிலும் முக்கியப் பங்கினை தமிழக மீனவர்கள் வகிக்கிறார்கள்.

இப்படிப்பட்ட இன்றியமையாத் தொழிலைச் செய்யும் மீனவர்களின் நலன் காக்கும் வகையில், மீன்பிடித் தடைக் காலத்தில் நிவாரணத் தொகை வழங்குவது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை எனது அரசு எடுத்து வருகிறது.

தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையினரின் தாக்குதல்களை நிறுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்கவும், இந்நிகழ்வுகளை ஒரு தேசியச் பிரச்சினையாகக் கருதி பிரச்சினைக்குத் தீர்வு காணவும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைக் கடிதம் மூலம் பலமுறை வலியுறுத்தியுள்ளேன்.

இந்தச் சூழ்நிலையில், 10.5.2012 அன்று பாம்பன் கிராமத்தைச் சார்ந்த 5 மீனவர்கள் ஒரு நாட்டுப் படகில் இராமேஸ்வரம் அருகே அரியமான் கடற்கரையிலிருந்து நான்கு கடல் மைல் தொலைவில் மீன் பிடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, இரவு 8.45 மணியளவில் இந்தியக் கடலோரக் காவல் படையின் கப்பலொன்று மீன்பிடிப்பு மேற்கொண்டிருந்த இப்படகின் மீது

மோதியதாகத் தெரிகிறது. இதன் காரணமாக மீன்பிடிப் படகு சேதமுற்று கடலில் மூழ்கியது. படகில் இருந்த 5 மீனவர்களில், நான்கு மீனவர்கள் சிறிது தொலைவு நீந்தி வேறு ஒரு வள்ளத்தில் ஏறிக் கரை சேர்ந்தனர். மற்ற ஒரு மீனவரான திரு பௌனிராஜ் என்பவரின் மகன் கால்வின் மில்லர் காயமுற்று நீரில் மூழ்கிக் காணாமல் போய்விட்டார். 12.5.2012 அன்று காலையில் இந்த 19 வயது இளைஞனின் உடல் மண்டபத்திலிருந்து 7 கடல் மைல் தொலைவில் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தச் செய்தியைக் கேட்டு அதிர்ச்சியடைந்த நான், அகால மரணமடைந்த மீனவர் கால்வின் மில்லர் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்ததுடன், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஐந்து இலட்சம் ரூபாய் நிவாரண உதவியை உடனடியாக அளித்திட உத்தரவிட்டுள்ளேன்.

எனது உத்தரவின்பேரில், தமிழக அரசின் தலைமைச்செயலாளர் அவர்கள் புது டில்லியில் உள்ள இந்தியக் கடலோரக் காவல் படையின் தலைமை இயக்குநரைக் கடிதம் மூலம் தொடர்பு கொண்டு இவ்விபத்தின் உண்மை நிலையினை அறிய விரிவான விசாரணை ஒன்று மேற்கொள்ள வேண்டுமென்றும் மீனவரின் இறப்பிற்குக் காரணமான நபர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

மீனவர்களின் நலன் காப்பதற்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வரும் எனது தலைமையிலான அரசு, இந்நிகழ்வில் பாதிக்கப்பட்ட மீனவரின் குடும்பத்திற்கு நியாயம் கிடைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

## தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் வசதியற்ற மாணாக்கர்களுக்கு அரசே கட்டணம் செலுத்தும்!-14.5.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொருளாதாரத்தில் ஒரு நாடு சிறந்து விளங்க வேண்டுமெனில், ஏட்டுக் கல்வியுடன் தொழில் கல்வியும் வளர்ச்சி பெற வேண்டியது இன்றியமையாதது ஆகும்.

இதன் அடிப்படையில், இளைய சமுதாயத்தினர் தொழில் கல்வியில் வளர்ச்சி பெறத் தேவையான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருவதன் காரணமாக, தொழில்நுட்பத் தகுதி பெற்றுள்ள மாணவ – மாணவியரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள 62 அரசுத் தொழிற் பயிற்சி நிலையங்கள் மூலம், சுமார் 21,000 மாணவ, மாணவியருக்குக் கட்டணம் எதுவும் இன்றி பயிற்சி அளிக்கப்படுகிறது. தகுதி பெற்ற அனைத்து மாணவ–மாணவியருக்கும் அரசுத் தொழிற் பயிற்சி நிலையங்கள் மூலம் பயிற்சி அளிக்க முடியாத சூழ்நிலை உள்ளது.

அதே சமயத்தில், தமிழ்நாட்டில் உள்ள 627 தனியார் தொழிற் பயிற்சி நிலையங்கள் மூலம் 60,320 மாணவ – மாணவியருக்குப் பயிற்சி அளிக்க முடியும். ஊரகப் பகுதிகளில் உள்ள தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் 20,000/– ரூபாய் முதல் 25,000/– ரூபாய் வரையிலும், நகரப் பகுதிகளில் உள்ள தனியார்

தொழிற்பயிற்சி நிலையங்கள் 25,000/– ரூபாய் முதல் 30,000/– ரூபாய் வரையிலும் பயிற்சிக் கட்டணமாக வசூலிக்கின்றன. இந்தப் பயிற்சிக் கட்டணத்தை ஏழ்மை நிலையில் உள்ள படித்த இளைஞர்களால் கட்ட முடியாததால், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50 விழுக்காட்டிற்கு மேல் இடங்கள் நிரப்பப்படாமல் காலியாகவே உள்ளன.

தொழில் சார்ந்த திறன் பயிற்சி மற்றும் அறிவு சார் திறன் பயிற்சி பெற்ற மனித வளத்தை உருவாக்குவது, தமிழ்நாட்டின் தொலைநோக்குத் திட்டம் – 2023இன் வெற்றிக்கு ஆதாரமாக அமையும். வரும் 11 ஆண்டுகளில், 2 கோடி நபர்களை வேலை வாய்ப்புக்கு ஏற்ற பயிற்சி மற்றும் திறன் பெற்ற பணியாளர்களாக உருவாக்குவது தொலை நோக்குத் திட்டம்–2023இன் வளர்ச்சி யுத்திகளில் ஒன்றாகும்.

இந்தச் சூழ்நிலையில், வேலைவாய்ப்புக்கேற்ற பயிற்சித் திறனைத் தகுதி படைத்த மாணவ – மாணவியர் அனைவருக்கும் அளித்திடும் வண்ணம், அங்கீகரிக்கப்பட்ட மற்றும் தகுதியுள்ள தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50 விழுக்காடு இருக்கைகளை, அரசுத் தொழிற்பயிற்சி நிலையங்களில் பின்பற்றப்படும் மாணவர் சேர்க்கை முறையைப் பின்பற்றி, மாவட்டந்தோறும் கலந்தாய்வு நடத்தி, அரசே நிரப்பும் வண்ணம் நடவடிக்கை எடுக்கப்படும். இதனால் திறமை இருந்தும், வசதியின்மை காரணமாக தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர இயலாத மாணவ–மாணவியர் பெரிதும் பயன் அடைவர். தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் இம் மாணவ – மாணவியர் வேலை வாய்ப்பைப் பெறும் வகையில் ஒரு வருட மற்றும் இரண்டு வருடப் படிப்புகளில் பயிற்சி அளிக்கப்படும். அரசுத் தொழிற்

பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவ—மாணவியரைப் போலவே, இத்திட்டத்தின் மூலம் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் சேர்ந்து பயிலும் மாணவ—மாணவியரிடமிருந்து பயிற்சிக் கட்டணம் ஏதும் வசூலிக்கப்பட மாட்டாது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இம்மாணவ—மாணவியர் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களுக்குச் செலுத்த வேண்டிய பயிற்சிக் கட்டணத்தை அரசே செலுத்தும். இதன்படி ஊரகப் பகுதிகளில் உள்ள தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு மாணாக்கர் ஒருவருக்கு 10,000 ரூபாய் வீதமும், நகர்ப் பகுதிகளில் உள்ள தனியார் பயிற்சி நிலையங்களுக்கு மாணாக்கர் ஒருவருக்கு 12,000 ரூபாய் வீதமும் பயிற்சிக் கட்டணம் அரசால் செலுத்தப்படும்.

இத்திட்டத்தின் மூலம் முதலாம் ஆண்டில் சுமார் 18,000 மாணவ — மாணவியரும், பின்னர் வரும் ஆண்டுகளில் 30,000 மாணவ — மாணவியரும், வேலைவாய்ப்புக்கு ஏற்ற திறன் பயிற்சி பெறுவார்கள். இதற்கென 2012—2013ஆம் ஆண்டில் 14 கோடியே 85 இலட்சம் ரூபாயும், 2013—2014ஆம் ஆண்டில் 26 கோடியே 40 இலட்சம் ரூபாயும், 2014—2015ஆம் ஆண்டு முதல் ஆண்டொன்றுக்கு 33 கோடி ரூபாயும் அரசுக்குச் செலவு ஏற்படும்.

இதன் மூலம், தனியார் துறையில் இளைஞர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பு கிடைத்து, அவர்களது பொருளாதார நிலை உயர்வதுடன், நாட்டின் தொழில் உற்பத்தித் திறனும் அதிகரிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்த 5 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்-14.5.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தொழில்நுட்பத் தகுதியுடன் கூடிய சிறப்பான மனித வளத்தைக் கொண்டுள்ள தமிழ்நாட்டில், அதிக அளவு தொழில் முனைவோரை ஈர்க்கும் வகையில், கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிகளை, தொலைநோக்குப் பார்வையுடன் எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

இந்தியாவின் ஒட்டுமொத்த வளர்ச்சி விகிதத்தைவிட தமிழகத்தின் வளர்ச்சி விகிதம் 20 விழுக்காடு அதிகமாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தொலைநோக்குத் திட்டம் 2023 தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், தொழில் துறையில் நேரடி முதலீட்டை ஈர்ப்பதில் ஒரு முன்னணி மாநிலமாகவும், ஆசியாவிலேயே முதலீட்டுக்கு உகந்த முதல் 3 இடங்களில் ஒன்றாகவும் தமிழ்நாட்டை உருவாக்கவேண்டும் என்பதும் தொலைநோக்குத் திட்டத்தில் அடங்கியுள்ள குறிக்கோள் ஆகும்.

இத்தகைய வளர்ச்சியை நாம் அடைய வேண்டுமென்றால் அதற்குத் தேவையான எரிசக்தி கிடைப்பதை உறுதிசெய்வது அவசியம் என்பதால், கடந்த 10.5.2012 அன்று கெயில் இந்தியா நிறுவனத்துடன் மிகப்பெரும் எரிவாயு ஒப்பந்தம் ஒன்றினைத் தமிழக அரசின் டிட்கோ நிறுவனம் எனது முன்னிலையில்

கையெழுத்திட்ட விவரத்தை நான் ஏற்கெனவே இந்த அவையில் 11.5.2012 அன்று அறிவித்தேன்.

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தும் விதமாக, இன்று என் முன்னிலையில் 5 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன என்ற செய்தியை இந்த மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. ஒரகடத்தில் டெய்ம்லர் இந்தியா கமர்ஷியல் வெஹிகிள் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் (Daimler India Commercial Vehicles Private Limited) தொழிற்சாலையை 18.4.2012 அன்று நான் திறந்து வைத்ததை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். 2008ஆம் ஆண்டு கடந்த ஆட்சியின்போது டெய்ம்லர் நிறுவனம் 3,000 கோடி ரூபாய் முதலீடு செய்ய ஒப்பந்தம் கையெழுத்திட்டது. ஆனால், அந்நிறுவனம் 2010ஆம் ஆண்டில் தனது முதலீட்டினை 2,000 கோடி ரூபாயாகக் குறைத்துக் கொண்டது. எனது தலைமையிலான அரசால் எடுக்கப்பட்ட பல முன்னோடி நடவடிக்கைகளின் காரணமாக டெய்ம்லர் நிறுவனம் 2,000 கோடி ரூபாயாகக் குறைத்த தனது முதலீட்டினை இருமடங்காக்கி 4,000 கோடி ரூபாயாக முதலீடு செய்ய தற்போது முன் வந்துள்ளது. அதற்கான ஒப்பந்தம் இன்று கையெழுத்திடப்பட்டது. இதன் மூலம் 3,000 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பு உருவாகும்.

2. ஜப்பான் நாட்டின் உலகப் புகழ்பெற்ற யமஹா நிறுவனம் மோட்டார் சைக்கிள்கள், மின்னணுப் பொருட்கள், இசைக் கருவிகள், படகுகளுக்கான மோட்டார் என்ஜின்கள் போன்றவற்றைத் தயாரிக்கும் நிறுவனமாகும். தற்போது, இந்தியா

யமஹா மோட்டார் லிமிடெட் நிறுவனம் (India Yamaha Motor Limited), காஞ்சிபுரம் மாவட்டம் வல்லம் வடகால் சிப்காட் தொழிற் பூங்காவில் 1,500 கோடி ரூபாய் முதலீட்டில் 125 ஏக்கர் பரப்பளவில் அதிநவீன மோட்டார் சைக்கிள்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினை நிறுவுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இன்று காலை கையெழுத்தானது. இதன் மூலம் 3,000 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும் 20 ஆயிரம் பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும்.

3. அசோக் லேலண்ட் – நிசான் மோட்டார் கம்பெனி லிமிடெட் நிறுவனத்துடன் (Ashok Leyland - Nissan Motor Company Limited) முந்தைய அரசு 8.9.2008 அன்று இலகுரக வாகனங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பதற்காக, 4,150 கோடி ரூபாய் முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிட்டது. ஆனால், இந்நிறுவனத்திற்கு ஒப்பந்தத்தின்படி வழங்க வேண்டிய நிலம், 21.2.2011 அன்று, அதாவது சுமார் இரண்டரை ஆண்டுகள் கழித்துதான் முந்தைய அரசால் வழங்கப்பட்டது. மேலும், அந்நிறுவனத்தின் சில நிருவாகக் கோரிக்கைகள் முறையாகப் பரிசீலித்து முடிவெடுக்கப் படாததால், இந்தத் திட்டம் தொடங்கப்படாமலேயே இருந்தது. முடங்கிக் கிடந்த இத்திட்டத்திற்கு எனது அரசு மீண்டும் புத்துயிரூட்டி புதிய புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று இன்று கையெழுத்திடப்பட்டது. ஓசூர், பிள்ளைப்பாக்கம், எண்ணூர், வெள்ளிவாயல்சாவடி மற்றும் ஒரகடம் ஆகிய பகுதிகளில் அமையவுள்ள இத்திட்டத்தின் மூலம் 3 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

4. புகழ்பெற்ற ராயல் என்ஃபீல்ட் மோட்டார் சைக்கிள்களைத் தயாரிக்கும் எய்ஷர் மோட்டார் நிறுவனம் (Eicher Motors

Limited) புதிய தொழிற்சாலை ஒன்றினை ஒரகடத்தில் நிறுவ முன்வந்துள்ளது. இதற்காக, ஒரகடம் சிப்காட் தொழிற்பூங்காவில் 50 ஏக்கர் நிலத்தை எனது அரசு வழங்கியுள்ளது. அங்கு 350 கோடி ரூபாய் முதலீடு செய்ய இன்று அந்நிறுவனம் தமிழ்நாடு அரசுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இதன் மூலம் 300 புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும்.

5. இதேபோன்று, ஆர்.பி. கோயங்கா குழுமத்தின் நிறுவனமான ஃபிலிப்ஸ் கார்பன் பிளாக் லிமிடெட் நிறுவனம் (Philips Carbon Black Limited), டயர் தயாரிப்பதற்குத் தேவையான கார்பன் பிளாக் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றினை 350 கோடி ரூபாய் முதலீட்டில் திருவள்ளூர் மாவட்டம் தேர்வாய்க்கண்டிகை சிப்காட் தொழிற் பூங்காவில் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இன்று கையொப்பமிட்டது. இத்தொழிற்சாலையில் 230 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

இன்று ஏற்படுத்தப்பட்ட இந்த ஐந்து புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் மூலம் தமிழகத்திற்குப் புதியதாக வரக்கூடிய முதலீடு குறைந்தபட்சம் 5,700 கோடி ரூபாய் ஆகும். புதிதாக உருவாகும் வேலைவாய்ப்புகள் 9,530 ஆகும்.

இன்னும், பல தொழில் முதலீட்டு முன்மொழிவுகள் அரசின் பரிசீலனையில் உள்ளன என்பதையும், அவற்றுக்கான ஒப்புதல் விரைவில் வழங்கப்பட்டு, அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் விரைவில் கையொப்பமிடப்பட உள்ளன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

## சத்துணவு உண்ணும் பள்ளிக் குழந்தைகளுக்கு இந்த ஆண்டு முதல் 4 இணை சீருடைகள்!-14.5.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குழந்தைகள் பசியால் வாடி நலமற்றவர்களாக மாறுவதைத் தடுக்கும் பணியிலும், அவர்களிடையே காணப்படும் ஊட்டச்சத்துக் குறைபாட்டைப் போக்கும் பணியிலும் அங்கன்வாடி மையங்கள் ஈடுபட்டு வருகின்றன.

இந்த அங்கன்வாடி மையங்களில், இணை உணவு, முட்டை, சூடான மதிய உணவு ஆகியவற்றுடன் முன் பருவக் கல்வியும் குழந்தைகளுக்கு அளிக்கப்படுகின்றன. மேலும், இந்த மையங்களில் கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளர் இளம் பெண்கள் ஆகியோருக்கு இணை உணவும், முதியோர்களுக்கு மதிய உணவும் அளிக்கப்படுகிறது. தற்போது, தமிழகம் முழுவதிலும் உள்ள இந்த அங்கன்வாடி மையங்கள் மூலம் 31 இலட்சம் பயனாளிகள் பயனடைந்து வருகின்றனர்.

இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த அங்கன்வாடி மையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், பராமரிப்புப்பணிகளை மேற்கொள்ளவும், மின் கட்டமைப்புவசதிகளை மேம்படுத்தவும், மின் விசிறி மற்றும் மின் விளக்கு ஆகியவற்றைப் பொருத்தவும் நான் சென்ற ஆண்டு ஆணையிட்டேன்.

தற்போது தமிழ்நாட்டில் உள்ள 54,439 அங்கன்வாடி மையங்களில், 16,645 அங்கன்வாடி மையங்களில் சமைக்கும் நேரத்தை மிச்சப்படுத்தும் வகையிலும், மாசற்ற சுற்றுச் சூழலை உருவாக்கும் வகையிலும் ‘புகையில்லா சமையலறைகள்’ அமைக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 37,794 அங்கன்வாடி மையங்களில் 5,000 அங்கன்வாடி மையங்களில் இந்த ஆண்டில், அதாவது 2012–2013ஆம் ஆண்டில், 3 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில், எரிவாயு அடுப்பு, எரிவாயு இணைப்பு மற்றும் அழுத்தக் கலன், அதாவது, பிரஷர் குக்கர் ஆகிய உபகரணங்கள் வழங்கப்பட்டு, புகையில்லா சூழ்நிலையை உருவாக்கக்கூடிய நவீனமயமாக்கும் பணி மேற்கொள்ளப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இந்த மையங்களுக்கு அதிக அளவில் குழந்தைகள் ஊட்டச்சத்து உணவைப் பெறுவதற்காகவும், 2 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகள் பள்ளிசாரா முன்பருவக்கல்வி பெறுவதற்காகவும் வருகை புரிவதை ஊக்குவிக்கும் பொருட்டு, 2 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு இரண்டு வண்ண உடைகள் இந்த ஆண்டு முதல் வழங்கப்படும். இந்த முன்னோடித் திட்டம் முதற்கட்டமாக, சென்னை, வேலூர், திருச்சிராப்பள்ளி, தேனி மற்றும் திண்டுக்கல் ஆகிய 5 மாவட்டங்களில் உள்ள 2,01,032 குழந்தைகள் பயனடையும் வகையில், 4 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் நடைமுறைப்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதேபோன்று, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயனடையும் பள்ளிக் குழந்தைகளுக்காக

வழங்கப்பட்டு வந்த இரண்டு இணை சீருடைகளை, நான்கு இணை சீருடைகளாக இந்த ஆண்டு முதல் உயர்த்தி வழங்க நான் ஆணையிட்டுள்ளேன். மகளிர் தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்களால் இந்தப் பணியைக் குறித்த காலத்தில் முடிக்க முடியாது என்பதைக் கருத்தில் கொண்டும், இந்த கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள மகளிர் அதிக ஊதியம் பெற வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டும், மகளிர் தையற்ச் கூட்டுறவு சங்கங்களில் 54,000 நவீன தையல் இயந்திரங்களை 54 கோடி ரூபாய் செலவில் வாங்க வழிவகை செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தொகை மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மூலம் கடனாக வழங்கப்படும் என்பதையும், இந்தத் தையல் கூட்டுறவுச் சங்கங்கள் கடனுதவி பெறத்தக்க வகையில் 10 விழுக்காடு அளவிற்கு ஆதார நிதியை அரசு வழங்கும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் மூலம், தையல் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் தைக்கும் திறன் மூன்று மடங்காக உயர்வதால், இதர நிறுவனங்களிடமிருந்து தைக்கும் வேலை வாய்ப்பினை இவர்கள் பெற்று, அதிக வருவாய் பெற வழி ஏற்படும். மேலும், மாணவ–மாணவியருக்கு குறித்த காலத்தில் சீருடை வழங்க வழிவகை ஏற்படுவதுடன், சீருடைகளின் தையல் தரம் மேம்பட்டதாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# மானசரோவர் - முக்திநாத் செல்லும் இந்துப் பயணிகளுக்கு அரசு மானியம்!-15.5.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆயிரம் இன்னல்கள் வந்தாலும் இறைவனைக் காணும் பணி மேற்கொள்வோம்" என அனைத்து மதத்தினரும் புனித யாத்திரை மேற்கொள்கின்றனர்.

கிறிஸ்தவப் பெருமக்கள் ஜெருசலம் புனித யாத்திரை மேற்கொள்ளவும், இந்துக்கள் சீனாவில் உள்ள மானசரோவர் மற்றும் நேபாளத்தில் உள்ள முக்திநாத் புனித யாத்திரை மேற்கொள்ளவும், அரசு சார்பில் உதவி செய்யப்படும் என்று 2011ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொதுத் தேர்தல் பிரச்சாரத்தின் போது நான் வாக்குறுதி அளித்து இருந்தேன்.

எனது வாக்குறுதியை நிறைவேற்றும் பொருட்டு, கிறிஸ்தவர்களின் புனித ஸ்தலமான, ஜெருசலம் சென்று வருவதற்கு, அரசு நிதி உதவி அளிக்கும் என்றும், இந்தத் திட்டம் அனைத்துக் கிறிஸ்துவப் பிரிவினரையும் உள்ளடக்கியதாக அமையும் என்றும், முதற்கட்டமாக, 500 கிறிஸ்தவர்கள் ஜெருசலம் சென்று வர ஏற்பாடு செய்யப்படும் என்றும், கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில் நான் அறிவித்தேன். இதனையடுத்து, இதற்கான அரசாணைகள் வெளியிடப்பட்டன.

இந்துக்களைப் பொறுத்த வரையில், ஆன்மீகம் தேடும் ஒவ்வொருவருக்கும், ஒரே ஒரு முறையாவது சீனாவில் உள்ள

மானசரோவர் சென்று பார்க்க வேண்டும் என்பதும், நேபாள நாட்டில், சாளக்கிராம் மலையில் உள்ள திவ்ய தேசங்களில் ஒன்றான முக்திநாத் சென்று தரிசிக்க வேண்டும் என்பதும் அவர்களது விருப்பமாக இருந்து வருகிறது.

இதன் அடிப்படையில், இந்தத் திருத்தலங்களுக்கு ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான இந்துக்கள் புனித யாத்திரை மேற்கொள்கின்றனர். இருப்பினும், பொருளாதார அடிப்படையில் பின்தங்கியுள்ள இந்துப் பெருமக்களுக்கு இது எட்டாக் கனியாகவே இருந்து வருகிறது.

எனவே, இதனைக் கருத்தில் கொண்டு சீனாவில் உள்ள மானசரோவர் மற்றும் நேபாள நாட்டில் உள்ள முக்திநாத் ஆகிய இடங்களுக்குச் செல்ல விரும்பும் இந்துக்களின் பயணச் செலவுக்கு மானியம் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசு மானியம், மானசரோவர் புனித யாத்திரைக்குச் செல்ல இந்திய வெளியுறவுத் துறையால் தெரிவு செய்யப்படும் தமிழ்நாட்டைச் சார்ந்த 250 இந்துக்களுக்கும், முக்திநாத் புனித யாத்திரை மேற்கொள்ளும் 250 இந்துக்களுக்கும், ஆகமொத்தம் 500 பேருக்கு வழங்கப்படும்.

மானசரோவர் புனிதப் பயணத்திற்கு 1 நபருக்கு ஆகும் மொத்தச் செலவான 1 இலட்சம் ரூபாயில் 40,000 ரூபாயும், முக்திநாத் புனிதப் பயணத்திற்கு ஒரு நபருக்கு ஆகும் செலவான 25,000 ரூபாயில், 10,000 ரூபாயும் மானியமாக வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# அனைத்து அமைப்பு சாரா ஓட்டுநர்களையும் நலவாரியத்தில் சேர்க்க நடவடிக்கை-15.5.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உலகம் ஒரு குடும்பம்" என்னும் உன்னதத் தத்துவத்தை அடைய உறுதுணையாக விளங்கும் போக்குவரத்துகளில், பயணிகளை ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு அழைத்துச் செல்லுதல்; அத்தியாவசியப் பொருட்களை அனைத்துப் பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லுதல்; தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் மூலப் பொருட்களை எடுத்துச் செல்லுதல்; விவசாயப் பொருட்களை விற்பனைக்கு ஏற்றிச் செல்லுதல்; போன்ற அத்தியாவசியப் பணிகளை மேற்கொள்ளும் சாலைப் போக்குவரத்து மிகவும் இன்றியமை யாததாக விளங்குகிறது. இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த சாலைப் போக்குவரத்தில் அமைப்புசாரா ஓட்டுநர்களின் சேவை மகத்தானது.

இத்தகைய ஓட்டுநர்கள், அமைப்புசாரா தொழிலாளர்களாக இருப்பதால் அவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டங்களை வழங்கும் பொருட்டு, தமிழ்நாடு மோட்டார் வாகன வரிச் சட்டம், 1974இன் கீழ், பயணிகள் மற்றும் பொருட்களை சாலை வழியாகக் கொண்டு செல்லும் வாடகை வாகன உரிமையாளர்களிடமிருந்து, தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல நிதிக்காக 1 சதவீத

கூடுதல் வரி பல ஆண்டுகளாக வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்நிதியினைக் கொண்டு, தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர்கள் நல வாரியம் மூலம் நலத் திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நல வாரியம் "தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி ஓட்டுநர் நல வாரியம்" என்ற பெயரில் தற்போது இயங்கி வருகிறது. எனவே, இந்த வாரியத்தில் ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி ஊர்தி ஓட்டுநர்கள் மட்டுமே உறுப்பினராக முடியும் என்ற எண்ணத்தை ஓட்டுநர்களிடம் தோற்றுவிக்கும் வகையில் உள்ளதால் லாரி மற்றும் வேன் போன்ற இதர வாகன ஓட்டுநர்கள் இவ்வாரியத்தில் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்ள வழிவகை இருந்தாலும், அவர்கள் அவ்வாறு பதிவு செய்து கொள்வது இல்லை. தமிழ்நாட்டில் தற்போது சுமார் 10 இலட்சம் அமைப்பு சாரா ஊர்தி ஓட்டுநர்கள் உள்ளார்கள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. எனினும், தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி ஓட்டுநர் நல வாரியத்தில் 1 இலட்சத்து 39 ஆயிரத்து 595 நபர்களே உறுப்பினர்களாகப் பதிவு செய்துள்ளனர். தமிழகத்தில் உள்ள அனைத்து அமைப்பு சாரா ஓட்டுநர்களுக்கு சமூகப் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்பது எனது அரசின் விருப்பமாகும்.

எனவே, இந்த வாரியத்தில் அமைப்புசாரா ஓட்டுநர்கள் அனைவரும் உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொள்ள வழிவகை ஏற்படும் வகையிலும், இந்த வாரியத்தின் நலத் திட்ட உதவிகள் அனைத்து ஓட்டுநர்களுக்கும் சென்று அடைய வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலும், "தமிழ்நாடு ஆட்டோ ரிக்ஷா மற்றும் டாக்சி ஓட்டுநர்கள் நல வாரியம்" என்ற இந்த வாரியத்தின் பெயரை

‘‘தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம்’’, அதாவது “Tamil Nadu Unorganised Drivers Welfare Board” என பெயர் மாற்றம் செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை மானியக் கோரிக்கையின் போது, சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு முகாம்கள் மாவட்ட அளவிலும், வட்டார அளவிலும் நடத்தப்படும் என்ற அறிவிப்பின் அடிப்படையில், விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு, அனைத்து அமைப்புசாரா ஓட்டுநர்களையும் இந்த நல வாரியத்தில் உறுப்பினர்களாகச் சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# அரசின் இணையதளத்தில் சேவை விளக்கக் கோப்பகம்!

## -15.5.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தகவல் தொழில் நுட்பவியலில், இந்தியாவில் முன்னணியில் உள்ள மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு திகழ்வதற்கு, 2002ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தகவல் தொழில்நுட்பக் கொள்கைதான் அடிப்படைக் காரணமாக விளங்குகிறது.

அரசுத் துறைகள் பல்வேறு சேவைகளை மக்களுக்கு இணையம் மூலம் வழங்கி வருகின்றன. இந்த இணைய சேவைகள் அனைத்தும் தற்போது அந்தந்தத் துறைகளின் வலைத் தளங்களின் மூலம் அளிக்கப்படுகின்றன. பல்வேறு சேவைகளுக்கான இணையதள முகவரிகளைப் பொதுமக்கள் நினைவில் வைத்துக் கொள்வது கடினமானது ஆகும். இதனைத் தீர்க்கும் வகையில், அரசின் அனைத்து சேவைகள் பற்றிய விவரங்கள் அடங்கிய சேவை விளக்கக் கோப்பகம், அதாவது Online Demonstrative Services Directory ஒன்று தமிழக அரசின் இணையதளத்தில் வெளியிடப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சேவை விளக்கக் கோப்பகத்தில் இணையதள சேவை, அதாவது Online Service, இணையதள முகவரி, அதாவது Website Address, சேவை தொடர்பான இணைப்புகள், அதாவது Links to the services, உபயோகிப்போர் விளக்க வழிகாட்டி, அதாவது Demonstrative User Guide மற்றும் சேவையின் நிலை, அதாவது Service Status குறித்த தகவல் போன்ற விவரங்கள் இடம்பெறும். இதன் மூலம் பொதுமக்கள் அரசின் சேவைகளைப்

பெற அரசு அலுவலகங்களுக்கு நேரில் செல்ல வேண்டிய தேவை பெருமளவில் குறையும்.

இதே போன்று, அரசின் திட்டங்கள் மக்களை விரைவில் சென்றடைய, திட்டங்களின் செயல்பாட்டினைக் காலமுறை அடிப்படையில் கண்காணித்து ஆய்வு செய்வது அவசியம் என்பதைக்  கருத்தில் கொண்டு, ஒரு புதிய கண்காணிப்பு மென்பொருள், அதாவது Scheme Monitoring Application Software உருவாக்கப்படும். இதன் மூலம், திட்டங்களின் செயல்பாடுகளை அதிகாரிகள் எந்நேரமும் இணையம் மூலமாகக் கண்காணிக்கவும், அதன் அடிப்படையில் தக்க முடிவுகளை மேற்கொள்ளவும் இயலும்.

அரசின் செயல்பாடுகள் இணைய பொதுத் தளங்களில் அளிக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் பயன்பாட்டிற்காக உள்ள அரசு இணைய தளங்கள் மற்றும் மென்பொருட்களில் ஏதேனும் பாதுகாப்புக் குறைபாடு இருப்பின் அதனைப் பயன்படுத்தி இணைய வழி ஊடுருவிகள், அதாவது Hackers, இணையதளங்களை உருக்குலைத்து முக்கியமான தகவல்களைக் களவாடிச் செல்ல வாய்ப்பு உள்ளது. முக்கியத்துவம் வாய்ந்த அரசுத் தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்புகளில் இத்தகைய இடையூறு ஏற்படும் போது, பொது மக்களுக்கும் அரசு அளித்து வரும் சேவைகளுக்கும் பெருமளவில் பாதிப்பு ஏற்படும்.

இத்தகைய தாக்குதல்கள் மற்றும் பாதிப்புகளிலிருந்து தற்காத்துக் கொள்ளும் வண்ணம் அரசுத் துறைகளின் இணைய தளங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப மென்பொருட்களை சம்பந்தப்பட்ட துறைகள் படிப்படியாகப் பாதுகாப்புத் தணிக்கை மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

## 19,075 எக்டேர் பரப்பளவில் தேக்கு மரங்கள் நடவு செய்யப்படும்! -15.5.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வனத்தை வளர்த்து, இயற்கையைக் காத்து, மாசற்ற நிலையை உருவாக்கி, வளரும் தலைமுறையைக் காக்கும் வகையில், தமிழகத்தின் பசுமைப் போர்வையை அதிகரித்திட வனங்களுக்கு வெளியேயும் மரங்களை நட்டுப் பராமரிக்கும் திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் இயற்கையாக வளரும் தேக்கு மரங்களும், தேக்கு மரத் தோட்டங்களும் சத்தியமங்கலம், சேலம், தேனி, நீலகிரி போன்ற மலைப்பகுதிகளில் காணப்படுகின்றன. தற்போது காப்புக் காடுகளிலும், சரணாலயங்களிலும் தேக்கு மரங்களை வெட்டுவது தடை செய்யப்பட்டுள்ளதால் காவிரி ஆற்றுப் படுகை நிலங்களில் தேக்கு மரங்களை வளர்க்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனது முந்தைய ஆட்சிக்காலத்தில் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, ஈரோடு, சேலம் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் **2003–2004**ஆம் ஆண்டு முதல் **5** ஆண்டுகளில் **16,050** எக்டேர் பரப்பில் படுகை நிலங்களில் **21** கோடியே **39** இலட்சம் ரூபாய் செலவில் தேக்கு மரத் தோட்டங்கள் ஏற்படுத்தும் திட்டம் துவக்கப்பட்டது.

இத்திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து மக்களின் தேக்கு மரத் தேவையைக் கருத்தில் கொண்டும், அரசுக்கு வருவாயை ஈட்டும் வகையிலும், 19,075 எக்டேர் பரப்பளவில் தேக்கு மரங்கள் நடவு செய்யப்படும். இதற்கென 39 கோடியே 49 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், ஏற்கெனவே பயிரிடப்பட்டுள்ள தேக்கு மரங்களை பராமரிப்பதற்கென இந்த ஆண்டு 3 கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

வன உயிரினங்களையும், பறவையினங்களையும் கண்டு களிக்க, தமிழகத்தில் தற்போது வண்டலூரில் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, கிண்டி சிறுவர் பூங்கா, குறும்பப்பட்டி மற்றும் அமிர்தியில் சிறிய உயிரினப் பூங்காக்கள் என நான்கு இடங்களில் மட்டுமே வனத் துறையின் கீழ் உயிரினப் பூங்காக்கள் உள்ளன. உயிரினப் பூங்காக்களை மேலும் உருவாக்கும் வகையில், கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் கிராமத்தில் அமைந்துள்ள தொன்மை வாய்ந்த உதயகிரி கோட்டை சுற்றுலாத் தலத்தில் 22.5 எக்டேர் பரப்பளவில் உயிரியல் பூங்கா ஒன்று 15 கோடி ரூபாய் செலவில் நிறுவப்பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். புள்ளிமான், கடமான், வெளிர்மான், நீலகிரி கருமந்தி, இந்திய எறும்புத் தின்னி போன்ற 26 வகையான வன விலங்குகள் இந்த உயிரியல் பூங்காவில் அமையப்பெறும்.

தமிழ்நாட்டின் உயிர்ப்பன்மையைப் பாதுகாக்கவும், பெருமளவிலான பசுமையாக்குதல் திட்டத்தை நிறைவேற்றவும் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் நிதி உதவியோடு ஒரு மாபெரும் திட்டத்தினை 686 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்த எனது தலைமையிலான அரசு கடந்த ஆண்டு

டிசம்பர் மாதத்தில் ஒப்புதல் அளித்தது. இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ள வேண்டிய பணிகளை சிறப்பாகச் செயல்படுத்திடவும், திட்டப் பணிகளைக் கண்காணிக்கவும் திட்ட மேலாண்மை அலகு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த அலகுக்கு சென்னை வேளச்சேரியில் 7 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தலைமை அலுவலகக் கட்டடம் இந்த ஆண்டில் கட்டப்படும்.

தமிழ்நாடு வனத்துறையில் சீருடைப் பணியாளர்களாக உள்ள வனவர், வனக்காப்பாளர், ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் மற்றும் வனக்காவலர் ஆகிய பதவிகளில் காலிப் பணியிடங்கள் ஏற்படும் போது, அவை உடனுக்குடன் நிரப்பப்பட வேண்டியது அவசியம் ஆகும். எனவே, தமிழ்நாடு காவல்துறையில் உள்ள பல்வேறு பதவிகளுக்கான காலிப்பணியிடங்களைத் தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வு வாரியத்தின் மூலம் தேர்வு செய்து நிரப்பும் நடைமுறையைப் போல் தமிழ்நாடு வனத்துறையிலும் வனவர், வனக்காப்பாளர், ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் மற்றும் வனக்காவலர் ஆகிய பதவிகளில் ஏற்படும் நேரடி நியமனத்திற்கான காலிப்பணியிடங்களை நிரப்ப மாநில அளவில் ‘‘தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்’’ ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் ஏறத்தாழ 75,000 எக்டேர் பரப்புள்ள காப்புக் காடுகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளை தமிழ்நாடு வனத்துறையிடமிருந்து பெற்று தைலத் தோட்டங்களையும், முந்திரித் தோட்டங்களையும் பராமரித்து வருகிறது. இக்கழகத்தின் பணிகள் மேலும் சிறக்கும் வகையில், இந்த ஆண்டு 4,500 எக்டேர் பரப்பில் 9 கோடியே 33 இலட்சம்

ரூபாய் செலவில் மரக்கூழ் தோட்டங்கள் நடவு செய்யப்படும். மேலும், 800 எக்டேர் பரப்பில் உயர் விளைச்சல் ஒட்டு முந்திரிக் கன்றுகள் 3 கோடியே 26 இலட்சம் ரூபாய் செலவில் நடவு செய்யப்படும்.

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய தமிழர்களுக்கு தேயிலைத் தோட்டங்களில் பணி வழங்கி அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக நீலகிரி மற்றும் தமிழ்நாட்டின் இதர இடங்களில் அரசு வனத் துறைக்குச் சொந்தமான நிலங்களைக் குத்தகைக்கு எடுத்து அதில் தேயிலைத் தோட்டங்களை அமைத்து, கடந்த 36 ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது.

இந்த நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் பயன்பெறும் வண்ணம் 40 இலட்சம் ரூபாய் செலவில் சாலை வசதிகளை மேம்படுத்துதல், குடிநீர் வசதி செய்தல், குடியிருப்புப் பகுதிகளை மேம்படுத்துதல் போன்ற பணிகள் இந்த ஆண்டு நிறைவேற்றப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# தமிழ்நாட்டிற்கென தனியாக ஒரு முத்திரைச் சட்டம் இயற்றப்படும்! - 15.5.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மக்களுக்கான திட்டங்களையும், வளர்ச்சிப் பணிகளையும் மேற்கொள்வதற்கு அதிக அளவு நிதி ஆதாரங்களைத் திரட்டுவதில் வணிகவரித் துறையும், பதிவுத் துறையும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இப்படிப்பட்ட இன்றியமையாத் துறைகளின் பணிகளை எளிதாக்கும் வண்ணம், இத்துறைகளின் அலுவல்களை கணினி மயமாக்கவும், வாடகைக் கட்டடங்களில் இயங்கும் அலுவலகங் களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டவும் எனது அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த வகையில், கடந்த ஆண்டு, 15 இடங்களில் உள்ள 34 அலுவலகங்களுக்கு 20 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்ட எனது தலைமையிலான அரசு ஆணையிட்டது. நடப்பாண்டில், ராணிப்பேட்டை, விருத்தாச்சலம், கள்ளக்குறிச்சி, செஞ்சி, அரூர், அரியலூர், திருப்பூர், அம்பாசமுத்திரம், நாங்குநேரி மற்றும் திருச்செந்தூர் ஆகிய 10 இடங்களில் உள்ள 16 வணிகவரி அலுவலகங் களுக்காக 12 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில், சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வணிகர்களின் நலனுக்காகப் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராவதற்கான சில நிபந்தனைகளை எனது தலைமையிலான அரசு தளர்த்தியுள்ளதையடுத்து, இவ் வாரியத்தின் உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரித்துள் ளதைக் கருத்தில் கொண்டு, அரசால் வழங்கப்படும் தொகுப்பு நிதி 2 கோடி ரூபாயிலிருந்து 5 கோடி ரூபாயாக உயர்த்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதே போன்று, பாரம்பரியம் மிக்க துறையான பதிவுத் துறை அலுவலகங்கள் அனைத்தும் தனியார் கட்டடங்கள், பழுதடைந்த அரசுக் கட்டடங்கள் மற்றும் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த அரசு கட்டடங்களில் இயங்கி வருவதைக் கருத்தில் கொண்டு, வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் சார் பதிவாளர் அலுவலகங்கள் அனைத்திற்கும் 5 ஆண்டு காலத்திற்குள் சொந்தக் கட்டடங்களைக் கட்ட எனது தலைமையிலான அரசு முடிவு எடுத்துள்ளது.

இதன் அடிப்படையில், முதற்கட்டமாக 26 கோடி ரூபாய் செலவில் 52 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு கடந்த ஆண்டில் சொந்தக் கட்டடம் கட்ட நான் ஏற்கெனவே உத்தரவிட்டுள்ளேன். இதற்கான கட்டுமானப் பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளது. இதன் தொடர்ச்சியாக, நடப்பு ஆண்டு 2012–2013இல் தென் சென்னை, செங்கல்பட்டு, அரக்கோணம், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், ஈரோடு, கோபிசெட்டிப்பாளையம், நாமக்கல், தருமபுரி, அரியலூர், மயிலாடுதுறை, சேரன்மகாதேவி, மார்த்தாண்டம், பழனி, ராமநாதபுரம், கும்பகோணம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 17 இடங்களில் ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலக வளாகங்கள் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஒருங்கிணைந்த வளாகங்களில் மட்டும்

27 சார் பதிவாளர் அலுவலகங்கள் அமையப் பெறும். மேலும் கோவையில் கட்டப்படும் ஒருங்கிணைந்த வளாகத்தில் துணைப் பதிவுத்துறை தலைவர் அலுவலகம், மண்டல உதவி பதிவுத்துறைத் தலைவர் மற்றும் மாவட்ட பதிவாளர் (புலனாய்வு) அலுவலகங்களுக்கான கட்டடங்களும் இடம் பெறும். இந்த 27 சார்பதிவாளர் அலுவலகங்கள் மட்டுமல்லாது, மேலும் 48 சார்பதிவாளர் அலுவலகங்களுக்குத் தனித் தனியாக சொந்தக் கட்டடம் கட்டப்படும். இக்கட்டடப் பணிகள் அனைத்தும் 41 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்படும்.

மகாராஷ்டிரா, குஜராத், கர்நாடகா, கேரளா மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்கள் முத்திரைத் தீர்வையை விதிப்பதற்கான வழிமுறைகள் மற்றும் விகிதங்களுக்காக தனியே முத்திரைச் சட்டத்தினை இயற்றியுள்ளன. ஆனால், தமிழ்நாட்டில் மத்திய சட்டமான 1899ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் தான் பின்பற்றப்படுகிறது. இதன் விளைவாக, பொதுமக்கள் நலன் கருதி மாநில அரசு ஏதாவது மாற்றம் செய்ய விரும்பினால், அதற்கான சட்டமுன்வடிவை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றி, குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெறக்கூடிய சூழ்நிலை நிலவுகிறது. இந்தக் காலதாமதத்தினைத் தவிர்க்கும் வகையில், நமது மாநிலத்திற்கென தனியாக ஒரு முத்திரைச் சட்டம் இயற்றப் படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் வழிகாட்டி மதிப்பின் உயர்வினால் ஏழை, எளிய மக்கள் பாதிக்காத வண்ணம் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணம் விலக்கு பெறுவதற்கான உச்சவரம்பு 5,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாயாக உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை உருவாக்கப்படும்! - 29.10.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது, குற்ற நிகழ்வுகளைக் கண்டுபிடிப்பது, குற்றங்கள் நிகழாமல் தடுப்பது, போக்குவரத்தைச் சீர்படுத்துவது, இயற்கை இடர்ப்பாடுகளின் போது மீட்புப் பணிகளை மேற்கொள்வது, விழாக் காலங்களில் ஏற்படும் கூட்ட நெரிசல்களை முறைப்படுத்துவது எனப் பல்வேறு இன்றியமையாப் பணிகளைத் தமிழகக் காவல் துறை ஆற்றி வருகிறது.

இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த காவல் துறையில் உள்ள மொத்தப் பணியிடங்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 13 ஆயிரத்து 629 ஆகும். இது, 635 மக்களுக்கு ஒரு காவல் அலுவலர் என்ற விகிதாச்சாரத்தில் அமைந்துள்ளது. 1.1.2012 நிலவரப்படி, இந்த அனுமதிக்கப்பட்ட பணியிடங்களுக்கு எதிராக 82 விழுக்காடு காவல் அலுவலர்கள் மட்டுமே பணியில் இருந்து வருகிறார்கள்.

காவல் துறையில் நிலவும் இந்தப் பற்றாக்குறையினைச் சீர் செய்யும் வகையில், காலியாக உள்ள 12,208 காவலர் பணியிடங்களைத் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்புமாறு நான் உத்தரவிட்டேன்.

எனது உத்தரவினையடுத்து, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம், காவலர்களுக்கான எழுத்துத் தேர்வை 24.6.2012 அன்று நடத்தியது. இதனைத் தொடர்ந்து, 2012ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் உடற் தகுதித் தேர்வினை நடத்திய தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம், 12.10.2012 அன்று தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களின் பட்டியலை வெளியிட்டது. இந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ள 12,162 காவலர்களுக்குத் தற்போது மருத்துவப் பரிசோதனை நடைபெற்று வருகிறது. மருத்துவப் பரிசோதனைக்குப் பின், தேர்ந்தெடுக்கப்பட்ட காவலர்களுக்கு 7 மாத காலப் பயிற்சி அளிக்கப்பட்டு, அதன் பின்னரே அவர்கள் பணியில் சேரும் நிலை உள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டும், பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப தமிழக அரசால் வகுக்கப்பட்டுள்ள அளவுகோல்களின்படி 19,096 காவல் பணியிடங்கள் கூடுதலாக உருவாக்கப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டும்; ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான காவலர்கள் ஓய்வு பெறுவதைக் கருத்தில் கொண்டும் பார்க்கும் போது, காவல் துறை ஈடுபடும் பல்வேறு நடவடிக்கைகளில் குறிப்பிட்ட சிலவற்றில் அவர்களுக்குத் துணையாக ஒரு துணைப் படையை உருவாக்குவது அவசியமாகிறது. இவ்வாறு அமைப்பதன் மூலம், சட்டம் ஒழுங்குப் பராமரித்தல், குற்றங்களைக் கட்டுப்படுத்துதல், குற்றப் புலனாய்வு போன்ற பிரதான காவல் பணிகளில் தற்போதுள்ள காவலர்களை முழுமையாக ஈடுபடுத்த இயலும்.

இதற்கு வழி செய்யும் வகையில், “தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை” என்ற ஒரு சிறப்புப் படை தமிழ்நாட்டில் உருவாக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சிறப்புப் படைக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள், போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல்; நீதிமன்றங்களால் வெளியிடப்படும் வருவிப்பு ஆணைகளைச் சார்வு செய்தல்; கூட்ட நெரிசல்களை ஒழுங்குபடுத்துதல்; இரவு ரோந்து மற்றும் ஓட்டுநர் பணிகளில் ஈடுபடுத்தப்படுவர்.

தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படையில் உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு விளம்பரம் செய்யப்பட்டு; மாவட்ட வாரியாக மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள் மூலம் தேர்வு நடத்தப்படும். பத்தாம் வகுப்புத் தேர்ச்சி பெற்று 18 வயது முதல் 30 வயது வரை உள்ள இளைஞர்கள் இத்தேர்வில் கலந்துகொள்ளத் தகுதியுடையவர் ஆவர். தேர்வில் வெற்றி பெறுபவர்கள் அந்தந்த மாவட்டங்களில் தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை உறுப்பினர்களாகப் பணி அமர்த்தப்படுவர்.

தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை உறுப்பினர்களுக்குப் பயிற்சி காலத்திலும்; பணி காலத்திலும் மாதம் ஒன்றுக்கு மதிப்பூதியமாக 7,500/– ரூபாய் வழங்கப்படும். மேலும், அவர்கள் காவலர்களுக்கான சிறப்பு அங்காடிகளில் அளிக்கப்படும் வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்படுவர் இது தவிர, அரிசி, கோதுமை, சர்க்கரை, மைதா, பருப்பு போன்ற அத்தியாவசிய பொருட்கள் மானிய விலையில் வகுக்கப்பட்டுள்ள அளவுகோலின்படி அவர்களுக்கு வழங்கப்படும்.

ஓர் ஆண்டுக் காலம் திருப்திகரமான பணியினை நிறைவு செய்யும் தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை உறுப்பினர்கள், காவல் துறையில் காலியாகும் காவலர் பணியிடங்களில் ஈர்த்துக் கொள்ளக் கூடிய தகுதியைப் பெறுவர்.

ஒவ்வொரு ஆண்டும் காவல் துறையில் காவலர் நிலையில் ஏற்படும் காலியிடங்களில் ஒரு குறிப்பிட்ட சதவீதம் இந்த சிறப்புக் காவல் இளைஞர் படையிலிருந்து தேர்ச்சி பெறும் நபர்களுக்கு ஒதுக்கப்படும். சீருடைப் பணியாளர் தேர்வாணையம் இதற்கென ஒவ்வொரு ஆண்டும் சிறப்புத் தேர்வினை நடத்தும். அத்தேர்வில் பங்கேற்று வெற்றி பெறுபவரின் பட்டியல் சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தால் வெளியிடப்படும். இத்தேர்வில் வெற்றி பெறாதவர்கள், 40 வயது வரை, இந்த தமிழ்நாடு சிறப்புக் காவலர் இளைஞர் படையிலேயே, தொடர்ந்து பணியாற்றுவர். 40 வயதிற்கு மேல், அவர்களுக்கு, தமிழக அரசே வேறு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தரும்.

இந்த நிதியாண்டில் தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படைக்கென மாநிலம் முழுவதும் 10,000 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். இதற்கான தேர்வுகள் வரும் டிசம்பர் மாதம் நடத்தப்படும். இந்தத் தேர்வில் வெற்றி பெறுபவர்களுக்கு 2013ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அடிப்படைப் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் இந்த நிதியாண்டிற்குள் பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள். 2013–2014ஆம் நிதியாண்டில் 15,000 பேர் இந்த இளைஞர் படைக்கெனத் தேர்ந்தெடுக்கப்படுவர். இவ்வாறு ஒவ்வொரு ஆண்டும் தேவைக்கேற்ப 50,000 உறுப்பினர்கள் வரை இந்த தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படையில் சேர்க்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வைரவிழா!-1.11.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்திய நாடு, சுதந்திரம் அடைந்த பிறகு, இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி, 1952ஆம் ஆண்டு, அமைக்கப் பெற்ற, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, இந்த ஆண்டு, 60 ஆண்டுகளை, நிறைவு செய்துள்ளதை அடுத்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின், வைர விழா, சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையில் அமைந்துள்ள, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில், 30.11.2012 அன்று, வெகு விமரிசையாக நடைபெற உள்ளது.

30.11.2012 அன்று நடைபெறவுள்ள, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின், வைர விழாவில், தலைமை விருந்தினராக, கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு, மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர், திரு. பிரணாப் முகர்ஜி அவர்களை, அழைக்கும் பொருட்டு, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர், மாண்புமிகு நிதி அமைச்சர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர், மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர், 26.10.2012 அன்று, புது டெல்லியில் உள்ள, குடியரசுத் தலைவர் மாளிகையில், அவரை நேரில் சந்தித்து, எனது அழைப்புக் கடிதத்தை வழங்கி, அழைப்பு விடுத்தனர்.

எனது அழைப்பினை ஏற்றுக் கொண்டு, **30.11.2012** அன்று நடைபெறவுள்ள, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின், வைர விழாவில் கலந்து கொள்ள, மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள், **29.10.2012** தேதியிட்ட கடிதம் மூலம், இசைவு தெரிவித்துள்ளார்கள்.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின், வைர விழாவிற்கு, தலைமை தாங்குமாறு, மேதகு தமிழ்நாடு ஆளுநர், டாக்டர் கே. ரோசைய்யா அவர்களை, இன்று ஆளுநர் மாளிகைக்கு சென்று, நேரில் நான் அழைப்பு விடுத்தேன். எனது அழைப்பினை ஏற்று, மேதகு தமிழக ஆளுநர் அவர்களும், இந்த விழாவிற்கு தலைமை தாங்க, தனது இசைவினைத் தெரிவித்தார்கள் என்பதை, இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவிலே கலந்து கொண்டு, சிறப்பிக்குமாறு, இந்த மாமன்றத்தின், உறுப்பினர்கள் அனைவரையும், தங்கள் வாயிலாக கேட்டுக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

## தமிழ்நாட்டில் 12 நிறுவனங்கள் ரூ.20,925 கோடி முதலீடு! -1.11.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டின் பொருளாதாரம் புத்துயிர் பெற்று எழுச்சி பெறும் வகையிலும்; நேர்முக மற்றும் மறைமுக வேலைவாய்ப்பினை பெருக்கும் வகையிலும்; மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் வகையிலும்; இந்தியாவிலேயே தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடனும்; தொழில்வளர்ச்சிக்குத் தேவையான முனைப்பான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

தமிழகத்தை ஒரு திட்டமிட்ட நீண்டகால வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் வண்ணம், 22.3.2012 அன்று ''தொலைநோக்குத் திட்டம் – 2023'' என்ற திட்ட ஆவணத்தை நான் வெளியிட்டேன். அடுத்த 10 ஆண்டுகளில் இந்தியாவில் எதிர்பார்க்கப்படுகின்ற மொத்த உற்பத்தி வளர்ச்சியைக் காட்டிலும் 20 சதவீதம் அதிகமாக அதாவது, ஆண்டொன்றுக்கான மாநிலத்தின் மொத்த வளர்ச்சி 11 சதவீதம் அல்லது அதற்கு மேலாக இருக்க வேண்டும் என்பது இந்த தொலைநோக்குத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இத்தொலைநோக்குத் திட்டத்தினை செயலாக்கும் விதமாக கடந்த 14.5.2012 அன்று 5 தொழில் நிறுவனங்களுடன் 5,700 கோடி ரூபாய் முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் என்

முன்னால் கையெழுத்திடப்பட்டன. இதன் மூலம் வேலைவாய்ப்பு பெறுபவர்களின் எண்ணிக்கை 9,530 ஆகும்.

இதன் தொடர்ச்சியாக, 26.9.2012 அன்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில், மேலும் 7 நிறுவனங்கள் தமிழகத்தில் முதலீடு செய்ய ஒப்புதல் வழங்கப்பட்டது. இதன்படி,

1. உலகப் புகழ் பெற்ற அமெரிக்க நிறுவனமான பிபிஜி (PPG) நிறுவனத்துடன் இணைந்து ஹர்ஷா குரூப் நிறுவனங்கள் 4,100 கோடி ரூபாய் முதலீட்டில் காஞ்சிபுரம் மாவட்டம் தேர்வாய் கண்டிகையில் உள்ள சிப்காட் தொழிற் பூங்காவில் ஃபைபர் கிளாஸ் (Fibre Glass) மற்றும் ஃபுளோட் கிளாஸ் (Float Glass) தயாரிக்கும் தொழிற்சாலையை அமைக்கும். இதன் மூலம் 1,850 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைக்கும்.

2. தமிழகத்தின் பாரம்பரியமிக்க டி.வி.எஸ் குழும நிறுவனங்கள் தங்களுடைய வாகன உற்பத்திக்குத் தேவையான உதிரி பாகங்கள் மற்றும் ரப்பர் மற்றும் பிளாஸ்டிக் உப பொருள்களை தயாரிப்பதற்காக 700 கோடி ரூபாய் முதலீட்டில் சென்னை, ஒசூர் மற்றும் ஒரகடம் ஆகிய பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகளை விரிவுபடுத்தும். இதனால் சுமார் 1,300 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு உருவாகும்.

3. தமிழகத்தின் மற்றொரு முன்னணி தொழில் நிறுவனமான முருகப்பா குழுமம், இரும்பு குழாய்கள்; வாகனங்கள் மற்றும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான உபபொருள்கள்; சைக்கிள் மற்றும் ஸ்கூட்டர் தயாரிப்பதற்கான உதிரி பாகங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் வகையில், 500 கோடி ரூபாய் முதலீட்டில்

திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் தொழிற்சாலைகள் அமைக்க இருக்கிறது. இந்த முதலீட்டினால் சுமார் 1,130 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைக்கும்.

**4.** டென்மார்க் நாட்டைச் சேர்ந்த டான்பாஸ் (Danfoss) நிறுவனம் தனது உற்பத்தி ஆலையினை தமிழகத்தில் அமைத்துள்ளது. தொழிற்சாலைகளுக்குத் தேவையான முக்கியமான இயந்திரங்களை உற்பத்தி செய்யும் இந்த நிறுவனம் தனது ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு வசதிகளை பெருக்கவும்; உற்பத்தியினை விரிவாக்கம் செய்யவும்; சென்னை ஒரகடத்தில் 500 கோடி ரூபாய் முதலீடு செய்ய இருக்கிறது. இதனால் சுமார் 1,200 பேர்கள் நேரடி வேலைவாய்ப்பினைப் பெறுவார்கள்.

**5.** உலகப் புகழ் பெற்ற சான்மினா (Sanmina-SCI) என்ற அமெரிக்க எலக்ட்ரானிக்ஸ் வன்பொருள் தயாரிப்பு நிறுவனம், Electronics Hardware Manufacturing Company, ஒரகடத்தில் உள்ள தங்களுடைய தொழிற்சாலையினை மேலும் விரிவாக்கம் செய்வதற்காக 250 கோடி ரூபாய் முதலீடு செய்ய உள்ளது. இதன் மூலம் சுமார் 1,500 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

**6.** உலகின் முன்னணி கைபேசி தயாரிப்பு நிறுவனமான நோக்கியா நிறுவனம் ஏப்ரல் 2005 ஆம் ஆண்டு இந்த அரசுடன் கையொப்பமிட்ட ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி தனது தயாரிப்பினை ஸ்ரீபெரும்புதூரில் துவங்கி இதுவரை 1,380 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது. இங்கு சுமார் 8,800 பேர் பணிபுரிந்து வருகிறார்கள். இந்நிறுவனம் தற்போது மேலும் 250 கோடி ரூபாய் முதலீடு செய்ய முன் வந்துள்ளது. இதன் மூலம் கூடுதலாக 500 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைக்கும்.

**7.** அமெரிக்காவை தலைமையிடமாக கொண்ட, புகழ் பெற்ற வீட்டு உபயோகப் பொருட்கள் தயாரிக்கும் நிறுவனமான, Alticor Incorporated என்று அழைக்கப்படும் ஆம்வே நிறுவனம் முதன் முறையாக தனது உற்பத்தியினை தமிழகத்தில் திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் **300** கோடி ரூபாய் முதலீட்டில் துவக்க உள்ளது. இதன் மூலம் சுமார் **475** பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

இவை மட்டுமன்றி **27.10.2012** அன்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் மேலும் **5** நிறுவனங்களுக்கு தமிழகத்தில் முதலீடு செய்வதற்காக அனுமதி வழங்கப்பட்டது என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்படி,

**8.** உலகின் நான்காவது மிகப் பெரிய கார் உற்பத்தி நிறுவனமான ஹுண்டாய் மோட்டார் நிறுவனம் இருங்காட்டுக் கோட்டையில் உள்ள தனது தொழிற்சாலையினை விரிவாக்கம் செய்வதற்காக **4** ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்ய முன் வந்துள்ளது. இதன் மூலம் சுமார் **500** பேர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பு கிடைக்கும்.

**9.** இந்தியாவின் பெரிய பன்னாட்டு நிறுவனங்களில் ஒன்றான இந்தோ ராமா (Indo Rama) நிறுவனம் தனது பெட்ரோ கெமிக்கல் தொழிற்சாலை மற்றும் சிந்தட்டிக் ஃபைபர் (Synthetic Fibre) தயாரிப்பு தொழிற்சாலை ஆகியவற்றினை **4,500** கோடி ரூபாய் முதலீட்டில் நிறுவ முன் வந்துள்ளது. சென்னை, எண்ணூர் மற்றும் கோயம்புத்தூர் அருகே அமைய உள்ள இந்த

தொழிற்சாலைகளின் மூலம் சுமார் 500 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைக்கும். தமிழகத்தில் அமைய உள்ள முதல் பெட்ரோ கெமிக்கல் தொழிற்சாலை இது தான்.

10. பி.ஜி.ஆர். எனர்ஜி குரூப் (BGR Energy Group) என்ற இந்திய நிறுவனம் உலகப் புகழ் பெற்ற ஹிட்டாச்சி (Hitachi) நிறுவனத்துடன் இணைந்து 2,325 கோடி ரூபாய் முதலீட்டில் மின் உற்பத்தி நிறுவனங்களுக்குத் தேவையான டர்பைன்கள் (Turbines), ஜெனரேட்டர்கள், மற்றும் பாய்லர்கள் ஆகியவற்றை தயாரிக்கும் தொழிற்சாலையை காஞ்சிபுரம் மாவட்டம் செய்யூர் வட்டம், நெற்குணப்பட்டு கிராமத்தில் அமைக்க உள்ளது. இதன் மூலம் சுமார் 2,400 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

11. கோயம்புத்தூர் மாவட்டம் அன்னூர் அருகே சுமார் 2,200 ஏக்கர் பரப்பளவில் 3,100 கோடி ரூபாய் முதலீட்டில் ஓர் ஒருங்கிணைந்த ஜவுளி பூங்கா அமைக்க ADD Industrial Park என்ற நிறுவனம் முன்வந்துள்ளது. இதன் மூலம், முதலாம் ஆண்டில் சுமார் 2,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். ஏழாவது ஆண்டின் இறுதியில் இது சுமார் 25,000 பேர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தும்.

12. பிரான்ஸ் நாட்டின் உலகப் புகழ் பெற்ற கண்ணாடி தயாரிப்பாளர்களான செயின்ட் கோபெயின் (Saint Gobain) நிறுவனம் தனது விரிவாக்கப் பணிகளுக்காக ஸ்ரீபெரும்புதூர் மற்றும் பெருந்துறையில் சுமார் 400 கோடி ரூபாய் முதலீடு செய்ய முன் வந்துள்ளது. இதன் மூலம் சுமார் 500 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

மேற்படி 12 நிறுவனங்கள் 20,925 கோடி ரூபாய் அளவுக்கு தமிழ்நாட்டில் முதலீடு செய்ய இருப்பதால், 36,855 பேர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும்; சுமார் ஒரு இலட்சம் பேர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் உருவாகும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்படி 12 நிறுவனங்களுடன் 5 நவம்பர், 2012 அன்று எனது தலைமையிலான அரசு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கையொப்பமிட உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்வதோடு; தமிழக தொழில்துறை வரலாற்றிலேயே ஒரே நாளில் கையொப்பமிடப்படும் மிகப் பெரிய முதலீட்டு தொகை இதுவே என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

✵ ✵ ✵

# அரசு ஊழியர்களுக்கு பண்டிகை முன்பணம் ரூ. 5,000 ஆக உயர்வு!-1.11.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஓர் அரசாங்கத்தின் அடித்தளமாக, அச்சாணியாக, முதுகெலும்பாக விளங்குபவர்கள் அரசு ஊழியர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த அரசு ஊழியர்கள் – ஆசிரியர்களின் நலன்களை காக்கும் வகையில், வீடு கட்டும் முன் பணத்தினை 15 இலட்சம் ரூபாயிலிருந்து 25 இலட்சம் ரூபாயாக உயர்த்தியது; பெண் ஊழியர்களுக்கான மகப்பேறு விடுப்பினை மூன்று மாதத்திலிருந்து ஆறு மாதமாக உயர்த்தியது; அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கென திருத்தி அமைக்கப்பட்ட புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் என பல்வேறு சலுகைகளை எனது தலைமையிலான அரசு வழங்கி வருகிறது.

நான் முதன் முறை முதலமைச்சராக இருந்த போது, அதாவது 1996ஆம் ஆண்டு, 25 ஆண்டு காலம் அப்பழுக்கற்ற பணியினை முடித்த அரசு உழியர்களுக்கு 500 ரூபாய் மதிப்புள்ள இந்திரா விகாஸ் பத்திரத்தை வழங்கலாம் என்று ஆணையிட்டிருந்தேன். அதன்படி, 25 ஆண்டு காலம் பணியாற்றிய அப்பழுக்கற்ற அரசு ஊழியர்களுக்கு அந்தப் பத்திரம் வழங்கப்பட்டு வந்தது. பின்னர் இந்திரா விகாஸ் பத்திரத்திற்கு பதிலாக கிசான் விகாஸ் பத்திரம்

வழங்கப்பட்டு வந்தது. கிசான் விகாஸ் பத்திரம் வழங்குவதை 1.12.2011 முதல் மத்திய அரசு நிறுத்திவிட்டது.

இந்தச் சூழ்நிலையில், மத்திய அரசு கிசான் விகாஸ் பத்திரத்தை நிறுத்தி விட்டதைக் கருத்தில் கொண்டும்; 25 ஆண்டு காலம் அப்பழுக்கற்ற பணியினை முடித்த அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த தொகை 15 ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்டது என்பதைக் கருத்தில் கொண்டும்; இந்தத் தொகையை 500 ரூபாயிலிருந்து 2,000 ரூபாயாக உயர்த்திடவும்; அதனை ரொக்கமாக வழங்கிடவும்; அவர்களது பணியினைப் பாராட்டி அரசு சார்பில் சான்றிதழ் வழங்கிடவும் நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மட்டுமல்லாமல், தற்போதுள்ள சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, 5 ஆண்டுகளுக்கு முன்பு நிர்ணயிக்கப்பட்ட 2,000 ரூபாய் பண்டிகை முன்பணத்தை 5,000 ரூபாயாக உயர்த்திடவும் நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கைகள் அரசு அலுவலர்கள் தங்கள் கடமையை மேலும் செவ்வனே ஆற்ற வழி வகுக்கும் என்ற என் நம்பிக்கையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# மக்கள் நல்வாழ்வுக்கு மகத்தான பணிகள்!
# -2.11.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

ஒரு நாட்டின் மனித வளர்ச்சியின் அளவினை நிர்ணயிப்பதிலும்; ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியின் அளவுகோலாக திகழ்வதிலும்; முக்கிய பங்கு வகிப்பது மக்கள் நல்வாழ்வு என்று சொன்னால் அது மிகையாகாது. இதன் அடிப்படையில், அனைத்து மக்களுக்கும் சுகாதாரப் பாதுகாப்பினை அளித்திடும் வகையில், அரசு மருத்துவமனைகளுக்கான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்; மருத்துவர்கள், மருத்துவம் சார்ந்த மற்றும் மருத்துவம் சாராத பணியாளர்களை நியமித்தல், எளிதில் அணுக முடியாத பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு அவர்களின் இல்லங்களுக்கு அருகிலேயே தரம் வாய்ந்த மருத்துவ வசதிகள் கிடைக்க வழிவகை செய்தல்; தொழில்நுட்ப வளர்ச்சியினை பயன்படுத்தி உயர்தர மருத்துவ வசதிகளை அளித்தல் போன்ற முனைப்பான நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் முக்கியமான திட்டங்களை முன்னின்று நிறைவேற்றுவதில் முக்கியப் பங்கினை வகிப்பவர்கள் கிராம சுகாதார செவிலியர்கள். டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் கீழ் கர்ப்பிணி பெண்கள், குழந்தைகள் மற்றும் பிரசவித்த தாய்மார்கள் ஆகியோர் பற்றிய விவரங்களை கணினி மூலம் தினந்தோறும் பதிவு செய்வதற்காக

அருகிலுள்ள வலை தள மையங்களுக்கும்; அதாவது, Browsing centre–களுக்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

எனவே, கிராம சுகாதார செவிலியர்களுக்கு ஏற்படும் கால விரயத்தினை குறைக்கும் வகையிலும்; அவர்கள் பணி மேம்பாடு அடையும் வகையிலும்; அவர்களுக்கு விலையில்லாமல் மடிக் கணினி வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென, 21 கோடியே 11 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு மருத்துவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகள், வட்ட மருத்துவமனைகள், மருத்துவ அலுவலகங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றில் சுற்றுப்புறத்தை சுத்தம் செய்தல்; சுகாதாரத்தை பேணுதல்; மருத்துவமனை வளாகத்தை பராமரித்தல்; பாதுகாத்தல்; போன்ற பணிகளை மேற்கொள்ள ஏதுவாக, பல்நோக்கு மருத்துவமனை பணியாளர், அதாவது Multipurpose Hospital Worker என்ற பெயரில் பணியாளர்களை கீழ்க்காணும் முறையில் நியமிக்க எனது தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1. 200 படுக்கைகளுக்கு குறைவான மருத்துவமனைகளில் சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் துப்புறவு பணியாளர்கள்; மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நிர்ணயிக்கும் தொகுப்பூதிய அடிப்படையில் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் 5 ஆண்டு நீட்டிப்புக்கு வழிவகை செய்யும் வகையில்; ஓராண்டு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்படுவார்கள். இந்த வகையில் சுமார் 4,000 பேர் பணி நியமனம் செய்யப்படுவர்.

2. 200 படுக்கைகளுக்கு மேற்பட்ட மருத்துவமனைகளில் காலியாகவுள்ள மருத்துவமனைப் பணியாளர் மற்றும் துப்புறவுப் பணியாளர் பணியிடங்கள் புற ஆதார முறையில், அதாவது outsourcing முறையில் நிரப்பப்படும்.

3. காலியாகவுள்ள செவிலியர் உதவியாளர் – நிலை2 பணியிடங்கள், மருத்துவமனைப் பணியாளர்களுக்கு தகுந்த பயிற்சி அளிக்கப்பட்டு பணியமர்த்தல் மூலம் நிரப்பப்படும்.

இதே போன்று, மருத்துவமனைகளின் பாதுகாப்பினை செம்மைப்படுத்தும் வகையில், 2,176 காவல் பணியாளர்கள் கீழ்க்காணும் முறையில் நியமனம் செய்யப்படுவார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1) பெரிய மருத்துவமனைகளின் பாதுகாப்பினை நாள் முழுவதும் மேற்கொள்ளும் வகையில், 8 மணி நேர பணி சுழற்சி அடிப்படையில்; புற ஆதார முறையில், அதாவது outsourcing முறையில்; நுழை வாயில்களுக்கு தேவையான 776 காவல் பணியாளர்கள் நியமிக்கப்படுவர்.

2) 200 படுக்கைகளுக்கு மேற்பட்ட மருத்துவமனைகளில் உள்ள தீவிர சிகிச்சை பிரிவு, அதாவது ICU; அவசரப் பிரிவு, அதாவது Emergency Ward; மகப்பேறு பிரிவு, அதாவது Maternity Ward மற்றும் பச்சிளங்குழந்தை பராமரிப்பு, அதாவது Neonatal Care வார்டுகளுக்கு என்று சுமார் 1,400 காவல் பணியாளர்கள் புற ஆதார முறையில், அதாவது outsourcing முறையில் நியமிக்கப்படுவர். இப்பணியாளர் நியமனத்திற்கென கூடுதல் செலவினமாக 20 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.

இது மட்டுமல்லாமல், மருத்துவமனை கட்டடங்களை பராமரிக்கும் வகையில், அதாவது கழிவு நீர் அகற்றல்; கழிப்பிட வசதி;

குடிநீர் வசதி ஆகியவற்றை மேம்படுத்துதல்; மின் அமைப்புகளை புதுப்பித்தல் போன்ற பணிகளை 15 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளவும்; மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள உடைந்த மரச் சாமான்களுக்குப் பதிலாக 10 கோடி ரூபாய் செலவில் புதிய மரச் சாமான்கள் வாங்கவும்; மருத்துவமனைகளில் தொய்வின்றி சேவை மேற்கொள்ளும் பொருட்டு தேவையான உபகரணங்கள் மற்றும் மருந்துகள் வாங்க கூடுதலாக 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யவும் எனது தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், மருத்துவமனைகளில் மருந்துகள் வாங்குவதற்கும்; உயிர் காக்கும் உயர் ரக மருந்துகள் வாங்குவதற்கும்; ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட 284 கோடி ரூபாய் இல்லாமல், உயிர் காக்கும் சிறப்பு மருந்துகள் வாங்க கூடுதலாக 10 கோடி ரூபாய் நிதியினை நான் ஒதுக்கியுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தரமான மருத்துவச் சேவையை தமிழக மக்கள் அனைவரும் பெற வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில், ‘‘முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்‘‘ 11.1.2012 அன்று என்னால் தொடங்கி வைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தில் 1,016 வகையான சிகிச்சை முறைகளும்; 23 முக்கிய பரிசோதனைகளும்; 113 தொடர் சிகிச்சை முறைகளும் அடங்கும். இத்திட்டத்தின் கீழ், ஆண்டு ஒன்றுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வரை சிகிச்சை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது. குறிப்பிட்ட 77 நோய்களுக்கு ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் வரை சிகிச்சை மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது. சிகிச்சை சம்பந்தப்பட்ட பரிசோதனைகளும் காப்பீட்டுக்காக வரையறுக்கப்பட்ட தொகையில் அடங்கும். இதுவரை இந்தத்

திட்டத்தின் கீழ், 1,64,365 பயனாளிகளுக்கு 384 கோடி ரூபாய் காப்பீட்டு நிறுவனத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை, அதாவது Liver transplantation; சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சைக்கு பிந்தைய மருந்துகள், அதாவது Renal transplantation including post transplant immunosuppressant therapy; எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை, அதாவது Bone Marrow transplantation; காது நுண் எலும்பு கருவி பொருத்தும் சிகிச்சை, அதாவது Cochlear implantation; ஸ்டெம் செல் மாற்று சிகிச்சை, அதாவது Stem cell transplantation ஆகிய சிகிச்சைகளை மேற்கொள்ள ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கு மேலாக செலவு ஆகிறது என்பதால் இந்த கூடுதல் செலவினத்தை, ஏழை எளிய நோயாளிகளே ஏற்கும் நிலைமை உள்ளது என்பது எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இத்தகைய ஏழை, எளிய நோயாளிகளின் நிலையை கருத்தில் கொண்டு, அனுமதிக்கப்பட்ட ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கு மேலாக ஏற்படும் கூடுதல் செலவினத்தையும் அரசே ஏற்கும் வகையில் ஒரு சிறப்பு தொகுப்பு நிதி, அதாவது Corpus Fund ஒன்று உருவாக்கப்படும். இந்த சிறப்பு தொகுப்பு நிதிக்கு முதற்கட்டமாக 10 கோடி ரூபாய் நிதி வழங்கப்படும் என்பதையும்; இனிவரும் காலங்களில் அரசு மருத்துவமனைகளில் கிடைக்கும் காப்பீட்டு தொகையிலிருந்து இந்த சிறப்பு தொகுப்பு நிதிக்காக ஆண்டொன்றிற்கு 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என்பதையும் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

# சத்துணவுத் திட்டத்தில் புதிய உணவு வகைகள் அறிமுகம்! -2.11.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொருளாதார அடிப்படையில் பின்தங்கிய குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவினை வழங்கி, அதன் மூலம் ஊட்டச்சத்து குறைவினை அகற்றுதல்; பள்ளி செல்லும் குழந்தைகளின் விகிதத்தினை அதிகரித்தல்; இடைநிற்றலை அகற்றல் ஆகிய நோக்கங்களை எய்தும் பொருட்டு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் 1982 ஆம் ஆண்டு சத்துணவுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு, கடந்த 30 ஆண்டுகளாக நடைமுறையில் இருந்து வரும் சத்துணவுத் திட்டத்தில், பல காலமாக ஒரே மாதிரியான உணவு வழங்கப்பட்டு வருகிறது என்பதை அறிந்த நான், காலத்திற்கு ஏற்பவும், குழந்தைகளின் விருப்பத்திற்கு ஏற்பவும், உணவு முறையில் மாற்றம் கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு அரசு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி இருந்தேன்.

எனது உத்தரவின் பேரில், புதிய வகை உணவு முறையினை அறிமுகப்படுத்துவது குறித்து புகழ் பெற்ற சமையற் கலைஞர்கள் மற்றும் ஊட்டச்சத்து நிபுணர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டது. இந்தக் கலந்தாலோசனைக்குப் பிறகு, சென்னை, சைதாப்பேட்டையில் உள்ள பள்ளியிலும்; திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் தொகுதிக்குட்பட்ட அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியப்

பள்ளியிலும் சோதனை முறையில் கொண்டைக்கடலை புலவு சாதம் மற்றும் மிளகுதூள் கலந்த முட்டை தயாரித்து பள்ளிக் குழந்தைகளுக்கு வழங்கப்பட்டது. இதனை பள்ளிக் குழந்தைகள் விரும்பி உண்பது கண்டறியப்பட்டது. இது மட்டுமல்லாமல், 13 வகையான கலவை சாதங்கள் மற்றும் 4 வகையான முட்டை மசாலாக்களை சமையல் நிபுணர்கள் தயாரித்து செயல் விளக்கம் செய்து காண்பித்தனர்.

மேற்கூறிய சோதனை முறையின் அடிப்படையில், புதிய உணவு வகைகளை சத்துணவுத் திட்டத்தில் படிப்படியாக அறிமுகம் செய்ய எனது தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன்படி, மாதத்தின் முதல் மற்றும் மூன்றாம் வாரங்களில், திங்கட் கிழமையன்று காய்கறி பிரியாணி மற்றும் மிளகுத்தூள் முட்டையும்; செவ்வாய்க் கிழமையன்று கொண்டைக்கடலை புலவு மற்றும் தக்காளி முட்டை மசாலாவும்; புதன் கிழமையன்று தக்காளி சாதம் மற்றும் மிளகுத்தூள் முட்டையும்; வியாழக் கிழமையன்று சாதம், சாம்பார் மற்றும் வேகவைத்த முட்டையும்; வெள்ளிக் கிழமை அன்று கருவேப்பிலை சாதம் அல்லது கீரை சாதம், முட்டை மசாலா மற்றும் மிளகாய் பொடியில் வறுத்த உருளைக்கிழங்கு ஆகியவை வழங்கப்படும்.

மாதத்தின் இரண்டாம் மற்றும் நான்காம் வாரங்களில், திங்கட் கிழமை அன்று சாம்பார் சாதம் மற்றும் வெங்காயம், தக்காளி முட்டை மசாலாவும்; செவ்வாய்க் கிழமை அன்று மீல் மேக்கர், காய்கறி கலவை சாதம், மற்றும் மிளகுத் தூள் முட்டையும்; புதன் கிழமை அன்று புளியோதரை மற்றும் தக்காளி முட்டை மசாலாவும்; வியாழக்கிழமை அன்று எலுமிச்சை சாதம், தக்காளி முட்டை மசாலா மற்றும் சுண்டலும்; வெள்ளிக் கிழமை அன்று

சாதம், சாம்பார், வேகவைத்த முட்டை மற்றும் உருளைக்கிழங்கு பொரியலும் வழங்கப்படும்.

இதே போன்று, அங்கன்வாடி மையங்களுக்கு வருகை தரும் குழந்தைகளின் சிறப்பம்சம் மற்றும் செரிமான திறன் ஆகியவற்றினைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கும் புதிய உணவு வகைகள் அறிமுகம் செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன்படி, திங்கட்கிழமை அன்று தக்காளி சாதம், வேகவைத்த முட்டையும்; செவ்வாய்க் கிழமை அன்று கலவை சாதம் மற்றும் சுண்டலும்; புதன் கிழமை அன்று காய்கறி புலவு சாதம் மற்றும் வேகவைத்த முட்டையும்; வியாழக் கிழமை அன்று எலுமிச்சை சாதம் மற்றும் வேகவைத்த முட்டையும்; வெள்ளிக் கிழமை அன்று பருப்பு சாதம், வேகவைத்த உருளைக்கிழங்கும்; சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் கலவை சாதமும் வழங்கப்படும்.

மேற்கூறப்பட்ட புதிய உணவு வகைத் திட்டம், ஒவ்வொரு மாவட்டத்திலும் முதலில் ஒரு வட்டாரத்தில் மட்டும் முன்னோடித் திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டு; அந்த வட்டாரத்தில் இந்தப் புதிய உணவு முறை திட்டத்தின் செயல்பாடு குறித்து அறிந்த பிறகு, மற்ற வட்டாரங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

எனது தலைமையிலான அரசின் இந்த நடவடிக்கை கல்வி பயிலும் குழந்தைகளின் எண்ணிக்கையையும்; அவர்களின் ஊட்டச்சத்து நிலையையும் மேம்படுத்த வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

✵ ✵ ✵

# பாரம்பரிய வேளாண் பொருட்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த ரூ.10 கோடி ஒதுக்கீடு!-2.11.2012

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உடல் ஆரோக்கியத்தை பாதுகாக்கும் பண்புடையதும்; மருத்துவத் தன்மைகளை கொண்டதும்; நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் தன்மை கொண்டதும்; அழகை அதிகரித்து இளமையை தக்க வைக்கும் குணமுடையதுமான புழக்கத்தில் இருந்த பாரம்பரிய வேளாண் பொருட்கள் வழக்கொழிந்து போவது வேதனைக்குரிய ஒன்றாகும்.

நவீனப் பொருட்களின் ஆதிக்கம் காரணமாக, பாரம்பரிய வேளாண் பொருட்களின் முக்கியத்துவத்தை, இன்றியமையாத் தன்மையை பெரும்பாலான மக்கள் உணராமல் உள்ளனர்.

பண்டைக் காலத்தில் தமிழ் மக்களின் பாரம்பரிய வழக்கத்தில் இருந்த வேளாண் பொருட்களில் முக்கியமானதாக இளநீர், சீயக்காய், பருத்தி போன்றவை விளங்கின.

இளநீரை எடுத்துக் கொண்டால், அதில் பொட்டாசியம், சோடியம், மக்னீசியம், கால்சியம், இரும்புச் சத்து ஆகியவை அதிக அளவில் உள்ளன. இது மட்டுமல்லாமல், உடலுக்கு குளிர்ச்சியை ஊட்டவும்; ஜீரண சக்தியை மேம்படுத்தவும் இளநீர் பயன்படுகிறது. இளநீர் பருகுவதன் மூலம் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பதாக கூறப்படுகிறது.

தமிழகத்தில் பாரம்பரியமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த மற்றொரு வேளாண் பொருளான சீயக்காய், கூந்தலின் ஆரோக்கியத்தை பேணிக் காக்கவும்; கூந்தலின் வளர்ச்சியை மிருதுவாக்கவும்; கூந்தலில் ஏற்படும் பொடுகைக் குணப்படுத்தவும் பயன்படுகிறது.

இதே போன்று, மற்றொரு பாரம்பரிய வேளாண் விளை பொருளான பருத்தி, ஆடை நெய்வதற்கான முக்கிய மூலப் பொருளாக விளங்குகிறது. பருத்தி ஆடைகள் கோடையில் நிலவும் கடும் வெப்பத்தையும்; பனிக் காலங்களில் நிலவும் கடும் குளிரையும் தாங்கவல்லதாகவும்; சுற்றுச் சூழலுக்கு பாதுகாப்பானதாகவும்; சருமப் பராமரிப்பிற்கு ஏற்றதாகவும் விளங்குகிறது.

இது போன்ற பல பாரம்பரியம் மிக்க வேளாண் பொருட்களின் மருத்துவத் தன்மைகளை மக்களிடையே எடுத்துச் செல்லும் வகையிலும்; பாரம்பரிய பொருட்களின் பயன்பாட்டினை அதிகரிக்கும் வகையிலும்; வழக்கொழிந்து போன பாரம்பரிய பொருட்களை புழக்கத்தில் கொண்டுவரும் வகையிலும்; இயற்கையின் படைப்பினை பயன்படுத்தி மக்களின் நலத்தினை பேணிப் பாதுகாக்கும் வகையிலும்; விவசாயிகளின் வருமானத்தை பெருக்கும் வகையிலும்; பாரம்பரிய வேளாண் பொருட்கள் குறித்த விழிப்புணர்வை மாநிலம் முழுவதும் ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

பாரம்பரிய வேளாண் பொருட்கள் குறித்த விழிப்புணர்வு மாநில மற்றும் மாவட்ட, வட்டார அளவிலான கருத்தரங்கங்கள்; விழிப்புணர்வுப் பேரணிகள்; வானொலி விளம்பரப் பாடல்கள்;

“இளநீர் குடியுங்கள்; உடல் நலம் பேணுங்கள்” போன்ற மக்களை கவரும் வாசகங்கள் அடங்கிய விளம்பரங்கள்; கருத்துக் கண்காட்சிகள்; திரையரங்கு விளம்பரங்கள்; பத்திரிகை விளம்பரம் மற்றும் தொலைக்காட்சி விளம்பரங்கள் ஆகியவற்றின் மூலம் தமிழகமெங்கும் ஏற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

✵ ✵ ✵

"நமது இலட்சியம் உயர்வானது!
நமது பார்வை தெளிவானது!
நமது வெற்றி முடிவானது!"

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா**

